D 749

T.N.C.A. Debates

Official Report

Vol VIII No 2

14th June 1985

V211,31 N85

N85.8.2

136405

667/86

2849

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, 1985 ஜூன் 14—தொகுதி VIII-எண். 2
Friday, the 14th June 1985—Volume VIII-No. 2.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009
Legislative Assembly Departmen., Fort St. George,
Madras-600 009

விலை ரூ. 3-00]

[Price Rs. 3-00

V2 ... N85

N85 . 8.2

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136405
சென்னை-600 008

# உள்ளடக்கம்

**14—6—1985**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்: | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 341—350 |
| | 351—395 |
| 2. ஒழுங்குப் பிரச்சினை: | |
| கேள்வி கேட்ட உறுப்பினர் அவையில் இருக்கும் போது கேள்வி ஒத்திவைக்கப்பெறுதல் | 350—351 |
| 3. தகவல் கோரல்: | |
| (அ) மாநிலப் பல்கலைக் க—ங்களை மத்தியப் பல்கலைக் கழகங்களாக மாற்றுவது குறித்து | 395—396 |
| (ஆ) கிருஷ்ணா நதி குடி-நீர்த்திட்டம் சம்பந்தமாக | 396—398 |
| 4. கவன ஈர்ப்பு: | |
| தொழிற்சாலையின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்புகள் | 398—404 |
| 5 வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு: (தொட்ச்சி)— | |
| (அ) கோரிக்கை எண் 24—தொழில்கள் | 404—502 |
| (ஆ) கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | |
| மாண்புமிகு திரு. க. இராசாராம் | 404, 405 406, 482—501 |
| திரு. பெ. செங்கோட்டையன் | 407—417 |
| திரு. எச். ஜி. ஆறுமுகம் | 417—423 |
| திரு. மு. இராமநாதன் | 423—435 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | 435—448 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 448—452 |
| திரு. மு. பாண்டுரங்கன் | 452—456 |
| திரு. மா. கதிர்வேலு | 456—461 |
| திரு. டி. என். முருகானந்தம் | 461—467 |
| திரு. கு. ரமணி | 467—477 |
| திரு. கி. ராமன் | 477—482 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: | 503 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1985, ஜூன் 14, வெள்ளிக்கிழமை

## வைகாசி 32, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

" ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்."

பின் விளையும் ஊதியத்தைக் கருதி, இப்போது உள்ள முதலை இழந்துவிடக் காரணமான செயலை அறிவுடையவர் மேற்கொள்ள மாட்டார்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கல்குளம் தாலுக்காவைப் பிரித்தமைத்தல்.

274. (* வினா எண். 1261) — **திரு. வை. பாலச்சந்திரன் மற்றும் திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பூர்வாங்கப் பணிகள் எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. வை. பாலச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்குளம் தாலுக்கா இரண்டாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் ஒன்றுக்கு இரணியல் தாலுக்கா என்று பெயரிடப்படுவதோடு அதனுடைய தலைமையிடத்தை இரணியலில் மன்னர் இருந்த அரண்மனையில் வைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்குளம் வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அதனை அரசு இரண்டாகப் பிரிக்கலாம் என்றும் அவ்வாறு பிரிக்கப்படுகின்றபோது மற்றொரு வட்டத்திற்கு இரணியல் வட்டம் என்று பெயரிடலாம் என்றும் குறிப்புகளை அனுப்பியிருக்கிறார். அதுபற்றிய விவரங்களை எல்லாம் அரசு பரிசீலித்து வருகின்றது. அவ்வாறு பரிசீலித்து முடிந்ததற்குப் பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக அமையவிருக்கும் தாலுக்காவிற்கு மறைந்த தலைவர்களது பெயரை இடும் எண்ணம் உண்டா? கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்பதற்காகப் போராடிய சிதம்பரநாதன் அவர்கள் பெயரில் சிதம்பரநாதன் தாலுக்காவென பெயர் இடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தன்லவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை. உத்தேசமும் இல்லை.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்குளம் தாலுக்காவில் தற்போது மொத்தம் எத்தனை கிராமங்கள் இருக்கின்றன. இரண்டாகப் பிரிக்கப்படுகின்றபோது எந்தெந்த கிராமங்கள் புதிதாக அமைய இருக்கும் தாலுகாவின் எல்லைக்குள் வரும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதே தவிர இன்னும் திட்டவட்டமான முடிவுக்கு வரவில்லை. கல்குளம் தாலுக்கா இரண்டாகப் பிரிக்கப்படுகின்றபோது மற்றொரு வட்டத்திற்கு இரணியல் வட்டம் என்று பெயரிடலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதுபற்றிய திட்டவட்டமான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை, அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது என்று நான் சொன்னேன். அவர்கள்



2849



செய்திருக்கின்ற பரிந்துரையின் அடிப்படையில் கல்குளம் தாலுக்காவிலிருந்து 12 கிராமங்களையும், விளவங்கோடு தாலுக்காவிலிருந்து 5 கிராமங்களையும், அகஸ்தீஸ்வரத்திலிருந்து 2 கிராமங்களையும் இணைக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதுவும் முற்றும் முடிந்த முடிவாக இன்னும் எடுக்கவில்லை. ஆராய்ந்து முடிந்ததற்குப் பிறகு ஏற்ற முடிவினை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## காட்பாடியைத் தனி வட்டமாக அமைத்தல்.

275—(* வினா எண் 1273) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்திலிருந்து காட்பாடியைப் பிரித்து தனி வட்டமாக அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) குடியாத்தம் வட்டத்தைப் பிரிப்பதற்கு, மாவட்டங்களைச் சீரமைக்கும் பணிக்காக அரசு நியமித்துள்ள வல்லுநர் குழுவிடம் இப்பொருள் பற்றி அரசு அறிக்கை கோரியுள்ளது.

**திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்பாடி ஏறக்குறைய திருப்பத்தூர் கோட்டத்தில் உள்ள கடைசிப் பகுதியாகும். இது மாவட்டத்தினுடைய தலைநகர் பக்கத்தில் இருக்கின்றது. ஆகவே கோட்டாசித் தலைவரிடத்தில் செல்ல வேண்டும் என்றால் சுமார் 70, 80 மைல் போக வேண்டியிருக்கிறது. ஆகவே உடனடியாகப் பிரித்து செயல்படுத்துவதற்கு 1985-86-ஆம் நிதியாண்டில் ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் வட்டத்தில் 4 பஞ்சாயத்து யூனியன்களும், 161 கிராமங்களும், 9 பிர்க்காக்களும் இருக்கின்றன. ஆகவே அதை இரண்டாகப் பிரிப்பது நலம்

பயக்கும் என்று யோசனை கூறப்பட்டிருக்கின்றது. அந்த யோசனையின் அடிப்படையில்தான் அதைப்பற்றி ஆராய்ந்து தக்க முடிவு சொல்ல வேண்டும் என்ற வகையில் — மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்காக வல்லுநர் குழு அமைத்திருக்கிறோம் — அப்படி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற நிலைமையைப் பற்றி ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில் அந்த வல்லுநர் குழு வட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஆராயும்படி நாம் கேட்டுக் கொடிருக்கிறோம். அந்த வல்லுநர் குழு ஆராய்ந்து முடிவுகளை அறிவித்ததற்குப் பிறகு தான் அரசு தக்க முடிவுகளை மேற்கொள்ளும். 1985-86க்கு உள்ளேயே முடித்துவிட வேண்டும் அல்லது முடித்துவிட முடியும் என்று உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. அதற்குள்ளே முடிந்தாலும் முடியலாம். அதற்குப் பிறகு வந்தாலும் வாலாம். ஆனால் வல்லுநர் குழுவினுடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கோ. இரகுபதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படித் தாலுக்காவைத் தனியாகப் பிரிக்கும்போது, குடியாத்தம் வட்டத்திலிருந்து காட்பாடியைப் பிரித்துத் தனி வட்டமாக அமைக்கும்போது, அதை இராணிப்பேட்டை கோட்டத்திலே அடைப்பதற்கான வகையிலே, இப்போது திருப்பத்தூர் கோட்டத்திலே இருக்கிறது, ஆதலால் திருப்பத்தூர் கோட்டத்திலிருந்து பிரித்து இராணிப்பேட்டை கோட்டத்தினுடைய தலைமையிலே அதை நிர்வகிக்கக் கூடிய அளவுக்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்றவைகளை எல்லாம்தான் வல்லுநர் குழு ஆராயும். ஒரு வட்டத்தைப் பிரிக்கிறபோது எந்தக் கோட்டத்திலே அமைத்தால் சரியாக அமையும் என்றும், வேறு பல நிலைமைகளுக்கும் ஏற்றதாக இருக்கும் என்றும் நுட்பத் தகுதிகளின் அடிப்படையில் அவைகளை ஆராய வேண்டும். அதைத்தான் வல்லுநர் குழுவினர் செய்வார்கள். வல்லுநர் குழுவினிடத்திலே வேண்டுமானால் உறுப்பினர் தன்னுடைய விருப்பங்களைத் தெரிவிக்கலாம். அந்த வல்லுர் குழுதான், இடத்திற்கு ஏற்ப முடிவுகளைச் செய்து அறிவிக்க வேண்டும். அவர்கள் அறிவித்ததற்குப் பிறகுதான் அது பற்றி அரசு ஆராயும்.



**திரு. ஏ. பாலுச்சாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட்டங்களைப் பிரிப்பது எந்த அடிப்படையில் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சில பல மாவட்டங்களிலே, 3, 4-க்கு மேல் ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்தால், 9, 10-க்கு மேலே பிர்க்காக்கள் அமைந்து மக்கள் தொகை எண்ணிக்கையும் அதிகமாயிருந்து, வேலைப்பளுவும் அதிகமாகியிருக்குமேயானால், மக்கள் தொகை, இடத்தின் பரப்பளவு அதன் தன்மைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் சென்ற 5, 6 ஆண்டுகளிலே 33 வட்டங்கள் புதிதாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் சிலபல பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பும் அரசின் ஆய்விலே இருந்து வருகிறது.

**தொழில்துறையில் பின்தங்கிய வட்டங்களாக அறிவித்தல்.**

276—(*வினா எண். 1044) **திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி தாலுக்காவை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழ்நாட்டில் எத்தனை வட்டங்கள் தொழில் துறையில் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டு உள்ளன? சேலம் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியான ஓமலூர் தாலுக்காவை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது 30 தாலுக்காக்கள் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஓமலூர் தாலுக்காவைப் பற்றிய ஆராய்ச்சி அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

[1985 ஜூன் 14

**277—(* வினா எண். 1805) திரு. த. பழனி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்கா, தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் சார்பில் தொழில்கள் தொடங்கப் பெற்றுள்ளதா ?

(இ) தொழில் தொடங்குவோர்க்கு என்னென்ன உதவிகள் செய்யப்படும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, (அ) ஆம். ஆற்காடு தாலுக்கா தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசின் சார்பில் தொழில்கள் ஏதும் தொடங்கப்படவில்லை.

(இ) ஆற்காடு தாலுக்கா தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இப் பகுதியில் எந்தவகை தொழில் ஆரம்பித்தாலும் நிலையான மூலதனத்தில் 10 சத வீதம் மானியம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. சிறுதொழில் முனைவோருக்கு 5 வருடங்களுக்குப் பிறகு திருப்பி அளிக்கக்கூடிய வட்டியில்லா விற்பனை வரிக் கடன் அளிக்கப்படுகிறது. தண்ணீர் மற்றும் மின்சாரம் விநியோகிப்பதில் குறைந்த கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. தொழில் நிறுவனங்கள் இலங்கை அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக ஒவ்வொரு அகதிக்கும் ரூ. 15,000 என்ற விகிதத்தில் ஆண்டுக்கு 11 சத வீதம் வட்டி விகிதத்தில் தொழில் நிறுவனங்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது.

(முற்பகல் 9-10)

**திரு. தி. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அரசு அறிவித்தாலும்கூட ஏற்கனவே 30 கோடி ரூபாய் முதலீடு செய்திருந்தால் அந்த இடத்தில் மீண்டும் தொழில் துவங்குகிறபோது அரசினுடைய மானியமான 15 சதவீதம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் புதியதாகத் தொழில் துவங்க யாரும் முன்வருவ



1985 ஜூன் 14]

தில்லை. இதை மாற்றுவதற்கு அரசு வழிவகை செய்யுமா? அதைப்போல தமிழகத்தில் தொழில்களைத் துவங்குவதற்கு வெளி நாடுகளில் உள்ள இந்தியர்களுக்குப் பன்னாட்டுத் தொழில் நிறுவனத்தின் மூலம் உதவி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவர் அவர்களே, இவைகளைப்பற்றியெல்லாம் மானியக் கோரிக்கையில் பதில் பெறலாம்.

**திரு. கோ. இரகுபதி:** துணைத் தலைவர் அவர்களே, வாலாஜா தாலுக்கா பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கப்பட்டு, இராணிப் பேட்டையில் சிப்காட் மற்றும் சிட்கோ மூலம் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதைப்போல வடஆற்காடு மாவட்டத்தில் வேறு எந்தெந்த தாலுக்காக்கள் தொழிற் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிக்கப்பட இருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் பல தாலுக்காக்கள் தொழிற் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அப்படி அறிவிக்கப்பட்டவை மொத்தம் 30 தாலுக்காக்கள் என்று முன்பே தெரிவித்தேன். அதன் பட்டியலைத் தேவையானால் மானியக் கோரிக்கையின்போது நான் தெரிவிக்கிறேன்.

**திரு. சி. பழனிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 30 வட்டங்கள் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதைப்போல சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க இயலுமா ? அமைச்சர் அவர்கள் அதற்காக ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுக்காவை பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்படுகிற சூழ்நிலையில் தற்போது அது இல்லை.

[1985 ஜூன் 14

**உயர்நிலைப் பள்ளிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள்.**

**278 — (* வினா எண். 773) திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, (அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. கு. சுப்பராயன் :** துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பாடதிட்டங்களை மிகவிரைவில் கிரகிக்க உதவுகிற முறையில், பாடதிட்டங்களை திரைப்படங்களாகத் தயாரித்து அவர்களுக்கு உதவுகிற அளவிற்கான போதனா முறையை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் தொலைக் காட்சி பெட்டிகள் வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் தொலைக்காட்சியில் கல்வி ஒளிபரப்புகள் நடக்கின்றன. பல்வேறு பள்ளிகளில் அதை வாங்கி பயனைப் பெற்றிருக்கிறார்கள். அரசு ஆணை எண். 2148, கல்வி, அறிவியல், தொழில் நுட்பவியல், தேதி 14—11—1983-ல் பள்ளிகள் பெற்றோர்-ஆசிரியர் கழக நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொள்ளலாமென்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்த அரசாணை அனைத்துப் பள்ளிகளுக்கும் ஆய்வு அலுவலர்கள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண். 285 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.



1985 ஜூன் 14]

**கோவை மாநகரில் புதிய மேம்பாலம்.**

**285 — (* வினா எண். 43) திரு. கு. ரமணி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் காந்திபுரத்தில் உள்ள ஜெயில் ரோட்டின் குறுக்கே, இரண்டு பேருந்து நிலையங்களையும் இணைக்கும் முறையில் ஒரு மேம்பாலம் கட்ட அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, (அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் காந்திபுரத்திலுள்ள ஜெயில் ரோட்டின் குறுக்கே நடைபாதை மேம்பாலம் கட்டுவதற்குப் பதில் சுரங்க நடைபாதை அமைக்கும் திட்டம் உள்ளது.

(ஆ) சுரங்க நடைபாதை அமைப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கத் தேவையான ஆய்வுக் கட்டணத்தை நெடுஞ்சாலைத் துறைத் தலைமைப் பொறியாளருக்குச் செலுத்துமாறு கோவை மாநகராட்சி ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். கட்டணம் செலுத்தியபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சுரங்கப்பாதை அமைப்பது பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. இவ்வளவு காலதாமதாகி விட்டது. ரொம்பவும் நெருக்கடியான அந்த இடத்தில் ஒவ்வொரு நாளும் பல விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற அளவிற்கு ஜனநடமாட்டம் எக்கச்சக்கமாகப் பெருகியிருக்கிறது. அந்த இடத்தில் மேலும் காலதாமதம் இல்லாமல் எந்தக் கால அளவிற்குள் அந்த வேலை துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, தேதி நிர்ணயித்துச் சொல்ல முடியாது. வெகு விரைவில் வேலை துவக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூன் 14

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சுரங்கப்பாதைக்கு எவ்வளவு செலவு ஆகிறது? இதிலே அரசாங்கம் எவ்வளவு கொடுக்கவிருக்கிறது? கார்ப்பரேஷன் எவ்வளவு தர வேண்டும்? காரணம், கார்ப்பரேஷனில் நிதிப் பற்றாக்குறை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நிதி இல்லாததால் இந்த வேலை தங்கிவிடக் கூடாது. அரசாங்கம் எவ்வளவு இந்தத் திட்டத்திற்குக் கொடுக்கவிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் பெரிய கடை வீதியும் நவாப் ஹக்கீம் சாகிப் சாலையும் சந்திக்கும் சந்திப்பில் ஒரு மேல் நடைப் பாலமும் அதற்கான மதிப்பீடு ரூ. 5 லட்சமும், கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள டாக்டர் நஞ்சப்பா சாலையும் கிராஸ் கட் சாலையும் சந்திக்கும் சந்திப்பிலும் மேல் நடைப் பாதையும், இதற்காக 10 லட்ச ரூபாய் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்குண்டான பணத்தைக் கட்டிவிட்டால் வேலையை உடனே நெடுஞ்சாலைத் துறை துவங்க முடியும். அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண். 279 ஒத்தி வைக்கப்படுகிறது.

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### கேள்வி கேட்ட உறுப்பினர் அவையில் இருக்கும்போது கேள்வி ஒத்திவைக்கப்பெறுதல்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், அடுத்து வருகின்ற கேள்வியைக் கேட்க உறுப்பினர் இந்த அவையில் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். எனவே இதை ஒத்திவைப்பதற்கான காரணம் என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத்தான் கேள்விகளை ஒத்திவைப்பது வழக்கம். எனவே உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டாலும் ஒத்திவைக்கப்படுமா, அந்த உரிமை எங்களுக்கும் வழங்கப்படுமா?



1985 ஜூன் 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேட்ட உறுப்பினரோ, மற்ற துணைத் தலைவர் போன்றவர்களோ, இந்தச் சேரில் அமர்ந்திருக்கும்போது ஒத்திவைக்கப்படும் என்பது மரபு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சேரில் இருந்தால், நிச்சயமாக அந்த உரிமை வழங்கப்படும்.

## 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி.

### தற்காலிக மாஜிஸ்ட்ரேட்டுகள், மாவட்ட முன்சீப்கள்.

**280 — (* வினா எண். 642) திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்காலிக மாஜிஸ்ட்ரேட்டுகளையும் மாவட்ட முன்சீப்களையும் நிரந்தரமாக்க தமிழ்நாடு மாஜிஸ்திரேட்டுகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, (அ) 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாஜிஸ்ட்ரேட்டுகள் சங்கம் பெருவாரியாக குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிபதிகள் பல ஆண்டுகள் தற்காலிகமாகவே பணியாற்றி வருவதால் அவர்களுடைய தற்காலிகப் பணியினை முறைப்படுத்தக் கோரியது.

(ஆ) அச்சங்கத்தின் வேண்டுகோளை பரிசீலித்து 1981-ம் ஆண்டு தற்காலிகமாக பணியாற்றும் அனைத்து இரண்டாம் வகுப்பு நீதிபதிகளின் தற்காலிகப் பணியினை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்தது. 1966-ம் ஆண்டிலிருந்து நேரடி நியமனம் எதுவும் செய்யப்படாததால், நீதித்துறை இரண்டாம் வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகளின் பணிகளை முறைப்படுத்தி ஆணை பிறப்பிப்பதிலிருந்து அரசைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் தமிழ்நாடு வழக்கறிஞர் மன்றத் தலைவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அவ்வாறே நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்திரேட்டுகளின் பணிகளை முறைப்படுத்துவதிலிருந்து அரசைத்

தடுத்து நிறுத்தி, உயர் நீதிமன்றம் 20—1—1982 அன்று தடையாணை பிறப்பித்தது. உயர் நீதிமன்றத்தின் தடையாணையின் காரணமாக நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகளின் பணியை முறைப்படுத்த அரசுக்கு இயலவில்லை. மேற்கண்ட 'ரிட்' மனுவின் மீது தீர்ப்பாணை உயர் நீதிமன்றத்தால் 10—5—1985-ம் ஆண்டு வழங்கப்பட்டது. அத் தீர்ப்பினையொட்டி அரசு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரு தொழிலாளி குறிப்பிட்ட நாட்கள், அதாவது 240 நாட்கள் வேலை பார்த்தால் அவரை நிரந்தரமாக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. எனவே இந்தச் சட்டம் தற்காலிக மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும், மாவட்ட முன்சீப்புகளுக்கும் பொருந்துமா? அல்லது இதற்கு என்று தனியாக ஒரு சட்டம் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தற்காலிக மாஜிஸ்ட்ரேட்டுகளாக பணியாற்றி வருகின்றவர்கள் ஏற்கனவே அரசுப் பணியில் நிரந்தரமாக இருந்தவர்கள். ரெக்ரூட்மென்ட் பை டிரான்ஸ்பர் என்ற முறையிலே அவர்கள் மாற்றம் செய்து உயர் நீதிமன்றத்தினுடைய 2 நீதிபதிகள் அடங்கிய குழுவால் நியமிக்கப்பட்டார்கள். அவர்களை நிரந்தரம் ஆக்குவது குறித்துத்தான் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அரசு அவர்களை நிரந்தரமாக்க முடிவு செய்து அதை செயல்படுத்த முனைந்தது. அதற்கு தடையாணை விதித்து, அது கூடாது என்று கோரிக்கையை உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் சங்கம் ஒரு வழக்கைத் தொடர்ந்த காரணத்தால், அதற்கு தடையாணை விதிக்கப்பட்டது. தற்போது உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பல உரிமையியல் நீதிமன்றங்களில், அடிசனல் முன்சீப் நீதிமன்றங்களில் முன்சீப் பதவிகள் காலியாக இருக்கின்றன. எனவே உடனடியாக அங்கே நியமனம் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாடு தேர்வாணைக் குழு மாவட்ட முன்சீப் பதவிக்கான 60 நிரந்தர காலியிடங்களுக்குத் தேவையான தகுதிவாய்ந்த நபர்களை தற்போதுள்ள பணிவிதிகளின்படி நிரந்தர பணியமர்த்தங்கள் மேற்கொள்ள தேர்வு செய்து வருகிறது.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மே மாதம் முதல் வாரம் சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, ஜெனரல் ரூல்ஸ் 38-ன்படி மாநில அரசு நீதித்துறை நீதிபதிகளை தானே நியமிக்கும் அதிகாரம் இந்த அரசுக்கு உண்டு எனத் தெளிவாக தீர்ப்பு அளித்துள்ளது. அந்தத் தீர்ப்பின் மூல வாசகமே 20–8–1981-ஆம் தேதி அன்றுதான் தற்காலிக மாஜிஸ்ட்ரேட்டுகளை நிரந்தரமாக்க அரசு முடிவு செய்து உள்ளது என்று தெரிய வருகிறது. எனவே இந்த 20-8-1981 வரை தற்காலிகமாக நியமிக்கப்பட்ட நீதிபதிகளை அரசு முடிவுப்படி நிரந்தரம் ஆக்கிவிட்டு, அந்தத் தேதிக்குப் பின்னர் சுமார் 100 மாஜிஸ்ட்ரேட்டுக்கள் தற்காலிகமாக அரசுத் துறையில் பணியாற்றுபவர்களை வழக்கறிஞர்களை உயர் நீதிமன்றம் நியமனம் செய்தவர்களை நீக்கிவிட்டு, இந்த இடங்களுக்கு சர்விஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழு மூலம் நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றம் (நிர்வாகப் பிரிவு) கருத்து தெரிவித்துள்ளது. அரசு அதை ஆராய்ந்து வருகிறது.

**திரு. கடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு முன்பு கௌரவ நீதிபதி ( Honorary Magistrate ) என்ற ஒரு பதவி சப் மாஜிஸ்டிரேட்டுக்கு இணையாக பொதுமக்களில் ஒருவரை அரசு நியமனம் செய்து வந்தது. அது இப்போது இல்லை. மீண்டும் அப்படி கௌரவ நீதிபதிகளை நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

[1985 ஜுன் 14

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய செயற்குறிப்பு இல்லை.

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதியதாக பிரிக்கப்பட்ட தாலுக்காக்களில் பல ஆண்டுகளாகியும் அங்கு குற்றவியல் நீதிமன்றமும், உரிமை இயல் நீதிமன்றமும் அமைக்கப்படவில்லை. அந்தமாதிரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகின்றேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3, 4 வட்டங்களுக்கு, தாலுக்காக்களுக்கு ஒரு நீதிமன்றம் என்று கடந்த காலங்களில் இருந்ததை மாற்றி ஒவ்வொரு வட்டத்திற்கும், தாலுக்காவிற்கும்

District Magistrate-cum-Judicial Magistrate

அளவில் சிவில், கிரிமினல் வழக்குகளைக் கவனிக்க நீதிபதிகள் இருக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவை அரசு எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்படும் மாஜிஸ்டிரேட்டுகள், நீதிபதிகளுக்கு, டிபார்ட்மெண்ட் சர்வீஸில் இருப்பவர்களை எடுக்காமல் வழக்கறிஞர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு நீதிமன்றம், முன்சீப் கோர்ட் அமைப்பதாக சொன்னார்கள் ஆனால் ஏற்கெனவே நிலக்கோட்டைக்கு சாங்ஷன் செய்யப்பட்டு 3 ஆண்டுகள் ஆகியும், அதற்கு இலவசமாக இடம் கொடுத்தும் இன்னும் அது அமைக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்னவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1985 ஜுன் 14]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காரணம் என்னவென்று தெரியவில்லை. உயர்நீதிமன்றத்தோடு கலந்து அது குறித்து விரைந்து நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**திரு. மு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளுக்கு இன்னும் சரியான முறையில் வீடுகள், குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அவ்வாறு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டு காலமாக அதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதியினுடைய அளவு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே எல்லா நீதிபதிகளுக்கும் குவார்ட்டார்ஸ் கட்டிக் கொடுக்க இயலாத அளவுக்கு — மைய அரசினுடைய நிதி ஒதுக்கீடு இது குறித்து அதிகமாக இல்லாமல் இருக்கிறது. இருந்தபோதிலும் நீதிபதிகளின் குறைகளை தீர்க்க ஒரு தனிப்பட்ட ஆக்க நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலித்து வருகிறது.

**உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள்.**

**281 (*வினா எண். 2191) திரு. ப. ந. இராமச்சந்திரன்; திரு. மா. சின்னராசு; திரு. எஸ். இராசாராமன் மற்றும்** திரு. செ. செம்மலை: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்றத்தில் 1984 டிசம்பர் வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பிற்கு காத்திருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) 1983 ஜுன் முதல் 1984 ஏப்ரல் வரை எவ்வளவு வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவர் அவர்களே (அ) சென்னை உயர்நீதிமன்றத்தில் 1984 டிசம்பர் வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பிற்கு காத்திருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அசல் தரப்பு வழக்குகள் : (original side) | | 3,708 |
| (2) மேல் முறையீடு வழக்குகள் : (Appellate Side) | | |
| (i) உரிமையியல் | (Civil) | 64,221 |
| (ii) குற்றவியல் | (Criminal) | 5,138 |
| மொத்தம் | | 73,067 |

(ஆ) 1983 ஜுன் முதல் 1984 ஏப்ரல் வரை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) அசல் தரப்பு வழக்குகள் (Original Side) | | 1,169 |
| (2) மேல் முறையீடு வழக்குகள் : (Appellate Side) : | | |
| (1) உரிமையியல் | (Civil) | 15,586 |
| (2) குற்றவியல் | (Criminal) | 754 |
| மொத்தம் | | 17,509 |

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 73 ஆயிரம் வழக்குகள் 1984 டிசம்பர் வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பிற்குக் காத்திருப்பதாகவும், அதிலே 17,000 வழக்குகள்தான் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் அறிவித்தார்கள். இந்த காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு — அங்கே இன்னும் 7, 8 நீதிபதிகளை நியமிக்கின்ற இடங்கள் காலியாக இருக்கின்றன — அந்த நீதிபதிகளை நியமித்து, வழக்குகளை விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு பழமொழி உண்டு, 'ஜஸ்டிஸ் டிலேய்ட் ஈஸ் ஜஸ்டிஸ் டினைட்' என்று ஆகையால், நீதிபதிகளை நியமித்து, விரைந்து ஏழை எளிய மக்களுக்கு உதவி புரிவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலுவையில் உள்ள வழக்குகளைப் பொறுத்தவரைக்கும் பல ஆண்டுகளாக பதிவு செய்யப்பட்டு, ஒட்டுமொத்தமான வழக்குகளின் எண்ணிக்கைதான். அந்த எண்ணிக்கையைத் தான் 73,067 என்று குறிப்பிட்டேன். ஆனால், உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்ட வழக்குகளின் எண் ணிக்கை பொறுத்தவரைக்கும் 17,509 என்று குறிப்பிட்டேன். ஓராண்டு காலத்தில் உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைத் தான் குறிப்பிட்டேன். தமிழ் நாடு உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் அகில இந்திய நீதியிலே 1981 ஆம் ஆண்டு வழக்குகள் பைசல் செய்து தீர்ப்பு அளித்ததில் முதல் இடத்தையும், 1982 ஆம் ஆண்டில் இரண்டா வது இடத்தையும் பெறக்கூடிய அளவிற்கு சென்னை உயர்நீதி மன்றம் வழக்குகளில் தீர்ப்பளிப்பதில் மற்ற மாநில நீதிமன்றங் களைவிட மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. காலி யாக உள்ள நீதிபதிகளின் இடத்தை நிரப்புவதற்கு மைய அரசிற்கு மாநில அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது. அது குறித்து மைய அரசு முடிவெடுக்க உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உயர் நீதிமன்றம் மற்ற மாநில உயர் நீதிமன்றங்களைவிட வழக்குகளை பைசல் செய்வதில் சாதனை புரிந்திருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற கணக்குப்படி பார்த்தால், பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்க கிட்டத்தட்ட 4, 5 ஆண்டு காலம் ஆகக்கூடிய நிலைமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புவது, தற்போது உயர் நீதிமன்றத் தில் 25 நீதிபதிகள் அளவுக்குத்தான் அங்கே பதவிகள் நிரப்பப் பட்டிருக்கின்றன. எனவே, 25 நீதிபதிகள் என்கின்ற அந்த வரை முறையை அதிகப்படுத்த, அதிக நீதிபதிகளை நியமிக்க மத்திய அரசின் உதவியை நம் மாநில அரசு நாடுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்டன்சி ஆப் கேசசைப் பொறுத்தவரைக்கும், 'இட் இஸ் அன் ஆல் இண்டியா பிராப்ளம்'. அதுவும் குறிப்பாக நீதிபதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்த மட்டில், வழக்குகளின் நிலுவையைக் குறைக்க முடியும், என்ப

தல்ல. அதற்கு வேறு பலவிதமான காரணங்களும் இருக்கின்றன. இருந்தபோதிலும்கூட, தற்போது 25 நீதிபதிகள் இருக்க வேண்டிய சென்னை உயர்நீதி மன்றத்தில், 13 நீதிபதிகளே இருக்கிறார்கள். மீதி 7 இடங்களை நிரப்ப மைய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது. அந்த 25 நீதிபதிகளின் எண்ணிக்கையை 30 ஆக உயர்த்த வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறது. நிலுவையைக் குறைக்க அதுவும் உதவியாக இருக்குமென்ற முறையில் மைய அரசை மாநில அரசு அணுகியிருக்கிறது.

**திரு. ப. த. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மிக்க நன்றி. அதேபோல், சென்னை உயர்நீதி மன்றத்தில் ஏறத்தாழ 3,500 வழக்கறிஞர்கள் பணியாற்றுகின்றார்கள். அவர்களுக்குத் தேவையான லா சேம்பர்ஸ் இல்லாத காரணத்தினால், அவர்கள் மண்ணடி, கொண்டிச் செட்டித் தெரு, அரண்மனைக்காரன் தெரு, அங்கப்ப நாயக்கன் தெரு போன்ற பகுதிகளில் அதிக வாடகை கொடுத்து, 1000, 2000 என்று கொடுத்து அறையை எடுத்து தங்கள் தொழிலை நடத்த வேண்டிய நிலைமையிருக்கிறது. இப்போது இருக்கின்ற இந்த 190 அறைகளை, 500 அறைகள் என்று வழக்கறிஞர்களுக்குக் கட்டித் தருவதற்கு அரசினிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கின்றதா? அப்படி இல்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அதற்கான திட்டத்தைத் தீட்டி, கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவும் ஒரு ஆல் இண்டியா பிராப்ளம்தான். சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் மட்டுமல்ல. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்ட மையங்களிலும், வட்டங்களிலும் பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களுக்கு இந்தப் பிரச்னை இருக்கிறது. பன்னெடுங்காலமாக வழக்கறிஞர்கள் அறைகளுக்கு தேவையான நிதி ஒதுக்கப்படாத நிலை இருந்த காரணத்தினால் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு விரைவான திட்டத்தை அரசு மேற்கொண்டு, என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுத்து, நிதி நிறுவனங்களோடு தொடர்புகொண்டு, நிதி ஆதாரத்தைப் பெற்று நடவடிக்கை எடுக்க ஆய்ந்து வருகிறது.





**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு அளிக்கப்பட்ட வழக்குகளிலேகூட ஜட்ஜ்மெண்ட் காப்பி கிடைப்பதற்கு காலதாமதம் ஆகிறது. இதனால் மேல் முறையீடு, 'அப்பீல்' செய்வதற்கு காலதாமதம் ஆவதால், ஜட்ஜ்மெண்ட் காப்பி உடனடியாகக் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, ஜொராக்ஸ் காப்பி போன்ற முறையைக் கடைப்பிடித்து இதுபோன்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக அதை நடைமுறைப் படுத்த வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தை அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது; அதற்காக நிதியும் உதவியிருக்கிறது. உயர்நீதி மன்றம் அதுகுறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** துணைத் தலைவர் அவர்களே, நீதி மன்றத்திலே வழக்குகள் துரிதமாகப் பைசல் ஆகாமல் இருப்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக அங்கே இருக்கிற கிளார்க்குகளிடமும் பியூன்களிடமும் காசு கொடுத்தால் அவர்கள் கேஸ் கட்டுகளை எடுத்து ஒளித்து வைத்துவிடுகிறார்கள். அதனால்தான் காலதாமதம் ஆகிறது. ஆகவே அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, தவறுகளைத் தூண்டுவது வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கிற பொதுமக்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறார். வழக்கறிஞர்கள் ஒத்துழைப்பு கொடுக்கிறபோது அதுபோன்ற தவறுகள் இல்லாமல் இருக்கும். வழக்குகள் தாமதமாவதற்கு ஒன்றல்ல, இரண்டல்ல, பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் செம்மை செய்து நிலுவைகளைப் போக்குவதற்கு மாநில அரசு, மத்திய அரசு, நீதித் துறை ஆகியவை நடவடிக்கை எடுத்து வருகின்றன. பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தலைமையில் முதலமைச்சர்கள், சட்ட அமைச்சர்கள், தலைமை நீதிபதிகள் ஆகியவர்கள் கலந்துகொள்ளும் ஒரு மாநாட்டை அடுத்த மாதத்திலே கூட்ட இருக்கிறார்கள். அதிலே இவைகளையெல்லாம் எப்படிக் களைவது என்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

[1985 ஜூன் 14

**திரு. க. சோலைராசு :** துணைத் தலைவர் அவர்களே, வழக்குகளிலே தீர்ப்பளிப்பதற்குக் காலதாமதமாகிற காரணத்தினால் ஏழைகள் தொடர்ந்து வழக்குகளை நடத்த முடியாமல் தோல்வியுறுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்த ஏழைகளுக்கு உதவுகிற வகையிலேயும் வழக்கறிஞர்களுக்கு உதவுகிற முறையிலேயும் ஒவ்வொரு தாலுகாவிலேயும் அரசு சார்பிலே முழு நேர அரசு ஊழியர்களாக வழக்கறிஞர்களை நியமிக்கும் செயற்குறிப்பு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் மற்ற மாநிலங்களை விட நல்ல முறையிலே ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கும் திட்டத்தை தமிழ் நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

**திரு. என். எல். வி. சித்தன் :** மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியில் அனுமதிக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது போன்று நிரம்ப வழக்குகள் பைசலாகாமல் இருக்கிற காரணத்தினால் வெள்ளைக்காரன் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட கோடை விடுமுறை என்ற முறை இன்றும் இருந்து வருகிறது. நிறைய வழக்குகள் பைசலாகாமல் இருக்கின்ற காரணத்தினால் இனிமேலாவது அந்த முறையை ரத்துசெய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி அதுபற்றித் தான் இருக்கிறது. எனவே அதற்குப் பதிலிறுக்கிறபோது பதில் அளிக்கப்படும்.

**திரு. மு. பாண்டுரங்கன் :** துணைத் தலைவர் அவர்களே, புரபிஷன் ஆக்ட் சம்பந்தப்பட்ட வழக்குகள் கூட இப்போது முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டிடம் செல்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிபதிகளுக்கு வேலையில்லாமல் இருக்கிறது. எனவே அவர்களையெல்லாம் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, அது தவறான கருத்து, செகண்ட் கிளாஸ் மாஜிஸ்த்திரேட்டுகளுக்கு பணிகள் இருந்து வருகின்றன. எதிர்காலத்திலே



1985 ஜூன் 14]

District Magistrate-cum-Munsiff என்ற ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் அதை மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 282 ஒத்திவைக்கப்பெறுகிறது.

### சேலத்தில் புதிய விமான நிலையம்.

283—(* வினா எண். 1060) **திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரத்தில் மத்திய அரசு அமைக்க உத்தேசித்துள்ள விமான நிலையத்திற்கான இடத்திற்கு சர்வே ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. செ. செம்மலை:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அந்த இடத்திற்கான சர்வே செய்யப்படவில்லை என்ற அளவிலே சொன்னார்கள். இருந்தாலும் மைய அரசு ஓமலூருக்கு அருகிலே ஒரு விமான நிலையத்தை அமைக்க வேண்டுமென்று பரிசீலித்துக் கொண்டிருப்பதாகத் தகவல் சொல்லப்பட்டது. அந்தப் பரிசீலனை எந்த அளவில் இருக்கிறது, மைய அரசு மாநில அரசோடு ஏதேனும் ஒரு வகையிலே இதுபற்றி தொடர்பு கொண்டிருக்கிறதா என்ற விவரத்தையாவது அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, 1982-ம் ஆண்டிலே அதுபற்றிப் பேசப்பட்டது. தூத்துக்குடியிலேயும், சேலத்திலேயும் ஒரு விமான நிலையம் அமைக்க வேண்டும் என்ற அந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு, தூத்துக்குடியிலே முதலிலே அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணம் இல்லாத காரணத்தால் அங்கே அமைப்பது கூட தற்போது முடியாது என்று தெரிவித்து இருக்கிறது. சேலத்திலே அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு, அங்கே இடம் இருக்கிறதா என்று பார்த்து, இப்போது நம்முடைய அரசாங்கத்திற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்

[1985 ஜூன் 14

மூலமாக 350 ஏக்கர் அங்கே ஒட்டுமொத்தமாக இருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, மத்திய அரசு எந்த நேரத்திலேயும் ஆரம்பிப்பதற்குத் தயாராக இருந்தாலும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அந்த நிலத்தை இலவசமாக மத்திய அரசுக்கு அந்த விமான நிலையம் அமைப்பதற்காகக் கொடுப்பதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது. நாமும், அதைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமாக இருந்த கப்பல் பழுதடைந்து விட்டது. அதனால் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழ்கிற மலேசியா, சிங்கப்பூர் போன்ற பகுதிகளுக்கு . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூல வினாவுக்கும் துணை வினாவுக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை விமான நிலையத்தில் விமானப் பயிற்சிப் பள்ளி என்று ஒன்று இருந்தது. அது இப்போது தற்காலிகமாக மூடப்பட்டு இருக்கின்றது. அதிலே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூல வினா விமான நிலையம் அமைப்பது பற்றியது. தங்களது கேள்வி, பயிற்சிப் பள்ளியைப் பற்றியது. எப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும்?

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வளர்ந்து வருகின்ற யுகத்தில், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் விமான நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு அணுகுமா? அதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா? என்று அறிய விரும்புகிறேன். அதோடு தஞ்சையில் உள்ள சிறு விமான தளத்தை கொஞ்சம் விரிவுபடுத்துகின்ற திட்டம் அரசிடம் ஏதும் உள்ளதா?



1985 ஜூன் 14]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் விமான தளம் அமைக்க வேண்டும் என்று கேட்பதிலே தவறு ஒன்றும் இல்லை. ஆனால் அவற்றை அமைப்பது கடினமான வேலை. அது லாபகரமாக இருக்குமா என்று கவனிக்க வேண்டும். இப்போது தூத்துக்குடியிலேயும், சேலத்திலேயும் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதில்கூட மத்திய அரசு லாபகரமாக இருக்குமா என்று ஆய்வு செய்கிறோம் என கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். தஞ்சாவூரைப் பொறுத்தவரை, தனியாக அதை விரிவுபடுத்த முடியுமா என்பதைப்பற்றி ஆய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு விமான தளம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வெகு காலமாக இருந்து வருகிறது. அதை பற்றி அரசு ஏதேனும் பரிசீலனை செய்து வருகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேட்கின்ற ஒவ்வொரு கோரிக்கையுமே வெகு காலமாகத்தான் இருந்துகொண்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி தற்போது ஏதும் திட்டம் நம்மிடத்திலே பரிசீலனையில் இல்லை.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதகையைப் பொறுத்தவரையில், அங்கே ஏற்கனவே ஒரு ஹெலிபேட் தயாராக இருக்கிறது. ஆகவே, அங்கே ஹெலிகாப்டரை அனுப்பும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டரை அனுப்பும் உத்தேசம் இருக்கிறது. ஆனால் ஹெலிகாப்டர்தான் இல்லை. எனவே யோசித்துக் கொண்டிருக்கிறோம். சொல்கிற யோசனை, முறையான, தேவையான ஒன்றாக இருக்கிறது. சில நேரங்களில் மழையின் காரணமாக ரோடுகள் பாதிக்கப்பட்டு விடுகிறபோது, அவசரமாகப் போகின்ற நிலைமைகூடப் பாதிக்கப்படுகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனையைக் கவனத்திலே கொண்டு, நிதி வசதிக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[1985 ஜூன் 14

**திரு. கு. ரமணி:** துணைத் தலைவர் அவர்களே, கோவை சிவில் விமான நிலையம் போயிங் விமானங்கள் வந்து இறங்குவதற்கு அத்தர் 128/165 டி-2 டி ஆர் கோபாலகிருஷ்ணன் 20-2-86 வேண்டிய அளவுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று நீண்ட காலமாகக் கேட்டு வந்ததையொட்டி அங்கு வேலை நடப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது சிவில் விமானங்கள் முழுவதும் சூலூரிலே, ரொம்ப தூரத்திலே வந்து இறங்கிக் கொண்டிருக்கிறது. இது எப்போது முடியும்? வேலையைத் துரிதமாக நடத்துவதற்கு அரசு வற்புறுத்தி இருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** நமது அரசு வற்புறுத்தி உள்ளது. அதற்குத் தேவையான இடத்தைக் கூட கொடுத்துள்ளது. அந்த வேலைகளை விரைவாக முடிக்கவேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டும் இருக்கிறோம். விரைவாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வியாபார ரீதியாக, தென் மாநில ஊர்களை இணைக்கக்கூடிய இடமாக திண்டுக்கல் மாநகரம் இருக்கிறது. அண்ணா மாவட்டம் ஆக உருவாக்கப்பட்டுள்ள இந்த நிலையில் திண்டுக்கல்லில் விமான நிலையம் அமைக்கப்படுமா? என்று அறிய விரும்புகிறேன். ஏற்கனவே, ஒரு தனியார் விமான நிலையத்தை ஏற்படுத்தி அது இயங்கியும் வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படியே போனால், 234 உறுப்பினர்களும், தங்கள் தொகுதியில் விமான நிலையம் கேட்பார்கள். ஆகவே, அது தேவையில்லை.

**அருப்புக்கோட்டை பைபாஸ் சாலை.**

284—(* வினா எண் 9899) **திரு. மு. பிச்சை:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-தூத்துக்குடி சாலையில் அருப்புக்கோட்டை நகரத்திற்கு அருகில் பைபாஸ் ரோடு போடும் திட்டம் அரசின் கருத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1985 ஜூன் 14]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கு பகுதி ? திட்டத்தின் கீழ் அரசால் ரூ. 5 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ. 5.25 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் செய்யும் பணி முழுவதும் முடிவடைந்து விட்டது. மேற்படி நில ஆர்ஜிதம் செய்த நிலத்தில் புறவழிச் சாலை அமைத்து, இரயில்வே இருப்புப்பாதை, கடலில் மேம்பாலம் மற்றும் இதரத் தடுப்பு சுவர் கட்ட ரூ. 1.77 கோடி தேவைப்படும். அரசின் குறுகிய நிதி வசதியின் காரணத்தால் இப்பணியை உடனடியாக மேற்கொள்ள இயலாது. இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிவசதிக்கேற்ப மேற்படி சாலை அமைக்க பரிசீலனை செய்யப்படும்.

(முற்பகல் 9-40)

**திரு. மு. பிச்சை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் புறவழிச் சாலையை அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை-தூத்துக்குடி செல்லும் அந்தச் சாலையில் பல பேருந்துகளும், வாகனங்களும் செல்லும்போது அருப்புக்கோட்டை நகரத்தின் உள்ளே புகுந்து போகின்றன. அங்கே பல பள்ளிகள் இருக்கின்றன. இதனால் பல இடையூறுகளும் இடைஞ்சல்களும் இருக்கின்றன. எனவே, குறுகிய காலத்திலே அமைச்சரவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதோடு மேற்படி சாலையை அகலப்படுத்தும் திட்டம் உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று விரைவாக முடிக்க வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். அகலப்படுத்துவதைப் பற்றிக் கேட்டார்கள், அவர்கள் பழைய பாதையைப்பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கேயுள்ள அதிகாரிகள் எந்த அளவிற்கு அகலப்படுத்த முடியும் என்று பார்த்து, அதைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

[1985 ஜூன் 14

**திரு. மு. பிச்சை:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே அந்தச் சாலையை, போடுகின்ற அந்தப் பாதையைச் சர்வே செய்த அதிகாரிகள் மூலம் வேலை பார்க்கப்பட்டது. இப்பொழுது அந்த வேலை துரிதமாக நடக்காததால் மக்கள் அது சம்பந்தமாகத் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசு ஏன் இவ்வளவு காலதாமதம் செய்கிறது? மாண்புமிகு புரட்சித் தலைவர் மூலம் அரசு கூடுதல் நிதிநிலையை ஒதுக்கி, கூடிய விரைவில் இதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, முதலிலே அதிகாரிகள் அங்கே போய் பணியாற்றியதற்குக் காரணம், அந்த இடங்களை எடுப்பதற்காக. இப்பொழுது அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அங்கே வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அதிலே பிரச்னைகள் இருப்பதால்தான் மீண்டும் காலதாமதம் ஆகிறது. வருகின்ற ஆண்டுகளில், நான் ஏற்கனவே சொன்னபடி, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பைபாஸ் ரோட்டை நேஷனல் ஹைவேஸ் என்று போட்ட பிறகு, சம்பந்தப்பட்ட நகரத்திற்குள் செல்லும் பழைய ரோட்டை நேஷனல் ஹைவேஸ் எடுத்து நடத்த முன்வர வேண்டும். ஆனால் அப்படி அதை நாங்கள் செய்ய மாட்டோம் என்று மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் நமது ஹைவேஸ் துறையே எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, நேஷனல் ஹைவேஸ் அல்லது ஸ்டேட் ஹைவேஸ் இதில் ஏதாவது ஒரு துறையின் மூலம் அதை எடுத்து நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டம் தச்சநல்லூருக்கும் மேலப்பாளையத்திற்கும் இடையே . . . .



1985 ஜூன் 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

**குசஸ்தலை ஆற்றின் குறுக்கே பாலம்.**

**286 (*வினா எண். 1366)—திரு. கே. பி. கே. சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி நெடுஞ் சாலையில் நாப்பாளையம் குசஸ்தலை ஆற்றின் மேம்பால பணி துவங்குவதில் கால தாமதத்திற்கு காரணம் என்ன?

(ஆ) அது எப்போது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை உரிமையியல் நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் பால வேலை ஒப்பந்தக்காரர்களாகிய நேஷனல் கம்பெனி நிறுவனத்தினரிடம் செய்து கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தது செல்லாது என்று அறிவித்ததுடன், மேற்கொண்டு நெடுஞ்சாலைத் துறை வேலை செய்யத் தடை உத்திரவும் பிறப்பித்துள்ளது. இது பற்றிய மேல் முறையீடு பிரின்சிபல் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்கண்ட தள்ளுபடி செய்த தீர்ப்புரையின் மீது அரசு வழக்கறிஞரின் கருத்தைப் பெற்றபின் மீண்டும் இப்பணியைத் தொடங்குவதற்கான மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்வி கேட்ட உறுப்பினர், அமைச்சர் பதில் சொல்லி முடிக்கும் நேரத்தில் தலைவரின் கவனத்தை ஈர்க்க தம் கையைத் தூக்கினால் தான் அவர் துணைக் கேள்வி கேட்க விரும்புகிறார் என்று தெரியும். இல்லையென்றால் அடுத்த கேள்விக்குப் போக வேண்டியிருக்கும்.

**திரு. கே. பி. கே. சேகர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு செல்லப்பட்டு ஒரு வருடம் ஆகியும்கூட தீர்ப்பின் நகலை அரசு வழக்கறிஞர் தராததற்கான காரணம் என்ன? இந்த மேம்பால வேலை தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் மூலம் நடத்துவதற்கு அரசு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அந்தத் தீர்ப்பினுடைய நகல் நமக்குக் கிடைத்த பிறகு நாம் முடிவெடுக்க முடியும். அதற்கு முன் முடிவெடுப்பது சரியாக இருக்காது.

**திரு. கே. பி. கே. சேகர்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தீர்ப்புச் சொல்லப்பட்டு ஒரு வருடம் ஆகியும் அந்தத் தீர்ப்பின் நகல் கிடைக்கவில்லையென்றால் அதிகாரியிடம் சொல்லி அதை விரைவில் பெற நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அதைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**சத்துணவுத் திட்டத்தின்கீழ் முட்டை வழங்கல்.**

**287 (*வினா எண். 148)—திரு. கு. சுப்பராயன், திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவு வழங்கும் திட்டத்தில் குழந்தைகளுக்கு கோழி முட்டையும் வழங்கும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, அம்மாதிரி உத்தேசம் இல்லை.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முட்டை ஒரு சத்துள்ள உணவு என்பதால் சத்துணவுத் திட்டத்தில் இனிமேலாவது முட்டை வழங்க அரசு பரிசீலனையில் எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முட்டையில் இருக்கிற சத்தைவிட அதிகமான சத்து பச்சைக் காய்கறிகளிலே இருப்பதாலே, அதிலேயே நாம் அதிகமான சத்தைக் குழந்தைகளுக்கு வழங்கிவிட முடியும்.





**திரு. இ. எஸ். தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முட்டையில் எலும்பு வளர்ச்சி சத்து இருக்கிறது. ஆதலால் அதைப் பரிசீலனை செய்வதுடன், அங்கே குழந்தைகளுக்கு வேண்டிய உணவு, உடை, மற்றும் பாடப் புத்தகங்கள் கொடுத்தாலும், காலையில் குழந்தைகள் பள்ளிக் கூடத்திற்குப் போகும்போது தின்பண்டம் வாங்கிக் கொடு, மிட்டாய் வாங்கிக் கொடு, காசு கொடுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள். ஆகவே, குழந்தைகளுக்கு இந்த முட்டையுடன் கடலை மிட்டாய் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழந்தையின் வளர்ச்சிக்கு முட்டை பயன்படும் என்று சொல்கிறார்கள். முட்டை தின்றால் நெட்டையாக ஆகலாம் என்பது அவருடைய கருத்தாக இருக்கலாம். பச்சைக் காய்கறிகளில் கூட எலும்புகள் வளர்ச்சிக்கு நிறைய, தேவையான, வைட்டமின்கள் இருக்கின்றன.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது மதிய உணவுத் திட்டத்தில் மத்தியானத்திலே மட்டும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதை காலையிலும் இரவிலும் விஸ்தரிக்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிய உணவு வழங்கப்படுவதே அவர்கள் பள்ளிக்கு வரவேண்டும், படிக்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, ஏதோ உணவு சாலை நடத்தி, சத்திரத்திலே சோறு போடுவதைப் போல போட்டு, சோம்பேறிகளை வளர்ப்பதற்காக அல்ல. ஆகவே, அறிவை வளர்ப்பதற்காகத் தரப்படுகின்ற உணவை ஒரு நேரமே வழங்கினால் போதும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு நாட்டிலே வாழ்கின்ற ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவைப் புரட்சித் தலைவர் வழங்கிக் கொண்

டிருக்கிறார்கள். இந்த நோக்கிலே, கிராமப்புற பொருளாதாரத்தை வளர்க்கின்றவிதத்திலே கிராமங்களில் கோழிப் பண்ணைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அவர்களுக்கு மார்க்கெட்டிங் இல்லாமல், முட்டைகளுக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தால், அந்த முட்டைகளை இப்படிச் சத்துணவு மையத்திற்குப் பயன்படுத்தும்போது நாள் ஒன்றுக்கு இவ்வளவு முட்டைகள் தமிழகத்திற்குத் தேவை என்று நிர்ணயம் ஏற்படுகிற காரணத்தால், கிராமப்புற பொருளாதாரம் வளர்வதற்கு விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையிலே அமையும். ஆகவே, அரசு தீவிரமாகச் சிந்தித்து, சத்துணவு சாப்பிடுகிற குழந்தைகளுக்கு முட்டை வழங்குகிற திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சத்துணவுத் திட்டத்தில், தமிழகத்தில் குழந்தைகளும் முதியோர்களுமாக 82.34 இலட்சம் பேர்கள் பயன்பெற்று வருகிறார்கள். அவ்வளவு பேருக்கும் முட்டை கொடுப்பது என்று வருகின்றபொழுது அது சாத்தியமான ஒன்று அல்ல. இரண்டாவது, தமிழகம் தழுவி, பல்வேறு கிராமங்களில் இன்றைக்கு இந்தச் சத்துணவுக் கூடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. முட்டைகளை ஆங்காங்கு எடுத்துச் சென்று கொடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. கொடுக்கிறபொழுதே முட்டைகள் உடைவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. கொடுக்கப்பட்ட முட்டைகளிலே கெட்ட முட்டைகள் இருக்கிற வாய்ப்பும் உண்டு. ஆகவே, அவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கிறபொழுது முட்டை கொடுப்பது அவ்வளவு உகந்ததாகவும் தெரியவில்லை, முடிகிற காரியமாகவும் தெரியவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு வழங்குவதிலே, நீண்டகாலமாக பாண்டிச்சேரியிலும், ஆந்திராவிலும் பாலும் ரொட்டியும் தருகிறார்கள். அமைச்சர் முட்டை தருவதற்குச் சாத்தியம் இல்லை என்று சொல்கிறார். பிற மாநிலங்களில் தருவதைப் போல, பாலும் ரொட்டியும் தரப்படுமா ? இப்பொழுது மாணவர்களுக்குச் சத்துணவுக்கு எவ்வளவு தரப்படுகிறது ? அதற்குரிய



தொகை சத்துணவாக இல்லாத சூழ்நிலையில் அதை வழங்க அரசு பரிசீலிக்குமா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சத்துணவா அல்லது வெற்றுணவா என்று தெரிந்து கொள்வதற்காக, மாணவர்களுக்கு எவ்வளவு தொகை தரப்படுகிறது என்பதையும் அமைச்சர் அறிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரொட்டியும் பாலும் வழங்குவதைப்பற்றிச் சொன்னார்கள். இதற்கு முன்னாலேயே நம்முடைய கிராமங்களிலே ஒருங்கிணைந்த குழந்தைகளுடைய வளர்ச்சித் திட்டத்திலே கோதுமையிலே நாம் உப்புமா வழங்கி வந்தோம். அதையேகூட முறையாக உண்பதற்கு வரவில்லை. காரணம், கோதுமை என்கிறபொழுதே அவர்கள் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாரான நிலையில் இல்லை. அரிசிச் சோறு உண்பதிலே அவர்கள் அதிக ஆர்வமாக இருக்கிறார்கள். நான் சென்று பார்த்த பல மாவட்டங்களில் நாங்கள் இன்றைக்கு அரிசிச் சோறு சாப்பிடுகிறோம் என்று சிரித்துக் கொண்டே சொல்கிற குழந்தைகளின் முகங்களைப் பார்க்கிறோம். ஆகவே, இப்பொழுது இருக்கிற இந்தச் சத்துணவுத் திட்டமே முறையாக அவர்களுக்குத் தேவையான அளவுக்குச் சக்தியை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் எவ்வளவு செலவிடப்படுகிறது என்று கேட்டார், தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

(முற்பகல் 9-50)

**டாக்டர் அ. பொன்னுசாமி :** துணைத் தலைவரவர்களே, சத்துணவு மையங்களில் சத்தான உணவு சமைத்துக் கொடுக்க போதிய காய்கறிகள் உடனுக்குடன் கிடைக்காமல் இருப்பதால் ஆங்காங்கே இருக்கிற பள்ளிக் கூடங்களில் காய்கறிகள் பயிரிட அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** துணைத் தலைவரவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் காய்கறிகள் பயிரிட இட வசதி இல்லை. மேலும் எல்லாப் பள்ளிகளிலும் காய்கறி பயிரிட்டு அதற்குப் பிறகு சத்துணவு சமைப்பது என்றால் காலதாமதம் ஆகும். ஆகையால் கிடைக்கிற காய்கறிகளை வைத்து சத்துணவு சமைப்பது நடைமுறையில் இருக்கிறது.

[1985 ஜூன் 14

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவரவர்களே, தற்போது சத்துணவு வழங்கும் திட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் கூட்டுறவு காய்கறி சங்கத்தின் மூலமாக சத்துணவுக்குத் தேவையான காய்கறி வழங்கப்படுகிறது. அப்படி வழங்குகிற போது பல இடங்களில் வெளிச்சந்தைகளில் விற்பதைவிட அதிக விலை இருப்பதால், குழந்தைகள் விரும்பினால் பரீட்சார்த்தமாக பால், ரொட்டி, முட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** துணைத் தலைவரவர்களே, தற்போது அரசின் பரிசீலனையில் அது இல்லை. மேலும், இந்த அரிசிச் சோற்றை உண்பதுபோல மனம் மகிழ்ந்து ரொட்டியைச் சாப்பிடுவதில்லை. பொதுவாக ரொட்டி என்றாலே உடல்நலம் இல்லாதவர் சாப்பிடுகிற உணவு என்ற உணர்வு இருக்கிறது. ஆகவே, நம்முடைய கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் மக்கள் அதை விரும்பமாட்டார்கள்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை அளிக்கும்போது முட்டை விநியோகிப்பது சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதே நல்ல சத்தான உணவு, காய்கறி வாங்கி குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான். பல இடங்களில் சரியான முறையில் காய்கறி போடுவதில்லை; சரியான முறையில் சத்துணவு அளிப்பதில்லை என்ற புகார் வருவதைத் தவிர்க்க ஒருநாள் விட்டு ஒரு நாள் அல்லது வாரத்தில் 4 நாட்கள் குழந்தைகளுக்கு முட்டை விநியோகிப்பதின் மூலம் அங்கே இருக்கிற குழந்தைகளுக்கு—எத்தனை முட்டைகள் வழங்க வேண்டும் என்ற கணக்கு சரியாக இருக்கிற காரணத்தால்—சரியான முறையில் சத்துணவு வழங்கப்படுகிறது என்ற கருத்து உருவாகும். ஆகையால் வாரத்தில் 4 நாட்களுக்கு சத்துணவு மையங்களில் முட்டை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** துணைத் தலைவரவர்களே, முட்டை வழங்குகிற உத்தேசம் இல்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டேன். மேலும் நல்ல முறையில் பச்சைக் காய்கறி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எங்காவது ஒன்றிரண்டு இடங்களில் பச்சைக் காய்கறி போட



1985 ஜூன் 14]

வில்லை என்று தெரிந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முட்டை வழங்குவது நம்முடைய உடலுக்கு சக்தியை அளிக்கும் என்பது ஒரு தவறான எண்ணம்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே, இப்போது சத்துணவுக் கூடங்களில் பயன்படுத்தப்படும் காய்கறி ஒருசில குறிப்பிட்ட அமைப்புகளிலிருந்து வாங்கப்படுவதால் விலை அதிகமாக இருக்கிறது. அதனால் அமைப்பாளர்கள் விரும்புகிற காய்கறி வியாபாரிகளிடமிருந்து வாங்க அனுமதி அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** துணைத் தலைவரவர்களே, முன்பு காய்கறி எங்களுக்கு முறையாகக் கிடைக்கவில்லை என்று அமைப்பாளர்கள் தெரிவித்ததால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் காய்கறி வழங்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். பல்வேறு இடங்களில் கூட்டுறவு அமைப்புகள் மூலமாக வழங்கும் காய்கறி திருப்திகரமாக இருக்கிறது என்று தெரியவருகிறது. ஏதோ ஒருசில இடங்களில் அத்தகைய நிலைமை இல்லை என்றால், அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** துணைத் தலைவரவர்களே, முட்டை வழங்குவதில் இருக்கிற சிரமங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, சத்துணவு வழங்குகின்ற இத்திட்டத்தில் மீன், இறைச்சி, கோழிக்கறி ஆகியவற்றை மாதத்தில் 4 நாட்கள் அல்லது வாரத்தில் 2 நாட்கள் வழங்கும் திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** துணைத் தலைவரவர்களே, புலால் உணவு நல்லது அல்ல என்று பல பெரியோர்கள் கூறுகிறார்கள். ஊனைத் தின்று ஊனை வளர்ப்பது நல்லதல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வளரும் பருவத்தில் இருக்கிற குழந்தைகளுக்கு புலால், இறைச்சியைத் தந்து, அவர்களை வளர்ச்சிபெறச் செய்ய வேண்டுமென்று இல்லை. உடலு

[1985 ஜூன் 14

குத் தேவையான சக்தியைத் தருகிற உணவைத் தருவதன் மூலம் வளர்ச்சியைப் பெற முடியும். ஆகையால் முட்டை வழங்க வேண்டும் என்றில்லை. இறைச்சி வழங்கப்படுமா என்று கேட்டார்கள். இறைச்சி வழங்கும் உத்தேசமும் இல்லை.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையங்களில் கடலை கொடுத்தால்—அதில் புரோட்டீன் அதிகமாக இருப்பதால்—அது குழந்தைகளுக்கு மிகவும் நல்லதாகும். அந்த வகையில் பொட்டுக் கடலை கொடுக்க இந்த அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரதச் சத்து குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். தற்போது வழங்கப்படுகின்ற பருப்பி லேயே புரதச் சத்து இருக்கின்றது. ஆகவே, தனியாக கடலை வழங்க வேண்டியதில்லை. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் அவர்களுடைய பகுதிகளில் இருக்கின்ற சத்துணவுக் கூடங்களில் நிலக்கடலையும், பொட்டுக் கடலையும் வாங்கி வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முருங்கைக்காயில் அனைத்து ஊட்டச் சத்துக்களும், வைட்டமின்களும் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. மேலும் முருங்கை மரத்தை வளர்ப்பது கடினமான காரியமல்ல. தண்ணீர் இல்லாமல் கூட முருங்கை வளரும். எனவே ஒவ்வொரு சத்துணவு மையங்களிலும், பள்ளிகளிலும் முருங்கை மரம் நட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது வீட்டுக்கு ஒரு மரம் என்ற அந்தத் திட்டத்தின் கீழ் எல்லா இடங்களிலும் முருங்கை மரங்கள் பயிரிடப்படுகின்றன. பள்ளிக்கூடங்களில்கூட அவை பயிரிடப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் குழந்தைகளின் வளர்ச்சிக்கு முருங்கைக்காய் பயன்படு வதில்லை; முருங்கைக்கீரைதான் பயன்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜூன் 14]

**சத்துணவுக் கூடங்களில் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள்**

288 (*வினா எண். 1635) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு, கொடுக்கப் பட்டுள்ள பாத்திரங்கள் பழையதாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாத்திரங்கள் வாங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, (அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1—7—1982 முதல் தமிழ் நாட்டில் அமுல்படுத்தப்பட்டது. சமையலுக்கு வேண்டிய பாத்திரங்களை 'டான்சி' மூலம் பெற்றுக் கொள்ள அனுமதி அளித்து ஒவ்வொரு கிராம பாலர்பள்ளி மையத்திற்கும் ரூ. 2,000—நகர மையங்களுக்கு ரூ. 1,950-ம் அளிக்கப்பட்டது. கல்வி மையங்களுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 3 என்ற விகிதத்தில் பாத்திரங்கள் வாங்க பணம் அளிக்கப்பட்டது. பாத்திரங்கள் வாங்கி மூன்று வருடங்கள்கூட ஆகவில்லையாதலால் பாத்திரங்கள் பழையதாக இருப்பதற்கும் பழுதடைவதற்கும் வழியில்லை. சில பாத்திரங்கள் உபயோகிக்க முடியாத நிலையி லிருந்தால் அந்தந்த துறை இயக்குநருக்கு அறிவித்து புதுப்பித் துக்கொள்ளலாம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான சத்துணவு மையங்களில் பாத்திரங்கள் திருட்டு போகின்றன. பெரும்பாலான இடங்களில் போதுமான பாத்திரங்கள் இல்லாமல் இருக்கின்றன. மூன்று வருடங்கள் ஆகியிருக்கின்றன. பாத்திரங்களில் ஈயம் போய்விட்டிருக் கின்றது. எனவே வருஷத்திற்கு ஒரு தடவையாவது பாத்திரங் களில் ஈயம் பூச வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா? ஈயம் பூச 15 ரூபாய் செலவாகின்றது என்றால் 100 ரூபாய்க்கு பில் போட்டு வாங்கிக்கொண்டு சத்துணவு பொறுப்பாளர்கள் மோசடி செய்கிறார்கள். எனவே இதை அரசு கண்காணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 14

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருட்டுப் போன இடங்களில் வேறு பாத்திரங்களை உபயோகத்திற்காக வாங்கிக்கொள்வதற்கு உடனடியாக வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. ஈயம் பூசுவதைப் பற்றிச் சொன்னார்கள். அப்படி ஈயம் பூசவேண்டிய பாத்திரங்கள் இருந்தால் அவற்றுக்கு ஈயம் பூச நம்முடைய அரசு வழிவகை செய்து 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ஆம் தேதி 8 இலட்சம் ரூபாய் அளவுக்கு உத்தரவிட்டிருக்கின்றது. எனவே, ஈயம் பூச வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் குழந்தைகள் சாப்பிடுவதற்காகச் சாப்பாட்டுத் தட்டை அரசு கொடுக்கின்றது. அதுபோல் அரசு டம்ப்ளரும் கொடுக்கின்றது. ஆனால் ஸ்ரீவில்லிபுத்தூர் சத்துணவு மையங்களில் சாப்பாட்டுத் தட்டையும், டம்ப்ளரையும் குழந்தைகளுக்குக் கொடுக்கவில்லை. அவற்றை பீரோவில் வைத்து பூட்டிவைத்திருக்கிறார்கள். குழந்தைகள் வீட்டிலிருந்துதான் சாப்பாட்டுத் தட்டைக் கொண்டு வருகிறார்கள். குடிக்கத் தண்ணீர்கூட கொடுக்கவில்லை. இதையெல்லாம் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழந்தைகளினுடைய சத்துணவு மையங்களில் சுட வைக்கப்பட்ட தண்ணீர் ஆறவைக்கப்பட்டு அதற்குப் பிறகுதான் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுரை தரப்பட்டிருக்கின்றது. அதுபோலவே தட்டுகளும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கின்றது. பெரும்பாலான இடங்களில் அவற்றைத்தான் பயன்படுத்துகிறார்கள். சிற்சில இடங்களில் சில பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் தங்களுடைய தட்டிலேதான் சாப்பிட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துகிறார்கள். அதுபற்றிகூட எடுத்துச் சொல்லி எல்லாக் குழந்தைகளும் ஒரேமாதிரியான தட்டுகளில் உண்பதுதான் நல்லது என்பதை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு அறிவுரை சொல்ல வேண்டிய நிலை இருக்கின்றது.



1985 ஜூன் 14]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எந்தெந்த இடத்தில் அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் பணியாற்றுகின்ற அமைப்பாளர்கள், ஆயாக்கள் குடும்பநலத் திட்டத்திற்கு ஆட்களை அழைத்து வரவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுவதாகப் பல பகுதிகளில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வியைக் கேட்கக் கூடாது.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீடிக்கப்பெறுகிறது.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் என்பது ஒரு சமுதாயத் திட்டம் என்ற காரணத்தால் அவைகளை யெல்லாம் செம்மையாக நடத்துவதற்கு, ஒன்றிய அளவிலே அவைகளைக் கண்காணிப்பதற்கு ஏதாவது கமிட்டி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் சிறப்பாக நடைபெறுவதற்காக, ஒவ்வொரு கிராம மையங்களைக் கண்காணிப்பதற்கும் ஒன்றிய வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் சத்துணவுக் குழு அமைப்பதற்கான செயற்குறிப்பு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. த. பழனி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் ஒரு சமுதாயத் திட்டம் என்கிற அடிப்படையிலே, கிராமப்புறங்களிலே சத்துணவுத் திட்டத்திற்காகப் பலர் பெரிய அளவு நன்கொடைகளைத் தந்திருக்கிறார்கள். நன்கொடைகள் வழங்குவதையும், இந்த சத்துணவுத் திட்டத்தைச் சிறப்பாக நடத்துவதைக் கண்காணிப்பதற்கும் அந்தந்த வட்டாரங்களிலேயே அந்தந்த கிராம அளவிலே இருப்பவர்களைக் கொண்டு குழுவை அமைத்தால் அந்தந்தப் பகுதியிலே இருக்கிற குழந்தைகளுக்கு. . (மணியடிக்கப் பெற்றது)

[1985 ஜூன் 14

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தக் கேள்விக்கு ஏற்கெனவே விடையளிக்கப்பெற்று இருக்கிறது.

**திரு. மு. ஜான் வின்செண்ட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கும்போது சத்துணவு மையங்களில் உள்ள பாத்திரங்கள் பழுதடையவில்லை என்று சொன்னார்கள். ஆரம்பத்திலே சத்துணவு மையங்களுக்கான பாத்திரங்களை டான்சி நிறுவனத்திடமிருந்தும், சில பள்ளிகளுக்குத் தனியார்களிடமிருந்தும் வாங்கப்பட்டன. ஆனாலும் சில ஆரம்பப் பள்ளிகளில் போதுமான பத்திரங்கள் இல்லை. சில பழுதடைந்திருக்கின்றன என்ற நிலைமை இருக்கிறது. இது குறித்து தனிப்பட்ட முறையிலே அரசுக்குக் கொடுக்கப்பட்ட புகார்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? பாத்திரங்கள் இல்லாத பள்ளிகளுக்குப் போதிய பாத்திரங்கள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பள்ளிகளில் பாத்திரங்கள் பழுதுபட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால் பள்ளி இயக்குநருக்கு அதைத் தெரிவித்து அந்தப் பழுதடைந்த பாத்திரங்களுக்குப் பதிலாக புதிய பாத்திரங்களை வாங்குவதற்கு வழிவகை செய்து கொள்ளலாம்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவு மையங்களில் நாம் பாத்திரங்களை வழங்குகிறோம் என்பது போக. கிராமங்களில் உள்ள சில பொது மக்களும் பாத்திரங்களை வழங்கியிருக்கிறார்கள், பல இடங்களில். அதை ஊக்குவிக்கின்ற முறையில், முன்பெல்லாம் கல்வி சீர்திருத்த மாநாடு என்று ஒன்றை நடத்திப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவைப்படும் சேர், பென்ச் போன்றவற்றைப் பொது மக்களிடமிருந்து பெற்றதைப்போல, தற்போதும் கல்வி சீர்திருத்த மாநாடு ஒன்றை நடத்தி மக்களிடமிருந்து நல்ல பாத்திரங்களை வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?



1985 ஜூன் 14]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதற்கு அரசுதான் முயற்சிக்க வேண்டும் என்பதல்ல. சட்டமன்ற உறுப்பினர்களே இதற்கு முயற்சி எடுத்து வழி வகை செய்வார்களேயானால், அவர்களுக்கு அரசு நன்றி கூறும்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்மிகு துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தைக் குறை சொன்னவர்கள்கூட தேர்தல் காலத்திலே, தேர்தல் வாக்குறுதியிலே நாங்கள் மாலையிலும் சத்துணவு கொடுப்போம் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு சத்துணவுத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அலுமினியப் பாத்திரங்களில் சமைப்பதும், சாப்பிடுவதும் குழந்தைகளுடைய உடல் நலத்திற்கு உகந்ததாக இருக்காது என்று சொல்லப்படுவதால், அந்த சத்துணவு மையங்களுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை வாங்கித் தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக அலுமினியப் பாத்திரங்களை எல்லா வீடுகளிலும் பயன்படுத்தி வருகிறார்கள். அதனால் மிகப் பெரிய தவறோ, உடல் நலக் கோளாறோ ஏற்படுவதாகத் தெரியவில்லை. அத்துடன் பொதுவாக இந்த சத்துணவுத் திட்டம் என்பது மிகப் பெரிய திட்டம். 200 கோடி ரூபாயிலே இந்தத் திட்டம் தமிழகம் எங்கும் நடைபெற்று வருகிறது. ஒன்றிரண்டு பாத்திரங்களை வாங்கப் போகிறோம் என்பது அல்ல, பல ஆயிரக்கணக்கான மையங்களுக்கு, இன்னும் சரியாக சொல்லப்போனால் 60 ஆயிரம் சென்டர்களுக்கு பாத்திரங்களை வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த வகையில் எல்லா சத்துணவு மையங்களுக்கும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில் பாத்திரங்கள் வாங்குவது என்பது சுலபமான விஷயம் அல்ல. அத்துடன் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் சற்று கனம் அதிகமாக இருக்கும். அலுமினியப் பாத்திரங்கள் லேசாக இருக்கும். சமையல் செய்த அடுப்பிலிருந்து இறக்குவதற்கு ஸ்டீல் பாத்திரங்களைவிட அலுமினியப் பாத்திரங்களே அவர்களுக்கு சுலபமாக இருக்கும். ஆகவேதான் அலுமினியப் பாத்திரங்களே பெரும்பாலும் வழங்கப்பட்டிருக்

[1985 ஜூன் 14

கிறது. சில இடங்களில் நல்ல மனம் படைத்தவர்கள் விரும்பி ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையும் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே அலுமினியப் பாத்திரங்களில் சமைப்பதினால் பெரிய கேடு எதுவும் விளைந்துவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சேந்தமங்கலம் மலைவாழ் மக்கள் மேம்பாடு.

289—(*வினா எண் 326).—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, வாழவந்தி, கோம்பை, நடுக்கோம்பை, நானாகிணறு, காற்கூடல்பட்டி, முள்ளுக்குறிச்சி, பெரப்பஞ்சோலை, ஊனந்தாங்கல் ஆகிய பஞ்சாயத்துகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்ட பகுதியாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம்: துணைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள வாழவந்தி, கோம்பை, நடுக்கோம்பை மக்கள் பயன் அடையமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளை விரைவாக மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் இணைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தில், 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் மொத்தத்தில் 50 விழுக்காடு பழங்குடி மக்கள் வசிக்கிற கிராமத்தில் மத்திய அரசின் ஒப்புதலோடு பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில்



1985 ஜூன் 14]

தென்னாற்காடு மாவட்டத்தில் கல்வராயன் மலைப் பகுதியும், வடாற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியும், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைப் பகுதியும், தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலைப்பகுதியும், சேலம் மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதியும், ஏர்க்காடு மலைப்பகுதியும், அருஊற்று மலைப்பகுதியும் அடங்கும். மேற்கண்ட ஒன்பது துணைத் திட்டங்களில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு 1976—77-ம் ஆண்டு முதல் பழங்குடியினர் துணைச்சட்டம் தயாரிக்கப்பட்டு பல்வேறு துறைத்தலைவர்களால் பழங்குடியினர் பொருளாதாரத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 1981 ஆம் ஆண்டு கிராமவாரி பழங்குடி மக்கள் தொகை விவரம் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்பதால் இந்தக் கணக்கெடுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்கப்பட்டிருக்கின்றன. 50 சதவீதத்திற்கு மேல் பழங்குடி மக்கள் வாழ்கிற இடத்தில் கணக்கெடுப்பு வந்த பிறகு அவர்களை மலைவாழ் பகுதியில் வாழ்கிற பழங்குடி மக்களாக அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சீ. சிவப்பிரகாசம்: துணைத் தலைவர் அவர்களே, திட்டப்படி 50 சதவீதத்திற்கு மேல் இருந்தால் மலைவாழ் மக்கள் பகுதியாக அறிவிக்க இருப்பதாக அறிகிறேன். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பைத் தெரிந்துகொண்டு விரைவாக அந்தப் பகுதிகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டப் பகுதியாக அறிவிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை கணக்கைப்பார்த்த பிறகு அது ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## விருத்தாசலம் பகுதியில் அணைகளைப் புதுப்பித்தல்.

290—(*வினா எண் 939)—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழுதுபட்டுள்ள மேமாத்தூர், விருத்தாசலம் அணைகளைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். தியாகராசன்:** துணைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் பகுதியில் அணைகள் வெள்ளைக்காரன் காலத்தில் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவையாகும். வரக்கூடிய தண்ணீர் வரமுடியாமல் மேலே மூன்று அணைகளைக் கட்டிவிட்டார்கள். வருகின்ற தண்ணீர் பள்ளமான பகுதிக்குப் போய்விடுகிறது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கிற வாய்க்கால்களின் மேடு பள்ளத்தைச் சமப்படுத்தி தண்ணீர் சரியாக செல்வதற்கு வேண்டியவற்றை நவீன முறையில் செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அங்கே ஷட்டர்கள், கேட்டுகள் சரியாக இல்லாததால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அதுகுறித்தும் அரசு நல்லதொரு முடிவை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அணைக்கட்டைப் பற்றியதாகும். அந்த அணைக்கட்டைப் பொறுத்தவரையில் வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் 1973-ம் ஆண்டு, மற்றும் 1983-ம் ஆண்டு ஆகிய இரண்டு காலகட்டங்களில் பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவ்வப்போது தேவைப்படுகிறபோது அவற்றைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதர கேள்விகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினரைத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. ஆர். தியாகராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது, வாய்க்கால்கள் எல்லாம் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வாய்க்கால்கள். அதனால் நான் கேட்டு இருக்கக்கூடிய கேள்வி இதுதான். ஏரிகளுக்குச் செல்லக்கூடிய வாய்க்கால்களில் சில பகுதிகள் பள்ளமான பகுதிகளாக இருப்பதால், தண்ணீர் பூராவும் அங்கே போய்விடுகிறது. மேட்டுப் பகுதியாக உள்ள வாய்க்கால்களில் தண்ணீர் வருவதில்லை. அந்தக் காலத்தில் 3 அடி, 4 அடி உயரம் அளவிற்கு நீர்த் தேக்கத்திற்கு முன்னால் அணை கட்டினால்தான் தண்ணீர் ஏறும். அதைச் சமப்படுத்தி, அந்த அணையின் கொள்ளளவும், வாய்க்கால்களின் கொள்ளளவும் அதிகரிக்கின்ற வகையில், அங்கே உள்ள அனைத்து ஏக்கர்களுக்கும் தண்ணீர் வருகின்ற வகையில், அவை நவீனப்படுத்தப்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.



**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் அதையேதான் சொல்கிறேன். ஒரு திட்டம் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட முழுமையான புள்ளிவிவரங்கள் அரசுக்குத் தேவைப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், மாற்றுத் திட்டங்கள் எப்படி எல்லாம் அமைக்கப்படவேண்டும் என்ற நிலைமைகளை எல்லாம் ஆய்ந்து செய்ய வேண்டும். அதற்காகத்தான் சொன்னேன், தனியாக ஒரு கேள்வி கேட்டால், அதற்குரிய விவரங்களை எல்லாம் சேகரித்து, மாற்றுத் திட்டங்களை எல்லாம் எப்படிப் போடவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு, இங்கே பதில் வழங்க ஏதுவாக இருக்கும்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையால் பராமரிக்கப்படுகின்ற அணைகள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி மிகவும் குறைவாக இருப்பதுதான் காரணம் என்ற ஒரு குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு இருக்கிறது. ஆகவே பராமரிப்புக்காக அதிகமான நிதி ஒதுக்கீடுகளை இந்த ஆண்டிலாவது பொதுப்பணி துறை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பக்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சண்முகா நதி போன்ற திட்டங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே அதிகமான நிதியை பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்கி

றார்கள். ஆகவே இருக்கக்கூடிய சூழ்நிலையில், இருக்கக் கூடிய நிதி நிலையில் தேவையான நிதியை தேவையான திட்டங் களுக்கு ஒதுக்கீடு செய்து கொண்டுதான் இந்தத் துறை செயல் பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

## கெலவரப்பள்ளி அணைக்கட்டு.

291—(*வினா எண் 504)—திரு. மு. இராமநாதன் மற்றும் திரு. டி. வெங்கட ரெட்டி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் ஹோசூரில் கெலவரப்பள்ளி அணைக்கட்டு திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்திற்காக சில நிலங்களைக் கையகப்படுத்துதல் சம்பந்தமாக உயர்நீதி மன்றம் பிறப்பித்த தடை உத்தரவின் பேரில் இத்திட்டத்தின் வேலைகள் 1979 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கட்டுமான வேலையில் 26 விழுக்காடும், இடப்புறக் கால்வாயில் 60 விழுக்காடும், வலதுபுறக் கால்வாயில் 80 விழுக் காடும் வேலைகள் முடிவடைந்துள்ளன.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கெலவரப்பள்ளி அணைக்கட்டுத் திட்டத்திற்காக மொத்தம் அரசு போட்ட எஸ்டிமேட் தொகை எவ்வளவு ? இதுவரை செலவழிக்கப்பட்டு இருக்கக்கூடிய தொகை எவ்வளவு ? இப்போது ஹைகோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருக்கின்ற காரணத்தால், அந்த வேலை தடைபட்டு இருக் கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படித் தடையிருக்கின்ற காரணத்தால், ஹோசூர் பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் கிடைப்பதற்கு, பல தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பதற் கான வாய்ப்பு இல்லாத காரணத்தால் தொழிற்சாலைகளை நடத்த முடியாத அளவிற்கு முடக்கப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அவற்றை எல்லாம் போக்குவதற்கும், தடை





உத்தரவை நீக்குவதற்கும், கெலவரபள்ளி அணைத் திட்டத்தை விரைந்து தொடர்ந்து முடிப்பதற்கும் அரசு என்ன நடவடிக் கையை மேற்கொண்டு இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கெலவரப்பள்ளி நீர்த் தேக்கத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூர் வட்டத்தில் பொன்னி ஆற்றின் குறுக்கே கட்டப்படு கின்ற ஒரு நீர்த்தேக்க திட்டமாகும். இந்தத் திட்டத்தை ரூ. 551·50 லட்சம் செலவில் மேற்கொள்ள 1977 ஆம் ஆண்டு இந்த அரசு உரிய ஆணைகளைப் பிறப்பித்தது. அதற்குப் பிறகு நிலத்தைக் கையகப்படுத்தக்கூடிய சூழ்நிலையில் 1977 ஆம் ஆண்டு நிலச்சுவான்தாரர்களுடைய வாய்மொழி ஒப்புதலின் பேரில், பொதுப்பணித்துறை உள்ளே நுழைந்து பணிகளை மேற் கொண்டது. 1979 ஆம் ஆண்டு (4-1) நோட்டிபிகேசன்கீழ் அந்த நிலங்களை எல்லாம் கையகப்படுத்தக்கூடிய ஒரு அறிக் கையை அரசு அறிவித்தது. இந்த நிலையில்தான் திம்ம சத்திரம், மற்றும் இளையசத்திரம் ஆகிய இரண்டு இனாம் கிராமங்களைச் சேர்ந்த திருமதி கமலாம்பாள், திரு. சுப்பாராவ், திரு. சங்கர நாராயண ராவ், திரு. சத்திய நாராயண ராவ், திரு. சூரிய நாராயண ராவ் ஆகிய 5 பேர்களும் — ஒரு தாயும் 4 மகன்களும் — சேர்ந்துகொண்டு, ரிட் ஒன்றை தாக்கல் செய்து, (4-1) நோட்டிபிகேஷன் பிறப்பித்ததற்கும், அரசுப் பணிகளை மேற்கொள்ள உள்ளே நுழைந்ததற்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. நோட்டிபிகேசனை பின்னாலே பிறப்பித்து இருக் கிறார்கள். ஆகவே அந்த நோட்டிபிகேசன் செல்லாது என்று உயர்நீதிமன்றம் அறிவிக்கவேண்டும் என்று ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த ரிட் மனு தாக்கல் செய்யப் பட்டு இன்றைக்கு உயர்நீதிமன்றம் தடை ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்தத் தடை ஆணையின் பேரில்தான் பணியை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் இந்த அரசு இருக்கிறது. அந்தத் தடையை நீக்க வேண்டும் என்பதற்காக பல நடவடிக்கை களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

[1985 ஜூன் 14

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்களை அவையும் ஓரளவுக்கு தெரிந்து இருக்கிறது. ஆனாலும் அரசினுடைய கோடிக்கணக்கான ரூபாய் இதில் முடக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டினுடைய அபிவிருத்தித் திட்டமும், மக்கள் வாழ்வும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்திலே ஸ்டே வாங்கியிருக்கிற இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை நேரடியாகக் கூப்பிட்டு ஒரு சமரச உடன்பாடு என்ற முறையில், அரசு நல்ல காரியத்தை செய்யவிருக்கின்ற காரணத்தால் கோர்ட்டில் தடை உத்தரவு உள்ளதை வாபஸ் பெற்றுக்கொள்ளச் சொல்லியும் அவர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டை தந்தும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு இனியாவது முயற்சிக்குமா? அந்த யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில் பொதுமக்களுக்காகப் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் செவ்வனே செயல்படுத்தப்படவேண்டும் எனும் நிலையில் சற்றும் மாறுபட்ட நிலை இல்லை. ஆகவே இந்த ஒரு தடை ஆணையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின்படி சம்பந்தப்பட்ட அந்த நபர்களை அழைத்துப் பேச வேண்டும் என்று சொன்னால் இருக்கக்கூடிய அடிப்படை சிக்கலே இந்த நிலங்கள் எல்லாம் இனாம் கிராமத்தைச் சேர்ந்தவை. ஆகவே, இந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் யார் என்பதோ அந்த நிலத்தைப் பொறுத்தவரையில் பெறக்கூடிய பட்டா சம்பந்தப்பட்ட பிரச்சினைகளோ இன்னும் முடிவு ஆகவில்லை. அவை எல்லாம் வழக்கு மன்றத்தில் இருக்கின்றன. ஆகவே, அரசு தரக்கூடிய நஷ்டஈடு தொகையை யாருக்குத் தர வேண்டும் என்ற ஒரு நிலையை எடுக்க முடியாமல் இருக்கிறது. ஒரு compromise formula என்று கூட சொன்னார்கள். நடுவர் தீர்ப்புக்கு இதை விட வேண்டும் என்றும் அந்த நடுவர் மாவட்ட நீதிபதியாக இருக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து உயர்நீதிமன்ற நீதிபதிகளால் எடுத்துச் சொல்லப்பட்டது. அதையொட்டி நடுவரும் அந்த நிலத்தைப் பொறுத்த



1985 ஜூன் 14]

மட்டில் கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டைத் தீர்மானிப்பதற்கு முன்பாக இப்போது இருக்கக்கூடிய அந்த நிலச் சொந்தக்காரர் ரிட் மனுதாரர் தங்களுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற அறிக்கையைத் தர வேண்டும் என்றும் அதற்கு எதிர் அறிக்கையை அரசு தர வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப் பட்டது. அந்த முறையில் 1 ½ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாக அந்தத் தரப்பிலிருந்து ரிட் மனுதாரர்கள் சொல்கிறார்கள். ஆனால் அரசின் கணக்குப்படி பார்த்தால் வெறும் 1,331 ரூபாய் தான் நஷ்ட ஈடாக இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட மிகப் பெரிய மாறுபட்டுள்ள சூழ்நிலையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரே வழி தனியாக ஒரு சட்டத்தை இயற்றி அந்தச் சட்டத்தின் வாயிலாக 1977 ஆம் ஆண்டு, என்று பொதுப் பணித் துறை இந்தப் பணியை மேற்கொண்டதோ அந்த நாள் முதல் இந்த நிலத்தைக் கையகப்படுத்தியதாக அறிவிக்கக் கூடிய சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கருதி இந்த மாநில அரசு அதற்கு உரிய வரைவு-சட்ட முன்வடிவை மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக வைத்து இருக்கிறது. மத்திய அரசு ஒருசில திருத்தங்களைச் சட்டமுன்வடிவில் கொடுக்க வேண்டும் என்ற தகவல் தந்து இருக்கிறது. அந்த முறையில் ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. மயிலே மயிலே இறகு போடு என்றால் நிச்சயமாகப் போடாது, ஆகவே சட்டத்தின் வாயிலாகத்தான் இதற்குத் தீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு உரிய நடவடிக்கைகளில் இந்த அரசு இன்று ஈடுபட்டிருக்கிறது.

## ஆணைக்குளம் கண்மாய்.

292 — (*வினா எண் 991) — திரு. மு. பிச்சை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதியில் ஆணைக்குளம் கண்மாய் உலகவங்கியின் உதவியுடன் மேம்பாடு செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) வேலை எப்பொழுது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, (அ) ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பின் உதவியுடன் செயல்படுத்தப்படும் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் ஆணைக்குளம் கண்மாயைச் சேர்க்கும் செயற்குறிப்பு தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. மு. பிச்சை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதாகத் தெரிவித்தார்கள். 2 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தத் துறையின் முன்னாள் அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்வியை சட்டமன்றத்தில் நான் எழுப்பிய போது இந்தத் திட்டமும் மேற்படி கட்டனூர் கண்மாய்த் திட்டமும் மேலே நிலையூர் திட்டமும் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக இந்தியன் எக்ஸ்பிரஸில் வந்து இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஏற்கனவே பதில் சொல்லி இருக்கிறார்கள். இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அதற்கு எஸ்டிமேட் தயார் செய்து கொண்டிருப்பதாகவும், அதனை மேலே உள்ள அதிகாரிகள் தவறுதலாக எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று திருப்பி விடுவதாகவும், இப்படி இருந்துவருவதாக அறிகிறேன். இது சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் மேலும் நடவடிக்கை எடுத்து, அதைச் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆணைக்குளம் கண்மாய்த் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், இது ஒரு சிறு பாசனத் திட்டம் ஆகும். ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்புத் திட்டம் நீங்கலாக, வேறு எந்த பாசனத் திட்டத்தோடோ வேறு எந்த வெளிநாட்டு திட்டங்களோடோ இதுபோன்ற சிறு பாசனத் திட்டங்கள் மேற் கொள்ளப்படுவது கிடையாது. இந்த இ.சி.சி. என்று சொல்லக் கூடிய ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளக்கூடிய ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், 5 மாவட்டங்களிலுள்ள ஏரிகளை





நவீனப்படுத்தக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. செங்கல்பட்டு, வடாற்காடு தென்னாற்காடு, புதுக்கோட்டை ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களாகும். அவற்றிலே ஒரு சில வழிவகைகளை, கோட்பாடுகளை வகுத்து, அந்தக் கோட்பாடுகளுக்குட்பட்ட ஏரிகளைத் தான் இந்தத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணை இடுவது என்ற உத்தரவை அரசு பிறப்பித்தது. இந்தக் கோட்பாடுகளுக்குட்பட்டு, இந்த ஆணைக் குளம் கண்மாய் வந்ததாக எனக்கு இங்கே சொல்லப்படவில்லை. ஆகவே தான், ஆரம்பத்திலே, அந்தத் திட்டம் மேற்கொள்ளப் பட்டு, பிறகு சரியான அளவுக்கு இந்த அரசு போட்டிருக்கிற ஆணைக்குட்பட்டு இந்தக் கண்மாய் வராததன் காரணமாக, இந்த நிலைமையை மாற்றி, தற்போது ஏதாவது திட்டத்தின்கீழ் பணிகளை மேற் கொள்ளலாமா என்று அரசு ஆய்ந்து கொண்டு வருகிறது.

**திரு. மு. பிச்சை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது ஒரு சிறிய கண்மாய் என்பதாகச் சொன்னார்கள். இந்தக் கண்மாயின் மூலமாக ஏறத்தாழ இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல், அந்தப் பகுதி விவசாயிகள் பயன்பட்டுக் கொண்டு வருகிறார்கள். திருமங்கலம் பகுதியிலே உற்பத்தி ஆகக்கூடிய குண்டாற்றின் மூலமாக வரும் தண்ணீர் முழுவதும் கடலிலே வீணாகக் கலந்து அது பாசன வசதிக்குப் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை, மேம்பாடு செய்கின்ற திட்டத்திலே இணைத்துக் கொள்வார்களானால், அந்தக் குண்டாற்றினுடைய தண்ணீர் கடலிலே சென்று வீணாவது தடுக்கப்பட்டு, அந்தக் கண்மாயின் மூலம், அந்தப் பகுதி விவசாயிகள் நல்ல முறையிலே பயன் பெறுவார்கள் என்ற நல்லெண்ணத்தோடு, கூடிய விரைவில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆணைக்குளத்தைப் பொறுத்தவரையிலும் அது ஒரு சிறிய கண்மாய் என்று சொல்லவில்லை. இங்கே எனக்குத் தரப்பட்டு இருக்கிற விவரத்தின் அடிப்படையில், 532.17 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி தரக்கூடிய மிகப் பெரிய ஏரி ஆகும். அந்த ஏரிக்குக் குண்டாறு மற்றும் சாணல் ஆறு ஆகிய இரண்டு ஆறுகளிலிருந்து தண்ணீர்

வரத்து இருக்கிறது. இவ்வளவையும், இந்த அரசு தெரிந்து வைத்திருப்பது உண்மை தான். இருந்தாலும், 1982-83-வது ஆண்டு, வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ், இந்த ஏரி, இந்த கண்மாய் பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. தற்போது அந்த ஏரியின் கரைகளும் நல்லமுறையில் இருப்பதாகத் தகவல் தரப்பட்டு இருக்கிறது. இருந்தபோதிலும் தல அதிகாரிகள் எல்லாம் அறிவுபடுத்தப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு, உண்மையிலேயே அங்கே பழுது பார்க்கக்கூடிய தேவை இருக்குமானால், உரிய நடவடிக்கைகள் எடுக்க அரசு முயலும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**புதுக்கோட்டை மாவட்டத்திற்கு காவிரி நீர்.**

293 — (*வினா எண் 477) — **திரு. கி. கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திற்கு காவிரி நீரை கால் வாய் மூலம் கொண்டு செல்லும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாட்டில் பருவ மழை காலங்களில் கடலில் சென்று வீணாகும் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) ஆய்வுகள் முடிந்த பின்னர் விவரங்கள் தெரியவரும்.

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, வெள்ள வடிகால் என்ற பெயரால் வேறு மாவட்டங்களுக்கு காவிரியிலிருந்து பாசனத்திற்குப் பயன்படுத்துகிறது. இதற்கு முன்னாலே கூட 3 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. முன்னாலே வெள்ள வடிகால் என்று சொல்லப்பட்டது. பின்னாலே அது பாசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அப்படி எடுத்துக்கொள்ளப்படுவதன் காரணமாக. காவிரியி னுடைய கடைமடை பகுதிக்கு தண்ணீர் வருவதில்லை. அதனால் காவிரி கடைமடை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



எந்த முறையை வைத்து, இந்த அரசு தண்ணீரை புதுக் கோட்டை மாவட்டத்திற்குத் திருப்பி விட இருக்கிறது? திருப்பி விட முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால், வெள்ள லெவலுக்கு மேலாக வைத்து கட்டப் போகிறார்களா? அடி மட்டம் வரை கட்டப்போகிறார்களா? அப்படிக் கட்டினால் பின்னாலே அத னுடைய உரிமையைக் கொண்டாடி கீழே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு அறியுமா? அப்படி அறியும் என்றால், என்ன நடவடிக்கை அரசு எடுக்கப்போகிறது?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வெள்ள உபரி நீரைப் பயன்படுத்தும் ஒரு காரணத்திற்காகத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட் டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் விவரங்களை நன்றாக அறிவார்கள். ஒவ்வொரு வெள்ளக் காலத்தின்பொழுதும் தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. தமிழ்நாட்டில் தற்போது உள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையிலே தண்ணீரை வீண்படுத்துகின்ற நிலை தமிழகத்திற்கு இருக்கக்கூடாது என்பதையும் மாண்புமிகு உறுப் பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்த முறையில் வெள்ளப் பெருக்குக் காலங்களில் தென்மேற்குப் பருவ மழை மற்றும் வடகிழக்குப் பருவக் காலங்களில் ஏற்படுகின்ற உபரி மழைத் தண்ணீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், அதனை அடுத்துள்ள முகவை—இராமநாதபுரம்—திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லும் அளவில் அந்த ஆய்வை மட்டும்தான் நடத்தியிருக்கிறோமே தவிர எந்தத் திட்டமும் இறுதி செய்யப்படவுமில்லை. உறுதி செய்யப்படவுமில்லை. இது வருங்காலத்தில் ஏதாவது ஒரு நிலை வந்து நிலைமைகளெல்லாம் சீராகி, அரசியல் நிலைமைகளெல்லாம் அடுத்த மாநிலத்தோடு சரியாகி பிறகு, வேறு காரியத்தை மேற்கொள்ள வேண்டு மென்றால் அப்பொழுது இந்தத் திட்டத்தைக் கொண்டு வரலாமே என்ற எண்ணத்தில் தான் ஆய்வு செய்திருக்கிறோம்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் காவிரி நீரைக் கொண்டு செல்லுகின்ற திட்டம் இப்பொழுது ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு, கந்தர்வக் கோட்டை தாலுக்கா பகுதியில், இதற்கு முன் மழைக் காலங்களில் வருகின்ற

தண்ணீரை விடுவதற்காக முதலம்பட்டி அணைக்கட்டுத் திட்டம் என்று 9 கோடி ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டு, அந்தத் தண்ணீர் காவிரிப் பாசனப் பகுதியில் சென்று மழைக்காலங்களில் சேதம் உண்டாக்குவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அதே நோக்கில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பலருக்கும் பயன் கிடைக்கும் வகையிலும் திட்டம் தீட்டப்பட்டு ஆய்வில் இருந்தது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுவது அந்தத் திட்டத்தைப் பற்றியா அல்லது வேறு எங்காவது திட்டத்தைத் துவங்கி காவிரித் தண்ணீரை வேறு எங்கேயாவது இருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொண்டு செல்லும் திட்டமா? என்னென்றால் இடத்தைக் குறிக்காமல் அமைச்சரவர்கள் கூறுவதால் அதில் சேருமா அல்லது தனித் திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, காவிரித் தண்ணீரை வேறு எந்தப் பகுதிக்கும் எடுத்துச் செல்லும் அல்லது காவிரி நதியை இழுத்துச் செல்லும் எந்தத் திட்டமோ எண்ணமோ இல்லை. தற்போது காவிரித் தண்ணீரால் பாசன வசதி பெறுகின்ற ஆயக்கட்டுக்கள் எத்தனை இருக்கின்றனவோ அத்தனை ஆயக்கட்டுக்களுக்குமான தண்ணீரையும் இந்தத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கிறோம். அவை காவிரி வழியாகப் பாசன வசதி பெறும். இருந்தாலும் காவிரியாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு தண்ணீர் வீணாகப் போகின்றபொழுது அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்குத்தான் இந்தத் திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, காவிரி நதியை வேறு ஒரு பக்கத்திற்குக் கொண்டு செல்கிறோம் என்று சொல்லி, இருக்கின்ற நிலைமைகளை அவர்களை அறியாமலே தயவு செய்து கெடுக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அந்த இடம் உட்பட அத்தனையிடங்களும் இந்தத் திட்டத்தால் பயன் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. இருந்தாலும் இப்பொழுது இந்தத் திட்டத்தை மேற்கொள்ளுகின்ற உத்தேசமோ அல்லது எண்ணமோ அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## சைதை தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள்.

குறுகிய கால வினா எண் — 5 (வினா எண் 3478-ல்) — **திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதையில் சமீபத்திய தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு மாடி வீடுகள் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு?

(இ) எத்தனை வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ): சைதையில் தீயினால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு அப்பகுதியை விட, மிகவும் மேடான, வேறு இடத்தில் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மேடான பகுதியில் வீடு கொடுக்கும் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக தீ விபத்து நடந்திருக்கின்ற அந்தப் பகுதியிலே ரிக்ஷா தொழிலாளர்கள், அந்தப் பகுதியில் உள்ள குட்ஸ் ஷெட்டில் பணியாற்றுகின்றவர்கள், சிறு வியாபாரிகள், சலவையாளர்கள் என்ற தகுதியுடையவர்கள் ஆவார்கள். ஆகவே, அவர்கள் ஆற்றோரப் பகுதியில் வசிப்பது தான் ஏற்றபடியாக இருக்கும் என்பதால் அதே பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தைப் பெற்று, அதற்கு அருகில் அவர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், அப்படி எடுக்கின்றபொழுது எத்தனை குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது, அதனுடைய மதிப்பீடு என்ன நடப்பு நிதியாண்டிலேயே அந்தப் பணி தொடங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 14

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கிற மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் பாதிக்கப்பட்ட குடிசைகளை அமைக்க வேண்டும் என்றால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு அந்த இடம் எல்லா வகையிலும் பொருத்தமான இடமா என்று முதலில் பார்க்க வேண்டும். அதைப் பார்த்துவிட்ட பின்னர், அந்த இடத்திலே வீடு கட்டும் திட்டம் பற்றி முறையாகப் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது லோ லையிங் ஏரியா என்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலே வீடு கட்டினால் மீண்டும் வெள்ளம் வந்தால் பாதிக்கும் என்கின்ற அபாயத்தின் காரணமாக அந்த இடத்தில் வீடு கட்ட வேண்டாம் என்ற குறிப்பு இருக்குமானால், நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, பொதுப் பணித் துறையின் வாயிலாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் மிகப் பெரிய ஏரியை அமைக்கின்ற திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணியும் துவங்க இருக்கிறது. ஆகவே, அந்தக் கரை கட்டுகின்ற திட்டம் நடைபெறுமானால் அதே இடத்தில் வீடு கட்டுவதற்கு வேறு ஏதாவது பிரச்னை இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட இடங்களில் வீடு கட்டுகின்ற திட்டத்தினைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ஒரு கமிட்டி இருக்கிறது. வீடு கட்டுகின்ற திட்டத்தின் மூலமாக, அங்கே குடியமர்த்தியிருக்கின்றவர்களுக்கு, திடீரென்று வெள்ளம் வந்தால், அவர்களுக்கு ஆபத்து வந்தால், ஆராய்வதற்கு ஏற்கனவே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கமிட்டியின் மூலமாக அந்த இடம் சரியான இடமா என்று பார்த்த பிறகுதான் மற்ற முடிவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். முதலிலே, அந்த இடத்திலே எத்தனை வீடுகள் கட்டப்படும், அதனுடைய மதிப்பீடுகள் என்ன என்று கேட்கப்பட்டது. அதைப் பொறுத்தவரை இன்னும் அந்த கணக்குகள் எடுக்காத காரணத்தால், எடுத்ததற்குப் பிறகு முடிவுகள் எடுக்கப்படும்.



1985 ஜூன் 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 3. தகவல் கோரல்

### (அ) மாநிலப் பல்கலைக் கழகங்களை மத்தியப் பல்கலைக் கழகங்களாக மாற்றுவது குறித்து.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு மிக முக்கியமான ஒரு பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். மத்திய மாநில அரசுகளுடைய உறவுகளை சர்க்காரியா கமிஷன் ஆராய்ந்து பார்க்கிற இந்த நிலையில், கல்வியை கன்கரன்ட் லிஸ்டிலிருந்து ஸ்டேட் லிஸ்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நாம் வற்புறுத்துகிற இந்த நிலையில் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பல்கலைக் கழகங்களை மத்திய அரசு ஏற்க இருப்பதாக வந்திருக்கிற செய்தி நமக்கெல்லாம் கவலை அளிப்பதாக இருக்கிறது. மத்திய அமைச்சர் கூட அதுகுறித்துப் பேசுகின்றபொழுது அப்படிப்பட்ட பிரேரணை வந்திருப்பதாகவும் அதுபற்றி முடிவெடுக்கப்படவில்லை என்றும் தான் சொல்லியிருக்கிறாரே தவிர அதை மறுக்கவில்லை. எனவே, நம்முடைய அரசினுடைய நிலைமை என்ன? மூளையிலேயே அந்தப் பிரச்னையைக் கிள்ளி எறிய அரசாங்கம் என்ன முயற்சி எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்தை மத்திய பல்கலைக் கழகமாக மாற்றுகிற அந்தப் பிரேரணையை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை காரணம் ஒன்று நம்முடைய அதிகார வரம்புக்குள்ளே இருந்து போகிறது என்பது. மற்றொன்று, மத்திய பல்கலைக் கழகங்களைப்பற்றி ஆராய்வதற்காக, பல்கலைக் கழக கமிஷன் ஒரு கமிட்டியைப் போட்டபொழுது அவர்கள் ஆராய்ந்து பார்த்து தந்த அறிக்கையானது மாநில அரசுகளின்

கீழ் நடைபெறுகிற பல்கலைக் கழகங்களைவிட மத்திய அரசின் கீழ் நடைபெறுகிற பல்கலைக் கழகங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன என்கிற அபிப்பிராயத்தைதான் நாங்கள் பெற வேண்டியிருக்கிறது. ரொம்பவும் மோசமான கருத்துக்களை எல்லாம் அதிலே தெரிவித்து இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, மத்தியப் பல்கலைக் கழக மானியக் குழுவின் மூலம் தரப்படுகிற பணத்தில் பாதி பணத்தை இந்த மத்திய அரசு பல்கலைக் கழகங்களுக்குத் தருகின்ற காரணத்தால், மற்றப் பல்கலைக் கழகங்களுக்குக் கிடைக்கிற நிதி உதவியும் குறைவாக இருக்கிறது. ஆகவே, இந்தக் காரணங்களை வைத்துக்கொண்டு மத்திய அரசு சென்னைப் பல்கலைக் கழகத்தையோ வேறு மாநிலத்திலே இருக்கிற பம்பாய், கல்கத்தா போன்ற பல்கலைக் கழகங்களையோ எடுத்துக் கொள்வதைவிட மத்திய அரசு பல்கலைக் கழக மானியக் குழுவின் மூலமாக அந்தப் பல்கலைக் கழகங்களுக்கு அதிக நிதி உதவி செய்வதன் மூலம் அவை மேலும் நல்ல முறையிலே நடைபெற உதவி செய்யலாம்.

**(ஆ) கிருஷ்ணா நதி குடிநீர்த் திட்டம் சம்பந்தமாக.**

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆந்திர நாட்டினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பேசிய பேச்சு இன்றைக்குப் பத்திரிகையிலே வெளியாகியிருக்கிறது. சென்னை நகருக்குக் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய கிருஷ்ணா நதித் திட்டம் சம்பந்தமாக, ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார். மத்திய சர்க்காருடைய வாட்டர் கமிஷன் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கவில்லை என்பதையும் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லிவிட்டு இந்தத் திட்டம் ஏறத்தாழ ரூ. 600 கோடி திட்டம், ஏற்கனவே தமிழகத்தின் பங்காக ரூ. 30 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது, இன்னும் தமிழக அரசு ரூ. 12 கோடி தரத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்து இருக்கிறார். உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன், சென்னைக் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கின்ற கிருஷ்ணா நதி திட்டத்திற்கு மத்திய சர்க்காருடைய வாட்டர் போர்ட் இன்னும் அனுமதி கொடுக்காத நிலையில் திட்டம் நிறைவேறுமா, நிறைவேறாதா என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிற நிலையில், மத்திய சர்க்கார் நிதி கொடுக்காத நிலையில், ஏற்கனவே ரூ. 30 கோடி





கொடுத்துவிட்டு, மீண்டும் ரூ. 12 கோடியைக் கொடுப்பது மக்களுடைய வரிப் பணத்தை வீணடித்து விட்டதன் அபாயகரமான சூழ்நிலை இல்லையா? எனவே, முதலில் மத்திய அரசிடம் அனுமதி வாங்கிவிட்டு ஒதுக்க வேண்டுமே தவிர, ஆந்திர சர்க்கார் தன் பங்கைச் செலுத்தாதபொழுது, தமிழகம் மட்டும் ஏற்கனவே ரூ. 30 கோடியைக் கொடுத்து விட்டு, இன்னும் ரூ. 12 கோடியைக் கொடுப்பது தமிழக மக்களுடைய நலனைப் பெரிதும் பாதிக்கும். எனவே, அது குறித்து அரசாங்கம் ரூ. 12 கோடியைக் கொடுக்காமல், பிறகு பரிசீலனை செய்து அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும். அதிலே அரசின் நிலை என்ன என்பதைத் தங்கள் மூலம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து தெரிய விரும்புகிறேன். இது மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் திடீரென்று இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இதை ஒரு குறுகிய கால வினாவாகக் கேட்டால் உரிய விவரங்களைத் திரட்டி, திட்டவட்டமான பதிலைத் தரமுடியும். பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு நாம் எதுவும் சொல்ல முடியாது. இறுதியில் அந்த அமைச்சரே நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லி விடலாம். திடீரென்று இங்கே எழுப்பிய பிரச்சனைக்கு உரிய விவரங்கள் இல்லாமல் தப்பும் தவறுமாக, அரை குறையாக பதில் சொல்லக்கூடாது. முழு விவரங்களையும் தெளிவாகச் சொல்ல வேண்டும். இப்போது அந்த விவரம் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஒரு குறுகிய கால வினாவாகப் போட்டால், உரிய அமைச்சர் தேவையான விவரங்களை எல்லாம் திரட்டி, பதில் சொல்ல வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் காலையில் பத்திரிகையில் வந்த செய்தியைப் படித்தேன். அமெரிக்கா முழுவதும் சுற்றுப்பயணம் செய்துவருகிற இந்தியப் பிரதமர், எங்கள் வணக்கத்திற்குரிய மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்கள் வெளிநாட்டு அமைச்சரக அலுவலகத்தில் ஜார்ஜ் ஷுல்ட்ஸ் உடன் விருந்து உண்ணும்போது சீக்கியத் தீவிரவாதிகள் . . .

[1985 ஜூன் 14

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படிப்பட்ட பிரச்சனைகளை அவையில் திடீரென்று எழுப்பக்கூடாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் செய்தித்தாள்களிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. கும்மிடிப்பூண்டியில் 300 அரிசனங்களுடைய குடிசைகள் தரைமட்டமாக்கப்பட்டு, அந்தப் பெண்கள் எல்லாம் கைக்குழந்தைகளுடன் தெருவில் நிற்கிறார்கள். . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திடீர் திடீரென்று இப்படிப்பட்ட பிரச்சனைகளை எழுப்பக்கூடாது. அரசுத் தரப்பில் இதற்குப் பதில் சொல்ல முடியாது. ஏதாவது ஒரு வகையில் முன் அறிவிப்புக் கொடுத்துவிட்டு, எழுப்புங்கள்.

## 4. கவன ஈர்ப்பு.

### தொழிற்சாலைகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்புகள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூரில் உள்ள இந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்தில் இருந்து வெளிவரும் கழிவு நீர், செங்கல்பட்டு வட்டம், கள்ளிப்பட்டு கிராமத்தில் உள்ள இரால் தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் கழிவுநீர், மற்றும் மதுரா கோட்ஸ் நிறுவனத்தாரின் சாயப்பட்டறை நீர் தாமிரபரணி ஆற்றில் கலப்பது, ஆகியவைகளால் குடிநீர் கெட்டுப் போதல், விளை நிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படுதல், கொசு உற்பத்தி அதிகரித்தல் மற்றும் பலவித வியாதிகள் உண்டாகுதல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1985 ஜூன் 14] [டாக்டர் எச். வி. ஹண்டே]

### அறிக்கை.

இந்தக் கவனஈர்ப்புத் தீர்மானம் மூன்று இடங்களில் உள்ள வெவ்வேறு தொழிற்சாலைகளைப் பற்றியதாகும். இந்தத் தொழிற்சாலைகளைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

(1) திருவள்ளூரிலுள்ள இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம்: இந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவுள்ளூர் தாலுக்காவில் மேலநல்லாத்தூர் கிராமத்தில் உள்ளது. இத்தொழிற்சாலை பின்குவிப்பு (rear dump) முன்பாரம் ஏற்றி (Front end loader) டிராக்டர் மற்றும் ஸ்க்ரேப்பர் போன்ற கனரக இயந்திரங்களில் மாதம் ஒன்றுக்கு சுமார் 30 தயாரிக்கின்றது. இத் தொழிற்சாலை 4 மி. மீ. முதல் 100 மி. மீ. கனமுள்ள தகடுகளை வெட்டி இணைத்து மேற்படி இயந்திரங்களை உருவாக்குகிறது.

இத்தொழிற்சாலையில் இயந்திரங்களுக்கு வர்ணம் தீட்டும் பகுதியிலும் சோதனை ஓட்டத்திற்குப் பின்பு ஊர்திகளைக் கழுவும் பகுதிகளிலிருந்தும் இயந்திரங்கள் வலிலூட்டும் பகுதிகளிலிருந்தும் கழிவுநீர் வெளிவருகின்றது. ஆனால் தற்போது உபயோகப்படுத்தும் மூலப்பொருட்களின் மாற்றத்தால் வலிலூட்டும் பகுதியில் கழிவுநீர் வெளிவருவதில்லை. இதனைத் தவிர தொழிற்சாலையிலிருந்து அன்றாடக் கழிவுநீரும் வெளி வருகின்றது. இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்குத் தொழிற்சாலைக் கழிவுநீர், அன்றாடக் கழிவுநீரை முறையே, 10,000 லிட்டர் மற்றும் 7,500 லிட்டர் வெளியிடுகின்றது.

தொழிற்சாலைக் கழிவுநீர், அன்றாடக் கழிவுநீருடன் கலந்து தொழிற்சாலையில் உள்ள நச்சுத் தடைத் தொட்டியில் விடப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்றது. இக்கழிவுநீரும் தொழிற்சாலைச் சிற்றுண்டி விடுதியில் இருந்து வரும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரும் கலந்து தொழிற்சாலைக்கு வெளியே விடப்படுகின்றது. இது தொழிற்சாலையின் எதிரே உள்ள பாசனச் சிறுவாய்க்கால்களில் தேங்கி நிற்கின்றது. சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை பி.ஓ.டி. மிதக்கும் திடப் பொருட்கள் மற்றும் கரைந்த திடப்பொருட்கள் கொண்டதாகும். சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நிலத்தில், நீர் நிலைகளில் வெளியேற்றப்படும்போது நிலத்தடி நீர் பாதிக்கப்படலாம்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1985 ஜூன் 14

மேற்படி தொழிற்சாலை தனது கழிவுநீரை வெளியேற்ற 31—5—1984 அன்று, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 வது பிரிவின்கீழ் அனுமதி வேண்டி மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பித்தது. மேற்படி தொழிற்சாலையைப் பார்வையிட்டபோது, தொழிற்சாலைக் கழிவுநீரைச் சுத்திகரித்துத் தனது சொந்தமான நிலத்தில் பயன்படுத்த ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை அணுகியுள்ளதாகவும், அதன் அறிக்கை கிடைத்தவுடன் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாயும், அத்தொழிற்சாலை தெரிவித்தது. 8—5—1985 அன்று மேற்படி தொழிற்சாலைக்கு, தனது கழிவு நீரை வாரியம் நிர்ணயித்துள்ள வரன்முறைக்கேற்ப சுத்திகரித்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரியம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(2) அம்பாசமுத்திரத்திலுள்ள திருவாளர்கள் மதுரா கோட்ஸ் நிறுவனம்: அம்பாசமுத்திரத்திலுள்ள மதுரா கோட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை, பருத்தி மற்றும் செயற்கையிழை துணிகளைத் தயாரிக்கிறது. துணிகள் வெளுக்கப்பட்டு சுருக்கம் நீக்கி சாயம் ஊற்றி அச்சு பதிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 76.23 லட்சம் லிட்டர் கழிவு நீரை வெளியேற்றுகிறது.

இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர், சாயம் கலந்த கழிவுநீர், சாயமற்ற கழிவுநீர் என இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. சாயமற்ற கழிவுநீர் தொட்டியில் தேக்கப்பட்டு, தேவையான அமிலம் வைக்கப்படுகிறது. சாயம் கலந்த கழிவுநீர் இரண்டு தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு பின் அமிலம் படிகாரம் கலந்து பின்னர், படிவத் தொட்டியில் சுத்திகரிக்கப்படுகிறது. படிவத் தொட்டியிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீருடன் சாயமற்ற பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீருடன் கலந்து காற்றேற்றப்பட்டு குடமேழகியார் கால்வாயில் வெளியிடப்படுகிறது. இக்கால்வாய் தாமிரபரணி ஆற்றுடன் கலக்கிறது. படிவத் தொட்டியிலுள்ள சேறு, சேறு உலர்வை தொட்டியில் உணர்த்தப்படுகிறது.



1985 ஜூன் 14] [டாக்டர் எச். வி. ஹண்டே]

மேற்படி தொழிற்சாலைக்கு 27—2—1984 அன்று மூன்று மாதத்திற்குள் சுத்திகரிப்பு சாதனம் நிறுவவேண்டும் என்ற நிபந்தனையுடன் வாரியத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கழிவுநீரின் தன்மையை வாரியம் நிர்ணயித்திருக்கிற வரன்முறைக்குக் கொண்டுவர தொழிற்சாலை, காற்றேற்றத் தொட்டி மற்றும் படிய வைக்கும் தொட்டிகள் கட்டுவதற்கான திட்டங்களையும் வாரியத்திற்கு சமர்ப்பித்தது. முதல் கட்டமாக தொழிற்சாலை ஒரு படிவத் தொட்டியைக் கட்டி முடித்துள்ளது. மீதமுள்ள பகுதிகளை முடிப்பதற்கான வேலைகளை தொழிற்சாலை செய்து வருவதாக வாரியத்திற்குத் தெரிவித்துள்ளது.

தொழிற்சாலை விரைவாக மீதமுள்ள எல்லா வேலைகளையும் பூர்த்தி செய்து கழிவுநீரை வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்கேற்ப சுத்திகரிப்பு செய்து வெளியிடும்படி வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வாரியம் தொடர்ந்து இது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

(3) கள்ளிப்பட்டு கிராமத்திலுள்ள ஓவர்சீஸ் மெரைன் ப்ராடெக்ட்ஸ் தொழிற்சாலை: ஓவர்சீஸ் மெரைன் ப்ராடக்ஸ் தொழிற்சாலை செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் தாலுக்காவில் இகாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையில் மாதம் ஒன்றுக்கு 60 டன் இறால், 50 டன் தவளைக் கால்கள், 10 டன் கட்டில் மீன்கள், 1 டன் சிங்கி இறால் பதப்படுத்தப்பட்டு குளிர் அறையில் வைத்து தேவைக்கேற்ப வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேற்சொன்ன இறால், மீன்கள் மற்றும் தவளைக் கால்கள் சேகரித்து அதனை ஓர் தொட்டியில் இட்டு பிளிச்சிங் பவுடர் கலந்து தண்ணீரில் கழுவி, பின்பு குளிரூட்டப்படுகிறது. இத்தண்ணீர் கழிவுநீராக வெளியிடப்படுகிறது. மேலும் தவளையின் கால்கள் தவிர மற்ற பாகங்கள் மற்றும் இறால் மேல் உள்ள ஓடுகள் திடக்கழிவுப் பொருளாக வெளியேற்றப்படுகின்றன.

இத்தொழிற்சாலையிலிருந்து நாள் ஒன்றுக்கு 68,190 லிட்டர் கழிவுநீர் வெளியேற்றப்படுகின்றது. கழிவுநீரில் குறைந்த அளவு பி.ஓ.டி. மிதக்கும் திடப்பொருள்கள், கரைந்த திடப்பொருள்கள் இருக்கும். கழிவுநீர் சுத்திகரிப்பு இன்றி தொழிற்சாலைக்கு சொந்தமான நிலத்தில் உள்ள செடிகளுக்கு பாய்ச்சப்படுகிறது. திடக் கழிவுகள் எரியூட்டியில் இட்டு எரிக்கப்படுகின்றது.

தற்போது திடக் கழிவுகளை கோழித் தீவனமாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின் கீழ் கழிவுநீரை வெளியேற்ற விண்ணப்பித்தது. வாரியம் 7—8—1984 அன்று மேற்சொன்ன தொழிற்சாலைக்கு கழிவுநீரை வெளியேற்ற வாரியம் நிர்ணயித்துள்ள கீழ்க்கண்ட கூடுதல் நிபந்தனைகளுடன் அனுமதி அளித்துள்ளது :—

(1) இசைவு வழங்கப்பட்ட மூன்று மாதத்திற்குள் வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்குட்பட்டு கழிவுநிர் சுத்திகரிப்பு செய்ய தக்க சுத்திகரிப்பு சாதனங்களை நிறுவவேண்டும்.

(2) இத்தொழிற்சாலை தனது திடக்கழிவுகளை, விஞ்ஞான ரீதியில் நிலத்தடி நீரின் தன்மைக் கெடாதவாறு வெளியேற்ற வேண்டும்.

வாரியம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** துணைத் தலைவரவர்களே, சுற்றுப்புறச் சுகாதாரம், காற்று, நீர் மாசுபடுகிறது இத்தகைய கழிவு நீரால். குறிப்பாக தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருள்களினால் நீர்நிலைகள் மாசு படுகின்றன. இதைத் தடுக்க பல்வேறு விதிமுறைகளை இந்த வாரியம் வைத்திருந்தாலும் தொழிலதிபர்கள் அதை சரியாகக் கடைபிடிப்பதில்லை. மேலும் சுகாதார அதிகாரிகளை அந்தத் தொழிலதிபர்கள் ஏமாற்றி விடுகிறார்கள் என்று சொல்லப் படுகிறது. எனவே கடுமையான சட்டத்தைப் போடவும், அடிக்கடி அங்கு சென்று சோதனைகள் இடவும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவரவர்களே, அரசாங்கம் கடுமையான சோதனைகளை மேற்கொண்டதன் காரணமாகத்தான் பல உண்மைகள் அரசாங்கத்திற்குத் தெரிய வந்தன. அதன் காரணமாக உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கே மூன்று தொழிற்சாலைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.



முதலாவதாக திருவள்ளூரிலுள்ள இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையிலிருந்து நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் கழிவு நீரும், அன்றாடக் கழிவு நீராக 7,500 லிட்டர் கழிவு நீரும் வெளியேற்றப் படுகிறது. 26-வது செக்ஷன்படி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, அவர்கள் சில பணிகளைச் செய்த பிறகுதான் 8—5—1985 அன்று அனுமதி தரப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, மதுரா கோட்ஸ் நிறுவனத்தைப் பொறுத்த வரையில் 8—7—1984 அன்று சில நிபந்தனைகளின் அடிப் படையில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உரிய முறையில் சுத்திகரிப்பு இயந்திரங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்ட பின்னால்தான் கழிவுநீரை வெளியேற்ற வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம்.

(முற்பகல் 10-40)

மூன்றாவதாக கள்ளிப்பட்டு கிராமத்திலுள்ள ஓவர்சீஸ் மெரைன் ப்ராடெக்ஸ் தொழிற்சாலையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இத்தொழிற்சாலையிலிருந்து ஒரு நாளைக்கு 68,190 லிட்டர் கழிவுநீரை வெளியேற்றுகிறார்கள். அதற்கும் நாம் சில நிபந்தனைகளைப்போட்டு அதை அனுசரிக்க வேண்டுமென்று சொல்லி, 7—8—1984 அன்று அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆகவே இந்த இலாக்காவைப் பொறுத்தவரையில் எல்லா வகையான நடவடிக்கைகளையும் செக்ஷன் 26-ல் உள்ள Water (Prevention and Control of Pollution) Act என்ற அந்த ஆக்டின் கீழ் எல்லா வகையான நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான தொழிற்சாலைகளில் ஏதேனும் ஒரு காரியத்தைச் சொன்னால் அரைகுறையாகச் செய்து அரசு நிர்வாகத்தை ஏமாற்றுகிறார்கள். எனவே, அது பற்றித் தீவிரமாகக் கண்காணிக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1985 ஜூன் 14

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974-ஆம் ஆண்டுச் சட்டம் என்று இருக்கக் கூடிய அகில இந்திய சட்டத்தைப் பொறுத்தவரையில் 1981-ஆம் ஆண்டுதான் நாம் இங்கே நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக் கிறோம். 1974 ஆம் ஆண்டு அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படவில்லை. சென்ற இரண்டாண்டுகளாக நாம கடுமையான நடவடிக்கை எடுத்து பல இடங்களில் சுத்திகரிப்பு செய்த பிறகு தான் அனுமதி வழங்குகிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த அச்சம் தேவை யில்லை; அதற்கு இடமே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தாட்சண்ய மில்லாமல் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக் கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 1985-86—வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண். 24 — தொழில்கள்.

### (ஆ) கோரிக்கை எண். 51 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 24 — தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,63,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாட்டம், ஆத்தூர் வட்டத்தில் குச்சிக்கிழங்கிலிருந்து ஸ்டார்ச், ஜவ்வரிசி தயாரித்து, அதிலிருந்து குளுகோஸ் தொழிற்சாலை நிறுவ வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்



1985 ஜூன் 14] [திரு. க. இராசாராம்]

"மானியக் கோரிக்கை எண். 24 — தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,6344,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டிணம் நகரத்தில் துவக்கப்பட்ட தொழிற்பேட்டை விரிவாக்கப்படாமலும், செயல்படாமலும் இருப்பதனால் ஏற்படும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 24 — தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,63,44,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 51 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,35,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாததத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்* எல்லாம் அச்சிடப்பெற்று ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போதுள்ள சூழ்நிலைபற்றி நான் சிலவற்றை அவையில் சொல்ல விரும்புகிறேன்.

'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகை யினானே' என்பது நன்னூலார் வாக்கு. எனவே புதியன பலவற்றை உலகம் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த வகையில் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நேரடியாகவும்

[1985 ஜூன் 14

மறைமுகமாகவும் கம்ப்யூட்டர் அவசியம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. தேர்தலில் அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், தேர்தல் முடிவுகள், ஜாதகப் பலன்கள், திருமணத்திற்காக மணமகன், மணமகள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தல் போன்றவற்றைப் பொறுத்தவரையில் இணையற்ற உதவியாளராகக் கம்ப்யூட்டர் விளங்கி வருகின்றது. மேலும் நாம் பொருட்களை வாங்கும் கடைகளில்கூட கம்ப்யூட்டர் சேவை செய்யத் தொடங்கியுள்ளது. கம்ப்யூட்டர் மூலமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் என்று மருத்துவ நிலையங்கள் விளம்பரப்படுத்தும் அற்புதம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆகாயவிமானப் பயணத்துக்குத் தேவையான ரிசர்வேஷன் கம்ப்யூட்டர் செய்து தரத் துவங்கியுள்ளது. சொற்களைப் போதிக்கும் பள்ளிகளிலும், அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர்கள் பயன்படுகின்றன. செய்தித் தாளில் நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் சொற்கள்கூட கம்ப்யூட்டரால் அமைக்கப்படுவதாகும். உண்மையிலேயே கம்ப்யூட்டர் யுகம் இப்போது ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றது. மக்களின் அன்றாடத் தேவைகளை நிர்ணயம் செய்யும் பணியில் அதிகமாகக் கம்ப்யூட்டர் ஈடுபடத் தொடங்கியுள்ள இந்த நேரத்தில் கம்ப்யூட்டர் தொழில் நுட்பப்பயிற்சி பெற்றவர்கள் மிகக் குறைந்தவர்களாக இருக்கின்ற நிலையில் கம்ப்யூட்டர் இயங்குவது பற்றியும், கம்ப்யூட்டர்கள் செய்யும் பணிகளைப் பற்றியும் சரியாகத் தெரிந்துகொள்ள வாய்ப்புகளைப் பெறாதவர்கள், அவற்றைத் திரும்பிக்கூட பார்க்காத நிலையும், கம்ப்யூட்டர்கள் மனிதனைப் போன்று அறிவியலை முடிவு செய்யும் நிலையில் இருந்தும்கூட அவற்றை வெறுப்புடன் நோக்கும் நிலையும் இருப்பது வேதனைக்குரியதாக ஆகி இருக்கின்றது. ஆகவே இந்த விவாதத்தில் கம்ப்யூட்டர் பற்றிய குறிப்புகளையும் சேர்த்து அவையிலே இருக்கின்ற உறுப்பினர் பெருமக்கள் பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

*54–601ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1985 ஜூன் 14]

***திரு. பெ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த தொழில் துறை மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் இங்கே சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

இந்தத் தொழில்துறை சம்பந்தமான அறிக்கையிலே பல தொழில்களைப்பற்றி அவர் சொல்லியிருந்தாலும், அவற்றிலே நான் குறிப்பாக எடுத்துக்கொண்டு பேச விரும்புவது சர்க்கரை தொழில் பற்றிய பிரச்சனையாகும். கடந்த சுமார் 25 ஆண்டுக் காலமாக அந்த சர்க்கரைத் தொழிலிலே ஈடுபாடு கொண்டவன் என்ற முறையிலும், அதிலே நேரிடையாகத் தொடர்பு கொண்டவன் என்ற முறையிலும் அதைப்பற்றி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

அதில் முதலாவதாக, சர்க்கரை ஆலையில் பதிவு செய்து கொண்டு கரும்புகளை சப்ளை செய்த விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே இந்த ஆண்டு கரும்பினுடைய விலையை உயர்த்திக் கொடுத்திருப்பதற்காக தமிழக அரசுக்கு தமிழகத்திலே இருக்கிற கரும்பு விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல 1983-84-ஆம் ஆண்டிலே ஆலைகளில் பதிவு செய்து கொண்டு கரும்புகளை சப்ளை செய்த கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் மானியம் வழங்க முன்வந்திருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

1984-85-ஆம் ஆண்டுக்கு சப்ளை செய்த கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம் மானியமாகக் கொடுக்க முன் வந்தமைக்காக தமிழக அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி தமிழக அரசுக்கு, கரும்பு விவசாயிகளால் பாராட்டுப் பெறக் கூடிய நிலைமை இருந்தாலும்கூட, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய சில குறைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டியவனாக நான் இருக்கிறேன்.

1983-84 ஆம் ஆண்டில் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்ட மானியம் 9 தவணைகளாக கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டு, நாளது வரையில் 4 தவணைதான் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. இன்னும் எஞ்சியுள்ள 5 தவணைகளை எப்பொழுது கொடுப்பார்கள் என்பது தெரியவில்லை. ஏற்கெனவே அடுத்த சர்க்கரை ஆண்டுக்கான காலமும் தொடங்க இருப்பதால், அந்தப் பாக்கித் தொகையை இப்பொழுதே உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த மீதமுள்ள 5 தவணைகளையும் கொடுத்தால் அது அந்த விவசாயிகளுக்கு காலத்தால் செய்த உதவியாக இருக்கும். ஏற்கெனவே வறட்சியினால் அவர்கள் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு கொடுப்பதாக ஏற்றுக் கொண்ட தொகையை உடனடியாகக் கொடுக்க முன்வருமேயானால், அந்த கரும்பு விவசாயிகள் தமிழக அரசிடம் என்றென்றும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

அதேபோல 1984-85 ஆம் ஆண்டுக்கு 8.5 சதவீதம் சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்புக்கு 185 ரூபாய் என்று குவிண்டாலுக்கு விலை நிர்ணயம் செய்து அரசு பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரை பிரகாரம் தமிழக அரசினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய ஆலைகளுக்கும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்கு அந்தத் தொகை கொடுக்கப்பட்டு விட்டது. அப்படி அந்தத் தொகையைக் கொடுக்கிறபோது அரசு ஆலைகளில் பதிவு செய்த விவசாயிகளுக்கு மட்டுமே அரசு மானியமும் கொடுக்கப்படும் என்று இணைக்கப்பட்ட விலையை முழுமையாகப் பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே அரசு மானியமும் கொடுக்கப்படும் என்று இருப்பதால். கூட்டுறவுத் துறையிலும், அரசுத் துறையிலும் பதிவு செய்த விவசாயிகளுக்கு மட்டும் இந்த 185 ரூபாயோடு அரசு வழங்க முன்வந்திருக்கும் 10 ரூபாய் மானியமும் கிடைக்கிறது. ஆனால் தனியார் துறை ஆலைகளிடம் கரும்பு கொடுத்து வரும் விவசாயிகளையும் நீங்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தத் தமிழகத்திலே தனியார் துறையின் சர்க்கரை ஆலை முதலாளிகள்தாம் இந்தத் தொழிலில் அதிக லாபம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி கொள்ளை லாபம் அடிக்கின்ற அவர்கள், அரசு நிர்ணயித்த அந்த விலையைக் கொடுக்க முன்





வாராததோடு, இந்த அரசுக்கே இப்படித் தான் உத்தரவு இட வேண்டும் என்ற வகையில் நிர்ப்பந்திக்கக் கூடிய முறையில் 175 ரூபாய் தான் கொடுப்போம், 185 ரூபாயைக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லி, 175 ரூபாய் மட்டும் கொடுத்து, அரசு நிர்ணயித்த விலை அந்தப் பகுதி கரும்பு விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யாததோடு மட்டும் அல்லாமல், அரசு கொடுக்கக் கூடிய அந்த மானியத்தையும் வாங்கிக் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள்.

(முற்பகல் 10.50)

நான் இந்த நேரத்தில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், சர்க்கார் ஆலைகளும், கூட்டுறவு ஆலைகளும் எப்படி சர்க்காருடைய உத்திரவுகளையும், பரிந்துரைகளையும் ஏற்று அதன்படி செயல்படுகிறார்களோ அதுபோலவே தனியார் துறை ஆலைகளும், அந்த உத்திரவுகளுக்குக் கீழ்ப் படிதல் வேண்டும் என்று நிர்ப்பந்திக்க வேண்டும். அப்படி அவர்களை நாம் நிர்ப்பந்தப்படுத்தத் தவறினால், இந்த ஆண்டு மட்டும் அல்ல, அடுத்த ஆண்டுகளிலும்கூட அந்தப்பகுதி விவசாயிகளுக்கு சர்க்கார் நிர்ணயித்த ஓரளவு கட்டுப்படியான இந்த இலையும் கரும்புக்குக் கிடைக்காது, சர்க்காரின் மானியத் தொகையும் கிடைக்காது. ஆகவே ஏதாவது ஒரு வகையிலாவது அவர்களை நாம் நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். அவர்களை அழைத்துப் பேசியாவது, விவசாயிகளுக்கு அந்த விலையை கிடைக்கச் செய்ய வேண்டும். ஆகவே, இந்த இடைப்பட்ட காலத்திலே அமைச்சர் அவர்களை அழைத்து பேச்சு வார்த்தைகள் நடத்தி, இந்த 185 ரூபாயும் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு தனியார் ஆலைகள் முன்வரவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதோடு சர்க்கார் வழங்கும் 10 ரூபாய் மானியத்தையும் நிறுத்தி வைக்காமல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் அது தமிழக கரும்பு விவசாயிகளுக்கு இந்த அரசு செய்த பேருதவியாக இருக்கும் என்று நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே இருக்கக் கூடிய கூட்டுறவு ஆலைகளை மிகச் சிறப்பாக நடத்த வேண்டுமென்பதில் சர்க்கரை துறை இயக்குநர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும் மிக ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்பது மிகவும் சந்தோஷப்படக்கூடிய ஒன்றாகும். கூட்டுறவுத் துறையில் ஆலைகள் மிகவும் சிறப்பாக நடக்க வேண்டுமென்றால்

[திரு. பெ. செங்கோட்டையன்] [1985 ஜூன் 14

அந்த ஆலை அமைந்திருக்கிற பகுதியில் அந்த ஆலையின் முழு அரைவைத் திறனுக்கும் கரும்பு கிடைப்பதற்கான வசதிகள் இருக்கிற பகுதிகளில் அந்த வசதி மிகவும் குறைவாக இருந்துக் கொண்டிருக்கிறது. அதேபோல கூட்டுறவு ஆலை இருக்கிற பகுதியின் இன்னொரு இடத்தில் வேறொரு சாக்கரை ஆலை அமைப்பதற்கான அனுமதி கொடுப்பதால் அந்தக் கூட்டுறவு ஆலை மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இருக்கிற சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மோகனூரில் இருக்கிறது. அது நாள் ஒன்றுக்கு 2,500 டன் பிழிதிறனைக் கொண்டது. அதை 4,000 டன்களாக மாற்றலாமென்று உத்தேசம் இருந்து கொண்டிருக்கிறது. அதே போல எங்களுக்கு அருகிலே காட்டூரில் இருக்கிற சர்க்கரை ஆலை 1,500 டன் பிழிதிறனைக் கொண்டது. அதனை 2,500 டன்களாக உயர்த்துவதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெற்றிருக்கிறார்கள். பேட்டவாய்த்தலை சர்க்கரை ஆலையில் கூட பிழிதிறனை அதிகப் படுத்தலாம் என்ற நோக்கத்தில் இருக்கிறார்கள். இந்த மூன்று ஆலைகளுக்கும் இடையில் திரு. இராமநாதன் என்பவருக்கு முசிறி வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலைக்கான அனுமதி கொடுக்க இருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த ஆலைக்கு அனுமதி கொடுத்தால் நிச்சயமாக இந்த மூன்று ஆலைகளும் பாதிக்கப் படும். குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இருக்கிற சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படும். வனென்றால் சேலம் கூட்டுறவு ஆலையின் ஆட்சேபணையை மீறி பொன்னி சர்க்கரை ஆலைக்கு ஏற்கனவே லைசென்ஸ் கொடுக்கப் பட்டு அந்த ஆலை ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அதனால் சேலம் கூட்டுறவு ஆலைக்கு வரக்கூடிய ஏறத்தாழ 2,000 எக்கர் கரும்பு பொன்னி சர்க்கரை ஆலைக்கு திருப்பி விடப்பட்டிருக்கிறது. இதனால் சேலம் சர்க்கரை ஆலைக்கு பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது. அந்தப் பகுதியில் கரும்பு அதிகமாக விளைந்து, அந்தக் கரும்புகளை உபயோகப்படுத்த வேறு வழியில்லை என்ற நிலை யிருக்குமானால் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரவைத் திறனை 2,500-லிருந்து 4,000 டன்களாக உயர்த்துவோமேயானால் அந்தப் பகுதியில் விட்டுப் போயிருக்கிற கரும்புகள் அனைத் தையும் நாம் எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1985 ஜூன் 14] [திரு. பெ. செங்கோட்டையன்]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை.)

அடுத்தபடியாக, தமிழகத்தில் வரக்கூடிய ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மிக அதிகமாக வருகிற தொழில்கள் சர்க்கரை ஆலைத் தொழில்கள் என்று அறிகிறேன். ஏறத்தாழ 10 சர்க்கரை ஆலைகள் வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமையவிருக்கிற சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையிலே அல்லது அரசுத் துறையிலே அமைப்பதுதான் சரியாக இருக்குமென்பது என்னுடைய அபிப்பிராயம். எல்லா விவசாயிகளின் விருப்பமும் அதுவே ஆகும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் தர்மபுரியில் இருக்கிற சர்க்கரை ஆலையில் அந்தப் பகுதியில் கிடைக்கிற கரும்பு முழுவதையும் எடுத்து அரைக்கிற சக்தி போதவில்லை. ஆகவே, அதற்காக தர்மபுரி மாவட்டத்தில் அரூரில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலையை அமைக்க வேண்டுமென்பது அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் அந்தப் பகுதியில் அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முன்வந்தால் அதற் குண்டான பங்குத் தொகைகளை உடனடியாகச் செலுத்த தயாராக இருக்கிறார்கள். அரசோடு ஒத்துழைத்து அதனை வசூல் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அமையக் கூடிய சர்க்கரை ஆலைகளை முடிந்தவரையில் கூட்டுறவுத் துறையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரூரில் அமைக்கிற சர்க்கரை ஆலையை கூட்டுறவுத் துறையில் அமைக்கும்படி அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் ஒரு காலத்தில் சர்க்கரையை விற்று அதனால் கிடைக்கிற வருமானம் போது மென்ற நிலை இருந்தது. வளர்ந்து வருகிற இன்றைய சூழ் நிலையில் சர்க்கரை ஆலையில் சர்க்கரையை மட்டும் விற்று விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதென்றால் நிச்சயமாக விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கொடுக்க முடியாது. இந்தச் சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல் அத்துடன் கொண்ட உப தொழில்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையில், அரசுத் துறை யில், இந்த உப தொழில்களைச் செய்கிற ஆர்வம் மிகவும் குறை

வாகக் காணப்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு டிஸ்ட்டிலரி அதாவது எரி சாராய தொழிற்சாலை ஆரம்பிக்கலாமென்று அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் ஆர்வத்தோடு சர்க்கரைத் துறை இயக்குநர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான அனுமதி மத்திய அரசிடமிருந்து அதாவது லெட்டர் ஆப் இன்டன்ட்கூட கிடைத்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். சரியான விவரம் தெரியவில்லை. எனவே என்ன காரணத்தாலோ, இங்கே டிஸ்டிலரி ஆரம்பிப்பது தடைப்பட்டு இருக்கிறது.

அடுத்து, இந்த டிஸ்ட்டிலரிகள் முழுவதுமே தனியார்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஒரு டிஸ்ட்டிலரி எவ்வளவு மோசமான அளவிலே இருந்தாலும்கூட, ஒரு ஆண்டுக்கு 1 கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. எனவே இந்த லாபங்களை எல்லாம் தனிப்பட்ட முதலாளிகள்தான் அடைகிறார்கள். எனவே இந்த லாபங்கள் தனிப்பட்ட முதலாளிகளுக்குப் போகாமல், விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய வகையில், கூட்டுறவுத் துறையிலே சாத்தியமான இடங்களில் இருக்கக்கூடிய பகுதியிலே இந்த எரி சாராயத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். அதனால் வரக்கூடிய லாபம் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கும், பல சமூக நலக் காரியங்களுக்கும் உதவிகரமாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து சேலம் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையிலும், சர்க்கரை ஆலைகள் பெறுகின்ற லாபத்தை விவசாயிகள் மட்டுமல்ல, தொழிலாளர்கள் மட்டுமல்ல, இவர்கள் இருவருக்கு மட்டுமே கொடுத்தால் மட்டும் போதாது என்ற நோக்கத்தோடு, சமூகத்திலே இருக்கக்கூடிய அனைவருக்கும் உதவக் கூடிய வகையில், பாலிடெக்னிக் ஒன்றை நடத்தி வருகிறோம், மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி ஒன்று நடத்தி வருகிறோம். அது போன்று விரிவுபடுத்தப்பட்ட ஒரு மருத்துவமனை, தொழிலாளர்களும், வெளியிலே இருப்பவர்களும், சாதாரண மக்களும் கலந்து கொள்ளக்கூடிய அளவுக்கு ஒரு மருத்துவமனையை விரிவுபடுத்தி வருகிறோம். அது மட்டுமல்லாது, ஒரு கால்நடை மருத்துவமனையையும் நிறுவி வருகிறோம். இப்படி சமூகத்தில்





உள்ள எல்லாப் பகுதி மக்களுக்கும் உதவி செய்யக்கூடிய வகையில் பல காரியங்களை சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை செய்து வருகிற காரணத்தால் இதுபோன்ற பல காரியங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நல்ல வருமானத்தைப் பெறுகின்ற வகையில் அங்கே ஒரு எரி சாராய தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, பெரம்பலூரில் அரசுத் துறையில் ஒரு எரி சாராயத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே இனிமேலாவது இந்த மாதிரியான ஆலைகள் தனியார்களுக்குப் போகாமல் அரசுத் துறையில், கூட்டுறவுத் துறையில் இவைகளை ஏற்று செய்தால், இந்த நாட்டு மக்களுக்கும். விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், உதவி செய்யக் கூடியதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நலிந்து போன சர்க்கரை ஆலைகளை தமிழகத்தில் எடுத்து நடத்தக்கூடிய வகையிலே மதுரையிலே மதுரா சர்க்கரை ஆலையை நம்முடைய டாஸ்கோ நிறுவனம் எடுத்து நடத்தி வருகிறார்கள். அதுபோல திருச்சி மாவட்டத்தில் பேட்டவாய்த்தலை சர்க்கரை ஆலையையும் நலிந்து போய், தனிப்பட்ட முதலாளிகள் நடத்த முடியாத நிலையிலிருந்து, பின்னர் அதை மத்திய அரசு ஏற்று நடத்திக் கொண்டு வந்து, இப்போது அதை யார் எடுத்து நடத்துவது என்ற சிக்கலான நிலையில் இருந்து வருகிறது. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் எல்லாம் சொல்கிறார்கள், மீண்டும் அந்தப் பழைய முதலாளிகளுக்குப் போனால், அது கெட்டுவிடும், ஆகவே தமிழ் நாடு அரசு எடுத்து நடத்தினால் நல்லது என்று சொல்கிறார்கள். எனவே அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இந்த காவிரி சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் ஆலையை தமிழக அரசு ஏற்று நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி தமிழக அரசு ஏற்று நடத்த முடியவில்லை என்றால் பக்கத்திலே இருக்கக்கூடிய டி.என்.பி.யில் இருக்கக் கூடியவர்கள் அந்த ஆலையை எடுத்து நடத்துவதற்கு முன்வருவதாக இருக்கிறார்கள், எனவே அவர்களுக்காவது கொடுத்து, இந்த ஆலையை நடத்த முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கரும்புக்கு செஸ் நிதி எல்லா ஆலைகளிலிருந்தும் டன்னுக்கு 5 ரூபாய் என்று வசூலிக்கப்படுகிறது. இந்த செஸ் நிதியை கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், சர்க்கார் ஆலைகளும் தவறாமல் செலுத்தி விடுகிறார்கள். ஆனால் தனியார்கள் நடத்தும் சர்க்கரை ஆலைகள் இந்தத் தொகையை செலுத்தாமல், கோர்ட்டிலே போய் தடை வாங்குகிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக தனியார் ஆலைகளிலிருந்து கரும்புக்கான செஸ் நிதி வசூலிக்கப்படவில்லை. இந்த நிலையில் அந்த செஸ் வசூலிப்பதன் மூலம் வரும் தொகையைக் கொண்டு என்ன காரணத்தாலோ அந்த செஸ் கொடுக்காத பகுதிகளுக்கும் சேர்த்து திட்டங்களை போட்டு, அங்கே ரோடுகளைப் போடுகிறார்கள். எனவே பணம் கொடுக்காத அந்தப் பகுதிகளுக்கு கொடுத்தவர்கள் பணத்தையும் பயன்படுத்தி ரோடுகளைப் போடுவது என்பது சரியாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே எந்தெந்த ஆலைகள் கரும்புக்கு செஸ் பணம் கொடுத்திருக்கிறார்களோ, அந்தப் பகுதிகளுக்கு மட்டும்தான் அந்தப் பணத்தைக் கொண்டு ரோடுகளை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய ஊரிலே, புகளூரிலே டி.என்.பி. சர்க்கரை ஆலை இருக்கிறது. உலகத்திலே புதுமையான முறையில் சர்க்கரை ஆலைகளுடைய கரும்புச் சக்கையை வைத்து, ஆரம்பிக்கக்கூடிய இந்த பேப்பர் தொழிற்சாலை, தமிழக அரசுக்கு ஒரு கௌரவமான தொழிற்சாலையாக இருக்கிறது. இந்திய அரசும் இதிலே மிகவும் ஆர்வமாக இருக்கிறது. உலகத்திலே உள்ள அனைவரும் இந்த கரும்புச் சக்கையிலிருந்து எப்படி காகிதம் தயாரிக்கப் போகிறார்கள் என்பதையும், இந்தத் தொழிற்சாலை எப்படிச் செயல்படப் போகிறது என்பதையும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

அது எனக்கு மிக பக்கத்தில் இருக்கிற காரணத்தாலும் என்னுடைய பக்கத்து தொகுதியில் இருக்கிற காரணத்தாலும் அதைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதற்கு எங்களுடைய சர்க்கரை ஆலையிலிருந்து 25 லட்ச ரூபாய் பங்கீட்டு முதலீடும் போட்டு இருக்கிறோம். அந்த புகளூரில்



இருக்கக்கூடிய காகிதத் தொழிற்சாலை தமிழக அரசினுடைய குறிப்பாக இன்னும் சொல்லப்போனால் இந்திய அரசினுடைய கௌரவப் பிரச்சினையில் அந்த தொழிற்சாலை இருக்கிறது. அந்த தொழிற்சாலை நீடித்து இயங்குமா? லாபம் தருமா? என்ற சில கேள்விகளை எழுப்பாமல் இருக்க முடியாது. அதிலே என்னைப் பொறுத்தவரையில் இரண்டு வகையான கேள்விகளுக்கு விடை கண்டு ஆக வேண்டும். ஒன்று, அந்த டெக்னாலஜி அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறதா? கரும்பு சக்கையிலிருந்து காகிதம் செய்யக்கூடிய அந்த டெக்னாலஜி அந்த ஆலையில் உருவாகியிருக்கிறது என்று நிரூபணம் ஆகியிருக்கிறதா என்று கேட்கும் போது நம்முடைய ஆதிகாரிகளை விசாரித்த வகையில் நிச்சயமாக டெக்னாலஜி உருவாகியிருக்கிறது. கரும்பு சக்கையிலிருந்து காகிதம் உருவாக்க முடியும் என்றும் அதன் மூலம் வெற்றிகரமாக பத்திரிகை காகிதம் உருவாக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

அடுத்து 230 கோடி ரூபாய் முதலீட்டில் ஆரம்பித்த அந்தத் தொழிற்சாலை லாபகரமாக இயங்குமா என்பது இரண்டாவது கேள்வியாக இருக்கிறது. அது அந்தத் தொற்சாலையில் வேலை செய்யக்கூடிய அதிகாரிகளால் மட்டும் அல்ல, தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களால் மட்டும் அல்ல, அங்கே உள்ள டெக்னிஷியன்களால் மட்டுமோகூட லாபகரமாக இயங்கும் என்று சொல்ல முடியாது. அவர்களுக்கு தேவையான கச்சாப் பொருளான கரும்பு சக்கை உரிய நேரத்தில் தேவையான அளவு கிடைத்து ஆக வேண்டும். உங்கள் எல்லோருக்கும் தெரியும் சர்க்கரை ஆலையினுடைய பிழியும் திறன் ஆண்டுக்கு ஆண்டு மாறி மாறி வருகிறது. சில ஆண்டுகளில் அதிகமாக இருக்கிறது. சில ஆண்டுகளில் குறைவாகப் போகிறது. அப்படி போகக்கூடிய நிலையில் வரும்போது அந்த ஆலையினுடைய உற்பத்தித் திறன் பாதிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு கரும்பு சக்கையை அந்த ஆலைக்கு கொண்டு வரும் போது அது பல்வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது. கிழக்கே தஞ்சையிலிருந்தும் மேற்கே சக்தியிலிருந்தும் அந்த தொழிற்சாலைக்கு வேண்டிய கரும்பு சக்கையை கொண்டு வருகிறார்கள். இப்படி கொண்டு வரும்போது ஏராளமான வாடகை கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, தூரத்திலிருந்து கரும்பு சக்கையை கொண்டு வருவதைவிட

அருகில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தினால் மேலும் அதிகமான அளவில் கரும்பு சக்கையைப் பெறலாம். அதனால் வாடகையும் குறையும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் அந்தத் தொழிற்சாலைக்கு நடைமுறை செலவு குறையும். புகளூர் சர்க்கரை ஆலையும், மோகனூர் சர்க்கரை ஆலையும் அதனுடைய அறவை திறனை அதிகப்படுத்த வேண்டும். சர்க்கரை ஆலைகள் மட்டும் அல்ல, நம் தொழிற்துறையும் அதில் ஈடுபட்டு சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, புகளூர் சர்க்கரை ஆலை ஆகியவை களின் பிழியும் திறனை அதிகப்படுத்தவேண்டும். நாள் ஒன்றுக்கு 2,000, 2,500 என்று இருப்பதை ஒரு நாளைக்கு நான்கு ஆயிரமாக மாற்ற உதவி செய்தால் மிக நன்றாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யும்போது மத்திய அரசு அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் போட்டு ஒருவிலையை நிர்ணயம் செய்து கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்லக்கூடிய அந்த விலையைக்கூட மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுவது இல்லை. இந்த மன்றத்தில் நான் மத்திய அரசின் ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்தாலும் கூட விவசாய பிரச்சினை என்று வரும்போது நான் குறிப்பிட வேண்டி யிருக்கிறது. இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். மத்திய அரசு நியமனம் செய்யும் அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷனுடைய சிபாரிசை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அமல் செய்யவேண்டும் என்றும் அதைத்தான் குறைந்தபட்ச அடிப்படை விலையாக அறிவிக்கவேண்டும் என்றும் அந்த வகையில் ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்தில் போட்டு அதை ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பினால் நன்றாக இருக்கும்.

அதேபோல் அந்த அந்த மாநில அரசுகள் அந்த அந்த மாநிலங்களுக்கு உண்டான கரும்பு விலையை பரிந்துரை செய்யும்போது சில விதிமுறைகளை அந்த பகுதியில் இருக்கக் கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப யோசித்து செய்யவேண்டும். அப்படி சொல்லும்போது இந்த பகுதியில் நாம் அறுத்து முடித்த பிறகு 1984-85 என்று எடுத்துக் கொண்டால் அறுத்து முடித்த பிறகு விலையை சொல்கிறோம். 1983-84 என்று எடுத்துக் கொண்டால் அறுத்து முடித்த பிறகு தான் விலையை சொல்கிறோம். அதற்கு பதிலாக ஆந்திராவில் ஒரு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள்.





கரும்பு நடவு செய்யும்போதே 1985-86 அரவைப்பட்டத்திற்கு நடவு செய்யவேண்டிய கரும்புக்கு 1984-85-லேயே அதற்கு ஒரு விலையை அறிவித்து இருக்கிறார்கள். இது பத்திரிகை செய்தி அல்ல. சிஸ்டா என்ற நம்முடைய தென் பிராந்தியத்தில் இருக்கக் கூடிய சர்க்கரை தொழில் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப மாநாட்டில் அதனுடைய ஆரம்ப உரை ஆற்றிய அங்கே இருக்கக் கூடிய சர்க்கரை துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படிச் செய்வதால் அந்த அந்த ஆலைகளுக்கு தேவையான அளவுக்கு கரும்பை பயிர் செய்வார்கள். நமக்கு இந்த விலை கிடைக்கும் என்று நிச்சயமாக உணர்ந்தால் அந்த ஆலைகளுக்கு கரும்பு கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு அவர்கள் அதிக அளவில் பயிர்செய்வார்கள். இதனால் ஆலைகளின் பிழியும் திறன் பாதிக்கப்படாமல் ஆலைகள் நல்லமுறையில் இயங்கக்கூடிய வசதிகள் ஏற்படும் என்றும் கூறினார். அதை எல்லாம் நமது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து நம்முடைய தமிழகத்திலும் அதே மாதிரி வரப்போகிற ஆண்டுகளில் முன்கூட்டியே விலை நிர்ணயம் செய்து இந்த விலை உங்களுக்கு கிடைக்கும் என்று ஒரு குறைந்தபட்ச விலை உத்திரவாதத்தை நாம் செய்து கொடுத்தால் நமது சர்க்கரை ஆலைகள் எல்லாம் பாதிக்கப்படாமல் அதனுடைய முழு அரவை திறனுக்கு கரும்பு கிடைத்து மிக லாபகரமாக இயங்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த சட்டப் பேரவை அரசு கொறடா அவர்களுக்கும், பெண்ணாகரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது அரசு பல சாதனைகளைத் தொழில்துறையிலே புரிந்து வந்திருக்கிறது. அதற்காக என் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை, எனது இதயக் கோயிலில் வைத்து வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், நமது மாநிலத்தில் தொழில் துறையிலே முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், ஒட்டுமொத்த மாக அண்டை மாநிலங்களைவிட, அவற்றின் வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் அதிக வளர்ச்சி பெறவில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு தான், தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர்

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1985 ஜூன் 14

அவர்கள் மாவட்டங்கள் தோறும், தொழில் மையங்கள் வர வேண்டும் என்ற உயரிய எண்ணத்திலே பெரிய மாவட்டங்களை எல்லாம், இன்றைக்கு தமிழகத்திலே பல மாவட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதற்காக, தமிழக மக்கள் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி உடையவர்களாக, என்றென்றும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.—ஏனெனில், இன்றைக்கு மைய அரசு அறிவித்து இருக்கின்ற—நமது மானியக் கோரிக்கையிலேகூட, புத்தகத்தில் மத்திய அரசு, எந்தெந்த மாவட்டங்களிலே தொழில் மையங்கள் இல்லையோ அந்த மாவட்டங்களில் எல்லாம் அமைக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

மாவட்டங்களிலே தொழில்துறை இருந்தாலும், வட்டங்களிலே தொழில் துறை இருக்கவேண்டும், அப்போதுதான் எல்லா மாநிலங்களையும் விட, தமிழ்நாடு, தொழில் துறையிலே முன்னேறும் என்பதை எடுத்துக்காட்டி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், வட்டங்களிலே, தாலுக்காக்களிலே, வட்டார அளவிலே தொழில் மையம் ஏற்பட வேண்டும் என்பதை மத்திய சர்க்காருக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதை உன்னிப்பாக கவனித்து, வட்டங்களுக்கும், தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது புரட்சித் தலைவர் அவர்களும், விவசாயி என்ற படத்திலே ஒரு பாட்டு பாடுவார்கள்—என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்? ஏன் கையை எந்த வேண்டும் வெளிநாட்டில்? என்று—அதைப் போல் தருமபுரி மாவட்டத்திலே இன்றைக்கு எல்லாக் கனிவளமும் இருக்கிறது. கருப்புக் கற்கள் இருக்கின்ற ஒரு மாவட்டம் ஆக இருக்கிறது. கருங்கற்கள் அதிகமாக இருக்கின்ற பகுதி என்னுடைய தொகுதி பென்னாகரம் தொகுதி தான். அந்தப் பகுதியிலேதான் தேவனூர் என்ற கிராமத்தில், அரசுத் துறை நிறுவனமான 'டாமின்' லட்சக்கணக்கான ரூபாய்களை அங்கே செலவழித்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து, கருப்புக் கற்களை வைத்து ஏற்றுகின்ற அளவுக்கு அங்கே தொழில் செய்து வருகிறது.



1985 ஜூன் 14] [திரு. எச். ஜி. ஆறுமுகம்]

இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1978 இலே இந்த மாமன்றத்திலே கருங்கல் பாறைகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், அன்றைக்கு தேசியமயமாக்கினார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு 'டாமின்' என்ற நிறுவனம் அன்று முதல் இன்று வரை அந்தத் தொழிலை செய்து வருகின்றது. இன்றைக்கு தர்மபுரி மாவட்டம் மட்டும் அல்ல, தமிழகம் பூராவும் நூற்றுக்கணக்கான கருங்கல் பாறைகள் இருக்கின்றன. அந்தக் கருங்கல் பாறைகளிலே, டாமின், ஒரு சில மலைகளை மட்டும் தான் எடுத்து வேலையைத் தொடங்கிச் செய்து வருகிறது. தனியார்களுக்கு அந்தக் கருங்கல் பாறைகளைக் கொடுத்தால், இன்றைக்கு நம் அண்டை மாநிலங்களிலே தமிழர்கள் கொத்தடிமைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள்—கொத்தடிமைகளாக இருக்கின்ற அந்தத் தமிழர்கள் அங்கேயிருந்து இங்கே வரவழைக்கப்பட்டவுடன் இங்கேயிருந்து மறுபடியும், ஆந்திரத்திற்கும், கர்நாடகத்திற்கும் சென்று விடுகிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், டாமின் நடத்துகின்ற கருங்கல் பாறைகள் ஓரிரு மலைகள் தான். அங்கே 100, 200 பேர் தான் வேலை செய்கிறார்கள். பென்னாகரம் தொகுதியிலே தேவனூர் என்ற கிராமத்தில், கருங்கல் பாறையிலே வேலை செய்ய, 100, 200 பேர்களுக்குத் தான் வேலைவாய்ப்பு பெற வசதி இருக்கிறது. அதைப் போல, தருமபுரி மாவட்டத்திலே அங்கே செம்மனஹள்ளி என்ற கிராமத்திலேயும், அந்த வேலையைச் செய்கிறார்கள். இப்படி ஒரு சில மலைகளில்தான் 'டாமின்' செய்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான கருங்கல் மலைகள் பாறைகள் தருமபுரியிலே உள்ளன. அரசுக்குத் தேவையான கருங்கல் பாறைகளை எல்லாம், எந்த எந்த மலைகள் தேவைப்படுகிறதோ, அதை எல்லாம் அரசு எடுத்துக்கொண்டு, சிறிய அளவில் 3 ஏக்கர், 5 ஏக்கர், 10 ஏக்கர் உள்ளதாக இருக்கின்ற மலைகளை தனியாருக்குக் கொடுத்தால் அதன் மூலம் வெளி நாட்டினுடைய பணம், இந்திய நாட்டுக்கு வருமானமாக அதிகரித்து வரும். அதே நோக்கில் கொத்தடிமைகளாக வெளி மாநிலங்களுக்குச் சென்றுள்ள தமிழர்கள் மீண்டும் இந்த மாநிலத்திற்கு வந்து வேலை செய்வதற்கான வாய்ப்பை அளிப்பதற்கும் இது பெரு முயற்சியாக இருக்கும் என்பதையும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களுக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1985 ஜூன் 14

(முற்பகல் 11-10)

கறுப்புக் கல் துறையிலே இரண்டாவது தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றி மானியக் கோரிக்கை மூலமாக அரசாங்கம் அறிவித்து இருக்கிறது; 3.85 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தக் கரும் பாறைகளைப் பாலிஷ் செய்வதற்கான பேக்டரியை ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பென்னாகரம் வட்டத்திலேயோ அல்லது பென்னாகரம் தொகுதியிலேயோ பத்து பேர்கள் சேர்ந்து செய்கின்ற அளவிற்கு எந்தவொரு சிறு தொழிலும், எந்தவொரு சிறு தொழிற்சாலையும் இல்லை. எனவே, 3.85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலிஷ் செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்த உள்ளதைத் தயவு செய்து பென்னாகரத்தில் ஏற்படுத்துமாறு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களையும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்கள் எங்கள் மாவட்டத்திலே படித்தவர் அவர்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தின் மீது தனிக் கவனம் செலுத்தி இந்த பாலிஷ் செய்யும் பேக்டரியை பென்னாகரம் பகுதியில் ஏற்படுத்திக் கொடுக்க முன் வர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரித் தாய் தமிழகத்தில் நுழைவதற்கு நுழைவு வாயிலாக இருப்பது தர்மபுரி மாவட்டம்தான். அதுவும் என்னுடைய தொகுதியில்தான், காவிரியின் தண்ணீர் வந்து தமிழகத்தின் எல்லையைத்தொடுகின்ற இடம் இருக்கிறது. காவிரி நீர் வந்து தமிழகத்தில் விழுகின்ற எல்லை என்னுடைய தர்மபுரி மாவட்டத்தில் தான் இருக்கிறது. ஆனால் அந்தக் காவிரித் தாயினால் எங்கள் மாவட்டத்திற்கு எந்தவிதமான பயனும் இல்லை; காவிரித் தண்ணீர் எங்கள் மாவட்டத்திற்குப் பயன் படுவதில்லை. அதே நேரத்தில் எங்கள் மாவட்டத்தில் நுழைந்த அந்தக் காவிரித் தண்ணீர் மேட்டூருக்குச் சென்று, பிறகு தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள நிலங்களுக்குப் பாய்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தித் தான் சேஷசாயி பேப்பர் மில்லில் வேலைகள் நடக்கின்றன. அரசு மூலம் புகளூரில் ஏற்படுத்தப்பட்ட காகிதத் தொழிற்சாலையும் அந்தத் தண்ணீரைத்தான் பயன்படுத்துகிறது. எனவே, அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திச் செயல்படக் கூடிய



1985 ஜூன் 14] [திரு. எச். ஜி. ஆறுமுகம்]

வகையில் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சரவர்களையும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களையும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். பென்னாகரம் பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் விதத்தில் அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பென்னாகரம் தொகுதியிலிருந்து ஓசூர் தொகுதியில் உள்ள பேக்டரிகளுக்கோ அல்லது தமிழகத்திலே மற்ற இடங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கோ ஆகட்டும், படித்த மாணவர்கள் இன்டர்வியூவிற்குச் சென்றால், பென்னாகரம் கம்யூனிஸ்ட் தொகுதி, நக்சலைட் தொகுதி என்று பெயர் எடுத்த தொகுதியாக இருக்கிறது. அந்தக் கம்யூனிஸ்ட் தொகுதியை, நக்சலைட் தொகுதியை மாற்ற வேண்டுமென்றால், பலவிதமான தொழிற்சாலைகளை அங்கே ஏற்படுத்தி, படித்த இளைஞர்களுக்கும் அங்கே இருக்கின்ற வேலையில்லாத இளைஞர்களுக்கும் வேலை கொடுத்தால் நக்சலைட் போன்றவர்கள், கம்யூனிஸ்ட் போன்றவர்கள் எல்லாம் திருந்துவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், தர்மபுரி மாவட்டத்தில் அரூர் பகுதியில் சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாலக்கோட்டிலே கூட்டுறவுத் துறையின் மூலம் நடத்தப்படும் சர்க்கரை ஆலை இருக்கிறது. கிட்டத்தட்ட 1,250 டன் அளவிற்கு அரைக்கின்ற சக்தி வாய்ந்தது. தர்மபுரி மாவட்டத்திலே உள்ள அரூரிலே இருந்து ஆயிரக்கணக்கான டன் கரும்புகள் அங்கே அரவைக்குச் செல்கிறது. பாலக்கோடு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு செல்வது போக, போன வருஷம், அதற்கு முந்தைய வருஷம் திருப்பத்தூர் சர்க்கரை ஆலைக்கும், ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கும் அனுப்புகின்ற நிலைமையிருந்தது. இன்றைக்குத் தமிழக அரசு பத்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைக் கொண்டு வரவிருக்கிறது. அந்த ஆலைகளில் ஒன்றை கூட்டுறவு மூலமாக, இங்கே எனக்கு முன் பேசிய சட்டமன்ற உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல, அங்கேயுள்ள விவசாயப்

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1985 ஜூன் 14

பெருங்குடி மக்கள் எல்லோரும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதற்குண்டான பங்குத் தொகையைக் கட்ட அங்கேயிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் முன் வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அந்தப் பகுதியிலே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் அவர். அந்த அரூர் பகுதியிலே 10 பேர்கள் வேலை செய்கின்ற அளவில் ஒரு தொழிற்சாலை கூட இல்லை. ஆகவே, கூட்டுறவு ஆலை மூலமாக சர்க்கரை ஆலையை அரூர் பகுதிக்குக் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், மாவட்டங்களிலே தொழில் இணையங்கள் அமைப்பதற்கு 10 மாவட்டங்கள் பெயரை அறிவித்து இருக்கிறார்கள். அதிலே தர்மபுரி மாவட்டமும் ஒன்றாகும். தர்மபுரி மாவட்டத்திலே ஓசூரிலே சிப்காட் இருக்கிறது. அதன் மூலமாகப் பல தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. தொழில்கள் வளர்ந்திருந்தாலும், தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு பலனும் சிப்காட் தொழிற்சாலை மூலமாக இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், ஓசூரிலே இருக்கிற சிப்காட் நிறுவனங்கள் தயாரிக்கின்ற அத்தனை பொருள்களும் பக்கத்திலே, கர்நாடக மாநிலத்திலே இருக்கிற பெங்களூரிலேதான் விற்பனை ஆகிறது. ஆகவே, ஓசூரிலே ஏற்படுத்துவதன் மூலமாக, நமது தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிற படித்த மாணவர்களாகட்டும், வேலையில்லாத இளைஞர்களாகட்டும் எந்தவிதமான நன்மையும்---ஓசூரிலே ஆரம்பிக்கப்பட்ட சிப்காட் மூலமாகப் பெறவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, 10 மாவட்டங்களில், இணையகத் தொழில்களை ஏற்படுத்துகின்ற நேரத்திலே பென்னாகரத்திலே இந்தூர் பகுதியிலே சிப்காட் தொழிற்சாலையை ஏற்படுத்துமாறு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல மாவட்டங்களில் தொழில் மையங்கள் இருந்தாலும், பெரிய, பெரிய மாவட்டங்களை எல்லாம் பிரித்து, மாவட்டங்கள் தோறும் தொழில் மையங்களை உண்டாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்காக புரட்சித் தலைவர் அவர்களுக்கு



1985 ஜூன் 14] [திரு. எச். ஜி. ஆறுமுகம்]

நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

* **திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய 1985-86-ஆம் ஆண்டின் தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீது கருத்து தெரிவிக்கின்ற வாய்ப்பினை தந்திருக்கிற தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்றபொழுது, கம்ப்யூட்டர்களுடைய பெருமைகளையும் சேர்த்துப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். அந்த கம்ப்யூட்டருக்கு ஒரு தனி சக்தி இருக்குமேயானால் மத்திய மாநில அரசுகளுடைய எண்ணங்களை எல்லாம் ஈடேற்றுகின்ற அளவிலே, அல்லது தமிழ்நாட்டினுடைய ஏக்கத்தை ஈடேற்றுகின்ற அளவிலே தொழில் துறை வளரவும், வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும், அது எதையாவது புதிதாகக் கண்டு பிடித்து தந்தால் அதுவும் வாய்ப்பாக இருக்கும் என்று என்னுடைய பேச்சின் தொடக்கத்திலேயே சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் வந்திருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே, தொழில் வாய்ப்புகள் பெருக வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் போக வேண்டும், கிராமத்திலே தொழில்கள் வளரவேண்டும், தமிழ்நாடு எல்லா துறைகளிலும் முன்னேற வேண்டுமென்று சொல்லி, அதற்காக பல புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறார்கள். ஆனால், புள்ளி விவரங்களின் இறுதியாக இந்தத் தமிழ்நாடு அடைந்திருக்கிற பலன் என்ன என்பதை நான் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய அரசினுடைய உதவியைப் பெற்றும் அல்லது மாநில அரசினுடைய திட்டத்தினாலேயும், தமிழ் நாடு தொழில் துறையிலே முன்னேற வேண்டுமென்ற அக்கறை எடுத்துக் கொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு புள்ளி விவரங்களையெல்லாம் தந்திருக்கிறார்கள். அதைப் பார்க்கின்ற பொழுது, மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு உதவுகின்ற வகையிலே, என்ன முதலீடு செய்திருக்கிறது என்ற குறிப்பைப் பார்த்தேன். 1978-79-ஆம் ஆண்டிலே ரூ. 62.48 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது தொழில் துறை வளர்ச்சிக்

[திரு. மு. இராமநாதன்] [1985 ஜூன் 14

காக. அதுபோல் 1979-80-லே ரூ. 49.74 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1983-84-ஆம் ஆண்டிலே 13.29 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் 5.34 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆண்டுக்காண்டு ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை பட்ஜெட்டில் ஒதுக்குகிற மத்திய அரசு, தமிழ்நாட்டுக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்று பார்த்தால், 1984-85-ம் ஆண்டில் 5.34 இலட்சம்தான் என்றால் இந்த தமிழ்நாடு என்றைக்கு வளம் பெறும் என்ற கவலையை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

சரி, இது ஒரு கணக்கு. அடுத்து, மாநில அரசும் மத்திய அரசும் சரிபாதி முதலீடு செய்து, தொடங்குகிற தொழில்கள் பற்றிய புள்ளி விவரத்தைத் தருகிறேன். 1978-79-ஆம் ஆண்டில் 409.77 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1979-80-ஆம் ஆண்டில் 278.21 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1984-85-ஆம் ஆண்டிற்கு 270.30 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பட்ஜெட் எஸ்டிமேட்டை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டை எப்படி முன்னேற்றமடையச் செய்யப்போகிறீர்கள் என்ற கவலையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், மத்திய அரசு அட்டானமஸ்பாடி என்ற முறையிலே, தனித்து தமிழ்நாட்டில் முதலீடு செய்திருக்கிற தொழில்களுக்கு அவர்கள் போட்டிருக்கிற தொகை பற்றிய புள்ளி விவரத்தைத் தருகிறேன். 1978-79-ஆம் ஆண்டில் 63.50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். 1979-80-ல் 2.05 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். 1984-85-ஆம் ஆண்டில் 0.02 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த 0.02 இலட்சத்தை மத்திய அரசு 1984-85 ஆம் ஆண்டில் எதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்வதற்கு உள்ளபடியே வெட்கமாகத்தான் இருக்கிறது; ஆனால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

சரி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசு இவ்வளவுதான் ஒதுக்கியிருக்கிறது என்ற கவலையோடு, மாநில அரசு என்ன ஒதுக்கியிருக்கிறது. தொழில்களை அபிவிருத்தி செய்ய என்ற புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது 1974-75-ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது



1985 ஜூன் 14] [திரு. மு. இராமநாதன்]

தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகையின் சதவீதம் (பர்சென்ட்டேஜ்) 6.62 சதவீதம். 1975-76-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 5.89 சதவீதம். 1976-77-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 6.35 சதவீதம். ஆனால் 1984-85 ஆம் ஆண்டிலே, இப்போது மாநில அரசு ஒதுக்கியிருக்கிற சதவீதம் எவ்வளவு என்று பார்த்தால் 3.95 சதவீதம்தான். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள்மீது எனக்கு சந்தேகம் கிடையாது. அவர் கெட்டிக்காரர் என்பதை கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். ஆனால் இந்தத் தொகையை வைத்துக்கொண்டு தொழில் அமைச்சர் தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன உத்தரவாதம் தந்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்? எப்படி தமிழ்நாட்டை வளம் கொழிக்கிற பூமியாக ஆக்கப் போகிறார் என்று தெரியவில்லை. சரி, இது ஒரு பிரச்சனை.

இன்னொரு பிரச்சனை. தொழில்களை நடத்துவதற்கு மத்திய அரசு சார்பில் நாம் பெறுகின்ற சில வாய்ப்புகள் எப்படி எல்லாம் தடைபடுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா, கோல் இந்தியா என்ற அமைப்புகள் மூலம் சிறு தொழில் வளர்ச்சிக்கு கச்சாப் பொருள்கள் (ரா மெட்டீரியல்ஸ்) கொடுக்கப்படுகின்றன. கோல் இந்தியா நமக்கு கொடுக்கிற அலாட்மென்ட்ஸை கொடுத்தால் கூட தமிழக அரசு தன்னுடைய எல்லைக்குள் கொண்டு வந்து சேர்ப்பதற்கு பெரிய தடையாக நீண்ட காலமாக இருப்பது இரயில்வே இலாகா என்பதை நான், மாற்றுத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்த மன்றத்திற்கு ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். அதுபற்றிய புள்ளி விவரத்தையும் சொல்ல விரும்புகிறேன்.

தமிழக அரசுக்கு இரயில்வே டிபார்ட்மென்ட் ஒதுக்கியிருக்கிற வாகன்கள் 55. அதைப்போன்று ஆந்திர அரசுக்கு ஒதுக்கியிருக்கிற வாகன்கள் 55. ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ், ஹெவி இன்டஸ்ட்ரீஸ் என்று இருக்கிற தொழில் அமைப்புகளையும், தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் அதைப்போன்று தமிழ்நாட்டிலும் கர்நாடகத்திலும் இருக்கிற தொழில் அமைப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டில் இருப்பதில் மூன்றில் ஒரு பங்கு கூட அங்கே கிடையாது. ஆனால்

[திரு. மு. இராமநாதன்] [1985 ஜூன் 14

நமக்கும் 55 வாகன்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, அவர்களுக்கும் 55 வாகன்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் மகாராஷ்டிரத்திற்கு மத்திய இரயில்வே இலாகா ஒதுக்கியிருக்கிற வாகன்கள் 200.

உத்திரப்பிரதேசத்திற்கு ஒதுக்குகின்ற வாகன்கள் 330. பஞ்சாபுக்கு ஒதுக்குகின்ற வாகன்கள் 275 குஜராத்திற்கு ஒதுக்குகின்ற வாகன்கள் 275. இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் மத்திய அரசின் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக அல்ல. இப்படிப்பட்ட ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மை நீடித்துக்கொண்டே இருந்தால் தமிழ்நாட்டில் நாம் எப்படி தொழில்களைத் தொடங்கி முன்னேற்றத்தைக் காணப் போகிறோம் என்ற கவலை காரணமாகத்தான் சொல்கிறேன்.

இன்னொரு ஆபத்தைப் பற்றியும் நான் இந்த மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். நேற்று வரையில் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய தொழில் அமைப்புகள் மூலம் சிறு தொழில்களுக்கு ராமெட்டீரியல்ஸ் சப்ளை செய்துகொண்டிருந்த அந்த நிலையை மாற்றி, இனிமேல் அந்தந்த அரசுகள் தங்களுடைய சொந்தச் செலவில் ராமெட்டீரியல்லை அந்தந்த இடங்களுக்கு வந்து தங்கள் மாநிலங்களுக்கு எடுத்துச்செல்லவேண்டும் என்ற வகையில் “பாண்டே” கமிட்டி ஒரு ரிப்போர்ட்டை மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கின்றது. அந்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் இனிமேல் ஸ்டீல், கோல் போன்றவற்றைப் பொறுத்த வரையில் இனிமேல் மாநில அரசு தனது சொந்தச் செலவில்தான் கொண்டுவரவேண்டும் என்ற நிலை வந்தால் உத்திரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களுக்கு அதைக் கொண்டு வருகின்ற செலவு குறைவாகவும், நமக்கு ட்ரான்ஸ்போர்ட் எக்ஸ்பென்சஸ் அதிகமாகவும் ஆகிவிடும். அதன் காரணத்தால் அகில இந்திய ரீதியாக நாம் எந்தத் தொழிலிலும் முன்னேற்றம் அடைய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். தமிழ்நாடு தொழிலைப் பொறுத்தவரையில் ஒரு வறண்ட காடாக ஆகிவிடும். இது பற்றித் தமிழ்நாட்டில் இருக்கின்ற தொழில் அதிபர்கள் குறிப்பாக கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் தமிழக அரசின் மூலமாகவும் மத்திய அரசுக்கு இதுபற்றி கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று



1985 ஜூன் 14] [திரு. மு. இராமநாதன்]

நான் கருதுகிறேன். எனவே ஒரு ஆபத்து வரவிருப்பதை இந்தக் கட்டத்திலேயே தடுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலும் வழக்கம் போல் தமிழக அரசு ஏமாறி விடக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுதொழில்கள் வளர வேண்டும் என்பதில் கவலை உள்ள அரசு இந்த அரசு என்று அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டைப் பரிபாலனம் செய்தபோது, சாதாரணமாகத் தொழில் தொடங்குவதற்கு நடைமுறையில் இருந்த சிக்கல்களை நீக்கினார்கள். ஒரு தொழிற்சாலை தொடங்குவது என்றால் அதற்கு இத்தனை அடி உயரம் இருக்க வேண்டும், இன்னின்ன வகையில் கட்டடம் இருக்க வேண்டும், இப்படி பல்வேறு வகையான கட்டுப்பாடுகளின் காரணத்தால் தொழில்கள் முடக்கப்பட்டுக் கொண்டிருந்த சிக்கல்களைப் பொறுத்தவரையில் அவை தேவையில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி சிக்கல்கள் போக்கப்பட்டன. அப்படிப்பட்ட நிலை 1981-ஆம் ஆண்டு வரை நீடித்தது. லைசன்ஸ் வழங்குவதில் இருந்த சிரமங்கள் காரணமாகக் காலதாமதம் ஏற்படுவதன் காரணத்தால் மாவட்ட ஆட்சித் தலைவரே ஒரு மாத இடைவெளியில் ஒரு லைசன்ஸ் தரலாம் என்ற உத்தரவை கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஏற்படுத்தினார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும். அவரும் இருக்கும்போதுதான் அப்படிப்பட்ட உத்தரவுகளைப் போட்டார்கள். அப்படி 1981-ஆம் ஆண்டு வரையில் சிக்கல்கள் ஏதும் இல்லாத நிலை இருந்தது. பிறகு ஏன் மாற்றப்பட்டது? ஏன் இந்தச் சிக்கல்கள் வந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அப்படிப்பட்ட சிக்கல் காரணமாக இன்றைக்கு கோவை மாநகராட்சி எல்லைக்குள் மட்டும் 3,000-க்கும் மேற்பட்ட அப்பிளிகேஷன்ஸ் பெண்டிங்கில் இருக்கின்றன. அப்படி பெண்டிங்கில் இருக்கின்றன என்று சொன்னால் எப்படி சிறு தொழில்களை நாம் அபிவிருத்தி செய்யப் போகிறோம்? எப்படி தொழில்களுக்கு நாம் ஊக்கம் அளிக்கப் போகிறோம் என்ற கேள்வியினை நான் தலைவர் அவர்களின் மூலமாக அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மு. இராமநாதன்] [1985 ஜூன் 14

அடுத்து கிராமங்களில் தொழில் வளரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு இலட்சம் ரூபாய் அல்லது 2 இலட்சம் ரூபாய் அல்லது 50 ஆயிரம் ரூபாய் போட்டு ஒரு கிராமத்தில் ஒரு படித்த பட்டதாரி லேத் வைக்கப்போகிறேன், அதற்குக் கரன்ட் வேண்டும் என்று கேட்டால், அந்த கிராமத்திற்கு மின்சார இணைப்பு தரவேண்டும் என்றால் ஒரு மைல் தூரத்திற்கு மேலாக கம்பம் நட்டு, கம்பி இணைக்கவேண்டும். அவன் ஆரம்பிக்கின்ற தொழிலுக்கு மின்சாரம் வேண்டும் என்றால் அந்த மொத்தச் செலவையும் அவனே பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னால், எப்படி கிராமங்களிலே தொழில்களைத் தொடங்க முடியும்? ஒரு பக்கத்திலே கிராமங்களிலே தொழில்களைத் தொடங்கவேண்டும் என்று நாம் சொல்கிறோம். இன்னொரு பக்கத்திலே தொடங்கிய தொழில்களை நடத்த முடியாத வகையில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட சிக்கல்களை மின்சார வாரியத்தின் மூலம் இந்த அரசு தந்தால், எங்கே தொழில் வளம் ஏற்படும் என்ற கேள்வியினை, உங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தமிழ்நாடு முழுவதும் பெண்டிங்காக இருக்கின்றன. மெஷின் எரக்ட் செய்யப்பட்டு, கட்டிடம் உறுதி செய்யப்பட்டு எல்லா வகையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வையரிங் எல்லாம் செய்து விட்டு கடைசியில் எலக்ட்ரிசிட்டி கிடைக்காத காரணத்தால் தொழிலை நடத்த முடியாது என்ற வகையில் தொழில் அமைப்புக்கள் தமிழ்நாடு முழுவதும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்டு இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கணக்கு எலக்ட்ரிசிட்டி போர்டு சேர்மன் அவர்களின் குறிப்பிலேயிருந்து எனக்குக் கிடைத்த கணக்கு. அது மட்டும் அல்லாமல் எனக்கு கிடைத்த இன்னொரு கணக்கையும் இந்த மன்றத்திற்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 50 ஆயிரம் விண்ணப்பங்கள் பைசல் செய்யப்படாமல் மின் வாரியத்தினுடைய உத்திரவுக்கு . . . . (மணியடிக்கப் பெற்றது).



1985 ஜூன் 14] [திரு. மு. இராமநாதன்]

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** என்னைப் பொறுத்த வரையில் நான் பெரும் தொழில்களுக்குத்தான் பொறுப்பேற்று இருக்கிறேன். சிறு தொழில்களைப்பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு நாள் இந்த அவையிலே அது வரும்போது, அதைப் பற்றி பேசிக்கொள்ளலாம்.

**திரு. மு. இராமநாதன்:** அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் மறுக்கவில்லை. பெரும் தொழில்களாக இருந்தாலும் சிறு தொழில்களாக இருந்தாலும் மொத்தத்தில் இந்த நாட்டினுடைய முன்னேற்றம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கவலையோடுதான் இவைகளைச் சொல்லிக் கொள்ள விரும்பினேனே தவிர வேறு அல்ல. அதேபோல ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரிஸ்களுக்கு லைசன்ஸ் கொடுப்பதிலே கூட, 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட மனுக்கள் காத்துக் கொண்டிருப்பதாக அரசினுடைய கணக்கிலேயே இருக்கிறது. அதன் காரணமாக இன்றைக்கு தமிழ்நாட்டில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறபோது இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இப்போது சிட்கோ தொழில்களுக்கு — சிறு தொழில்களுக்கு — கோட்டா கொடுக்கப்படுகிறது. அது போன மாதம் வரைக்கும் 25 சதவீதம் கொடுக்கப்பட்டு, இந்த மாதம் முதல் 15 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. கோட்டா முறையில், கோல் கோக்-பிக் அயர்ன் என்று சொல்லக் கூடிய இரும்பைக் கொடுக்கிறார்கள். அதனால் அந்த தொழிற்சாலைகளை நடத்த முடியாமல் ஏறத்தாழ 3,500-க்கும் மேற்பட்ட தொழில்கள் கோவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பின்னாலும், அவர்கள் சிட்கோ பற்றியே பேசுகிறார்கள். இப்படி அவர் பேசினால், பத்திரிகையிலே வேண்டுமானால் அவர் பேச்சு வரலாம். ஆனால் அதற்குப் பதில் சொல்ல முடியாது. சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்குத்தான் இவைகளுக்கான பதில்கள்

கிடைக்கும். ஆகவே அவருடைய வாதங்களை சிறுதொழில் மானியக் கோரிக்கை விவாதத்தன்று வைத்துக் கொள்ளலாமே தவிர, இப்போது வைத்துக் கொள்வதால் பலன் இல்லை, பதில் வராது. ஆகவே அவர் எழுதிக் கொண்டு வந்த எல்லாவற்றையும் படிப்பதைவிட, இவைகளை விட்டு, பெரும் தொழில்கள் சம்பந்தப்பட்டவற்றை பேசுவது நலம் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** தயவு செய்து, இன்றுள்ள மானியத்தின் மீது பேசுங்கள்.

**திரு. மு. இராமநாதன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை கவனத்தில் கொண்டு பேசுகிறேன். டி.ஐ.ஐ.சி. எனப்படும் தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் கடன் கொடுக்கிறது, தொழில்களை துவங்குவதற்காக, அதுவும் பெரிய தொழில்களுக்காக. நூற்பு ஆலைகளுக்கும் பணம் கேட்கப்பட்டது. ஒவ்வொரு நூற்பு ஆலைக்கும் கடனாக 30 லட்சம் ரூபாய் கேட்கப்பட்டது. தமிழக அரசினுடைய தவறான அணுகு முறையினாலும், அந்த தொழில் முனைய வந்தவர்களுக்கு சரியான விளக்கம் தராததினாலும், அந்த விண்ணப்பங்கள் வாபஸ் பெறப்பட்டன. நான் நமது தொழில் அமைச்சருக்கு இதற்கு மேல் விளக்கம் சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை என்று கருதுகிறேன். தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் என்ற அமைப்பு தொடங்கப்பட்டிருப்பதே இதுபோன்ற தொழில்களுக்கு முதலீடு செய்து உதவிட வேண்டும் என்றுதான். ஆனால் இந்த அமைப்பினுடைய உதவி அல்லது இந்த அமைப்பு எதற்காக உருவாக வேண்டும் என்று அரசு கருதியதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று சொன்னால், என்ன அர்த்தம்? ஆகவே, இந்த அமைப்பு எதற்காக உருவாக்கப்பட்டதோ, அந்த எண்ணம் நிறைவேற்றப்படவில்லை என்கிற ஒரு குற்றச்சாட்டையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பாலியஸ்டர் நூல் நூற்பு ஆலைகள் தொடங்க மத்திய அரசு, இந்திய அளவில் 4 தொழிற்சாலைகளை தொடங்க வேண்டும் என்று, எல்லா மாநிலங்களுக்கும் தாக்கீது அனுப்பியது. போட்டி போட்டுக்





கொண்டு மற்ற மாநில அரசுகள், அந்த 4 ஆலைகளில் ஒன்று தங்கள் மாநிலத்திற்கு வேண்டும் என்று டெல்லியிலே போய் காத்துக் கிடந்து, கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் நமது தமிழ்நாடு அரசின் சார்பிலே சிப்காட் மூலமாக ஒரு லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுக்கப்பட்டும், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் அந்த நிறுவனத்தின் சார்பிலே இந்த அரசு எடுக்காததன் காரணத்தினால், "காத்திருந்தவன் பெண்டாட்டியை, நேற்று வந்தவன் கொண்டு போனான்" என்று சொல்வார்களே, அதுபோல அந்த 4 யூனிட்டுகளும் கர்நாடகம், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, ஆகிய மாநிலங்களுக்குப் போய் விட்டன.

இந்தத் தொழிற்சாலையை துவக்குவதற்கு துவக்க மூலதனமே 40 கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அது, 5 ஆண்டுத் திட்டக் காலத்தில் மொத்த மதிப்பீடு 100 கோடியாக ஆகக் கூடியது. ஆக 100 கோடி மதிப்புள்ள ஒரு திட்டம் நமது தமிழ் நாட்டிற்கு வந்திருக்குமானால், எவ்வளவு பெரிய வாய்ப்பை உருவாக்கியிருக்க முடியும்? ஆகவே அந்தத் திட்டம் வேறு மாநிலங்களுக்குப் போக யார் காரணம் என்ற கேள்வியை தொழில் துறை அமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பாரத் எலக்ட்ரானிக்கல் லிமிடெட், பி.இ.எல்., என்பது டிஃபென்ஸ் டிபார்ட்மெண்டை சேர்ந்தது. இதன் சார்பாக டி.வி. ஸ்டேஷன், ரேடியோ ஸ்டேஷன் மற்றும் டி.வி. செட்டுகளுக்கு தேவையான உதிரி பாகங்களைத் தயாரிக்கிற தொழிற்சாலை, சுமார் 200 கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்குவதற்கு, மத்திய அரசாங்கம் 2,000-லிருந்து 3,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிற அளவிற்கு இந்தத் திட்டத்தை சென்னையில் அல்லது சென்னையைச் சுற்றியிருக்கிற ஏதாவது ஒரு பகுதியில் தொடங்க ஏற்ற வகையில் 15 ஏக்கர் இடம், மற்ற வசதிகள் தேவையென்று மாநில அரசைக் கேட்டது. ஆனால் தமிழக அரசிடமிருந்து உண்டு, இல்லை, வேண்டும் அல்லது வேண்டாம் என்கிற அளவில் ஒரு பதிலும் மத்திய அரசிற்கு போய் சேரவில்லை.

கடைசியாக டெல்லியிலிருந்து 1983-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி மறுபடியும் இந்த அரசை கேட்டார்கள். அதற்கும் பதில் போகவில்லை. பிற மாநில முதல்வர்கள் தங்களுக்கு அந்தத் தொழில் வேண்டுமென்று டெல்லியில் முகாம்

போட்டு வாதாடி கேட்டதில், அந்தத் தொழிற்சாலை கர்நாடக மாநிலம் பெங்களூருக்கு பறிபோய் விட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால் 200 கோடி ரூபாய் மூலதனத்தில் வரவிருந்த தொழிற்சாலை இந்த அரசின் கவனக் குறைவால் வராமல் போய் விட்டது. ஒரு பக்கத்தில் மத்திய அரசு நமக்கு கொடுக்கிற உதவிகள் போதாது என்று சொல்கிறோம். இன்னொரு பக்கத்தில் பொதுத் துறையில் அவர்கள் ஒதுக்கீடு செய்வது உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் தான் என்றும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்த மாநிலங்களுக்குத் தான் நிதி யொதுக்கீடு அதிகமாக செய்திருக்கிறார்கள் என்றும் சொல்கிறோம். தமிழ்நாடு மிகவும் முன்னேறிய மாநிலம், இனிமேல் தமிழ்நாடு முன்னேறுவதற்கு ஒன்றுமில்லை என்று டெல்லியிலே சொல்கிறார்கள் என்ற கவலையையும் தெரிவித்து இருக்கிறோம். ஆனால் இன்னொரு பக்கத்தில், கிடைத்ததையும் நழுவ விட்டுவிடுகிற நிலைமை இருக்கிறது. தமிழ் நாட்டிற்கு துரதிருஷ்டவசமாக இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்று சொல்வதைத் தவிர வேறெதுவும் குறிப்பிட விரும்பவில்லை.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6,000 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது என்று நாட்டிற்கு நாம் தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் நிலைமை என்ன? தமிழ் நாட்டிற்கு டெல்லி சர்க்கார் ஒதுக்கிய தொகை 4,500 கோடி ரூபாய் * *

நாட்டிற்கு இதை இந்த அரசு சொல்லி இருக்கிறதா? * *

என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். ஆனால் உத்தரப்பிரதேச முதலமைச்சர் அவர்கள் நிபுணர் குழு அனுப்பாமல், அவரும் சொல்லாமல், உத்திரப்பிரதேசத்திற்கு ஒதுக்கீடு செய்த 4,500 கோடி ரூபாயை மாற்றி 10,500 கோடி ரூபாயாக 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பெற்றிருக்கிறார்கள். இதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திலே பேசுகிறபோது சில ஆதாரங்களோடு பேசினால் நல்லது. ஏதோ உத்திரப் பிரதேசத்தைச் சொல்லி * * என்று சொல்கிறார்கள்.





அவர்கள் என்ன ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசுகிறார்? என்ன அடிப்படையில் பேசுகிறார் என்பதை விளக்கினால் நலமாக இருக்கும்.

**திரு. மு. இராமநாதன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது என்னிடத்தில் கேட்டால் அவற்றை ஒப்புவிக்க நான் கொண்டு வரவில்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் . . . .

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** இது பத்திரிகையில் வருகிறபோது * * என்ற குற்றச்சாட்டு தான் வருமே தவிர, அதற்காகத் தான் சொல்லப்படுகிறதே தவிர, ஆதாரம் இல்லாமல் இங்கே பேசுகிறார்கள் என்று தான் சொல்கிறேன். உறுப்பினர் பேசியதில் எந்த அடிப்படையும் கிடையாது. ஏதோ விளம்பரத்திற்காக பேசுவதைப் போல இருக்கிறது. பொதுக் கூட்டம் வேறு, சட்டசபை வேறு. அதை நினைவில் வைத்து உறுப்பினர் பேசவேண்டும்

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்குத் தங்களால் சரியாக பதில் சொல்ல முடியவில்லை. திட்டக் கமிஷனிலே நடைபெற்ற விவரங்களை எல்லாம் இங்கே பேசவேண்டாம்.

**திரு. மு. இராமநாதன் :** நாடாளுமன்றத்தினுடைய குறிப்புகளை வைத்துச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** நாடாளுமன்றத்திலே உங்களைப் போல சில உறுப்பினர்கள் பல கருத்துக்களைப் பேசி இருக்கலாம். அதை எல்லாம் வைத்து இங்கே பேச முடியாது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, திட்டக் குழு விவாதத்திற்கு நானும், நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் போனோம். * *

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** திட்டக் கமிஷனிலே பேசின பேச்சுக்களைப் பற்றி குறிப்பிட்டவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. மு. இராமநாதன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, உரிய நேரம் வரும்போது, அந்த விவரங்கள் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, 1982 ஆம் ஆண்டிலே எக்கனாமிக்ஸ் டைம்ஸ் என்ற ஆங்கில இதழில் சுமார் 24 பக்கம் கொண்ட தமிழ்நாடு அரசினுடைய சாதனை மலர் வெளியிடப்பட்டது, டெல்லியிலிருந்து வெளிவருகின்ற எக்கனாமிக்ஸ் டைம்ஸ் என்ற ஆங்கில இதழிலே. — நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவது ஒருவேளை இதிலே தமிழ்நாடு அரசு எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்று அந்தச் சாதனைகளை எல்லாம் படித்துவிட்டுத் தான் மத்திய அரசு இனிமேல் மாநில அரசினுடைய திட்டங்கள் பொதுத்துறை திட்டங்கள் இந்த மாநிலத்திற்குத் தேவையில்லை என்று கை கழுவிவிட்டார்களோ என்ற ஆதங்கத்தை இந்த மன்றத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்று. 24 பக்கம் தனித்து தமிழ்நாட்டின் சாதனையை விளம்பரமாக வெளியிட்ட அதே எக்கனாமிக்ஸ் டைம்ஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகை, அதனுடைய தலையங்கத்தில் திறமையான, தலைசிறந்த இந்திய நாட்டுக்கே, வழிகாட்டக் கூடிய நிபுணர்கள், அதிகாரிகளைக் கொண்ட தமிழ்நாட்டில், தமிழகத்தினுடைய தொழில் துறை 13 வது இடத்திற்கு தள்ளப்பட்டு, பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே என்னுடைய பேச்சை முடிக்கும் முன்பு, தொழிற்துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன, "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்"

* * மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





என்ற அந்தப் பாடலை மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். எல்லா வளமும் தான் இருக்கிறது. ஆனால் அவற்றைப் பயன்படுத்தி, இந்த நாட்டை பொருளாதார நிலையில் மேம்பாடு செய்வதற்கான அதிகாரங்கள், அதற்கான நிதி ஆதாரங்கள் இல்லாமல்தான் இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, என்னுடைய கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முன்னேறிய மாவட்டம் என்று சொல்லி, இப்போது கோவை மாவட்டம் பின்தங்கிய நிலைக்குப் போய்விட்டது. எனவே இனிமேலாவது அமைச்சர் அவர்களும், இந்த அரசும் அதிக அக்கறை எடுத்து, கோவை மாவட்டத்தில் பொதுத் துறையிலே, பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்கி அங்கே தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கி, அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான படித்த பட்டதாரிகள் கேள்விக்குறியாக வளர்ந்து வருகின்றார்கள். எனவே அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கக் கூடிய முறையில் தொழிற்சாலைகளை உருவாக்கி நாட்டை செம்மைப்படுத்துங்கள். இந்தத் தொழில் மானியக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிற எந்தப் புள்ளி விவரமும் பலன் அளிக்காது, அதனால் பலன் இல்லை, "ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது" என்பது போல், புள்ளி விவரம் என்பது எந்தப் பலனையும் அளிக்காது, இந்த நாட்டின் நடைமுறைக்கு பயன் அளிக்காது என்று தெரிவித்துக்கொண்டு, அதற்கான காரியங்களை எடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்தத் தொழில் மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கை எண் 24-ஐ வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆரம்பத்திலேயே 1984-85-ஆம் ஆண்டு இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது, 19 கோடியே 99 லட்ச ரூபாயாகும். ஆனால் ஆண்டு முடிவிலே நிறைவேற்றப்பட்ட திட்டங்களுடைய மதிப்பு 34 கோடியே 46 லட்சமாக செலவிடப்பட்டு இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு இன்னும் கொஞ்சம் அதிகமாக தொகை ஒதுக்கியிருக்கலாம். ஆனால்

என்ன காரணமோ, 22 கோடியே 45 இலட்சம் ரூபாய்தான் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே இந்தத் துறைக்கு இன்னும் கொஞ்சம் கூட்டி அதிகமாக ஒதுக்கியிருந் தால், இன்னும் பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வரு வதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும் என்பதை முதலிலே என்னு டைய கருத்தாகச் சொல்லிக் கொள்ள விரும்பிகிறேன்.

அதே நேரத்திலே இந்தியத் துணைக் கண்டத்திலே இன்றைக்கு வளருகிற விஞ்ஞான உலகத்திலே Electronic based industries நுண் அணு தொழிற்சாலைகளையும் உருவாக்க வேண்டும் என்ற உணர்வோடு மின் அணு தொழிற் சாலைக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவத்தை தந்து, மாநில தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய பல்வேறு திட்டங் களை இந்த மானிய கோரிக்கையில் கொடுத்து இருப்பது வரவேற்கப்பட வேண்டிய, மகிழ்வு தரக்கூடிய மிகப்பெரிய அம்சம் ஆகும்.

அதே நேரத்திலே இந்த தொழில் வளர்ச்சியை மாநிலத்தில் அமைந்து இருக்கிறது. தொழில் வளர்ச்சி என்பது பணத்தை உருவாக்குவதற்கு பல்வேறு காரியங்கள் அடிப்படையாக வைத்து மட்டும் தொழிலை வளர்த்து விட முடியாது என்பது எல்லோரும் அறிந்த உண்மை ஆகும். ஆனால் அதே நேரத் திலே தொழில் அறிவு பெற்று ஆக வேண்டும். சமுதாய அமைப்பு, பன்னெடுங் காலமாக சரித்திர காலத்திலிருந்து, சங்க காலத்திலிருந்து தமிழ்நாட்டு மக்கள் விவசாயத்தை மட்டும் நம்பி, விவசாயத்தை மட்டும் நடத்தி வருகிற காரணத்தால் அவர் களுக்கு அந்த அளவுக்கு தொழில் வளர்ச்சியில் ஈடுபாடோ அல்லது அந்த அளவுக்கு அதிலே அக்கறை செலுத்துகிற தன்மையோ இல்லாமல் இருக்கலாம். அல்லது இன்னும் சொல்லப்போனால் வளர்கிற விஞ்ஞான அறிவு, இருக்கிற இளைஞர்களுக்கு பகற்றப்பட பயிற்றுவிக்கப் படாமல் பல கால மாக போதிக்கப்படாமல் ஏது தடை செய்யப்பட்ட காரணத் தாலும் இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு கருத்தை தெள்ளத் தெளிவாக வெளியிட்டார்கள்.

,,The Arts Education has lost its utillty"



என்று சொன்னார்கள். கலைக் கல்லூரியில் பயிலுகிற பி.எஸ்.சி., பி.ஏ., போன்ற படிப்புகள் எல்லாம் இன்றைக்கு தேவை அற்ற கல்வியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞான உலகத் தில் தொழில் செய்ய வேண்டும், அந்த தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும், தொழிற்சாலையில் பணியாற்ற வேண்டும் என்ற உணர்வோடு மாணவர்கள், இளைஞர்கள் தயார் செய்யப் படவேண்டும்.

முதலில் தொழில் அறிவு பயிற்றுவிக்கப்படவேண்டும். அதற்குப் பின்னர் தொழில் வளர்ச்சிக்கான ஆயத்தங்களை செய்யவேண்டும் என்ற உணர்வோடு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் தொழில் கல்வி முறையை கொண்டு வந்து, பொறியாளர்களையும், பாலிடெக்னிக்குகளையும் உருவாக்கி யிருக்கிறார்கள். எனக்கு இருக்கிற அச்சம் எல்லாம் இப்படி பாலிடெக்னிக்கு முடித்து வருபவர்கள், பொறியாளர்களாக பயிற்றுவிக்கப்பட்டு வருகிறவர்களுக்கு போதுமான அளவுக்கு தொழில் வளர்ச்சியில் இடம் கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியுமா என்றால், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றைக்கு சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் மூலமாகவும், அவர்கள் தொழில் செய்ய பல்வேறு முனைப்பான எண்ணங்களை வைத்து இந்த நாட்டை உருவாக்குவார்கள், முன்னேற்றுவார்கள் என்ற எண்ணத்தோடு இந்த கல்வி முறையை கொண்டு வந்து இருக்கிற நோத்தில், நமக்கு இருக்கிற கஷ்டங்களை இந்த மன்றத்தின் வாயிலாக சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் தொழில் வளர வேண்டும் என்றால் மின் பற்றாக்குறை அறவே இருக்கக்கூடாது. தமிழ் நாட்டில் இன்றைக்கு எவ்வளவோ காரியங்கள் பற்றி பேசலாம், இங்கே மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் அவர்கள் தொழில் குன்றி யிருக்கிறது, இந்த இந்த காரணங்களால், மத்திய அரசு நமக்கு சலுகை அளிக்காத காரணத்தால் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்கிறோம் என்று எல்லாம் சொன்னார்கள். இது பல கால மாக இந்த மன்றத்தில் பேசப்பட்டு வந்த நிகழ்ச்சியாக இருந் தாலும், இன்றைக்கு தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி குன்றிப் போய் இருப்பதற்கு — குன்றிப்போய் இருக்கிறது என்று சொல்வதை விட மாற்றார்களால் மந்தப்படுத்தப்பட்டு இருக் கிறது என்று சொல்வதற்கு அடித்தளமாக இருப்பது மின் பற்றாக்குறை ஆகும்.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 ஜூன் 14

ஆந்திராவில் இன்றைக்கு மிகப்பெரிய அளவில் 800 கோடி ரூபாய் அளவில் மைய அரசு ராமகுண்டா மின் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதைப்போல தமிழ் நாட்டிலேயும் ஒரு 1000 மெகாவாட் உற்பத்தி செய்கிற ஒரு அனல் மின் நிலையத்தை கல்பாக்கத்தில் இன்றைக்கு உருவாக்கியிருப்பதைப் போல வேறு ஒரு அனல் மின் நிலையத்தை மைய அரசு உருவாக்க வேண்டும் என்று மாநில தொழில் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும். இங்கே இருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் தமிழ்நாட்டில் தொழில் வளம் வேண்டுமானால், என்றைக்கும் பாரத மாதாவாக திருமதி இந்திரா காந்தி அவர்களை ஏற்று வணங்குகிற இந்த மாநிலம் பிற்படுத்தப்படக் கூடாது, பங்கப் படுத்தப்பட்டுவிடக்கூடாது என்ற உணர்வோடு சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து சொல்லிக் கொண்டு வந்த நிலைமை இன்றைக்கு மாறியிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் சொன்னார், இந்தியா என்று சொல்லப்பட்டது விந்திய மலைக்கு அப்பால் இருக்கிற பகுதி தான் இந்தியா என்று அழைக்கப்படுகிற துர்ப்பாக்கிய மான நிலை இருக்கிறது. இந்திய அரசு செய்கிற திட்டங்கள் அனைத்தும் விந்திய மலைக்கு அப்பால் இருக்கிற மாநிலங்களில் மட்டும் தான் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்ற நிலை இன்றைக்கு மாறி சற்று முன்னேறியிருக்கிறார்கள். விந்திய மலைக்கு அப்பால் இருக்கிற அனைத்து மாநிலங்களுக்கும் செய் கிறார்களா என்றால் இன்றைக்கு அதுவும் இல்லை. இந்தியா என்றால் உத்திரப் பிரதேசம் என்றும், அல்லது கொஞ்சம் தள்ளி மத்தியப் பிரதேசம் அல்லது அரியானாவை எடுத்துக் கொள்வார் களே தவிர, கீழே இருப்பவர்களை பார்ப்பதற்கு நேரம் இல்லை, கீழே இருப்பவர்களைப் பற்றி பேசுவதற்கு அவர்களுக்கு அக்கறை இல்லை என்று குற்றம் சாட்டுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.



1985 ஜூன் 14] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

(முற்பகல் 11-50)

காரணம், இதே மன்றத்திலே, 1983-லேயும் சரி, 1984-ம் ஆண்டு மானியக் கோரிக்கையிலேயும் சரி, இந்த ஆண்டும் சரி, ஒரே மாதிரியாக அரைத்த மாவையே அரைக்க வேண்டிய துர்ப்பாக் கியமான நிலையே இருந்து கொண்டிருக்கிறது. ஹீரோ இண்டஸ்டிரியல் டிஸ்டிரிக்ட் தமிழ்நாட்டிலே ஒரு மாநிலத்திலே கூட கிடையாது. ஏன் தென்புலத்திலேயே கூட கிடையாது என்று 1984-லேயே சொன்னோம். அப்போதெல்லாம் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக, காங்கிரஸ் பேரியக்கத்தின் துணைத் தலைவராக இருந்த என்.எஸ்.வி. சித்தன் அவர்கள், அப்படி அல்ல, இந்த ஆண்டு அந்த மாநிலங்களுக்குத் தந்து இருக்கிறார்கள், அடுத்த ஆண்டு நமது மாநிலத்திற்கு வரும் என்றார்கள். இன்றைக்கு 1985-ஆம் ஆண்டிலே நான் இங்கே இருந்து பேசுகிறேன். அவரும் அங்கே அமர்ந்து கொண்டு கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாரே தவிர, இந்த மாநிலத்திற்கு வந்தபாடில்லை.

பெரிய மாவட்டங்களாக இருக்கிற (குறுக்கீடு) காரணத்தினால், மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, சிறிய மாவட்டங்களாக ஆக்கப்பட் டால் அப்படி இங்கும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் தொழில் அமைச்சர் ஆக இருந்தபோது வட்டங்கள் என்று அறி விக்கலாம், ஹீரோ இண்டஸ்டிரியல் தாலுக்கஸ் என்று அறிவிக்க லாம், தொழிற்சாலைகளே இல்லாத பல்வேறு தாலுக்காக்கள், வட்டாரங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அறிவிக்கலாம் என்று சொன்னார்கள். அப்போது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு நாங்களும் உங்களுக்கு உறு துணையாக இருந்து செயல்வோம் என்று சொன்னார்கள். எங்களுக்கு உறுதுணையாக தேர்தலிலே இருந்தார்களே தவிர, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து, மத்திய அரசாங்கத்திலிருந்து வாங்கித் தரவில்லை என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[1985 ஜூன் 14

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுடைய இலாகா மானியம் வருகிற நேரத்தில் அதைப் பற்றி பேசினீர்களானால் அதற்கான பதில் கிடைக்கும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலையே மாண்புமிகு இராமலிங்கம் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் பேசவேண்டிய பேச்சை இங்கே சொன்னால், அதற்குப் பதில் சொல்கிற மத்திய அமைச்சர்கள் இங்கே இல்லாத காரணத்தால் பதில் வராது. அவர் பேசுகின்ற போது, கடந்த ஆண்டு இந்த மாமன்றத்திலே நடந்த விவாதத்தை சுட்டிக் காட்டிப் பேசினார். அதாவது, வட மாநிலங்களிலே இருக்கிற மாவட்டங்களுக்கு உரிமம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், தென் மாநிலங்களிலே இருக்கிற மாவட்டங்களுக்குப் பின்னாலே வரும் என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். அது மாதிரி நான் சொல்லவில்லை என்று மறுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேலும், மாவட்ட அளவிலே ஸீரோ இன்டஸ்டிரியல் மையம் என்று வைத்துக் கொள்கிறோமே, வட்ட அளவிலே மாற்றவேண்டும் என்று நமது அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. இது மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டிய கொள்கைப் பிரச்சினை. வேறு ஏதாவது மாநிலங்களிலே வட்ட அளவிலே கொடுத்து விட்டு நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் வட்ட அளவில் கொடுக்கவில்லையெனில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசலாம். எனவே, கொள்கை அளவில் மத்திய அரசு எடுக்கவேண்டிய முடிவு. வட்ட அளவில் எங்களுக்கு வேண்டும், மாவட்ட அளவில்தான் கொடுத்திருக்கிறீர்கள் என்று நாம் கேட்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், தமிழகத்திற்கு அதிகமாக தொழில்கள் வேண்டும்; திட்டங்கள் வரவேண்டும் என்று வற்புறுத்துவதிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை விட, அதிகமாகக் குரல் கொடுக்க நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம். அது மட்டுமல்ல. அண்மையிலே காங்கிரஸ் நூற்றாண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பதிலை மட்டும் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். மானியத்திலே பேசுவதைப்போல் பேசாதீர்கள்.



1985 ஜூன் 14]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோழமைக் கட்சி நண்பர்கள் என்ற காரணத்தால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட என்று சொல்வதை விட, அவர்களோடு சேர்ந்து நாங்களும் என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சித்தன், நீங்கள் அமருங்கள். அடுத்துப் பேசுகிற காங்கிரஸ் கட்சி உறுப்பினரிடம் சொல்லி உங்கள் கருத்தை நீங்கள் விளக்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று. அண்மையிலே காங்கிரஸ் நூற்றாண்டு விழா டெல்லியிலே நடந்தபோது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய மூப்பனார் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய பழனியாண்டி அவர்களும், காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த தமிழக சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்திற்கு அதிகமாக நிதி உதவி வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து கேட்ட பிறகு தான் ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய் தமிழகத்திற்கு அதிகமாகக் கிடைத்திருக்கிறது. அதனால் அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, உங்களோடு சேர்ந்து, நாங்களும் குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். தமிழகத்திற்கு பங்கு அதிகம் வேண்டுமென்றால், உங்களுக்கு இணையாகக் குரல் கொடுக்க இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** நாங்கள் கேட்பது எல்லாம், தமிழ்நாட்டிலே ஸீரோ இன்டஸ்டிரியல் டிஸ்டிரிக்ட் என்ற வகையிலே இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு அமைப்பை நிறுவி, அப்படி ஒரு சட்டதிட்டங்களை போட்டதினாலே அது உத்தர பிரதேசம் போன்ற வடமாநிலங்களுக்குத்தான் பயன் அளிக்கிற வகையிலே இருக்கிறது. தமிழ்நாட்டிலே ஒரு மாவட்டம் கூட, அந்த சட்டதிட்டத்திற்கு உட்பட்டு வராத காரணத்தால்—

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 ஜூன் 14

இந்தியாவில் வசூலிக்கப்படுகிற வரி இந்தியா முழுவதும் இருக்கிற மக்களால் தரப்படுகிற வரி. அதை வைத்துத் தான் இன்றைக்கு மத்திய அரசு ஆட்சி செய்கிறது. — ஒதுக்கும்போது, சட்டதிட்டங்களை, வட மாநிலத்தவர்களுக்கு அதிகமாகப் பயன் தரும் வகையிலே ஒதுக்கி விடுகிறார்கள். அதைப் போக்குகிற விதத்தில், இந்தியத் துணைக் கண்டத்திலே வாழ்கிற அத்தனை பேரும் இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமானவர்கள்தான் என்கிற உணர்வோடு தமிழ்நாட்டு மக்களுக்கும் பயன் அளிக்கிற வகையில் தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சியை உருவாக்குகிற வகையில் ஸீரோ இன்டஸ்டிரியல் தாலுக்ஸ், பிளாக்ஸ் என்று உருவாக்கி, தொழில் துறையில் பின் தங்கிய வட்டாரங்களாக அறிவிப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்தால் நான் வரவேற்கிறேன் என்று சொல்லி, அதைப் போலவே, ஃப்ரி ட்ரேட் ஜோன் என்று வெளிநாட்டிலே வாழ்கிற இந்தியர்கள், வெளிநாட்டிலே வாழ்கிற தமிழர்கள், நான்-ரெசிடென்ஷியல் இன்டியன்ஸ் அவர்களை வைத்து, அவர்களின் அறிவுத் திறனையெல்லாம் தமிழ்நாட்டிற்கு, இந்தியாவிற்குப் பயன்படுத்துகின்ற உணர்வோடு செய்ய வேண்டும்.

பாரதப் பிரதமர் அவர்கள் ஒருகாலத்தில் சொன்னார்கள், இந்தியாவில் உள்ள மிகப் பெரிய வல்லுநர்கள், விஞ்ஞானிகள், தொழில் நுட்பம் அறிந்தவர்கள் இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை அல்லது தொழில் துவங்குவதற்கான முயற்சிகளை அவர்களுக்குச் செய்து தராததால் அவர்களெல்லாம் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள்; அப்படி வெளிநாடுகளுக்குச் செல்லுகின்ற அவர்களுடைய அறிவை ட்ரெயின் செய்கிறோம் என்று சொல்லி வெளிநாட்டுக்காரர்கள் எடுத்துக்கொள்கிறார்கள்; அவ்வாறு எடுத்துக்கொண்டு தங்களுடைய நாட்டை வளப்படுத்துகிறார்களே தவிர இந்தியாவிற்குப் பயன் இல்லை என்று 'ப்ரெயின் ட்ரெயின்' என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் இந்தியாவிலிருந்து செல்லுகின்றவர்களின் அறிவை உறிஞ்சுவதால் இந்தியாவின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. எனவே, அப்படிப்பட்டவர்களை வைத்து ட்ரேட் ஃப்ரி சோன் என்று



1985 ஜூன் 14] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

உருவாக்கி வசதிகளை ஏற்படுத்தித் தந்தால், அவர்கள் இங்கேயே தொழில்களைத் தொடங்கி, இங்கேயிருந்து உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய நிலைமை ஏற்படும். அந்த முறையில் கொண்டு வந்து பல மாநிலங்களில் துவக்கப்பட்டாலும், அந்த மாநிலங்களில் துவக்கப்பட்ட நேரத்தில், தமிழகத்தில் உள்ள தொழிலதிபர்கள் அல்லது (Non-resident Tamils) என்ற முறையில் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வசிப்பவர்கள் எல்லாம் தங்களுக்கும் அந்த ட்ரேட் ஃப்ரி சோனில் இடம் ஒதுக்கித் தந்து, அனுமதி தர வேண்டுமென்று கேட்ட நேரத்தில், வேறு எந்த மாநிலத்திற்கும் அனுமதி கொடுக்கவில்லை, கொடுக்கின்ற முயற்சியை மைய அரசு செய்யவில்லை, உதவி கொடுக்கவில்லை.

ஆனால் தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட ட்ரேட் ஃப்ரி சோன்-ஐ உருவாக்குகின்ற நேரத்தில் இங்கேயுள்ள தமிழர்களுக்கு அதிகமாக வாய்ப்பு கொடுக்காமல் வடபுலத்தவர்களுக்கே அதிகமான வாய்ப்பைக் கொடுக்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய மாநிலத்திலேயே வைத்திருக்கிறீர்கள், நீங்களே பார்த்து அனுமதி கொடுத்து விடக் கூடாதா என்று எதிர்க்கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கேட்கக்கூடும். அவர் அதற்கு யோசிக்கிறார் என்று கருதுகிறேன். ஆனால் இது குறித்து ஒரு உச்ச மட்டக் குழுவை வைத்திருக்கிறார்கள். அதற்கு மத்திய தொழில் அமைச்சரவர்கள்தான் தலைவர். ஆனால் மாநிலத் தொழிலமைச்சர் அதில் உறுப்பினராகக் கூட இல்லை; மாநில முதலமைச்சர்கூட உறுப்பினராக இல்லை. உச்ச மட்டக் குழுவின் தலைவராக மைய அரசின் தொழிலமைச்சர் இருந்தாலும் மாநிலத்தில் உள்ளவர்களுக்கு அதில் உரிமை இல்லை. ஆனால் இவர்களுக்கு என்ன வேலை என்றால், இடத்தைக் கொடுப்பது தமிழக அரசு, தமிழகத்தைச் சேர்ந்த நிலங்கள் ட்ரேட் ஃப்ரி சோனுக்குத் தரப்பட்டிருக்கின்றன; அதைப்போலவே கட்டுமானப் பணிகளைத் தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் எடுத்துக்கொண்டிருக்கிறது; கட்டுமானக் கழகம் அந்தப் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறது; சிப்காட் அதற்குரிய மற்ற வேலைகளைப் பார்க்கிறது; ஆனால் யார் யாருக்கு உரிமை தரலாம்; யார் யாருக்கு உரிமம் வழங்கலாம் என்று முடிவெடுக்கின்ற உரிமை மைய அரசுக்கு உரிமம் வழங்குகின்ற அதிகாரத்தை மாநில அரசுக்குத்

தந்தாக வேண்டும். அவர்கள் என்ன காரணத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கின்றபொழுது, அது பண ஆதிக்கம் அதிகம் படைத்த பம்பாய் போன்ற இடங்களில் வாழ் பவர்களுக்குப் பயன்படும் விதத்தில் மத்திய அரசின் தொழிற் கொள்கை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட ஆசைப் படுகிறேன்.

இன்றைக்கு டிட்கோ மூலமாகவும், எல்காட் மூலமாகவும், இன்னும் இதுபோன்ற நிறுவனங்கள் மூலமாகவும் செய்யப்படு கின்றபொழுது என்ன செய்கிறார்கள் என்றால், ஜாயின்ட் செக் டாரிலே மைய அரசின் உதவி பெற்றுத் தொழில் தொடங்கும் பொழுது ஃபைனான்ஷியல் சவுண்ட்னெஸ் என்பதை வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டிலே உள்ளவர்களுக்கு மட்டும் ஜாயின்ட் செக்டாரிலே இடம் தர வேண்டுமென்ற ஆதாரபூர்வமான விதியின் படி என்ன செய்கிறார்கள் என்றால், தமிழ் நாட்டிலே உள்ளவர் கள் அந்த அளவிற்கு ஃபைனான்ஷியல் சவுண்ட்னெஸ் உள்ளவர் களாக இல்லை என்று காரணம் காட்டி, வடபுலத்திலே இருக் கின்ற, அதிலும் பெரும்பாலும் பம்பாயைச் சேர்ந்தவர்கள் ஃபைனான்ஷியல் சவுண்ட்னெஸ் உள்ளவர்கள் என்று சொல்லி கூட்டுமுறையில் தொழில் தொடங்க வசதி செய்கிறார்கள். எனவே அதுபோன்ற விதிமுறைகளை மாற்றித்தர வேண்டு மென்று மைய அரசை நமது அரசு வலியுறுத்த வேண்டும்; அப்படி விதிமுறைகளைத் தளர்த்தி தமிழ்நாட்டிலே வாழ் பவர்கள், நடுத்தரத் தொழிற்சாலைகளை வைத்திருக்கின்ற தொழிற்சாலை அதிபர்கள் ஆகியவர்களுக்கு அதுபோன்ற வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது) நான் ஒன்பது நிமிஷம்தான் பேசியிருக் கிறேன், இராமநாதன் அவர்கள் 11-10 க்கு ஆரம்பித்தார், 11-50க்கு முடித்தார். நான் எழுதி வைத்திருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் விரைவில் தமது பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.





**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** அதைப் போலவேதான் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே தொழில் தொடங்கும்போது கிராமப்புற மக்கள் பயன்பெறும் அளவிலே நாம் தொழில்களைத் தொடங்க வேண்டும். எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் கிராமத்திலே வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, பயன் அளிக்கும் வகையில் தொழில்களைத் தொடங்கினால்தான் கிராமப்புற பொருளாதாரம் வளரும். இன்றைக்குச் சர்க்கரை ஆலைகளால் எப்படி வேளாண் சார்பு தொழில்கள் வளர் கின்றனவோ, அதைப் போல், வேறு பல தொழில்களை உருவாக்கினால் இலட்சக்கணக்கான விவசாயிகள், பயன் பெற முடியும். வேறு பல தொழில்களைத் தொடங்குவதால் கிராமப் புறத்திலே வளர்ச்சி உருவாக்கிவிட முடியும் என்று நான் நம்பவில்லை. வேளாண் சார்புத் தொழிலாக இன்றைக்குக் குச்சிக் கிழங்கிலிருந்து, மரவள்ளிக் கிழங்கிலிருந்து, சாகோ பவுடர் தயாரிக்கிற தொழிற்சாலை மட்டும் சிறிய அளவிலே நடைபெறுகிறது. சாகோ பவுடரிலிருந்து குளுக்கோஸ் தயாரிக்கலாம். குளுக்கோசிலிருந்து டெக்ஸ்ட்ரோஸ் தயாரிக்கலாம். சாகோ பவுடரிலிருந்து ஹைப்ரிட் சிரப் தயாரிக்கலாம். அது குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து தருவதற்கும் குழந்தைகளுக்கு உணவு தருவதற்கும் பயன்பெறும். மிகப் பெரிய அளவிலே இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையிலே சாதாரண குச்சிக் கிழங்கிலிருந்து அந்த ஹைப்ரிட் சிரப்பை தயாரித்தால் நாட்டிலே மிகப் பெரிய ஒரு எழுச்சி ஏற்படும்.

(நண்பகல் 12-00)

அது மட்டுமல்லாமல், பையோ டெக்னிக்கல் மெத்தடிலே, புதிய டெக்னாலஜி மூலமாக, சார்பிட்டால், மார்பிட்டால் என்ற இரண்டு சிந்தெடிக் பொருள்களை சாகோவிலிருந்து கொண்டுவர முடியும். என்சைம் டெக்னாலஜி மூலமாக, சாகோ பவுடரி லிருந்து சார்பிட்டால், மார்பிட்டால் தயாரிக்கலாம். சார்பிட்டாலும் மார்பிட்டாலும் வைட்டமின்கள். அந்த வைட்டமின்கள், மருத்துவத் துறையிலே இருக்கிற ஸ்கார் சிட்டியைக் குறைப்பதற்குப் பயன்படும். மருத்துவத் துறையிலே ஒரு மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தும். இந்தியத் துணைக்

கண்டம் மட்டும் இந்த வியாபாரத்தாலே பயன்பெறாது. உலக அரங்கம் அத்தனையிலிருந்தும் இதற்கு கிராக்கி வரும், அந்நியச் செலாவணித் தமிழ் நாட்டுக்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். நல்ல இடத்திலே தண்ணீர் உள்ள விவசாயிகள் கரும்பு பயிரிட்டு, அதைக் கொண்டு சர்க்கரை ஆலைகள் மூலமாகப் பயன் பெறுகிறார்கள். சற்றுத் தண்ணீர் குறைவாக இருக்கிற பகுதிகளில் எல்லாம், மேட்டுப் பாங்கான பகுதிகளில் எல்லாம், குச்சி வள்ளிக் கிழங்கு பயிரிட்டு, பெரிய அளவில் சார்பிட்டால், மார்பிட்டால் தொழிற்சாலைகள் இருக்குமானால், அதனால் குச்சி வள்ளிக் கிழங்கு நல்ல விலை விற்று, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

இங்கே இந்த மாமன்றத்திலே இருக்கின்ற பல உறுப்பினர்கள், பெரும்பாலான உறுப்பினர்கள், சென்ட் போடுகிற வழக்கம் வைத்திருக்கிறோம். சென்ட் போடுகிற வழக்கம் வைத்திருக்கிற நாமெல்லாம் அந்த சென்ட் எங்கேயிருந்து வாங்கப்படுகிறது, அந்த சென்ட் எங்கேயிருந்து உருவாக்கப்படுகிறது, அந்த சென்ட் எங்கேயிருந்து தயாரிக்கப்படுகிறது என்று பார்த்தால் அத்தனையும் பாரிஸ் மாநகரிலிருந்து, பிரெஞ்சு நாட்டிலிருந்து, தயாரிக்கப்பட்டு நமக்கு வருகிறது. ஆனால் பிரெஞ்சு நாட்டிலே அரோமாட்டிக் பிளான்ட்ஸ் இருக்கிறதா என்றால், அந்த கிளைமேட்டிலே, அந்தத் தட்பவெப்ப நிலையிலே, அரோமாட்டிக் வருவது கிடையாது. ஆனால், இந்தியாவிலே தயாரிக்கப்படுகிற அரோமாட்டிக் பிளான்டிலே எடுக்கப்படுகிற குரூட் எக்ஸ்டிராக்ட்டை வாங்கி, அதை ப்யூரிபை செய்து, மிகப்பெரிய அளவிலே ஒரு பாட்டில் ரூ. 200, ரூ. 500, ரூ. 1,000 என்ற அளவுக்கு விற்கக்கூடிய அளவிலே, சென்ட் இன்டஸ்ட்ரியிலே, பெர்ப்யூம் இன்டஸ்ட்ரியிலே, அவர்கள் உலகமெங்கும் புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலே மூலப்பொருள் எங்கேயிருந்து உருவாக்கப்படுகிறது என்றால், தமிழ்நாட்டிலேயிருந்து உருவாக்கப்படுகிறது. அதை அறிந்த அரியானா மக்களும், பஞ்சாப் மக்களும் சிலபேர் அங்கேயெல்லாம் இந்த ஆயில் எக்ஸ்டிராக்ஷன் பிளான்ட் வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே சில பேர் வைத்திருந்தாலுங்கூட, அவர்களுடைய பிடி எல்லாம் பம்பாயிலே இருக்கிற சில சேட்கள் கையிலே தான் இருக்கின்றது. அவர்கள்தான் வியாபார நோக்கோடு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து கொண்டு,





இடையிலே எவ்வளவு பணம் பெறலாம், யார் யாருடைய முகவரியை வைத்துக் கொண்டு, எப்படி இலாபம் சம்பாதிக்கலாம் என்று பார்க்கிறார்கள். அந்த முறையினை மாற்றுகின்ற முறையிலே அரோமாட்டிக் பிளான்டுக்கு நல்ல ஊக்கம் தருகின்ற வகையிலே, தமிழ்நாட்டிலே மாவட்டத்திற்கு ஒரு அரோமாட்டிக் பிளான்ட், ஆயில் எக்ஸ்டிராக்ஷன் யூனிட் உருவாக்க வேண்டும். அப்படி அரோமாட்டிக் பிளான்ட் உருவாக்கும்போதுதான், தமிழ் நாட்டிலே வியாபார நோக்கோடு வாணிப நோக்கோடு விவசாயிகள் தங்களுடைய விளைபொருளை உருவாக்க முடியும். அப்பொழுதுதான் விவசாயப் பொருளாதாரம் வளர்ச்சி பெற முடியும். ஆனால் நாம் என்ன சொல்கிறோம்? அப்போதிருந்து இப்போதுவரை கவிஞர்கள் எல்லாம் என்ன எழுதுகிறார்கள்? மானே, மரிக்கொழுந்தே என்று பாட்டு எழுதுகிறார்களே, அந்த மரிக்கொழுந்திலிருந்து எக்ஸ்டிராக்ஷன் எடுத்து, அதை ப்யூரிபை பண்ணி, அதை ஒரு பெர்ப்யூம் ஆக்க முடியும் என்று இந்த நாட்டுக்கு யாரும் சொல்லித் தரவும் இல்லை, தெரிந்தவர்கள் மற்றவர்களுக்குச் சொல்வதும் கிடையாது. அதனால் விவசாயிகள் பயன்பெறமுடியும் என்று யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆனால், இன்பமாக அந்தப் பாட்டைக் கேட்கும்போது ரசிக்கிறோம். மானே, மரிக்கொழுந்தே என்றால் ஆகா, ரம்மியமாக இருக்கிறது என்று எல்லோரும் அந்த ஆனந்தத்திலே இருக்கிறோமே தவிர, அந்த மரிக்கொழுந்தை வைத்து தொழிற்சாலை துவங்கலாம் என்று எண்ணுவது கிடையாது.

நேஷனல் அளவிலே ஒரு மாபெரும் நிறுவனத்தை தமிழ் நாட்டில் நிறுவலாம் என்பதை யாரும் எண்ணுவது கிடையாது. ஜாஸ்மின் போன்ற பிளான்ட்களிலிருந்து வாசனைப் பொருள்கள் தயாரிக்கின்ற ஒரு நல்லவாய்ப்பு தமிழ்நாட்டில் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி ஒரு 'பெர்ஃப்யூம்' தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முழுமையாக ஒரு ஏரோமேட்டிக் பிளான்டை உருவாக்கி, வாசனைப் பொருள்களை தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை இருக்கிறது. அதைச் சொன்னால் கோபம் வரும். இந்த மன்றத்திலே எத்தனையோ தடவை பேசியாகிவிட்டது. 1983 ஆம் ஆண்டிலிருந்தே இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 ஜூன் 14

எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களும் பேசுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களும் சொன்னார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்களும் சொன்னார்கள். இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் 'கலர் பிலிம்' பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளை வைத்து, கடந்த மூன்று ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு நேரடியாகக் கடிதம் எழுதினார்கள். ஆனால் இன்னும் அதுபற்றி முடிவு செய்யப்படவில்லை. உத்தரப்பிரதேசத்திற்கு அதைக் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். யு.பி.-க்குக் கொடுப்பதா இவர்களுக்குக் கொடுப்பதா என்று யோசித்துக்கொண்டிருப்பதாகத் தகவல்கள் சொல்லப்படுகின்றன. உண்மையிலேயே இது நியாயமற்றச் செயலாகும். அந்தத் தொழிலை ஆரம்பித்தார்களா இல்லையா என்று தெரியவில்லை. ஒருவேளை உத்தரப் பிரதேசத்திற்குக் கொடுத்து, அவர்கள் அங்கே ஆரம்பித்தார்களோ என்னவோ தெரியவில்லை. (குறுக்கீடு) ஆரம்பித்தார்கள் என்று சொல்லவில்லை. ஆரம்பித்திருக்கலாம் என்ற சந்தேகத்தைத்தான் தெரிவிக்கிறேன். மூன்று ஆண்டுகள் ஆகின்றன. 1982-ல் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியும் இன்னும் அந்த 'கலர் பிலிம்' தயாரிக்கும் பிரிவு நமக்கு கிடைக்கவில்லை. இந்தத் தடை போட காரணம் என்ன? தமிழ்நாட்டில் அது வரக்கூடாதா? தமிழ்நாட்டிற்கு அனுமதி தரக்கூடாதா? பிலிம் தொழிற்சாலையே இல்லாத இடத்திற்கு, புதிதாக உருவாக்கக் கூடிய இடத்திற்கு கொடுப்பதுபற்றி யோசிக்கிறோம் என்று சொல்கிற மத்திய அரசு ஏற்கெனவே பிலிம் தொழிற்சாலை இருக்கிற தமிழ்நாட்டிற்கு ஏன் கலர் பிலிம் தொழிற் பிரிவைத் தரக்கூடாது என்று கேட்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற தொழில் கொள்கை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்திலுள்ள பல்வேறு பிரச்சனைகள் பற்றி பல்வேறு கருத்துக்களைக் கூறினாலும் அவற்றிலே ஒன்றை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டு தமிழக



1985 ஜூன் 14] [டாக்டர் தே. குமாரதாஸ்]

முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டம் ஒன்றைக் கூறினார்கள். அதன் அடிப்படையில் பம்பாயில் இருந்து நிபுணர்கள் இங்கே வந்து பரிசோதனை நடத்தி, அது சாத்தியம்தான் என்று கூறிச் சென்றார்கள். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நீங்கள் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடல் நீரை குடிநீராக மாற்றுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், அந்த நீரை அங்கே 'டேம்' களில் தேக்கிவைத்து அதே தண்ணீரை குடிநீருக்குப் பயன்படுத்துவதோடு, மின்சாரம் உற்பத்தி செய்யவும், விவசாயத்திற்கும் பயன்படுத்தலாம். அத்தகைய ஒரு வாய்ப்பு வசதியைப் பெறக்கூடிய மாவட்டமாக கன்னியாகுமரி மாவட்டம் இருந்துகொண்டிருக்கிறது.

1984-85 ஆம் ஆண்டிற்குள் 20,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதாகக் கூறினார்கள். அதேநேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அதிலே ஒதுக்கப்பட்டது வெறும் 27 மின் இணைப்புகள்தான். கேட்டால் போதிய அளவுக்கு உபகரணங்கள் இல்லை என்றும், மின்சார உற்பத்தி இல்லை என்றும் அதிகாரிகள் குறைபட்டுக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டம் வந்தால் மின்சார உற்பத்தி பெருகுவதோடு புதிய தொழில்கள் வளரவும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்த அரசைப் பொறுத்தவரையில் நான் ஒரு குற்றச்சாட்டாகக் கூற விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் என்று வருகிறபோது இதுவரை—காங்கிரஸ் ஆட்சிக் காலத்திற்குப் பின்னால்—அங்கே குறிப்பிடக் கூடிய அளவுக்கு ஒரு தொழில் கூட உருவாகவில்லை. 100 நபர்கள் சேர்ந்து பணியாற்றக்கூடிய அளவுக்கு ஒரு தொழிற்சாலை கூட அங்கே அமைக்கப்படவில்லை என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

(பிற்பகல் 12-10)

அதுமட்டுமல்லாமல் குமரி மாவட்டத்தில் விளைகின்ற ரப்பர் உலகத்திலே விளைகின்ற ரப்பரில் இரண்டாவது ரப்பர் என்றும், சிறந்த ரப்பர் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். எனவே கன்னியாகுமரி மாவட்டத்திலே உற்பத்தியாகின்ற ரப்பரைக் கொண்டு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1985 ஜூன் 14

நேற்றையதினம் இங்கே வனத்துறையின் மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்ட அந்தத் திட்டத்தில் 18 கோடி ரூபாய் ஒரு ஆண்டில் வருமானம் அதாவது இலாபமாகக் கிடைத்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பணத்தை முதலீடு செய்து அங்கே ஒரு பெரிய தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மரவள்ளிக்கிழங்கு அதிகமாக உற்பத்தியாகின்றது. அதைப் பயன்படுத்தி அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலை அமைத்துத்தந்தால் அந்தப் பகுதி மக்களின் வாழ்வில் வளம் சேர்க்கக்கூடிய நிலைமை ஏற்படும். எனவே அந்தத் தொழிற் சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கே கிட்டத்தட்ட, 200-க்கு அதிகமான முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவையெல்லாம் சிறுசிறு தொழிற்சாலைகளாக குறிப்பிட்ட காலங்களில் மட்டும் தொழிலாக நடந்து வருகின்றன. ஒரு வருடத்தில் மூன்று மாதம் அல்லது நான்கு மாதம் தான் அந்தத் தொழில் நடக்கின்றது. எனவே அங்கே பெரிய தொழிற்சாலையாக ஒன்றை அமைத்துத் தந்தால் ஏழை விவசாயிகளுக்கு நிரந்தரமான தொழில் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே அதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழிப் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று இருக்கிறது. அதன் பிரிவு ஒன்றை நாகர்கோவிலுக்குப் பக்கத்திலே அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாண்டிவிளை என்ற பகுதியில் ஒரு காயர் தொழிற்சாலை மூடப்பட்டு மூன்று நான்கு ஆண்டுகள் ஆகின்றன. அதன் காரணத்தால் கிட்டத்தட்ட இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை அரசு கவனத்தில் கொண்டு அம்மாண்டிவிளையில் இருக்கின்ற அந்தத் தொழிற்சாலையை வெகு விரைவில் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 14] [டாக்டர் தே. குமாரதாஸ்]

கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக அளவில் மீன் கிடைக்கிறது. அவற்றை கேரள மாநிலத்திற்கு எடுத்துச் சென்று பதப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பி அன்னியச் செலாவணியை ஈட்டுகிறார்கள். எனவே கன்னியாகுமரி மாவட்டத்திலே கிடைக்கின்ற மீன்களை நாமே பதப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்புகின்ற வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கற்றாழையிலிருந்தும் வாழையிலிருந்தும் நார்களை ஏழை மக்கள் உற்பத்தி செய்கிறார்கள். அவற்றைக் குறைந்த விலைக்கு வெளியே இருந்து வந்து வாங்கிக்கொண்டு சென்று விடுகிறார்கள். அதன் காரணத்தால் அந்த மக்களுக்கு பாடுபட்ட பலன் கிடைக்காமல் போய்விடுகின்றது. எனவே அங்கே கூட்டுறவு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அந்தத் தொழில் சிறக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடன்களை வழங்குகின்றபோது அதிலே மானியத் தொகையாக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கிறார்கள். பெரிய பண முதலைகள் எல்லாம் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் பத்துபேர் சேர்ந்துகொண்டு அந்த வகையிலே ஒரே நபர் பத்துபேர்களின் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஒரு திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அதில் சப்சிடியாக 30 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகின்றது என்று சொன்னால் 70 ஆயிரம் ரூபாயை அவர்கள் அரசாங்கத்திற்குக் கட்டி விடுகிறார்கள். இதன் காரணத்தால் ஒரு தனிப்பட்ட நபர் 30 ஆயிரம் ரூபாயை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. இதன் காரணத்தால் எந்த ஏழை எளிய மக்களுக்கு அந்தப் பணம் சென்று அடையவேண்டும் என்று நாம் கருதுகிறோமோ அது அடைய வழியில்லை. இப்படி 30 ஆயிரம் ரூபாயை ஒரேயடியாகச் சம்பாதிப்பவர்களை அடையாளம் கண்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பணம் இருப்பவர்கள் தொழில் தொடங்கலாம் என்று நினைத்து வருகின்றபோது அவர்களுக்கு வேண்டிய இடவசதி குறைவாக இருக்கின்றது. அவர்களிடத்திலே இருக்கின்ற பணத்தை இடத்தை வாங்கிக்கொள்வதற்காகச் செலவழித்து

விட்டால் பிறகு தொழிலைத் தொடங்க முடியாது. இப்படிப்பட்ட தர்மசங்கடமான நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். எனவே அரசு புதிதாகத் தொழில் மையங்களை ஏற்படுத்தி தொழில் தொடங்க முன்வருகின்றவர்களுக்கு உதவ வேண்டும்.

மேலும் மின்சாரப் பற்றாக்குறை பெரும் குறையாக இருந்து கொண்டிருக்கின்றது. அதையும் கருத்தில் கொண்டு அவர்களுக்குத் தேவையான மின்சாரம் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தொழில் துறை மானியத்தில் கலந்துக் கொண்டு, ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிக் கூறிக் கொள்கிறேன்.

மகாகவி பாரதியார் அவர்கள்—

"ஆலை அமைப்போம், நல்ல சாலை அமைப்போம்
ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்"

என்று அன்று கனவு கண்டார்கள். அன்று அவர் கண்ட அந்தக் கனவு இன்று நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நல்லாட்சி புரிகின்ற தமிழகத்தில் நனவாகி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

'தொழில் கொள்கையும் திட்டங்களும்' என்ற தலைப்பில் 'வேலை வாய்ப்பைப் பெருக்குவதன் மூலம் வறுமையைப் போக்குவதே தமிழ்நாடு அரசின் கொள்கையாகும்' என்றும், குறிப்பாக மிகவும் பின்தங்கிய கிராமப்பகுதிகளில் சிறு தொழில்கள் வளர்ப்பதன் மூலமும், அதே சமயத்தில் அரசின் நிதி வாயில்களையும், வருமானத்தையும் பெருக்க பெரும் தொழில் களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் இந்நோக்கம் எய்தப் படுகிறது என்றும் 'நடுத்தரப் பெருந்தொழில்களின் வளர்ச்சி யுடன், சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் வளர்ப்பதே இம்மாநில அரசின் கொள்கையாகும்' என்றும் திட்பமாகவும், தெளிவாகவும், புரட்சித் தலைவர் அரசின் தொழில் கொள்கை தெளிவாக எடுத்துச் சொல்லப்பட் டிருப்பதைக் கண்டு தமிழகத்து மக்கள், ஏன், இந்திய மக்கள் அனைவருமே வியப்படைந்து போற்றிப் புகழ்வார்கள் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை.





மேலும் 'தொழில் வளர்ச்சி' என்ற தலைப்பில் "தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டம் இல்லை. அதனால் சிலவகையான உரிமங்கள் 'தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டங்களுக்கு மட்டும்' என்று ஒதுக்கப்படுவதால், நம் மாநிலம் இக்கட்டான நிலைமையில் உள்ளது" என்றும்; இக்கருத்தை மாற்றி 'தொழிற்சாலைகளே இல்லாத வட்டம்' அல்லது 'தொழிற்சாலைகளே இல்லாத வட்டாரம்' என்ற கொள்கையை பின்பற்றுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வந்துள்ளது" என்றும், இது குறித்து மத்திய அரசின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ள கருத்தை ஊன்றிப் பார்க்கும்போது, தமிழகத்தை தாலுக்கா வாரியாகக் கூட தொழில் வளம் மிக்க நாடாக மாற்ற வேண்டும் என்ற முனைப்பில் நமது புரட்சித் தலைவரின் அரசு செயல்பட்டு வருகிறது என்பது மிகத் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

மேற்கூறிய இடையூறு இருந்துவந்தபோதிலும், மத்திய அரசிடமிருந்து ஈடு செய் தொகை பெறுவதைப் பொறுத்த மட்டில் இந்திய நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களையும் விட தமிழ்நாடே தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது என்பதை உணரும்போது தமிழக அரசின் சாதனை நாட்டு மக்களுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்பதை அறிந்து நல்லோர்கள் பாராட்டி மிகைப்படுத்தி பேசவும் செய்வார்கள் என்பதை கூறிக் கொள்கிறேன். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலமும் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் மூலமும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலமும் தமிழ்நாட்டில் தொழில்களை எப்படி எல்லாம் வளப் படுத்தப்போகிறோம் என்று இந்த அரசு சொல்லியிருப்பதை கூர்ந்து நோக்கினால், தமிழ்நாடு தொழில்மயமாகப் போகிறது என்பதில் சிறிதளவேனும் சந்தேகமில்லை.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், செய்தித் தாள், அச்சுத் தாள், எழுதும் தாள் ஆகியவற்றை தயாரிக்கப் போகிறதென்றும், அதனால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் செய்தித்தாள் காகிதத்திற்கு கொடுக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையில் ஆண்டுதோறும் ரூ. 40 கோடி அளவில் இந்நிறுவனத்தில் செய்தித்தாள் காகிதம் தயாரிக்கப் படுவதால் -- மிச்சம் ஏற்படும் என்பதை அறியும்போது புரட்சித் தலைவரின் அரசு எந்த அளவுக்கு தமிழகத்தை தொழில் வளம்

கொண்ட நாடாக மாற்றி அமைக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டி வருகிறது என்பதை அறிந்து நல்ல உள்ளங்கள் வாழ்த்தும் என்பதில் யாருக்கும் எந்தவித ஐயமும் இருப்பதற்கு நியாயம் இல்லை.

புரட்சித் தலைவரின் அரசு மின் அணுவியல் தொழிலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கருதியுள்ளதை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். மின் அணுவியல் தொழிலுக்கு பொருத்தமான தட்பவெப்ப நிலைகளைக் கொண்ட உதக மண்டலம், ஏற்காடு, கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களை இம்மாநிலம் தன்னகத்தே கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் மின் அணுவியல் தொழிலை விரைந்து வளர்ச்சி யடையச் செய்வது தொடர்பாக 23—3—1985 அன்று சென்னைக்கு வருகை தந்த மத்திய அரசு மின் அணுவியல் குழுத் தலைவர், டாக்டர் சஞ்சீவி ராவ் அவர்களோடு நமது மாண்புமிகு தொழில் அமைச்சர் ஏற்கெனவே விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளார்கள். அந்தப் பேச்சுவார்த்தையின் பயனாக தமிழகத்தில் மின் அணு தொழிலிலும் வளர்ச்சி அடையும் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

மின் அணுவியல் தொழில் வெளிநாடுகளில், அதுவும் குறிப்பாக ஜப்பான் போன்ற நாடுகளில் எந்த அளவுக்கு சிறப்பாக வளர்ந்துள்ளது என்பதை நமது மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் நன்கு புரிந்துள்ளதால்தான், நம் தமிழகத்திலும் மின் அணுவியல் தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டும் என்று முனைப்போடு அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். இதை உணர்ந்து தமிழகத்திலுள்ள படித்த இளைஞர்களும், தொழிலார்வம் கொண்ட பெருமக்களும் மின் அணுவியல் தொழிலில் ஈடுபட்டு நம் தமிழ்நாட்டை தொழில் வளம் மிக்க நாடாக மாற்றிக் காட்டிட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

பாரதியார் கண்ட கனவைப் போல சீவக சிந்தாமணி ஆசிரியர், மயன் என்ற தெய்வ தச்சர் மயிலாசனம் என்னும் பொறியை எப்படிச் செய்தார் என்று சொல்லியிருக்கிறார்கள்.



அதிலே, 'பல்கிழியும் பயிலும், துகில் நூலொடு, நல்லரக்கும் நல் மெழுகும், நலம் சான்றன யாவும் அமைந்து ஆங்கு ஏழு நாளிடை செய்தனன் அன்றே' என்று அழகாக சித்தரித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே பல கிழிந்த துணிகளையும், பட்டு நூலையும், அரக்கு போன்றவைகளையும் சேர்த்து நல்லதொரு மயில் பொறி அமைத்தான் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கண்ட கனவை நனவாக்குகிற வகையில் நாமெல்லாம், படித்த இளைஞர்கள் முன்வந்து, தொழில் ஆர்வம் கொண்டு, தமிழ்நாட்டை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

கற்றறிந்த நண்பர்கள் மின் அணுவியல் தொழில் தமிழ் நாட்டில் வளர, மின் அணுவியல், அறிவியல், தொழில் நுட்பவியல் என்று புதியதாக தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள துறையில் கவனம் செலுத்தி தொழிலை வளப்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் தொழில் துவங்க வேண்டுமென்றால் பல விதிமுறைகள் தடங்கல் செய்து கொண்டிருக்கின்றன. அந்த விதிமுறைகளைத் தளர்த்தி ஆவன செய்யவேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். ஊதியானா போன்ற இடங்களில் நல்ல தொழிலை ஆரம்பிக்க வேண்டுமானால் அவர்கள் சுலபமாக ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் தமிழகத்தில் தொழிலைத் தொடங்க வேண்டுமென்றால் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தச் சிக்கல்களைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய கலசபாக்கம் தொகுதி மக்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உழன்று அல்லல்பட்டு வருகிறார்கள் என்பதை எடுத்துக் கூறாமல் இருக்க முடிய வில்லை. கலசபாக்கத்தில் செய்யாறு ஓடுகிறது. அதன் கரையில் பல ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளன. தமிழ் நாட்டில் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் பத்து புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படும்போது, ஆய்வுசெய்து கலசபாக்கம் அருகில் ஓடும் செய்யாற்றின் கரையில் ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துத் தந்து அந்த ஏழை விவசாயிகளுக்கு உதவிட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கரும்புச் சக்கை மூலமாக காகிதம் செய்யப்படும் ஆலை ஒன்றையும் அங்கே நிறுவி உதவிட வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. மா. கதிர்வேலு :** தலைவர் அவர்களே, தொழில் துறை சம்பந்தமான விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் பெருந் தலைவர் காமராஜர் இருந்த காலம் பொற்காலம் என்று சொல்லப் பட்டு, அன்றையதினம் தொழில் அமைச்சராக இருந்த வெங்கட்ராமன் அவர்கள் தினம் ஒரு தொழிற்சாலை என்று தொடங்க வேண்டுமென்ற காலக்கட்டத்திலே இருந்து, தமிழகம் முழுவதிலும் சமஅளவில் தொழிற்சாலைகள், பெரிய தொழிற் சாலைகள், சிறிய தொழிற்சாலைகள் என்று தொடங்க வழி செய்து, தமிழகத்தை தொழிற்துறையில் 3-வது இடத்தில் வைத்திருந்தார்கள் என்பதை நாம் யாரும் மறக்க மாட்டோம். இன்றையதினம் தொழில் அமைச்சர் அவர்கள் பொறுப்பினை ஏற்று தமிழகத்தை அந்த நிலைக்கு எடுத்து வருகிற முகமாகத் தான் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்து, எங்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினர்களும், அதே போல நாடாளுமன்றத்தில் உள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர் களும், நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மூப்பனார் அவர்களும் சந்தித்து, பல திட்டங்களை எடுத்துக்காட்டி தமிழகத்திற்கு அதிகப்படியான நிதி கொடுக்கவேண்டுமென்று கேட்டபோது பாரதப் பிரதமர் அவர்கள் மனமுவந்து, எப்படி முதலமைச்சர் அவர்கள் நோயுற்றபோது மறைந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தாயன்போடு ஓடோடி வந்து காப்பாற்றினார்களோ, அந்த எண்ணத்தோடு தமிழகம் புறக்கணிக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிற அளவில் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு தமிழகத்தின் மேம்பாட்டிற்கு அளித்து வழிகாட்டியிருக்கிறார்கள் என்தை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் தமிழகத்தைப் புறக்கணிக் கிறது என்று சொன்னார்கள். நான் மெத்த பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் காலத்தை பார்க்கிறபோது நான் மிகவும் வருத்தப்படுகிறேன். உங்கள் காலத்தில்,நான் தமிழகம் தொழிற்துறையில் 13-வது இடத்திற்கு பின்னோக்கித்





தள்ளப்பட்டதென்பதை இந்த நாடும், நாட்டு மக்களும் அறிவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், தமிழகம் மின்வெட்டினால் பாதிக்கப்பட்டிருக் கிறது என்று சொன்னால், உங்கள் காலத்திலேதான் மின்சாரத் திற்கு திட்டமென்பது எதுவும் இல்லையென்ற சூழ்நிலை இருந்தது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய தோழமை கட்சி நண்பர் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். பிலிம் தொழிற்சாலை இடைக்கவில்லை என்று சொன்னார்கள். இன்னொன்றையும் சொன்னார்கள். பல தொழிற்சாலைகள் புறக்கணிக்கப்பட்டதாக சொன்னார்கள். நான் மெத்தப் பணிவன்போடு அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இந்திய நாட்டுக்கு ஒருங்கிணைந்த திட்டங்களை யிடுவதுதான் பாரதத்தினுடைய தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்களுடைய பொறுப்பு. அந்த வகையில் தமிழகத்திற்கு உரிய திட்டங்களை நாம் வகுத்தால், உண்மையிலே தோழமை எண்ணத்தோடு பெறவேண்டியதைப் பெறுவதிலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல. அதற்கு நிச்சயமாக உறுதுணையாக இருப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவைகளைப் பெற்றுத்தருவதிலே நாங்கள் உதவி செய்வோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். பிலிம் தொழிற் சாலை மட்டுமல்ல காந்த நாடா தயாரிப்புத் தொழிற்சாலைகள் பெறவும், நவீன மேல் பூச்சு கருவிகள் தயாரிக்கும் நிறுவனமும் பாரத கனரக மின் நிறுவனம் போன்ற தொழிற்சாலைகளைப் பற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அவைகளை விரைவிலே பெறுவதற்கு மத்திய அரசிலே இருக்கிற தொழில் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. உங்களோடு ஒத்துழைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்படிப் பட்ட நேரத்தில், தொழில்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் சம்பந்தப்பட்ட உறுப்பினர் அவர்கள் பேசினார்கள், இதைப் பார்க்கும்போது, ஏதோ வருகின்றவைகள்கூட வராமல் போய் விடுமோ என்ற அச்ச உணர்வு எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மா. கதிர்வேலு] [1985 ஜூன் 14

அதோடு மட்டுமல்ல, இந்தத் தொழில் துறை விவாதத்தில் பங்கு கொள்கிறபோது, இங்கே தொழில் அபிவிருத்திக்குண்டான ஊக்குவிப்புகள் இல்லை என்பதுதான் என்னுடைய எண்ணம். அந்த வகையில் பார்க்கிறபோது, பிற மாநிலங்களைப் பார்க்கின்றபோது, குஜராத்திலேயும், மகாராஷ்டிரத்திலேயும், தொழிற்சாலைகளுக்கு பல சலுகைகளை அளித்திருக்கிறார்கள். அங்கே சேல்ஸ் டாக்ஸ் என்பது கச்சாப் பொருள்களுக்கு இல்லை. நம்முடைய மாநில அரசு இதைப்போல ஊக்குவிப்புகளைக் கொடுத்தால்தானே தமிழகத்தைத் தேடி பல நாட்டவர்களும், அண்டை மாநிலத்திலே உள்ளவர்களும் வந்து இங்கே தொழில்களை ஆரம்பிப்பார்கள். எனவே அப்படிப்பட்டவர்கள் வரவேண்டும் என்று சொன்னால், தொழில் உற்பத்தியாளர்களுக்கு, தொழில் உரிமையாளர்களுக்கு நாம் ஊக்குவிப்புகளைக் கொடுத்தால்தான் நம்முடைய தமிழ்நாடு மீண்டும் பழைய நிலையில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்ததைப் போல ஒரு அந்தஸ்தைப் பெறும் மாநிலமாக மாறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. மத்திய சர்க்காரிலே சென்ட்ரல் எக்சைஸ் டியூட்டி என்பது 68 ஐட்டங்களுக்கு போடுகிறார்கள் அதைப் போல, தமிழகத்திலே உற்பத்தியாகின்ற பொருள்களுக்கும் சேல்ஸ் டாக்ஸ் முறையை — எப்படி மத்திய அரசால் விதிக்கப் படுகிறதோ அந்த நடைமுறையை இங்கே கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மகாராஷ்டிரத்திலேயும், குஜராத்திலேயும், அங்கே இருக்கக்கூடிய நிலைமைகள்படி, அங்கே இன்ட்ரஸ்ட் ஃப்ரீ சேல்ஸ் டாக்ஸ் லோன் என்று கொடுக்கிறார்கள், அதற்கு அங்கே உச்சவரம்பு என்பது கிடையாது. அப்படிப்பட்ட நிலை அங்கேயிருக்கும்போது, ஏன் இம்மாதிரியான நிலைமையை தமிழகத்திலே உருவாக்கக் கூடாது என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன். தொழில் உற்பத்திக்கான ஊக்குவிப்புகளை ஏன் கொடுக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்த வகையில் பார்க்கிறபோது, கச்சாப் பொருள்களுக்கு வரி விதிக்கிறீர்கள் என்று சொன்னால், இங்கே உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கின்ற ஒரு சூழ்நிலையை யாவது தமிழ்நாடு அரசு உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 14] [திரு. மா. கதிர்வேலு]

அதோடு மட்டுமல்லாமல், இன்றைய உலகம் எலக்ட்ரானிக்ஸ் உலகமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் இந்த எலக்ட்ரானிக்ஸ் பொருள்களுக்கு வரி விலக்குகள் அளித்து இருக்கிறது. அன்றாடம் சாதாரண மக்கள் பயன்படுத்தும் எலக்ட்ரானிக் பொருட்களை எல்லாம் ஆடம்பரப் பொருட்களாக அரசு கருதுகிறது. இன்றைக்கு, இவை அத்தியாவசியமான பொருட்களாகவும் இருக்கின்றன. அனைத்து மக்களும், சாதாரண குடிசையில் இருக்கின்ற மக்களிலிருந்து மேம்படுத்தப்பட்ட இடத்தில் இருக்கின்ற மக்கள் வரை இத்தகைய பொருட்களை உபயோகிக்கின்ற காரணத்தால், இந்தப் பொருட்களுக்கு வரி விலக்கு அளித்து, ஊக்குவிப்புகளை அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. மாநில சர்க்காரால் நடத்தப்படுகின்ற நடுத்தர தொழில்கள் நஷ்டத்திலே செல்லுகின்றன. அப்படி நஷ்டத்தில் செல்லாமல், லாபத்திலே வருவதற்கு சர்க்கார் ஏதாவது திட்டமிட்டு இருக்கிறதா என்று பார்க்கிறபோது, இது சம்பந்தப்பட்ட எந்தக் குறிப்பும் இங்கே இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். டான்சம், டான்பி போன்ற நிறுவனங்களில் இருந்து பல பொருட்கள் தயாரிக்கப்பட்டு வெளியில் வருகின்றன. அந்தப் பொருட்கள் எல்லாம் தரமாக இருக்கின்றன. ஆனால் அந்த இலாக்காக்கள் எல்லாம் நஷ்டத்திலே நடந்து வருகின்றன என்பது என் குற்றச்சாட்டு. இப்படி இருக்கின்றபோது, நான் மேற்கோளாகச் சொல்கிறேன். டான்சியிலே உற்பத்தியாகிற பொருள் இந்தியாவிலே சிறந்த பொருள் என்று சொல்கிறார்கள். பாட்டாவிலே தயாரிக்கின்ற செருப்பின் விலை 70 ரூபாய் என்று சொன்னால், டான்சியிலே தயாரிக்கின்ற செருப்பு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அரசு நிறுவனம் தயாரிக்கின்ற பொருட்கள் கவர்ச்சிகரமான முறையில் இல்லாத காரணத்தால்தான் நமக்கு மார்க்கெட் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், அந்த இலாக்காக்களில் இருக்கின்ற அதிகாரிகள் வெறும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் நுட்பம் தெரிந்தவர்களாகவும், வர்த்தக எண்ணங்களைத்

[திரு. மா. கதிர்வேலு] [1985 ஜூன் 14

கொண்டவர்களாகவும் இருக்கக்கூடிய அதிகாரிகளை நியமித்தால் தான், நஷ்டத்திலே இயங்கக்கூடிய அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் லாபத்தில் இயங்கும், அவைகள் செழிப்பான நிலைக்கும் வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதோடு மட்டும் அல்ல, இன்றையதினம் நம் அன்றாட வாழ்க்கையில் பிளாஸ்டிக் பொருட்கள் அதிக அளவில் நடைமுறையில் இருக்கின்றன. இன்றைய உலகு பிளாஸ்டிக் யுகமாக ஆகியிருக்கிறது. இன்றையதினம் அப்படிப் பார்க்கும்போது அந்த பிளாஸ்டிக் பொருட்களுக்கு உபயோகிக்கக்கூடிய கச்சா பொருளான நாப்தா கிரிஸ்டல்ஸ் என்ற கச்சா பொருளை தமிழ் நாட்டில் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை உருவாக்க வேண்டும்.

எங்கள் பகுதியில் வறண்ட பூமியான ராணிப்பேட்டை சிப்காட் என்ற தொழிற்பேட்டையில் ஏறத்தாழ வாலாஜாவிலிருந்து பாணாவரம் வரை 7 ஆயிரம் ஏக்கர் நிலம் டிரை லேண்டாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் இந்தத் தொழிற்சாலையைத் நீங்கள் அமைத்தால் பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானத்தை நாம் பெறலாம். அந்தத் தொழிற்சாலையை அரசு அங்கே அமைப்பதற்கான ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், தொழில் உறவும், தொழிற்சாலைகளும் நல்லமுறையில் இருக்கவேண்டும் என்று சொன்னால், அங்கே தொழில் அதிபர்களாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வீட்டு வசதி, போக்குவரத்து வசதி இருந்தால் தான் அவர்கள் அங்கே இருக்க முடியும். நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட அங்கே வர்த்தகர்களையும், தொழில் சார்ந்தவர்களையும் பார்க்கும்போது, விரைவில் அதற்குண்டான சூழ்நிலையில் பஸ்கள் விடுவதற்கு நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் அங்கே வீட்டு வசதியையும், பஸ் வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார வெட்டினால் இப்போது பல தொழிற்பேட்டைகளில், பல சூழ்நிலைகளில் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட



1985 ஜூன் 14] [திரு. மா. கதிர்வேலு]

சூழ்நிலையில் இன்றையதினம் ஒரு கருத்தை அந்த துறையில் உள்ள வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். நெய்வேலியில் 78 சதவீதம் Plant load shedding — இருக்கிறது. — அதனை தமிழகத்தில் இருக்கின்ற பல நிலையங்களில் 48 சதவீதமாக இருப்பதை மாற்றி 78 சதவீதத்திற்கு எடுத்து வந்தால் இருக்கின்ற மின்சார வெட்டிலிருந்து நீக்கி நிரந்தரமான ஒரு நிலையான மின்சாரத்தை அவர்களுக்குக் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள்.

இன்னும் ஒன்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இராணிப்பேட்டை சிப்காட் தொழில் அதிபர்களைப் பார்க்கும்போது சொன்னார்கள்; வெப்பத்தைக் கொண்டும், காற்று அழுத்தத்தைக் கொண்டும் 15 மெகாவாட் மின் நிலையங்களை சிப்காட் பகுதிகளில் வர வைக்கலாம் என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இன்றையதினம் ஒரு வெங்கட்டராமனைப் போல் நாம் காண்கிறோம் அந்த அளவில் சிப்காட் தொழிற்பேட்டை இருக்கின்ற அத்தனை பகுதிகளிலும் உங்கள் காலத்தில் இப்படிப்பட்ட மின் நிலையங்களைக் கொண்டு வருவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சொல்லி எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. டி. என். முருகானந்தம்:** இந்த மாமன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நான் சார்ந்து இருக்கின்ற கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டில் தொழில் தொடங்க வேண்டும். அந்த தொழில்கள் வளம் பெற வேண்டும், அந்த வளத்தின் மூலமாக நாட்டில் இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும் என்று எல்லாம் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் கடந்த 15 ஆண்டு காலமாக இந்தத் தொழில் துறை எந்த நிலையில் முன்னேறியிருக்கிறது? அது எந்த நிலையை இன்று அடைந்து இருக்கிறது. அதனால் நாட்டு மக்கள் எந்தவித நன்மைகளை அடைந்து இருக்கிறார்கள், நம்முடைய பொருளாதார கொள்கைகள் எந்த நிலையில் உயர்ந்து இருக்கின்றன என்பதை எல்லாம் பார்க்கும்போது, வெளிநாட்டவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் பின் தங்கிய நிலையிலே இருந்து கொண்டு இருக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் மத்திய அரசை எல்லாம் குறை கூறி பேசியிருந்தார்கள். ஆனால் மெத்த பணிவன்போடு அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், காங்கிரஸ் காலத்தில் தொழில் துறையில் நாம் 3 வது இடத்தில் இருந்தோம். ஆனால் நீங்கள் ஆட்சி பொறுப்பு ஏற்றதற்கு பின்னால் 10, 11 வது இடத்திற்கு தள்ளப்பட்டுவிட்டது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிற் துறையின் மூலம் இன்று பல தொழில்கள் தொடங்கிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அந்தத் தொழில் துறைகளுக்கு எல்லாம் இங்கே வசதிகள் செய்து தரப்பட்டு இருக்கின்றதா அல்லது தொழில் செய்ய வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறதா என்பதை எல்லாம் பார்க்கும்போது அவைகள் முறையாக, சரியாகச் செய்யப்படவில்லை என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய தொழில் துறையிலே, 'ஃபாரின் எக்ஸ்போர்ட்' வெளிநாட்டுச் சந்தையிலே விற்கின்ற பொருள்களுக்கு முக்கியத்துவம் தந்து, அந்தத் தொழிற்சாலைகளை தமிழகத்திலே அதிகமாகத் துவங்க வேண்டும். அவ்வாறு துவங்குவதினால்தான், நாம் வெளிநாட்டிலே இருக்கின்ற பொருள்களை இங்கே இம்போர்ட்-ஆக வரவழைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ராணுவ தளவாடங்கள், கப்பல்கள் மற்றும் பல பொருட்கள் எல்லாம் அவசியமான பொருட்கள், வெளிநாட்டிலேயிருந்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை நம்பித்தான் நம்முடைய தொழிற்சாலைகளும் இருக்கின்றன.

ஆகவே, இங்கே இருந்து ஏற்றுமதி ஆகின்ற பொருட்களுக்கு, நம்முடைய நாடும், தமிழகமும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு பல திட்டங்களைத் தமிழகத்திலே உருவாக்கியிருந்தாலும், அவைகள் எல்லாம் நலிந்து போகின்ற ஒரு வாய்ப்பாக, சிக் யூனிட்-ஆகத் தான் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். 'டாமின்' என்ற நிறுவனத்தை தமிழக அரசானது ஏற்று, அரசாங்கத்தினுடைய நிறுவனமாக, இன்று அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் பகுதி தான் எனது சொந்த ஊர். அந்த ஊரிலே அந்தத் தொழில் எவ்வாறு தொடங்கப்பட்டது, எந்த நிலையில் இப்போது இருக்கிறது என்பதை நான் நன்றாக





அறிவேன். அந்த கருங்கற்கள் என்று சொல்லக்கூடிய கரும் பாறைகள், நாங்கள் எல்லாம் அதைப் பார்த்தாலே கெட்ட சகுனமாக நினைத்தது உண்டு. அந்தக் கரும்பாறைகள் எல்லாம் இன்றைக்கு வெளிநாட்டுச் சந்தையிலே அதிகமான அந்நியச் செலாவணியைப் பெறும் ஒரு பெரும் தொழிலாக இருந்து கொண்டிருக்கிறது.

ஆனால் அந்த 'டாமின் நிறுவனம்' அந்தத் தொழிலை எந்தகைய சூழ்நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறது? அதனுடைய வரவு-செலவுக் கணக்கு என்ன, லாபம் என்ன என்பதை எல்லாம் பார்க்கும்போது உண்மையிலேயே நான் மெத்த வருத்தப்படுகிறேன். காரணம், அதிகமான லாபம் தரக்கூடிய ஒரு தொழிலை அவர்கள் நாசப்படுத்தி விட்டார்கள் என்று குற்றம் சொல்லக்கூட தயங்கமாட்டேன். காரணம் என்னவென்றால், 25 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேலாக என்னுடைய மாவட்டத்திலே வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று 500 பேர்கள் கூட என்னுடைய மாவட்டத்திலே வேலை செய்ய முடியாத சூழ்நிலையைக் கண்டு கொண்டிருக்கிறோம். பகலா, இரவா என்று கூடப் புரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு இரவு எல்லாம் விளக்கு ஒளியினை அமைத்து அத்தொழிலை நடத்திக் கொண்டு வந்தார்கள். ஆனால் அரசாங்கம் அதை ஏற்றது. நான் வரவேற்கிறேன். அரசாங்கம் ஒரு தொழிலை ஏற்பதும், அதன் மூலம் வருகின்ற வருமானமானது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின் தங்கிய மக்களுக்கும் செல்லவேண்டும் என்பதிலே அதிக அக்கறை கொள்கின்றதன் காரணமாகவும், நான் அதை வரவேற்கிறேன்.

ஆனால் நன்றாக வளர்ந்து வருகின்ற தொழிலானது தற்போது பின்தங்கிய நிலையிலே செல்கிறது, நஷ்டம் வருகிறது என்று சொன்னால், அதை இந்த அரசாங்கமும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், அமைச்சர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள். உலகத்திலே பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து இருக்கிறவர்கள். அங்கே தொழில்கள் எவ்வாறு நடக்கின்றன என்பது அவருக்குத் தெரியும். அதை அறிந்து, ஆராய்ந்து, சிறப்பான ஒரு முடிவினை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. என். முருகானந்தம்] [1985 ஜூன் 14

உதாரணமாகச் சொல்லப் போனால், இன்று 2,000 ஏக்கருக்கு அதிகமாக உள்ள கருங்கல் பாறைகளிலே, தென்னாற்காடு மாவட்டத்திலே 150 ஏக்கரிலே தான் வேலை நடக்கிறது. 30 மலைகளுக்கு மேலாக அந்த டாமின் நிறுவனமானது செலக்ட் பண்ணி வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதிலே 15 குவாரிகளிலே தான் இன்றைக்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏன் மற்ற குவாரிகளிலே வேலை நடக்கவில்லை? என்ன காரணம்? அந்தக் காரணத்தை அமைச்சரவர்கள் இந்தச் சபையிலே தெரிவிப்பார்களா என்று கேட்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், செலக்ட் செய்து, அப்ரூவ் செய்த குவாலிட்டியானது, அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய அந்த மலைகள், கரும்பாறைகள் எல்லாம் வெளிநாட்டிலே இருக்கின்ற சந்தைக்கு எக்ஸ்போர்ட் செய்யமுடியாத, ஏற்றுக் கொள்ளக் கூடாத ஒரு நிலையிலே இருப்பதாகவும், அவைகளை ரிஜக்ட் செய்து, யார்டிலே இருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? அவ்வாறெனில், அதன் காரணமென்ன? அதன் வாரியத் தலைவர் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார் என்பதை மெத்த பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தென்னாற்காடு மாவட்டத்திற்கு அருகாமையிலே உள்ள கிருஷ்ணகிரியிலே வேறு விதமான சாம்பல் நிறப் பாறைகள் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக உள்ள சாம்பல் நிற பாறைகளில், 600 ஏக்கரில் தான் டாமின் வேலை செய்கிறார்கள். அந்தக் கரும்பாறைகள் என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லி ஆகவேண்டும் என்று விழைகிறேன். நம்முடைய டாமின் நிறுவனமானது, 840 டச் மார்க் என்று ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால் அதே நிலையிலே அதற்கு அருகாமையிலே உள்ள குவாரியிலே ஒரு தனியார் அந்தக் கற்களை 1,275 டச் மார்க்குக்கு விற்கிறார்கள்.

இந்திய ரூபாயில் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய 'டாமின்' நிறுவனத்தின் மூலம் விற்கப்பட்டது 3,360 ரூபாய்; ஆனால் அதற்குப் பக்கத்திலே ஒரு மைல் தூரத்தில் உள்ள அதே கல்லைத் தனியார் 5,100 ரூபாய்க்கு விற்கிறார்கள். இப்படி 1,740 ரூபாய் வித்தியாசத்தில் இந்தக் கற்கள் விற்கப்படுகின்றன. இது



1985 ஜூன் 14] [திரு. டி. எஸ். முருகானந்தம்]

இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஏன் அவ்வாறு விற்கப்படுகிறது? ஆகமொத்தத்தில் இந்த டாமின் நிறுவனம் 300 கன மீட்டர் கற்களை அந்தக் குவாரியில் எடுக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு நஷ்டம் 6 இலட்சம் ரூபாய். இந்தப் பணம் எங்கே போகிறது? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறார்கள்; புதிய பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் அதிக அளவில் பணம் வேண்டுமே, அந்தப் பணம் நமக்கும் தேவைப்படுகிறது. அப்படியிருக்கும்பொழுது 6 இலட்சம் ரூபாயை அதிகமாகப் பெறக்கூடிய சூழ்நிலையில், இந்தப் பணம் எங்கே செல்கிறது? அது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(பிற்பகல் 12-40)

அதோடு மட்டுமல்ல. இந்தக் கான்ட்ராக்டர் இன்னொன்றையும் செய்கிறார். வெஸ்ட் ஜெர்மனிக்குத் தொடர்ந்து அந்தக் கான்ட்ராக்ட் வழங்கப்படும் மர்மம் என்ன என்பதையும் சட்ட சபை உறுப்பினர்களுக்கு முன்னால் அறிவிக்க ஆசைப்படுகிறேன். இவ்வாறு இதுபோன்ற திட்டங்களெல்லாம் பாழாக்கப்படுகின்ற சூழ்நிலையைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன். இந்த அரசாங்கம் உடனடியாக இதுபோன்ற காரியங்களின்மீது தக்க நடவடிக்கைகளை எடுத்துத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றையதினம் நான் பத்திரிகையிலே பார்த்தேன். 'இனாகுரேஷன் டுடே—சூப்பர் கிரானைட்' என்ற ஒரு தொழிற்சாலையை, கற்களை பாலிஷ் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையை, ஆரம்பித்திருக்கிறார்கள். தியானேஸ்வரன், ஐ.ஏ.எஸ். கருப்பண்ணன், ஐ.ஏ.எஸ்., ஆகியவர்கள் அந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். மைய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் பல கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. காரணம், மைய அரசாங்கம் இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கான உரிமத்தை வழங்குகிறது. ஆனால் மாநில அரசு இந்தத் தொழிற்களுக்கு வேண்டிய கச்சாப் பொருட்களை, அடிப்படைக் கற்களை எப்படி வழங்கப் போகிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். டாமின் நிறுவனமானது, கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக இந்தத் தொழிற்சாலையை நாங்கள் அமைக்கப் போகிறோம் என்று பெயரளவிலே சொல்லிக் கொண்டிருந்தது.

[திரு. டி. என். முருகானந்தம்] [1985 ஜூன் 14

ஏன் அவ்வாறு அதை அவர்கள் அமைக்கவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஒரு தொழிற்சாலையை அமைப்பதில் ஏன் இவ்வளவு தாமதம் காட்டுகிறீர்கள்? இதற்கு முன்னால் அது பற்றி சர்வே செய்திருக்கின்றீர்களா? உலகத்திலே இருக்கின்ற பலவிதமான கலர் கற்கள் எத்தனை என்று கேட்டிருக்கிறீர்களா? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியுமா? அம்மாதிரி செய்ய முடியாத சூழ்நிலையில், இந்தத் தொழிற்சாலையை சென்னையை அடுத்த மணலியில் அமைத்திருக்கிறீர்களே, அது முறையாகச் செயல்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, அந்தத் தொழிற்சாலை இன்னும் முடிவு பெறாத சூழ்நிலையிலேயேதான் இருக்கிறது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள், இதில் அடுத்த வருஷம் தொழில் தொடங்க இருக்கிறோம் என்று. ஆனால் 1985-86 ஆம் ஆண்டு — இப்பொழுதுதான் பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் முடிவடையும் சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அதற்கான இயந்திரம் வெஸ்ட் ஜெர்மனியிலேயிருந்து வந்திருக்கிறது. ஆனால் அந்த இயந்திரம் இன்னும் போர்ட் டிரஸ்டிலேயே இருக்கிறது. கணவன் மனைவி என்றால் கூட பத்து மாதங்களில் குழந்தை பெற்று விடுகிறார்கள். ஆனால் இந்த இயந்திரம் 10 மாத காலமாக அங்கே இருக்கிறது. அந்நியச் செலாவணியைப் பெற்று வாங்கப்பட்டிருக்கின்ற அந்த இயந்திரம் அங்கே வாளாவிருப்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அவர்கள் கட்டியிருக்கின்ற கன்ஸ்ட்ரக்ஷன், பில்டிங் பத்து வருடங்களுக்கு மேல் இருக்காது என்று இ.சி.சி. ரிப்போர்ட் கொடுத்திருப்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? தமிழ் நாடு கன்ஸ்ட்ரக்ஷன் இந்த அடித்தளத்தைக் கட்டியிருக்கிறார்கள். இ.சி.சி. அந்தக் கட்டிடத்தை எழுப்பியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கின்ற சர்ட்டிபிகேட், பத்து ஆண்டுகளுக்கு மேல் அந்தக் கட்டிடம் தாங்காது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, இலாபம் வரக்கூடிய தொழில்களில் இப்படி அனாவசியமாக நஷ்டம் அடைந்துவிடக் கூடாதே என்ற அக்கறையில்தான் நான் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.



1985 ஜூன் 14] [திரு. டி. என். முருகானந்தம்]

இன்னுமொன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். போன வருஷம் இந்தத் தொழில் கழகத்தின் மூலமாகக் கிடைத்த மொத்த வருமானம், எல்லாச் செலவுகளுக்கும் போ ஏழு இலட்சம் ரூபாய் என்று காண்பித்தது. இந்த வருஷத்தில், எல்லாச் செலவுகளும் போக எட்டு இலட்சம் என்று காண்பித்திருக்கிறார்கள். ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தக் கழகம் என்னுடைய பொறுப்பிலே ஒப்படைக்கப்படுமேயானால், நான் ஒரு வருஷத்திற்கு, எல்லாச் செலவுகளும் போக 1 கோடி ரூபாய் இலாபமாக இந்த அரசாங்கத்திற்குக் கண்டிப்பாக ஈட்டித் தர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தொழில் அமைச்சரவர்கள் உலகத்திலே உள்ள அத்தனை தமிழர்களையும் தெரிந்த அமைச்சர். கிழக்காசியாவிலே உள்ள தமிழர்களை இந்தத் தமிழகத்திற்கு அழைத்து வந்து தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டும், அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று சொல்லி விடை பெறுகிறேன், வணக்கம்.

**திரு. கு. ரமணி :** மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தின் மீது பேசும்போது, இது பெருந்தொழில் சம்பந்தப்பட்ட விவாதம் என்பதை அமைச்சர் அவர்கள் அப்பொழுதே ஞாபகப்படுத்தினார். மின்சாரம் இல்லாமல் தொழில் நடக்காது; மூலப்பொருள் இல்லாமல் தொழில் நடக்காது; மூலதனம் இல்லாமல் தொழில் நடக்காது; இந்த இடத்திலே பெருந் தொழில் என்று சொல்லி, அதற்கு இருக்கும்படியான ஒரு டெஃபனிஷனில், விளக்கத்தில் மட்டும் நின்றோம் என்று சொன்னால், நம் மாநிலத்திலே பல பேர்கள் தொழிலைப் பற்றி பேச முடியாத ஒரு நிலைமை ஏற்படும். அப்படி யாந்திரீகமாக இதைப் பார்க்கக் கூடாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குத் தொழில் வளர்ச்சித் தேவையிருக்கிறது என்பதனாலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எடுத்துச் சொல்லும்போது, தொழில் வளர்ச்சியினுடைய தேவையையும், அது அதிகப்படியாக வேண்டுமென்றும் எடுத்துச் சொன்னார்கள். அதுதான் உண்மை. நமக்குத் தேவை இருக்கிறது; பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும்; பொருளாதாரத்திலே உற்பத்தி பெருகி போதிய உற்பத்தி சக்திகள் உற்பத்திப் பெருக்கங்கள் ஏற்பட்டாக வேண்டும். இன்றைக்குத்

தொழில் வளர்ச்சியைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. ஆனால் அதற்கு மிக முக்கியமான ஒரு தேவை, மத்திய அரசாங்க ஆதரவு இல்லாமல், அவர்களுடைய கொள்கையினுடைய சரியான ஒரு நடைமுறை இங்கே தமிழ் நாட்டிலே அமுலாகாமல், அந்தக் காரியத்தில் தமிழக அரசாங்கம் மட்டும் வெற்றி பெற முடியாது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் இங்கே வைத்துள்ள குறிப்பிலே 69 ஆம் பக்கத்திலே, தமிழ்நாட்டில் மைய அரசு செய்துள்ள முதலீடுகள் மிகவும் குறைவு; தமிழ்நாட்டில் மேலும் பல மத்திய அரசு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது என்பதைச் சொல்லியிருக்கிறார். நாம் எத்தனை வருஷங்கள் வேண்டுமானாலும் தொடர்ந்து இந்த வலியுறுத்தலைச் சொல்லலாம். ஆனால், காரியாம்சத்தில் நடக்கவில்லையென்றால் எப்படிச் சரியாகும் என்பதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு உண்மையை எடுத்துச் சொன்னால் இந்தியா பூராவிலுமே ஆழம் காண முடியாத பெரு நெருக்கடிக்குள்ளே தானே நாம் சிக்கி இருக்கிறோம். இந்த மாநிலம் மட்டும் அதிலே தப்பித்து, எல்லாவற்றையும் நாம் சாதித்து விடுவோம் என்ற அந்த வாக்குறுதியை யார் கொடுத்தாலும் எங்களைப் பொறுத்தவரையிலும் அந்த வாக்குறுதி, At face value we are not prepared to accept it. அப்படிச் சாத்தியம் அல்ல.

ஆனால் அது வளர்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நாம் கலந்தாலோசித்து எல்லோரும் சேர்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்தாக வேண்டியிருக்கிறது. உதாரணமாக தொழில் வளர்ச்சிக்கு மிக அடிப்படையான ஒரு கேந்திர தொழில் என்று சொல்லக்கூடிய மின்சாரத் தொழில்—அது அமைச்சருடைய கட்டுப்பாட்டில் இல்லை; வேறு அமைச்சருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆனால் அந்த மின்சாரம் இல்லாமல் எப்படி தொழில் நடக்கும்? ஒரு தொழில் உற்பத்தி எப்படி நடக்கும்? மின்சாரத் தொழிலைப்பற்றி இங்கே சொல்லும்போது நேற்றைக்கே மின்சார அமைச்சர் இங்கே குறிப்பிட்டார், 12 நீர் மின் திட்டங்கள், புனல் மின் திட்டங்கள் நமக்கு சாங்க்ஷன் ஆகி, செயல்படுத்த முடியாமல் மின்சாரப் பற்றாக்





குறையில் நாம் இருக்கிறோம். ஆகவே, போதிய அளவுக்கு அத்தனை தொழில்களையும் இலாபகரமாக நடத்துவதற்கு நம் கையில் மின்சாரம் இல்லை. அதையே தயாரித்துத் தர வேண்டிய நிலைமை இருக்கிறது.

நெய்வேலி மின்சார நிலையம் மத்திய சர்க்காருடையது. அது ஒரு பெருந்தொழில். அந்த நிலையத்திலே உற்பத்தி ஆகக் கூடிய முழு மின்சாரமும் எதிர்காலத்தில் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் மேலும் சுரங்கத்தை வெட்டி உற்பத்தியைப் பெருக்கினாலும் வேறு மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டி இருக்கும், இங்கே பூரா கிடைக்காது. எல்லாவற்றுக்கும் மேலே இதுவரைக்கும் எனக்குத் தெரியாத உண்மையை, இப்போது தெரிந்ததை சொல்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்குவார் என்று நினைக்கிறேன். நெய்வேலி மின்சாரத்திற்கு நாம் எவ்வளவு விலை கொடுக்கிறோம்? அந்த விலையில் ரூ. 122 கோடி கட்ட முடியாது மிச்சம் இருக்கிறது என்று இப்பொழுது செய்தி வந்திருக்கிறது. ஆனால், நெய்வேலியில் மின்சாரம் உண்டாக்க கரி எடுப்பது தமிழக அரசாங்கத்திலுடைய ஏரியாவுக்குள்ளே, தென்னாற்காடு மாவட்டத்திலேயிருந்தது. அதற்கு என்ன ராயல்ட்டியை மத்திய சர்க்கார், தமிழ்நாட்டு அரசுக்கு கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அப்படி ஒன்று இல்லையென்று நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? அப்படியானால், அப்படிப்பட்ட பலவிதமான தொழில்களை மத்திய சர்க்கார் உருவாக்கும் போது, அவர்கள் நமக்கு அதற்குத் தகுந்த அந்தக் கப்பம் கொடுத்தால் பெரும் தொகை வரும். அப்பொழுது மின்சார விலை பாக்கி கூட இருக்காது. அதையெல்லாம் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 12-50)

அதுமட்டுமல்ல. பெருமளவில் மின்சாரம் உற்பத்தி பண்ணுவதற்கு அணு மின் நிலையங்கள் தேவை. அது மத்திய சர்க்கார் கட்டுப்பாட்டில் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அணு மின் நிலையம் அமைக்கத் திட்டம் போட்டோம். ஆனால் இன்றும் அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை; எப்போது கிடைக்கும் என்றும் தெரியவில்லை. அதைப்போன்று தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்தில் ஒரு அனல்

மின்நிலையம் அமைக்க வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானமே போட்டிருக்கிறார்கள். அது அமுலுக்கு வருமா என்று தெரியவில்லை. மின்சாரத்தைப்பற்றி பேசுகிறோம். இத்தகைய திட்டங்கள் இல்லாமல் மின்சாரம் எப்படி உற்பத்தியாகும்? மின்சாரம் இல்லாமல் தொழில்கள் எப்படி வளர்ச்சியடைய முடியும்? ஆகவே, தேவையான அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய மத்திய சர்க்கார் கட்டாயமாக மிக அதிகமான முதலீட்டை தமிழ்நாட்டில் போட்டாக வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மற்றொரு முக்கியமான குறை பல தொழிற்சாலைகள் பூட்டப் படுகின்றன. குறைந்தபட்சம் தொழிற்சாலைகள் பூட்டப்படாம லாவது இருக்க வேண்டும். இன்றைக்கு பல பஞ்சாலைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இப்படிப் பூட்டக் கூடாது. பஞ்சாலை களைப் பூட்டினால் அவைகளுக்குத் தேவைப்படும் பெரிய இயந் திரங்களை உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகளில் தொழில் பாதிக்கும், வேலையிழப்பு ஏற்படும். பெரிய இயந்திரங்களை உற்பத்திப்பண்ண முடியாத சூழ்நிலை ஏற்படும். பஞ்சாலைகள் மூடப்படுவதால் இப்படிப்பட்ட நெருக்கடிகள் ஏற்படுகின்றன. எஞ்சினீயரிங் பிரிவு ஸ்தம்பித்துப்போய்விடும். இதைத் தவிர்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டுமென்றால் அந்தத் தொழிற்சாலைகளைப் பூட்டுவதற்கு முன்னால் மாநில அரசின் அனுமதியைப் பெற வேண்டும். மாநில அரசின் அனுமதி இல்லாமல் பூட்டக்கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும். இப்போது மத்திய சர்க்காரிலே இதுசம்பந்தமாக ஒரு திட்டம் போடவேண்டுமென்று பேசிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்படு கிறோம். ஒரு தொழிற்சாலையை பூட்டுவது என்பது சமுதாயத்திற்குக் கேடு விளைவிப்பதாகும். தனி மனிதன் மட்டுமல்ல, ஒரு சமுதாயமே அதனால் பாதிக்கும். ஆகவே தொழிலை நிறுத்தக் கூடாது, தொழிற்சாலையைப் பூட்டக் கூடாது என்று சர்க்கார் நிர்ப்பந்திக்க வேண்டும். தனியார் தொழிற்சாலையாக இருந்தாலும் இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும். அதை மீறி பூட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அரசாங்கமே அந்த நிறுவனத்தை எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அது மட்டுமல்ல. இன்றைக்கு என்ஜினீயரிங் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள் இல்லாத கஷ்டம் இருக்கிறது. கோக், பிக் அயன் ஆகியவை முக்கியமான மூலப்பொருள்கள். பெரிய தொழில், நடுத்தரத் தொழில், சிறு தொழில் ஆகிய எந்தத் தொழிலுக்கும் தேவையான மூலப்பொருள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. பீகாரிலிருந்தும் ஒரிசாவிலிருந்தும் துறைமுகம் வழியாக மூலப்பொருள் வரவேண்டும். இரும்பை உருக்கக்கூடிய கோக் கரி அங்கிருந்து வரவேண்டும். கோவை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான சிறு தொழில்கள் இருக்கும்போது அவற்றுக்குத் தேவையான மூலப்பொருள் சப்ளை கிடைக்காத நிலையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். சிறு தொழில்கள் நல்லமுறையில் வளர்ந்தால் பெரும் தொழில்கள் நிலைக்கும். ஆகவே, கோவையில் மூலப்பொருள்களைச் சேமித்து வைக்கக்கூடிய பெரிய கிடங்கு களை ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே சிறிய அளவில் கிடங்கு இருப்பதாகத் தெரிகிறது. பெரும் கிடங்குகளை அமைத்து மத்திய சர்க்கார் கொடுப்பதைப் பெற்று, அங்கே சேமித்து வைத்து, கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மத்திய அரசு முதலீட்டைப்பற்றிச் சொல்லும்போது ஒன்றி ரண்டு விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1951 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டுவரை 214 பெரும் கம்பெனிகளை மத்திய அரசு தன்னுடைய ஸ்டேட் செக்டாரில் நாடு முழுவதும் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டுவரை 214 பெரிய கம்பெனிகளை செய்திருப்பது 35,411 கோடி ரூபாய். அதிலே தமிழ்நாட்டுக்கு எவ்வளவு இருக்கிறது? அதுபற்றிய புள்ளிவிவரம் இந்த குறிப் செய்திருப்பது 35,411 கோடி ரூபாய். அதிலே தமிழ்நாட்டுக்கு நாட்டுக்கு 100 கோடி ரூபாய் இருக்குமா அல்லது 200 கோடி ரூபாய் இருக்குமா? என்ன இருக்கிறது? ஏற்கெனவே இங்கே வைத்திருக்கிற 10 அல்லது 12 தொழில்கள்தான். அதுவும் நிறுவப்பட்டது, இப்போது இல்லை. இரயில் பெட்டித் தொழிற் சாலை, டாங்க் தொழிற்சாலை என்று 10, 12 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவை நிறுவப்பட்டு பல ஆண்டுகளைத் தாண்டி விட்டன. தொடர்ந்து வரக்கூடிய முதலீடு மிக மிகக் குறைவு. அதைத்தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி குறைப்பது சரி யல்ல. தமிழ்நாடு தொழிலில் வளர்ந்து பெருக்கக்கூடிய ஒரு

மாநிலம்தான். பம்பாய், கான்பூர், கல்கத்தா மாதிரி இல்லா விட்டாலும் தமிழ்நாடும், தமிழ்நாட்டில் கோவையும் மற்ற மாவட்டங்களும் தொழில் துறையில் வளர்ந்துவரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இப்பொழுது மத்திய அரசின் ஒரு புதிய கொள்கை, ஜீரோ இண்டஸ்டிரீஸ் டிஸ்டிரிக்குக்குத்தான் லைசென்ஸ் கொடுப்போம் என்கிறார்கள். தொழில் இருந்தாலும் மேலும் வளரக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அங்கே ஏன் தொழில்களை மேலும் உருவாக்கக்கூடாது? இல்லாத இடத்திலே உருவாக்கட்டும இருக்கிற இடத்திலே மேலும் தொழில் வளருவதற்கு ஏற்பாடு செய்யலாம் அல்லவா. தொழில் இல்லாத இடங்களுக்கு ஒன்றிரண்டை கொடுக்கட்டும். தொழில் இருக்கிற இடங்களிலும் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தால் தான் வளர்ச்சி பெற முடியும். அதற்கு ஒவ்வொரு வட்டமாகக்கூட எடுத்துக்கொள்ள லாம். ஒரு பிரதேசம் என்ற அளவு பொருத்தமாக இல்லை. ஒவ்வொரு வட்டமாக எடுக்கும்போது எங்கு வேண்டுமானாலும் வரட்டும். அஸ்லாமுக்கு வரட்டும் அல்லது வேறு இடத்தில் வரட்டும். இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க மூலப்பொருள் வசதி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி, இரயில் வசதி, மின்சார வசதி ஆகிய அத்தனையும் இணைந்த 'இன்ஃப்ரா ஸ்டிரக்சர் ஃபெசிலிடீஸ்' முழுமையாக அமைத்துத் தந்தால் தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய இடங்களிலும் தொழில்கள் அதிகமாக வரும்.

ஆகவே சீரான வளர்ச்சி என்று சொல்லும்போது அதிலே ஏற்றத்தாழ்வு இருக்காது என்று சொல்வது தப்பு. அதே சமயத்தில் எல்லாவற்றையும் ஒரு சில இடங்களில் குவித்துவிட்டு மற்றதை காலியாக பேரல் லேண்டாக விடுவது தப்பு. அதைத்தான் இங்கே நான் சொல்கிறேன். ஹோசூரிலே அசோக் லேலண்ட் கம்பெனி இருக்கின்றது. அதுபற்றி நான் சொல்வதை அமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அதுபற்றி தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் டீல் பண்ணி னாலும் கூட தொழில் துறை அமைச்சரும் அதைச் செய்ய வேண்டும். அவர்கள் ப்ரடக்ஷன் சஸ்பென்ஷன் என்று அறிவித் திருக்கிறார்கள். தொழிலாளர்களை சஸ்பண்ட் செய்வதைப் பார்த்து இருக்கிறோம். ஆனால் இவர்கள் தொழிலாளர்களை எல்லாம் வேலை செய்யச் சொல்லிவிட்டு உற்பத்தியை சஸ்பெண்ட்





பண்ணியிருக்கிறார்கள். இது ஒரு கிரிமினல் குற்றம் என்பது என்னுடைய கருத்தாகும். இன்றைக்கு டிரக்குகளுக்கும், பஸ்களுக்கும் வண்டிகளுக்கும் எவ்வளவோ விலை ஏறியிருக் கின்றது. அந்த நிலைமையில் உற்பத்தியை அவர்கள் தடுத்து நிறுத்துகிறார்கள். இவ்வாறு செய்வது நாட்டுக்கு விரோதமான நடவடிக்கையாகும். எனவே அப்படிப்பட்ட காரியத்தை நமது அமைச்சர் அவர்கள் தலையிட்டு in the interest of Industrial Development என்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரியாக இப்போது நமது அரசு ஒரு நல்ல காரியத்தைச் செய்து இருக் கின்றது. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தைப் பொறுத்த வரையில் 80 கோடி ரூபாய் மூலதனத்தில் 3 பிரிவுகளாகப் பிரித்து அமைத்து நல்ல வளர்ச்சிக்கான திட்டத்தைப் போட் டிருக்கிறார்கள். இந்த வளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கட்டம், கட்டமாக துரிதப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நாம் வேலை கொடுக்க முடியும். இது முன்பு தனியார் நிறுவனமாக இருந்தபோது 5 ஆயிரம் தொழிலாளர்கள் இருந்துகொண்டிருந்தார்கள். இன்றைக்கு சர்க்கார் எடுத்துக் கொண்டதற்கு இப்படிப்பட்ட அபிவிருத்தியைச் செய்வதைப் பொறுத்தவரையில் நாம் வரவேற்கிறோம். சேலம் உருக் காலையை ஒழுங்காக உருவாக்கி இருந்தால் இந்தமேக்னிசைட் கல்லை அங்கேயே நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டிருக்க முடியும். இதை நாம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி பண்ணவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு வேலையில்லாமல் இருக்க வேண்டும் என்ற நிலை வந்தது. அப்படிப்பட்ட நிலை வராமல் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய இந்தக் கற்களை நாம் வினியோகிக்க முடியும். அப்படிப்பட்ட நல்ல திட்டம் இது. இதை விரைவாக நிறைவேற்றுவதற்கான முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக காகிதத் தொழிற்சாலை என்பதைப் பொறுத்தவரையில் இது ஒரு நல்ல திட்டம். இதை அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால் இந்தக் காகிதத் தொழிற் சாலைக்கு வேண்டிய மரக்கூழ் தயாரிப்பதற்கான மரங்களை நாம் எக்கச்சக்கமாக உற்பத்தி செய்கிறோம். இங்கே உற்பத்தி செய்யப்

[திரு. கு. ரமணி] [1985 ஜூன் 14

படக்கூடிய மரங்கள் அனைத்தையும் தனியாருக்குக் குறைந்த விலையில் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. மிகக் குறைந்த விலைக்கு அந்த மரங்கள் முழுவதும் அவர்களுக்கு சப்ளையாகிக்கொண்டு இருக்கின்றது. Pulp Producing Industry ஒன்றையாவது தமிழ்நாடு அரசு ஏற்படுத்த வேண்டும். இதை நம்மால் செய்ய முடியும்.

நீலகிரி மலையின் அடிவாரத்தில் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். கோவை மாவட்டத்திற்கு அந்தத் தொழிற்சாலை வரவேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. அந்த மலை அடிவாரத்தில் அந்த யூனிட்டை ஸ்தாபிக்க வேண்டும். 10 ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலிருந்து கிடைக்கின்ற அந்த மரங்களைப் பயன்படுத்தி மரக்கூழ் தயாரிக்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் அதிகமான மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த மரங்களை வெட்டிக் கீழே போட்டுவிட்டால் போதும் அவை தொழிற்சாலைக்கு வந்துவிடும். அந்த வகையில் அங்கே தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான நல்ல வாய்ப்பு இருக்கின்றது. அதைச் செய்ய வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அந்த மாதிரியாக மரத்தைப் பதப்படுத்திக் கொடுக்கும்படியான மரக்கூழ் தயாரிப்பு தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் மரங்களைப் பொறுத்தவரையில் அதிகமான தேவை உள்ள காலம் இது. கட்டுமானப் பணிகள் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் மரங்கள் தேவை. நமது மாநிலத்தில் மரங்களும், காடுகளும் நிறைய இருக்கின்றன. அநேகமாக அந்த மரங்கள் எல்லாம் கொள்ளை அடிக்கப்பட்டு திருடப்பட்டு பல இடங்களுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. எனவே அரசாங்கம் கறாராக அந்த மரங்களை எடுத்து மரத்தொழிற்சாலைகளை உருவாக்கி ஏராளமான மரங்களை இன்றைக்கு சப்ளை பண்ண முடியும். இரயில்வேக்குக்கூட மரங்களை நம்மால் சப்ளை பண்ண முடியும். பக்கத்திலே இருக்கக்கூடிய அந்தமான் தீவுக்குச் சென்று பார்த்தால் மிகப் பெரிய மரம் அறுக்கும் தொழிற்சாலை அங்கே இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை இங்கே வைக்க முடியும்.



1985 ஜூன் 14] [திரு. கு. ரமணி]

பக்ரா நங்கல் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மரத் தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். வெள்ளக் காலத்திலே அந்த அணைக்கட்டிற்கு வந்து சேரக்கூடிய மரங்களைத் தூக்கிக் கொண்டு போய் போட்டு பெரிய தொழிற்சாலையை உருவாக்கி இருக்கிறார்கள். அந்தமாதிரி ஒரு மரத்தொழிற்சாலையை இங்கே அரசாங்கம் ஏற்படுத்த முடியும்.

சர்க்கரைத்தொழில் ஓரளவுக்கு வளர்ந்து இருக்கின்றது. 18 ஆயிரம், 20 ஆயிரம் தொழிலாளர்கள் அதில் வேலை செய்கிறார்கள். அந்த சர்க்கரைத் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்ய முயற்சி எடுக்க வேண்டும். காரணம் தமிழ்நாட்டில் ஏராளமான கரும்பு உற்பத்தியிருக்கிறது. அதுவுமல்லாமல், அதற்கான டெக்னிக்கும் நமக்கு நல்ல முறையிலே தெரியும். அந்த முறையிலே சர்க்கரைத் தொழிற்சாலைகளை மேலும் அமைப்பதற்கு வழி இருக்கிறது. சில தொழிற்சாலைகள் வரப்போகிறது என்பது உண்மை. அவைகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். அது மட்டும் அல்ல. அதன் மூலம் கிடைக்கக்கூடிய பை-பிராடக்ட்ஸ் முழுவதையும் நாம் உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும். இன்றைக்கு அது பெருவாரியாகத் தனியார் துறைக்கு உபயோகமாகிக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 1-00)

அந்த சர்க்கரை தொழிற்சாலையைப் பற்றி சொல்லும்போது கரும்பு விலையைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. கரும்பு விலை பற்றி இதிலே போடப்பட்டிருக்கிறது. 185 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு, 1984-85-லே கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதுவும் சர்க்கரைத் தொழிற்சாலைக்கு கரும்பு கொடுக்க ஒப்பந்தம் செய்தவர்களுக்கு கொடுக்க வேண்டும். அதற்கென்று ரூ. 10 எக்ஸ்ட்டிராவும் கொடுப்பார்கள். என்று போட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகள் கேட்கக் கூடிய குறைந்த பட்சத் தொகை ரூ. 250. இப்போது நீங்கள் கொடுப்பது 185 பிளஸ் 10, அல்லது 190 ரூபாய் என்ற அளவுக்கு இருந்தால், 250-க்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம் வருகிறது. நீங்கள் இப்படிச் செய்தால் அந்தக் கரும்பு உற்பத்தியாளர்களுடைய வளர்ச்சியில் சங்கடங்கள் ஏற்படும்.

தனியார் துறையில் சர்க்கரை ஆலைகளில் கோடி கோடியாக கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் அந்த லாபத்தை, தான் அடைய முயற்சி செய்ய வேண்டும். இப்போது அரசாங்கம் கூட்டுறவுத் துறையிலே சிலவற்றை வைத்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் அந்த எண்ணிக்கையை இன்னும் அதிகமாக்க வேண்டும். இன்னும் அதிக அளவில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அரசு உருவாக்க வேண்டும். சர்க்கரை ஆலைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

அடுத்து கனிமப் பொருள்கள். இந்தக் கனிமப் பொருள்களைப் பற்றி இதற்கு முன் பலர் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் கூட மதிப்பிற்குரிய ஒரு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கனிமப் பொருள்கள், ஒரு மாவட்டம் என்று மட்டும் அல்லாமல், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமான கனிமப் பொருள்கள் கிடைத்து வருகின்றன. சேலம் மாவட்டத்தில் பலவிதமான கனிமப் பொருள்கள் கிடைக்கின்றன. அந்தக் கனிமப் பொருள்களை உபயோகப்படுத்தி நல்ல பெரிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். அதில் எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியார் துறைக்கு விட்டு விடாமல், அரசாங்கமே அவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொண்டால், எவ்வளவோ பணம் அரசாங்கத்திற்கு வந்து சேரும். இன்றைக்கு மத்திய சர்க்காரை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய கொள்கை பற்றியும், நடைமுறைகள் பற்றியும் கருத்து வித்தியாசம் நமக்கு இருக்கிறது. அதை நாம் விமர்சித்து வருகிறோம். அது வேறு விவகாரம்.

ஆனால் 35 ஆயிரம் கோடி செலவழித்து ஒரு சென்டர் செக்டார் உருவாக்கியதன் விளைவு, பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேலே அதில் இருந்து பணம் லாபமாக அவர்களுடைய கஜானாவிற்கு வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. அதே மாதிரி நம்முடைய அரசாங்கத்திற்கும் லாபம் கிடைக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நல்ல கொள்கையோடு இந்தத் தொழில் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். தனியாருக்கு ஊக்கம் அளித்து, தனியாரே முன் வந்து எல்லாவற்றையும் செய்யட்டும் என்கிற அணுகு முறை தவறு. தனியார்களுக்கு கொடுக்க



வேண்டிய சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளியுங்கள். பெரிய தொழில்களையும் மத்திய தரமான தொழில்களையும் அரசே ஏற்று நடத்த வேண்டும். அப்போதுதான் அந்தத் தொழில்களை மேலும் மேலும் விஸ்தரிக்கிறபோது பணமும் வரும், தொழிற்சாலைகளும் நாட்டில் அதிகமாக உருவாகும். தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும். அப்படிப்பட்ட ஒரு இணைப்பான இன்டகிரேடட் பாலிசியை உருவாக்கி, அந்த பாலிசியைத் தான் நீங்கள் அமலாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை பொதுவாக நான் ஆதரித்து, பாராட்டி, எனது கருத்துக்களை சுருக்கமாகச் சொல்ல விழைகிறேன். இந்த மானியக் கோரிக்கையில் உள்ள எல்லா விவரங்களையும் பேசுவதற்கு நேரமும் இல்லை, அது சாத்தியமும் ஆகாது என்ற காரணத்தால், குறிப்பாக இறக்குமதி, ஏற்றுமதி துறை சம்பந்தப்பட்ட அம்சங்களைப் பற்றி மட்டும் பேச நான் ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில், வேலை வாய்ப்பு திட்டங்களை அதிகரித்து வறுமையை விரைவாக விரட்டுவது என்பது விரைவான தொழில் வளர்ச்சியோடு இன்றியமையாத வகையில் இணைந்து இருக்கிறது. விரைவான தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு நம்மிடத்தில் கணிசமான முறையில் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி தொழில் வளர்ச்சியையும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியையும் பெருக்கி, அவைகளை நிரந்தரமாக்கிக் கொள்வது நம்முடைய கையிலேதான் இருக்கிறது. அதை மனத்தில் கொண்டு, தொழிற்சாலைகளை நவீனமாக்க முயற்சி செய்து, தொழில் நுட்ப உத்திகளை மேம்படுத்தி, நவீனப்படுத்தவும்; உற்பத்தித் திறனை உயர்ந்த பட்ச அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும், நிர்வாகத் துறை மேம்பாடுகளை திறனாற்றலில் கணிசமான குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்கவும் செய்ய வேண்டும். இதனுடைய அடிப்படையில் பல புதிய திட்டங்கள் இந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்

[திரு. கி. ராமன்] [1985 ஜூன் 14

பட்டிருக்கிறது. பல விவரங்கள் புதிய திட்டங்களின் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய திட்டங்கள் ஏட்டு அளவில் நின்று விடாமல், அவைகளை துரிதப்படுத்தி நிறைவேற்றி, வேலையில்லாக் கொடுமையைக் கூடுமானவரையில் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இறக்குமதி ஏற்றுமதி சம்பந்தப்பட்ட வகையில் அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் பற்றிச் சொல்ல விழைகிறேன். இதுவரையில் ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்பட்டு வந்த, அந்த இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கை முதல் தடவையாக மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்கும் நிலையில் அறிவிக்கப்பட்டு உள்ளது. நடப்பு ஆண்டிலும், அடுத்து வரும் இரண்டு நிதி ஆண்டுகளிலும் இருக்கக் கூடிய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை பிரகாரம், அயல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு திரும்பி வரும் இந்தியர்களுக்கு விசேஷமான சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவுக்கு திரும்பிய பின் தொழிற்சாலைகள் நிறுவுவதற்குத் தேவையான மூலதன இயந்திரங்களையும் மூலப் பொருள்களையும், துணைப் பொருட்களையும், இறக்குமதி லைசன்ஸ் இல்லாமலேயே சில வரம்புக்கு உட்பட்டு இறக்குமதி செய்து கொள்ளக் கூடிய அளவுக்கு இறக்குமதி கொள்கை தளர்த்தப்பட்டிருக்கின்றது. அதேபோல இந்தியாவிற்கு திரும்பி வராமலே முதலீடு செய்ய விரும்பும் அவர்களுக்கு தனிக்கொள்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளையும் சிப்காட் நிறுவனத்திலே ஏற்கனவே இயங்கி வரும் தனி அமைப்பின் மூலமாக பெரிய அளவிலே விளம்பரப் படுத்தி வசதி படைத்த தமிழர்களை ஈர்த்து, ஊக்குவித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். இதுவரையில் 9 திட்டங்கள் ரூ. 586 லட்சம் செலவில் செயலாக்கப்பட்டுள்ளன என்றும், மேலும் ரூ. 787 லட்சம் செலவில் 11 திட்டங்களை செயலாக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன என்றும் தொழிற்துறையின் தொழிற் கொள்கைகளும் திட்டங்களும் என்ற தலைப்பின் கீழ் காணப் படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீவிரமான முறையில் செயல்படு வார்கள் என்று நம்புகிறேன்.



1985 ஜூன் 14] [திரு. கி. ராமன்]

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் (Export Processing Zone) இந்த ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் முகவைப் பொறுப்பை சிப்காட் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தாம்பரத்திற்கு அருகில் 228 ஏக்கர் நிலத்தில் கட்டிடப் பணிகள் நடந்து வருவதாகவும், 19 மனைகள் வகுக்கப்பட்டு சிறந்த தொழில் முனைவோருக்கு பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட தயாராக உள்ளதாகவும், மென்மேலும் மனைகள் ஒதுக்கும் பணி முன்னேற்றம் அடைந்து வருவதாகவும், மின் அணு, இரசாயனம், தரமான பாத்திரங்கள், நகைகள் போன்ற தொழில்களுக்கான 26 மனுக்களுக்கு ஒப்புதல் கொடுக்கப் பட்டிருப்பதாகவும், மனைகள் விரைவில் ஒதுக்கப்படுமென்றும் அரசினுடைய அறிக்கை கூறுகிறது. இதுசம்பந்தமாக தொழில் முனைவோர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு என்றே அஞ்சுகிறேன். ஏற்கனவே போதுமான அளவில் விளம்பரம் கொடுக்கப்படாவிட்டால் நிறைய விளம்பரம் செய்து தொழில் முனைவோரை ஈர்க்கவேண்டும். இந்தியா முழுவதுமுள்ள ஆறு ஏற்றுமதி மண்டலங்களிலிருந்து 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கணிசமான ஏற்றுமதி எதிர்பார்க்கப்படுகிறது. முதல் ஆண்டான நடப்பாண்டில், சென்னை ஏற்றுமதி மண்டலம் ரூ. 15 கோடி மதிப்புள்ள பொருள்களையும், 1989-90-ல் ரூ. 250 கோடி மதிப்புள்ள பொருள்களையும் ஏற்றுமதி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை (9-6-1985) வந்த செய்தி அறிக்கையை தலைவர் அவர்களின் அனுமதியோடு படிக்கிறேன்.

"......The Ministry of Commerce is considering setting up of an Apex statutory authority to ensure co-ordinated approach for devellopment of the export processing sones (EPZs) and the Industries in these zones......".

"....The Madras EPZ is expected to achieve an export target of Rs. 250 crores in 1989-90 starting from a low export target figure of Rs. 15 crores in 1985-86, which will be the first year of its Commissioning...."

[திரு. கி. ராமன்] [1985 ஜூன் 14

இதுபோல நூற்றுக்கு நூறு தங்க நகைகள் ஏற்றுமதி செய்வதற்கும் ஒரு தனி அமைப்பு 100 per cent export oriented complex for jewellery சீக்கிரமாக சென்னையில் நிறுவப்படும் என்று இன்றைய 'இந்து' நாளிதழில் காணப்படுகிறது.

பொதுவாக, வடக்கு மாநிலங்களில் உள்ள அளவிற்கு பெரிய தொழில்கள் தமிழகத்தில் அமையவில்லையென்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இதற்கு மிக முக்கியமான காரணம், விசாரிக்கும் போது மின்சாரத் தட்டுப்பாடு என்று தெரிகிறது. அதாவது டி.ஜி.டி.டி. ( Director-General of Technical Development ) அவர்களுடைய அனுமதியோடு துவங்கப்படுகிற சில பெரிய தொழில்கள் தமிழ்நாட்டில் துவங்க முடியவில்லை. ஏனென்று விசாரித்தால், அலுமினியம், காஸ்ட்டிங்ஸ், போர்ஜிங்ஸ், கெமிக்கல்ஸ் சம்பந்தமான பெரிய தொழில்கள் நடத்துவதற்கு தாராளமான தட்டுப்பாடில்லாத மின்சாரம் தேவைப்படுகிறது. ஆகவே இந்த மின்சாரத் தட்டுப்பாட்டை சீக்கிரமாக தீர்க்கக்கூடிய சூழ்நிலையை நாமெல்லாம் உண்டாக்கினால் தொழில்கள் நல்ல முறையில் பெருகும் என்பது என்னுடைய நம்பிக்கையாகும். சில வரம்புகளுக்கு உட்பட்டு இண்டஸ்ட்ரியல் லைசென்ஸ், சென்னையில் தற்போது வழங்கப்படுகிறது. டெல்லியில் வழங்கக்கூடிய இண்டஸ்ட்ரியல் லைசென்ஸ்கள் சம்பந்தமாக தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க, டெல்லியில் மாநில அரசின் சார்பில் "தொழில் தொடர்பு அலுவலகம்" ஒன்று நிறுவப்பட இருப்பதை நான் முழுவதுமாகப் பாராட்டுகிறேன்.

இன்னும் வட மாநிலங்களில் உள்ள அளவிற்கு எலக்ட்ரானிக்ஸ் பொருள்கள், கைக் கடிகாரங்கள் செய்யும் தொழிற்சாலைகள் தமிழகத்தில் இல்லையென்று நான் மிக வருந்துகிறேன். நான் 13 ஆண்டுகள் டெல்லியில் இறக்குமதி — ஏற்றுமதி சம்பந்தப்பட்ட பணி புரிந்து அங்கேயுள்ள சிறு, பெரு தொழில்களில் நெருக்கமாக ஈடுபட்டு இருந்தவன். குறிப்பாக டெல்லி, ஹரியானா, ஜம்மு—காஷ்மீர், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் உள்ள எலக்ட்ரானிக்ஸ் பொருள்கள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகள், கைக்கடிகாரங்கள் தயாரிக்கிற தொழிற்சாலைகள், கணக்கில் அடங்காது. அங்கேயுள்ள தொழில் சம்பந்தப்பட்ட



1985 ஜூன் 14] [திரு. கி. ராமன்]

அதிகாரிகள், "நாங்கள் எங்களுடைய மாநிலத்தை ஒரு மினி ஜப்பான் போல ஆக்க விரும்புகிறோம்" என்று சொல்லி, உண்மையாகவே புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, தொழிற்சாலைகளை நிறுவி, அவர்களுடைய மாநிலத்தை நல்ல முறையில் வளப்படுத்துகிறார்கள். அந்த அளவிற்கு நம்முடைய மாநிலத்தில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் தயாரிக்க விரும்பும் தொழில் முனைவர்களுக்குப் போதுமான ஊக்கம் இல்லையோ என்று நான் அஞ்சுகிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்ததாக, கிரானைட் ஸ்டோன்ஸ். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். கிரானைட் ஸ்டோன்ஸ் என்று சொல்லும்போது, நானும் பல மாநிலங்களில் பார்த்து இருக்கிறேன். ஆந்திராவிலேயிருந்து கிரானைட் ஸ்டோன்ஸ் ஏற்றுமதி ஆகிறது. அதைப்போல, தமிழகத்திலேயிருந்தும் ஏற்றுமதியாகிறது. வட மாநிலங்களிலிருந்தும் ஏராளமாக ஏற்றுமதியாகிறது. இது ஒரு நல்ல அந்நியச் செலாவணியைக் கொடுக்கக்கூடிய ஒரு ஏற்றுமதிப் பொருளாகும். ஆகவே இந்த வாய்ப்புக்களை நல்ல முறையில் பயன்படுத்தி அந்நியச் செலாவணியை நாம் நல்ல முறையில் சம்பாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் சொன்ன கருத்துக்களை என்னுடைய கருத்துக்களாகவும் நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

பொதுவாக அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் குறைகள் காணப்படுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சர்க்கார் நிறுவனங்களில் உள்ள குறைபாடுகளை ஒவ்வொரு ஆண்டும் மானியக் கோரிக்கையின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால் இந்தக் குறைகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வருகிற தொடர் கதையாக இருந்து வருகிறது. இந்த நிலைமையை மாற்றி, அரசு நிறுவனங்கள் நல்ல முறையில் லாபகரமாக இயங்க வழிவகை செய்யவேண்டும்

என்ற வேண்டுகோளை மக்கள் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்த காலம் நல்ல சரித்திரம் படைத்த காலம் என்ற நிலையை உண்டாக்குவார்கள் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாவிட்டாலும், அவர்களைத் தெரிந்த நண்பர்கள், பொதுவாக அவருடைய திறமையைப் பாராட்டுகிறார்கள். அவர்களுடைய திறமை தமிழ் நாட்டுக்கு, தொழில் வளர்ச்சிக்கு நல்லமுறையில் பயன்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அவர்களுடைய முயற்சிக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து, முடிக் கிறேன், வணக்கம்.

**திரு. கு. ரமணி:** துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தினுடைய அபிவிருத்திக் கவுன்சிலிலே அவர்கள் போட்டிருக்கக் கூடிய தீர்மானம் அணுமின் நிலையம் அல்ல, அனல் மின் நிலையம் என்று மாற்றிக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தில் 10 உறுப்பினர்கள் இன்றைக்குக் கலந்து கொண்டு பல்வேறு நல்ல கருத்துக்களை எடுத்து வழங்கி இருப்பதற்காக அவர்களுக்கு எல்லாம் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழகத்தை தொழில் துறையில் வளர்க்க வேண்டும் என்பதில் ஒவ்வொருவருக்கும் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் இருப்பது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் தனியார் சர்க்கரை ஆலைகளில் அரசு அறிவித்த கரும்பின் விலையான 185 ரூபாயைக் கொடுக்கவில்லை என்று எடுத்துக் காட்டினார்கள். அது உண்மைதான் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அரசு நிர்ணயித்த விலை சம்பந்தமாக தனியார் துறையினர் நீதிமன்றத்திலே வழக்கு போட்டிருக் கிறார்கள். ஆகவே, மேல் நடவடிக்கை, வழக்கு முடிந்த பிறகு, அந்தத் தொகை அவர்களுக்குக் கிடைக்கும் என்று நான் நம்பு கிறேன்.





அதோடு அவர்கள் பேசுகின்றபோது—அவர்கள் மோகனூரைச் சேர்ந்தவர்கள் — அங்கே ஒரு பெரிய சர்க்கரை ஆலை இருப்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே அதை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்த விரிவாக்கத் திற்கு, இப்போது 2,500 டன் அறவைத் திறன் உள்ளதாக இருக் கிறது, அதை 3,100 டன் அல்லது 4 ஆயிரம் டன் அறவைத்திறன் உள்ளதாக உயர்த்தவேண்டும் என்று அரசு விரும்பிக் கொண்டு இருக்கிறது. அங்கேயிருக்கிற நீர்ப்பாசன வசதி, நில வசதி, மற்றும் உள்ள வசதிகளை எல்லாம் பார்த்து அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் ஹரூர் வட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவ வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் எச். ஜி. ஆறுமுகம் அவர்கள் இங்கே ஒரு வேண்டுகோள் வைத்தார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கரும்பு மேல்வரியை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள் வழியாக செலுத்தி வருகிறார்கள் என்றும் மேல் வரியாக வசூலிக்கப்படுகிற தொகையை தனியார் துறை ஆலைப் பகுதி கரும்பு சாலைகள் பற்றிக் கேட்டு இருந்தார்கள். தனியார் துறை ஆலைகள் செலுத்த மறுத்து, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தாலே அதுவும் தற்போது அப்படியே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. மற்றும் பொதுத் துறை ஆலைகளுக்கு மட்டுமே மேல் வரியிலிருந்து தனியார் துறை சர்க்கரை ஆலைப் பகுதி களிலும் கரும்பு சாலைகள் அமைப்பதைக் கைவிடுவது பற்றி விரிவான சட்ட ஆலோசனைப்படி செயற்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மாண்புமிகு உறுப் பினர் இராமநாதன் அவர்கள் பேசுகிறபோது பாரத் எலக் டிரானிக்ஸ் கம்பெனி இங்கே வந்தது. அவர்களை நாம் வரவேற்காத காரணத்தால் அவர்கள் நம்மை விட்டுப் போய் விட்டார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது சரியானது அல்ல என்பதை மட்டும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 41 ஏக்கர் நிலம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கம்பெனி ஒரு வாடகைக் கட்டிடத்தில் இருந்து, தற்போது மின் அணுக்

கருவிகளை செய்து நாட்டில் விற்பனை செய்து கொண்டு இருக்கிறது. விரைவில் அவர்கள் அந்த 41 ஏக்கர் நிலத்தில் சொந்தக் கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு போக இருக்கிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் அவர்கள் பேசுகிற போது மற்றும் ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் 7 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குப் பண உதவி வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அவர்களுக்கு மறுக்கப்பட்டு இருக்கின்றது, அது நியாயம் தானா என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். ஏற்கனவே 21 வேஸ்ட்டு காட்டன் என்று சொல்லக்கூடிய நூற்பு ஆலைகளுக்கு 3 ஆயிரம் ஸ்பிண்டல், 4 ஆயிரம் ஸ்பிண்டல், 5 ஆயிரம் ஸ்பிண்டல் என்று உற்பத்தி செய்யும் அப்படிப்பட்ட சிறு சிறு ஆலைகளுக்கு, 21 ஆலைகளுக்கு, 3 கோடி ரூபாய் வரையில் இந்தத் தொழில் முதலீட்டுக் கழகம் இதுவரையில் தந்து இருக்கிறது. அந்த ஆலைகள் எப்படிச் செயல்படுகின்றன, அது லாபகரமாக இயங்குகிறதா? அது நஷ்டத்தில் மூழ்கிவிடுமா, என்பதை எல்லாம் பார்க்கவேண்டிய பெரும் பொறுப்பு இந்தக் கழகத்திற்கு இருக்கிறது. ஆகவே இந்த 3 கோடி ரூபாய் வந்த பிறகு இந்த 21 தொழிற்சாலைகளும் நல்ல முறையில் வேலை செய்தால் மற்ற ஆலைகளுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வதற்கு இந்தத் தொழில் முதலீட்டுக் கழகம் தயாராக இருக்கிறது என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டிட்கோவைப் பொறுத்தவரையில் பாலியஸ்டர் ஃபையபர் பிளாண்டு ஒன்று 10 ஆண்டுகளுக்கு முன்னால் நின்று விட்டதைப் பற்றி குறிப்பிட்டார்கள். இப்போது பாலியஸ்டர் ஃபையபர் பிளாண்டு இங்கே வேலை செய்து கொண்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தற்போது புதியதாக பாலியஸ்டர் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கிற உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் பேசுகிறபோது வெளிநாட்டுக்கு 100 சதவீத ஏற்றுமதி செய்கிற அந்த விரிவாக்கப் பணிகளை எல்லாம் எடுத்துச் சொல்லி அதிலே மற்ற மாநிலத்தவர்களுக்குத்தான் விடுகிறோம், மத்திய அரசில் அந்த ஆணை





பிறப்பிக்கிற குழு இருக்கிற காரணத்தால் நமக்குக் கிடைக்காமல் போகிறது என்ற ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். இந்த வேளையில் இங்கே 43 தொழில்கள் வர ஆரம்பித்து இருக்கின்றன. அங்கே நிறைய அளவில் தமிழ்நாட்டுக்காரர்கள் போட முன்வருவது இல்லை என்பதுதான் நமக்கு இருக்கிற குறைபாடு. வெளிநாட்டுக்காரர்களுக்கு மட்டும் அந்த ஏற்றுமதித் துறையில் இருக்கிற நிறுவனம் இயங்கப் போவதாக இல்லை. யார் வேண்டுமானாலும் அங்கே வந்து தொழிலை உருவாக்கலாம். ஆனால் 100 சதவீத ஏற்றுமதிக்கான பொருட்களாக இருக்க வேண்டும் என்பது தான் நிபந்தனை. அப்படிப்பட்ட நல்ல தொழில்களை வெளிநாட்டில் இருக்கிற தமிழர்களோடு தொடர்பு கொண்டு தோழர்கள், வெளிநாட்டு நிறுவனங்களோடு ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்பு இருப்பவர்கள், ஏற்கனவே ஏற்றுமதித் துறையில் அந்த வர்த்தகத்திலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டு இருக்கிற வணிகப் பெருமக்கள் போன்றவர்கள் தங்கள் தங்கள் தொழிலையோ அல்லது வேறு வகைப்பட்ட தொழிலையோ கொண்டுவந்து போட ஆரம்பிப்பார்களானால் அவர்களுக்கு எல்லாம் அங்கு வாய்ப்பு தேடித் தருவதற்கு வசதியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குழுவிலே தொழில்துறைச் செயலாளர் அவர்களும் உறுப்பினராக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அதற்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிப் பேசும்போது 100 பேர் வேலை பார்க்கும் தொழிற்சாலை கூட அங்கே இல்லை என்று சொன்னார்கள். பெரிய நூற்பாலை அங்கே இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

அது அல்லாமல், மத்திய அரசாங்கம் ஒரு பெரிய அளவில், பல்வகை மண்ணை எடுத்து அனுப்புகிற, அணு தயாரிப்பதற்கு, தோரியம் போன்ற பொருட்களை எடுத்து அனுப்புகிற தொழிற்சாலையை நடத்தி வருகிறது. நார் மூலமாக பெரிய தொழிற்சாலை ஒன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முந்திரித் தொழிலிலே ஏராளமான மக்கள் அங்கே வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் புதிதாக முந்திரித்

தொழிலிலே ஈடுபடுவது என்பது முடியாது. சின்னச் சின்னதாக, நிறைய வைத்துக் கொண்டு ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்புத் தருகிற தொழிலாக இருக்கிற காரணத்தாலே அரசு அந்தத் துறையிலே ஈடுபடுவதற்கு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு முறை கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்தால், எவ்வளவு தொழில்கள் இருக்கின்றன என்பதை நாடு அறிந்து கொள்ள வசதியாக இருக்கும். திரு. பாண்டுரங்கம் அவர்கள் பேசும்போது பல கருத்துக்களை இங்கே குறிப்பிட்டார்கள்.

அதேபோல் திருவாளர்கள் கதிர்வேலு, ரமணி ஆகியோரும் குறிப்பிட்டார்கள். திரு. முருகானந்தம் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அந்தக் கரும்பாறை கிடைக்கிற தொழிற்சாலைகள் எல்லாம் என்னிடத்திலே கொடுத்தால் நான் ஒரு கோடி ரூபாய் சம்பாதித்துக் கொடுப்பேன் என்று சொன்னார். நல்ல வேளை, இப்போதே டாமின் ரூ. 1 கோடி சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. மேலே ஏதாவது சொல்லியிருந்தால் அவர்களுக்கே கொடுத்து இருக்கலாம். இன்னும் கொஞ்ச நாள் கழித்து நஷ்டம் வந்தால், அவரிடத்திலே தருவது பற்றி யோசிக்கலாம் என்று கருதுகிறேன். கரும்பாறைத் தொழில் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது. எச். ஜி. ஆறுமுகம் பேசும்போது, அந்த கரும்பாறை கிடைக்கிற இடத்திலேயே அறுத்து அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற தொழிற்சாலையைக் கட்டவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் செய்வது சரியாக இருக்காது. ஏனெனில், கரும்பாறைகள், கிரானைட் அந்தக் கற்கள் தர்மபுரி மாவட்டத்தில் தான் நிறைய கிடைக்கிறது. அதை வெட்டி எடுக்கும்போது, கீழே விழுந்து விட்டால் வெளிநாட்டுக்காரர்கள் வாங்கமாட்டார்கள். அதை அறுத்து வெளிநாட்டுக்கு அனுப்புகிறபோது, அந்தக் கல் கொஞ்சம் கீறல் விழுந்தாலும், கீழே போட்டாலும் உடைந்து விடும். கல்லை வெட்டி எடுக்கும்போது தான் பாறையாகத் தெரிகிறதே தவிர, அது உடைந்து விடக் கூடியது. ஆகவே தான் பெரும்பாலான ஏற்றுமதி வணிகர்கள், அதை பாலிஷ் செய்தால் உடைந்து விடும் என்று கருதி, பாலிஷ் செய்யாமலே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தால் தான் லாபம் என்று ஏற்றுமதி செய்வதை வணிகத்துறையை அறிந்தவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.





ஆகவே தான் சென்னைக்கு அருகிலே துறைமுகத்திற்குப் பக்கத்திலே ஒரு தொழிற்சாலை இருக்க வேண்டும் என்று கருதி, அதற்காக ஒரு தொழிற்சாலையைத் தற்போது உருவாக்கிக் கொண்டு வருகிறோம். அது 10 ஆண்டுக் காலத்திற்குத் தான் நிற்கும் என்று முருகானந்தம் அவர்கள் சொன்னார். நானே போய்ப் பார்த்தேன். நமக்கெல்லாம் பிறகுகூட, ரொம்ப வருஷத்திற்கும், 100 ஆண்டுக்கு மேலே அது இருக்கும். ஏனெனில் இ.இ.சி. கம்பெனி அதை அவ்வளவு அற்புதமாகச் செய்கிறார்கள். அதற்குக் காரணம், சென்னையிலே சில வேளைகளிலே புயல் அடிக்கிறது. புயல் அடிக்குமானால் போர்டுகள் பறந்து விடக் கூடும். வேறு ஏதாவது நிலைமைகள் ஏற்பட்டு விடக்கூடும் என்பதற்காக, கான்க்ரீட்டிலே சிலாபுகள் செய்து எவ்வளவு பெரிய புயல் 180 மைல் வேகத்திலே வந்தாலும் தாங்கக்கூடிய அளவில் கூரைகளை வைத்து, தொழிற்சாலையை மிக நல்ல முறையில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இ.இ.சி. நிறுவனம் எப்போதுமே பெரும்பாலும் பெரிய கான்டிராக்ட்-ஆகத்தான் எடுப்பார்கள். அதாவது 2 கோடி ரூபாய்க்குக் குறைந்து கான்ட்ராக்ட் எடுப்பதில்லை. ஒரு தனிப்பட்ட, ஸ்பெஷல் வேலை என்று அவர்கள் எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ரமணி அவர்கள் பேசுகிறபோது, நம்முடைய நாகப் பட்டினம் பகுதியில் ஒரு அணு மின் நிலயம் என்று சொன்னார்கள். அனல் மின் நிலையம் என்று மாற்றிக்கொண்டார்கள். அப்படிப்பட்ட எண்ணம் சர்க்காரிடம் இருக்கிறதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. மின்சாரத் துறையிலே கேட்டால் தான் அதைப்பற்றிய விளக்கங்கள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

மற்றவர்கள் எல்லாம் இங்கே பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். திரு. ரமணி அவர்கள் பேசும்போது, அவருக்கே அது தெரியும், ஆகவே, அவர் ரொம்ப ஜாக்கிரதையாக நெய்வேலியிலே வெட்டுகிற நிலக்கரிக்கு ராயல்ட்டி வாங்குகிறீர்களா என்று கேட்டார்கள். அவர் தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறார். வாங்குகிறார்களா, இல்லையா என்பது அவருக்கே தெரியும். வாங்குவது கிடையாது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தை மத்திய அரசுக்கு அந்தக் காலத்திலேயே டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் தந்தபோதே, ராயல்ட்டி போன்றவைகளை வாங்குவதில்லை

என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டது. உற்பத்தி செய்கிற மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்றும், மின்சாரம் இருந்தால் நான் காரியங்கள் ஆற்றமுடியும் என்ற நல்ல நோக்கத்தோடு, மத்திய அரசு உதவியை வாங்கிக்கொண்டு வந்து அந்த நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவப்பட்டது. ஆகவே, ராயல்ட்டி வாங்குவது கிடையாது. மாநில சர்க்காருக்கு இருக்கிற நிதிநிலை ஆதாரங்களையும் பார்க்கிறபோது, நாங்கள் தொடர்ச்சியாக, எப்படியாவது கொஞ்சம் ராயல்ட்டி கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ச்சியாக கடிதப் போக்குவரத்துக்கள் நடந்து கொண்டே இருக்கின்றது. அதோடு தமிழகத்திலே இன்றைக்கு பல்வேறு நிலைமைகளில் தொழில் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

தொழில் வளரவில்லை, தொழில் வளரவில்லை என்றெல்லாம் பல பேர்கள் சொல்லிய வண்ணம் இருக்கிறார்கள். தொழிலைப் பொறுத்தவரையில் நிறைய வளர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு இன்றைக்கு எந்த அளவிற்கு இருக்கின்றது என்றால், கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுப்பதிலே தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. அந்த அளவிற்கு இங்கேயுள்ள தொழில்கள் இலாபகரமாக நடந்து, வாங்கிய கடன்களைத் திருப்பித் தருகின்ற எண்ணத்தோடு திருப்பித் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், தமிழ்நாடு அதில் நல்லபடியாக நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

1977 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையில் 600 புதிய பெரிய தொழில்களையும், மத்திய தரத் தொழில்களையும் தமிழ்நாட்டிலே உருவாக்கியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் திரு. இராமநாதன் அவர்கள் கேட்டார்கள். 18,789 தொழில்கள் 1977 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றன. இப்பொழுது ரிஜிஸ்ட்ரேஷனைப் பொறுத்தவரையில் 49,920 ஆக வளர்ந்து, 1985 ஆம் ஆண்டு





60,259 பேர் தொழில் போட வேண்டுமென்று விண்ணப்பங்களை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, 300 சதவீதம் தொழிலிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் தமிழகத்தில் தோன்றியிருக்கிறது என்பதை மட்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு பத்தாவது இடத்திற்குப் போய்விட்டது; 13-வது இடத்திற்குப் போய்விட்டது என்று ஆங்காங்கு, எந்தப் புள்ளி விவரமும் இல்லாமல் பொத்தாம்பொதுவிலே அவரவர்களும் பேசிக்கொண்டிருப்பதை அடிக்கடி நான் பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறேன். அதற்கு ஒரு பதிலையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்டஸ்ட்ரியல் லைசென்சஸ் என்று சொல்லக்கூடிய தொழில் உரிமங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய இந்தியாவில் மராட்டிய மாநிலம் 334 தொழில் உரிமங்களைப்பெற்று இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. மராட்டிய மாநிலம் முதலிடம் வகிப்பதற்குப் பெரிய காரணம் வெள்ளைக்காரர்கள் வந்த பொழுதே பம்பாயை அவர்கள் பெரிய அளவிற்கு வளர்த்தார்கள். அதற்குப்பிறகு இந்திய அரசும் தொடர்ச்சியாக வளர்த்துக் கொண்டிருக்கிறது. ஒருநாளைக்கு மட்டும், 92 விமானங்கள் அங்கே வந்து போகின்றன, வெளிநாட்டு விமானங்கள். அதுமட்டுமல்லாமல் நூற்றுக் கணக்கில் கப்பல்கள் வருகின்றன; இயற்கைத் துறைமுகம் இருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களினால் அந்த மாநிலம் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆகவே, இன்னமும் முதலிடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கடுத்தபடியாக, உத்தரப் பிரதேசம் 218 உரிமங்களைப் பெற்றிருக்கிறது; குஜராத் 187 உரிமங்களைப் பெற்றிருக்கிறது. நம்முடைய தமிழ்நாடு 169 உரிமங்களைப் பெற்று நான்காவது இடத்தில் நாம் நிற்கிறோம் என்பதையும், இன்னும் மேலும் அதிக உரிமங்களைப் பெற வேண்டுமென்பதுதான் தமிழக அரசுக்கு இருக்கின்ற எண்ணம் என்பதையும், தொழில் துறையைப் பொறுத்தவரையில் யார் வேண்டுமென்றாலும் தொழில் உரிமங்களைக் கேட்டு இங்கே வருவார்களேயானால் அவர்களுக்கு இந்த அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1985 ஜூன் 14

அதைப்போலவே, தமிழ்நாட்டிலே உற்பத்தியைப் பொறுத்த வரையில் 1970 ஆம் ஆண்டை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், 1970 ஆம் ஆண்டிலே 132 சதவிதம்; இந்தியாவோடு நாம் தொடர்புபடுத்திப் பார்க்கின்ற பொழுது 1977 ஆம் ஆண்டு 142 சதவீதம்; அந்த அளவிற்கு நாம் வளர்ச்சியடைந்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அகில இந்திய அடிப்படையில் பார்க்கிற பொழுது 1982 ஆம் ஆண்டில் 213.3 சதவீதம் நாம் வளர்ச்சிடைந் திருக்கிறோம். ஆகவே, தமிழ்நாட்டிலே உற்பத்திப் பெருக்கம் தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது என்பதையும், அந்த அளவிற்கு நாம் அகில இந்திய அளவிலே ஒரு பெரிய பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டு வருகிறோம் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தம்முடைய நாட்டில் உற்பத்தியாகின்ற மோட்டார் வாகனங்கள் என்று சொல்லத் தகுந்த வகையில் இந்தியாவிலே உற்பத்தியாகின்ற மோட்டார் வாகனங்களில் நான்கில் ஒரு பங்கு இங்குதான் உற்பத்தி யாகிறது; சிமெண்டைப் பொறுத்தவரையில் ஐந்தில் ஒரு பங்கு நாம்தான் உற்பத்தி செய்கிறோம்; காஸ்டிக் சோடா, ஃபெர்ட்டிலைசர் இரண்டும் ஐந்தில் ஒரு பங்கு நாம்தான் உற்பத்தி செய்கிறோம்; டீசல் என்ஜின்களைப் பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பங்கு நாம் உற்பத்தி செய்கிறோம். அதைப் போலவே, நம்முடைய நூற்பாலைகளை எடுத்துக்கொண்டால் நான்கில் ஒரு பங்கு இந்தியாவிலே தமிழ்நாட்டிலேதான் இருக்கிறது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதோடு, பம்ப் செட்கள், டைப்ரைட்டர் ஆகியவைகளை எடுத்துக் கொண்டால் அதிலேயும் மூன்றில் ஒரு பங்கு நாம் தான் உற்பத்தி செய்கிறோம்.

அதைப் போலவே, சர்க்கரையை எடுத்துக் கொண்டால், பத்தில் ஒரு பங்கை நாம் உற்பத்தி செய்கிறோம். சைக்கிளை எடுத்துக் கொண்டால் பத்தில் ஒரு பங்கை நாம் உற்பத்தி செய்கிறோம்.



1985 ஜூன் 14] [திரு. க. இராசாராம்]

கால்ஷியம் கார்பனேட்டிலே 60 சதவீதம் நாம்தான் உற்பத்தி செய்கிறோம்.

தோல் பொருளிலே 60 சதவீதம் நாம்தான் உற்பத்தி செய்கிறோம். ஏற்றுமதியிலே அதிகமாக செய்துகொண்டு வருகிறோம். ஆக, இந்த வகையில் தமிழகத்தில் தொழிலே இல்லை, இல்லை என்கிற நிலைமை இல்லாமல் நிறைய உற்பத்திப் பெருக்கமும்; உற்பத்தி செய்கிற வல்லமை வாய்ந்த தொழிலாளர்களும் இந்த மண்ணிலேதான் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, இந்த மானியக் கோரிக்கையிலே அணு மின் துறையைப்பற்றி, எலெக்டிரானிக்ஸ் பற்றி குறிப்பிட வேண்டுமென்று முதலிலேயே நான் கேட்டுக்கொண்டேன். எலெக்டிரானிக்ஸ் பொறுத்தவரையில், இப்பொழுது அயல்நாட்டிலே வாழ்கின்ற இந்தியர்கள் இங்கே வந்து தொழில் போட வேண்டுமென்ற அந்த முனைப்போடு இருக்கிறார்கள். ஆகவே, நாம் நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற கோத்தகிரி வட்டத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பிலே ஒரு தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அங்கே, சாப்ட்வேர் என்ற நுட்பமான மின் அணு பொருள்களை உற்பத்தி செய்ய — அந்தப் பூங்கா — அமெரிக்காவில் இருக்கிற மிகச் சிறந்த நிறுவனமான வெஸ்டிங் ஹவுஸ் என்ற நிறுவனத்தினுடைய தொழில் நுட்ப அனுபவத்தை, அந்த நாட்டிலே வாழ்கிற இந்தியர்களுடைய முதலைக்கொண்டு அமைக்கப்படும். இப்பூங்கா அமைப்புத் திட்டத்தில் முதல் கட்டமாக கட்டிடங்கள், மற்றும் உபகரணங்களுக்கு ரூ. 15 கோடி, இரண்டாவது கட்டமாக தொழிற்சாலை அமைப்பதற்கு ரூ. 85 கோடி முதலீடு செய்யப்பட இருக்கிறது. ஆண்டுதோறும் சுமார் ரூ. 10 கோடி மதிப்புள்ள கம்ப்யூட்டர் — நுட்பமான மின் அணு பொருட்கள், அதாவது சாப்ட்வேர்—உற்பத்தி செய்யப்பட்டு, அவை அனைத்தும் 100 சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது.

அதோடு அயல் நாட்டிலே வாழும் இந்தியர்கள் தமிழ் நாட்டிலே முதலீடு செய்து அங்கே உள்ள தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொழில் துவங்குவதற்காக, முயற்சிகளைத் தொடர்ந்து நாங்கள் எடுத்துக்கொண்டு வருகிறோம். இதன் விளைவாக, அமெரிக்காவிலே 'பிஷ' இண்டர்நேஷனல் என்கிற

[திரு. க. இராசாராம்] [1985 ஜூன் 14

ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்திற்கு கனடா, ஜப்பான், கிழக்கு ஜெர்மனி போன்ற பல்வேறு நாடுகளுடைய தொழில் நுட்ப அறிவுள்ள மிகப் பெரிய தொழில் கூடங்களோடு தொடர்பிருக்கிறது. ஆகவே, அவர்களை நாங்கள் ஏற்பாடு செய்து, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாட்டு அரசுக்கு உறுதுணையாக இருந்து, ஆலோசனை கூறுவதற்கும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள இந்த அரசு முன் வந்திருக்கிறது. அந்த வகையிலே பிஷு இன்டர்நேஷனல் நிறுவனத்தினுடைய சேவையை இந்த ஆண்டிலிருந்து தமிழக அரசு பயன்படுத்திக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, சிங்கில் வின்டோ ஏஜன்ஸி என்ற ஒரே குடையின் கீழே எல்லா உரிமங்களையும் பெறுவதற்கான முறையில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் துவங்குவதிலும் அதில் ஏற்படும் இடர்பாடுகளை உடனுக்குடன் களைவதற்காகவும் ஒரு குடையின் கீழ் என்கிற ஒரு புதிய அமைப்பை மாநில அளவில் அரசு அமைத்திருக்கிறது. இந்த அமைப்பு தொழில் துறை செயலாளர் தலைமையில் இயங்கி வருகிறது. இதில் சிப்காட் தலைவரும், மின் வாரியத் தலைவரும், தொழில் வணிக இயக்குநர் மற்றும் அரசுத் துறை செயலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளியன்று இந்த அமைப்பு கூடுகிறது. அதில் தொழில் முனைவர் குறைகளை நேரடியாகக் கேட்டு, பரிசீலனை செய்து தக்க முடிவுகள் உடனுக்குடன் எடுக்கப்படுகிறது.

சென்ற 1985 பிப்ரவரி திங்கள் முதல் இந்த அமைப்புச் சிறப்பாக இயங்கி வருகிறது. இதுவரை இப்பேர்ப்பட்ட 39 கோரிக்கைகளின் மீதும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதே போன்ற அமைப்பு மாவட்ட அளவில், ஒவ்வொரு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு கடந்த ஓராண்டு காலமாக இயங்கி வருகிறது. இந்த அமைப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பிரதி மாதம், அல்லது மாதத்திற்கு இரண்டு முறை கூடி சிறு தொழில் முனைவர்கள் இடர்ப்பாடுகளைக் களைந்து வருகிறது. தொழில் துறையின்கீழ் இயங்கும் தொழில் வணிகத்துறை அலுவலகங்களும், சிப்காட், டிட்கோ, டான்சி போன்ற நிறுவனங்களும் சென்னையில் பல்வேறு இடங்களிலே இயங்கி வருகின்றன.



1985 ஜூன் 14] [திரு. க. இராசாராம்]

இதனால் தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் புதிதாக தொழில் தொடங்க முனைபவர்களுக்கும் பல இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டு ஒரே இடத்தில், தொழில் தொடங்கவுள்ள அனைத்து அலுவலகங்களும் நிறுவனங்களும், இயங்கும்வண்ணம் பல மாடிக் கட்டிடம் ஒன்றை சென்னை மாநகரில் கட்ட அரசு பரிசீலனை செய்து வருகிறது. அதற்குள்ள செலவை சிப்காட் நிறுவனம் ஏற்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிய வட்டங்களாக தமிழ் நாட்டிலே 103 வட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் 15 சத வீதம் மானியம் 30 வட்டங்களிலும், 10 சத வீதம் மானியம் 62 வட்டங்களிலும் வழங்கப்படுகிறது. மாநில அரசு 33 வட்டங்களைத் தேர்ந்தெடுத்து 15 சதவீதம் மானியம் வழங்குகிறது. மத்திய அரசின் 10 சதவீதம் மானியம் பெறும் 22 வட்டங்கள் மாநில அரசின் 15 சதவீதம் மானியம் பெறும் வட்டங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. மத்திய மற்றும் மாநில அரசின் மானியங்களைப் பெறும் தகுதி பெற்று, தொழில்களைத் தொடங்க புதியதாக மேலும் 21 வட்டங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கு 15 சதவீதம் மானியம் வழங்கலாமா என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள 103 வட்டங்களில் 25 வட்டங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கு மத்திய அரசின் மானியத்தையும் மாநில அரசின் மானியத்தையும் இணைத்து மொத்தமாக 25 சத வீதம் மானியம் இரண்டாண்டுகளுக்கு மட்டும் வழங்கலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (டி.என.பி.எல்.,) திருச்சிராப்பள்ளி மாவட்டம் புஞ்சைப்பகளூர் கிராமத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் சுமார் 230 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கூழை உபயோகப் படுத்தி சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆலையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் கேட்டார்கள் என்று கருதுகிறேன். கரும்புச்

சக்கைப் போதுமா என்று கேட்டார்கள். காகிதம் செய்ய முடியுமா என்ற கேள்வியைக்கூட கேட்டார்கள். நானே அந்த தொழிற்சாலையைப் போய் பார்த்தேன். வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காகிதக் கூழ் மூலமாக அற்புதமான காகித உற்பத்திக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது. ஒரு இலட்சம் டன் கரும்புச் சக்கை சேகரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கரும்புச் சக்கையிலிருந்து, ஜூலை மாதத்திற்குள்ளாக, காகிதம் தயாரிக்கப்படும் என்பதையும், தயாரித்த பிறகு மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் காண்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஒரு லெட்டர் பேடே அடித்துக் கொடுக்கிறேன்.

தென் மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்தவும் நடைமுறையில் இடர்பாடுகளைக் கண்டறிந்து களைவதற்கான வழிவகைகளை ஆராயவும், ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளவும் வெவ்வேறு மாநிலங்களின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள ஆந்திரம், கர்நாடகம், கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் தொழில் அமைச்சர்கள் கூட்டத்தை சென்னையில் நடத்த முடிவு செய்து, அதற்கு அரசின் சார்பிலே அழைப்பு விடுத்திருக்கிறேன். அந்தக் கூட்டத்தைத் தொடங்கி வைக்க மத்திய அரசு தொழில் அமைச்சர் அவர்களை நான் அழைத்திருக்கிறேன்.

மின்சக்தி பற்றாக்குறையினாலும் தடைப்பட்ட மின் விநியோகத்தினாலும் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு உதவும் வண்ணம் 'காப்டிவ் பவ்வர் சிஸ்டம்' — சுயதேவைக்கான மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தும் ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகிறோம். இப்போது கும்மிடிப் பூண்டியிலே உருவாக்கப்பட்டிருக்கிற தொழில்பேட்டை, ஹோசூரில் உருவாக்கப்பட்டிருக்கிற தொழில்பேட்டை, இராணிப் பேட்டையில் உருவாக்கப்பட்டிருக்கிற தொழில் பேட்டை, கடலூரிலே உருவாக்கப்பட்டிருக்கிற தொழில்பேட்டை ஆகியவைகளிலே எல்லாம் இப்படி மின்சாரத் தடை வந்து தொழில் பாதிக்கப்படுகிறது என்ற ஒரு பெரிய கூக்குரல் ஏற்பட்டு வருகிறது. இதைத் தவிர்க்க முதல் கட்டமாக சிப்காட் நிறுவனத்திலே மின்சாரத்தை உற்பத்தி செய்கிற பவ்வர் ஜெனரேட்டர்களை உருவாக்கி, ஹோசூர், இராணிப்பேட்டை, கும்மிடிப்



பூண்டி, கடலூர் ஆகிய தொழில் மையங்களிலும், சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்திலும் 15 மெகாவாட் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய அரசு உத்தேசித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் தாம்பரம் அருகே உருவாக்கப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் தமிழக அரசு செய்து வருகிறது. மிகக் குறுகிய காலத்திலேயே சுற்றுப்புற சுவர் வேலைகளும் தண்ணீர் வழங்கும் திட்டமும் விரைந்து செயலாற்றப் பட்டுள்ளன. இதுவரை 43 தொழில் முனைவர்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. இந்த மண்டலத்தின் முன்னேற்றம் குறித்து மத்திய அரசு தமிழக அரசைப் பாராட்டியிருக்கிறது. இந்த மண்டலத்தை விரைந்து அமைக்கும் பொருட்டு தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குழு அவ்வப்போது கூடி தக்க முடிவுகளை எடுத்துக் கொண்டு வருகின்றது. இந்த மண்டலத்தில் இருக்கின்ற தொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்துப் பொருட்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள் என நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிர்வேலு அவர்கள் பேசும்போது நாப்தா பற்றிக் குறிப்பிட்டார்கள். எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை விரிவாக்குவதற்காக இந்தியாவில் கிடைக்கக்கூடிய நாப்தாவைக் கொண்டு மேர்ஜும் கிராக்ஸ் யூனிட் நிறுவ இந்த அரசு மத்திய அரசின் இசைவைக் கோரி இருக்கின்றது. இந்தத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் 300 கோடி ரூபாயாகும். இந்தத் திட்டம் ஜாயின்ட் செக்டார் என்று சொல்லக்கூடிய கூட்டுத் தொழில் துறையில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதிலிருந்து சுமார் 800 கோடி ரூபாய் மதிப்புக்கு ஏராளமான Down-stream products உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதைப்போலவே தமிழகத்தில் கிடைக்கின்ற பல வண்ணக் கற்களைப் பயன்படுத்தி ஜெம் கட்டிங் என்று சொல்லக்கூடிய தொழிலை ஆரம்பிப்பதுபற்றி ஆய்ந்துகொண்டு இருக்கிறோம். அது குஜராத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்

கொண்டிருக்கிறது. அதிலே 3,000 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற தலைமைச் செயலாளர் தமிழகத்தைச் சார்ந்தவர். திரு. ஞானம் என்பது அவர் பெயர். அவர் தொழில் துறை செயலாளராக இருந்த போது அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இப்போது மிக நல்ல முறையில் அந்தத் தொழிலை குஜராத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தத் திட்டத்தை நமக்குக் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறார்கள். கரூர், திருச்சி, காங்கேயத்தில் சமீபத்திலே செய்யப்பட்டு வருகின்ற இந்த சாதாரண கற்களை வெட்டுகின்ற பணியிலே இருக்கின்ற பணியாளர்களை எல்லாம் பயன்படுத்தி வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவில் நம்முடைய நாட்டிலே இருக்கின்ற பல வண்ணக் கற்களை எடுத்து நல்ல முறையில் செய்ய முடியும். அதன் மூலம் ஆயிரம், இரண்டாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அந்த வகையில் ஜெம் ஸ்டோன் பயிற்சிப் பள்ளி அமைத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து சூரத்தில் இருப்பது போல் " Indian Diamond Institute " பிரிவு ஒன்றை திருச்சியில் அமைத்து அதிலே பயிற்சி அளித்து அதன்மூலமாக 100 சத வீதம் ஏற்றுமதிக்கு என்ற அளவில் டைமன்ட் கட்டிங் செய்வதற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அதற்கான ஒரு பெரிய வளாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக குஜராத்தோடு தொடர்பு கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறோம். டாமின், டிட்கோ, தமிழ்நாடு கைவினைப்பொருள் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக சிப்காட் நிதியுதவியுடன் ஒரு ஜாயின்ட் செக்டார் என்ற கூட்டு அமைப்பு உருவாக்கும் எண்ணம் அரசினுடைய ஆய்வில் இருந்து வருகின்றது என்பதையும் அப்படிப்பட்ட கூட்டுத் தொழில் வெகு விரைவில் உருவாக்குவதற்கு நான் முயற்சி எடுப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மின்சாரப்பற்றாக்குறையைப் பற்றி எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். மின்சாரப் பற்றாக்குறையைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் சமீபத்திலே ஹொனலூலு-க்கு போகும்போது அங்கே எம்.பி.பி. என்ற நிறுவனத்தின் மூலமாக காற்றின் வேகத்தை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதை நான் பார்க்கின்ற



வாய்ப்பை பெற்றேன். 150 அடி உயரத்திலிருந்து மின்சாரத்தை எடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த 150 அடி உயரம் மேலே ஏறிப்போய் நான் பார்த்தபோது அங்கே அம்பாஸிடர் கார் போன்று வைத்து 400 கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்துகொண்டிருந்தார்கள். அதற்கு ஒரே ஒரு இறக்கைதான் இருந்தது. 6 கிலோ மீட்டர் வேகத்தில் காற்றடித்தாலும் அந்த மின்சார விசிறி சுற்றுகிறது. அதன் மூலமாக 400 கிலோ வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள். தற்போது 3,000 கிலோவாட் மின்சாரத்தை அவர்கள் அங்கே ஸ்வீடன் நாட்டிலே உற்பத்தி செய்து வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்மோடு தொழில் கூட்டு வைத்துக் கொள்ள விரும்பினார்கள். அவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன்.

நாம் வெடிமருந்துத் தொழிற்சாலை ஒன்றை காட்பாடிக்குப் பக்கத்தில் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். 15 நாட்களுக்கு முன்னால் நான் போய்ப்பார்த்தேன். அந்தத் தொழிற்சாலை நான்கு பக்கமும் மலைசூழ்ந்த பள்ளத்தாக்கில் வைக்கப்பட்டிருக்கின்றது. நல்ல அற்புதமான காற்று வீசிக்கொண்டிருக்கிறது. 16 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து 21 கோடி ரூபாயில் அந்தத் தொழிற்சாலையைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த 21 கோடியோடு இன்னொரு மூன்று கோடி ரூபாய் சேர்த்துப் போட்டால் ஒரு பெரிய காற்றழுத்த மின் நிலையம் கிடைத்துவிடும், அதற்குப் பிறகு மின்சாரத்தைப் பொறுத்த வரையில் எந்தத் தொல்லையும் இல்லாமல் தொடர்ச்சியாக நீங்கள் தொழிலைச் செயல்லாம் என்று சொன்னேன். என்னுடைய ஆலோசனையை அவர்கள் ஏற்றுக்கொண்டு அந்த எம்.பி.பி. நிறுவனத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அதோடு ஜெர்மனியில் இரண்டு மூன்று நிறுவனக்காரர்கள் நம்மோடு இந்த வின்ட் மில் என்று சொல்லக்கூடிய காற்றழுத்த மின்சார உற்பத்தி நிலையங்களை நமக்கு விற்கவும் அந்தத் தொழில்நுட்ப அறிவைத் தருவதற்கும் முன்வந்திருக்கிறார்கள். இப்போது இந்த வின்ட்-எனர்ஜி என்று சொல்லக்கூடிய அந்தக் காற்றாலையை உருவாக்கி செய்யக்கூடிய மின்சாரம், சின்ன சின்னக் கிராமங்களில் ஜப்பான், ஜெர்மனி, மற்றும் தாய்லாந்து நாடுகளிலே போட்டு அவைகள் அங்கே நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஜப்பான்காரர்கள் சின்ன சின்னக் காற்றாலையை

[திரு. க. இராசாராம்] [1985 ஜூன் 14

தமிழகத்திலே ஏற்கெனவே நல்ல பல தொழில் அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நல்லபடியாகவும் மிகச் சிறப்பான முறையிலும் தமிழகத்திலே பல்வேறு பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். அவர்கள் வழியிலே வேகமாக பல தொழில்களை தமிழகத்தில் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அந்த வகையிலே தொழில் தொடங்குபவர்கள் யார் வந்தாலும் நம்முடைய அரசு அவர்களுக்கு வேகமாக எல்லாவித உதவிகளையும் அதுவும் தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. இன்னும் பல்வேறு நிறுவனங்கள் அரசுத் துறையிலே தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் பற்றியெல்லாம் வெவ்வேறு நேரங்களிலே சந்தர்ப்பம் வருகிற போது எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் சொல்லி ஆகவே தமிழ்நாட்டில் புதியதாகத் தொழில் போட முன் வருபவர்கள், தொழில் ஆர்வம் மிக்கவர்கள், அல்லது வெளிநாட்டிலே இருக்கிற முனைவர்களோடு தொடர்பு உடையவர்கள், தொழில் நுட்ப அறிவைப் பெற்று தொழில் போட முன் வருபவர்கள் யாராவது வருவார்களேயானால் அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் இந்த அரசு தரத் தயாராக இருக்கிறது. அப்படி உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள் யார் இருந்தாலும் அவர்களுக்குக் கடிதம் எழுதி இது சம்பந்தமாக தொடர்பு கொள்ளுங்கள் என்று கேட்டு, இந்த மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலைக்கு எங்களைப் போன்ற கரும்பு விவசாயிகள் கரும்பை அனுப்பி, அவர்கள் மூலமாகவே பாங்குகளில் கடன் வாங்கி, அந்தக் கடனுக்கு வட்டியும், முதலும் அந்த நிறுவனத்திலே பிடித்துக் கொண்ட பிறகும், இப்போது அந்தக் கடனை அவர்கள் கட்டாமல் விவசாயிகளுக்குப் பாங்குகளிலிருந்து நோட்டீஸ் அனுப்பி கேஸ் போடுகிற நிலைமை இருக்கிறது. அது 93 லட்சம் ரூபாய் என்று கருதுகிறேன். அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும். அடுத்து 1980-ம் ஆண்டு



1985 ஜூன் 14] (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்)

மதுரை மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அதற்காக நிலம் செம்பட்டை அருகில் பார்த்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் அதிகாரிகளை நியமித்து அதற்கு இரண்டு லட்சத்திற்குச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அங்கே தண்ணீர் இல்லையென்று சொல்லி வேறு பக்கத்திற்கு மாற்றி, அவர்கள் இன்னும் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை தயவு செய்து அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிக்க முடியாவிட்டாலும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்;** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டு தான் சர்க்கார் அந்த ஆலையை எடுத்துக்கொண்டது. பணம் கொஞ்சம் வரவில்லை. அது எனக்கு தெரியும், அதற்கான தக்க நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

**திரு. டி. என். முருகானந்தம்:** தலைவர் அவர்களே, இங்கே டாமின் நிறுவனம் ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக இலாபத்தை ஈட்டித் தந்துக் கொண்டிருப்பதைச் சொன்னார்கள். இந்த 1985-86 அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். உங்களுடைய அனுமதியோடு படிக்கிறேன். 'இந்நிறுவனம் 1984-85 ஆம் ஆண்டின் மொத்த விற்பனையின் அளவை கடந்து விட்டது. இந்த வருடத்தின் மொத்த விற்பனையின் அளவு ரூ. 408.20 இலட்சமாகும். இந்நிறுவனம் 1984-85-ல் நடைமுறை இலாபமாக ரூ. 110 இலட்சங்களும், நிகர இலாபமாக ரூ. 8.14 இலட்சங்களும் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1983-84-ன் நடைமுறை இலாபமான ரூ. 100.00 இலட்சத்திற்கும் நிகர இலாபமான ரூ. 7.88 இலட்சத்திற்கு அதிகமாக உள்ளதென்று' சொல்லியிருக்கிறார்கள். நான் குறிப்பிடுவது அந்த நிறுவனத்தை என்னிடத்தில் ஒப்படைப்பீர்களானால் நான் நிகர இலாபமாக, 'நெட் பிராபிட்' ஒரு கோடி ரூபாய் வருடத்திற்கு கண்டிப்பாகத் தருவேனென்று தான் சொன்னேனே தவிர, அதுபோன்று சொல்லவில்லையென்று அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது. . .

[1985 ஜூன் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலும் சொல்ல ஆரம்பித்தால் அது டிபேட் போல ஆகிவிடும். உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 24—தொழில்கள்**

**திருவாளர்கள் சி. பழனிமுத்து, கோ. வீரய்யன்** ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 24 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 6,63,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 51 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 51 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,35,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் பேரவை 17—6—1985 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.54 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



1985 ஜூன் 14]

**6. அவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.**

எதுவுமில்லை.

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்**

110. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெரும் தொழில்கள்) 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

111. 1985-86 ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

112. 1985-86-ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் பற்றிய செயல் முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

113. 1985-86-ஆம் ஆண்டில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

[1985 ஜூன் 14

## இணைப்பு I

[406 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தொழில் கொள்கையும், திட்டங்களும்.

வேலை வாய்ப்பைப் பெருக்குவதன் மூலம் வறுமையைப் போக்குவதே தமிழ்நாடு அரசின் கொள்கையாகும். குறிப்பாக மிகவும் பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளில் சிறு தொழில்களை வளர்ப்பதன் மூலமும் அதே சமயத்தில் அரசின் நிதி வாயில்களையும் வருவாயையும் பெருக்கப் பெருந்தொழில்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் இந்நோக்கம் எய்தப்படுகிறது. நடுத்தர, பெருந் தொழில்களின் வளர்ச்சியுடன் சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் வளர்ப்பதே மாநில அரசின் கொள்கையாகும். இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, இம் மாநிலம் முழுவதும் பெரும், நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்காக டிட்கோ, டான்சம், சிப்காட், டிக், எல்காட், டி.என்.பி.எல்., தமிழ்நாடு உப்புக் கழகம், டான்சி, டாமின், டான்மாக், சர்க்கரை கழகங்கள் ஆகியவை பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளன.

2. தொழில் வளர்ச்சி.—இம் மாநிலத்தில் தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோரை ஊக்கப்படுத்துவதற்கு மாநில அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இசைவுக் கடிதத்தை அனுமதிப்பதும் அவற்றை தொழில் உரிமங்களாக மாற்றுவதும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 1984 ஆம் ஆண்டில் (டிசம்பர் வரையில்) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்க 90 இசைவுக் கடிதங்களும் 70 தொழில் உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

(i) தமிழ்நாட்டில் 'தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டம்' இல்லை. அதனால், சில வகையான உரிமங்கள் "தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டங்களுக்கு" மட்டுமே ஒதுக்கப்படுவதால் நம் மாநிலம் இக்கட்டான நிலைமையி லுள்ளது. இக்கருத்தை மாற்றி "தொழிற்சாலைகளே இல்லாத வட்டம்" அல்லது "தொழிற்சாலைகளே இல்லாத வட்டாரம்" என்ற கருத்தைப் பின்பற்றுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வந்துள்ளது. இதுகுறித்து மத்திய அரசின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.



1985 ஜூன் 14]

(ii) மேற்கூறிய இடையூறு இருந்து வந்தபோதிலும், மூலதன உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து ஈடுசெய் தொகை பெறுவதைப் பொறுத்தமட்டில், நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடே தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. முக்கியமான தொழில்களுக்கு அனுமதிகளை மத்திய அரசு அளிக்க வேண்டியுள்ளது. விரைவில் அனுமதிகளைப் பெறுவதற்கு மாநில அரசு பரிந்துரைக்கும் இனங்கள் குறித்து புது டில்லியில் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இப்பணியை மிகவும் விரைந்து செய்வதற்கு, புது டில்லியில் மாநில அரசு சார்பில் தொழில் தொடர்பு அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப் பட்டுள்ளது.

3. பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பொதுத் துறையில் பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகள் பலவற்றைத் தொடங்கியுள்ளது. இக்கழகம், தனியார் தொழில் முனைவோரின் ஒத்துழைப்போடு கூட்டுத் துறையில், குறிப்பாகத் தனியார் தொழில் முனைவோர் சொந்தமாகத் தொழிற்சாலைகளைத் தொடங்க முன்வராத பின்தங்கிய பகுதிகளில் இக்கழகம் இம்மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் எண்ணற்ற தொழிற் பிரிவுகளை தொடங்கியுள்ளது. நலிந்த தொழிற்பிரிவுகள் சிலவற்றிற்கும் இது உதவி அளித்துள்ளது. கூட்டுத் துறையில் 31 தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைவதில் இது நாட்டம் செலுத்தி வருகிறது.

4. தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமாக நிறுவப்பட்டது. சிமிட்டி உற்பத்தி, விற்பனை, சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், சாம்பல் கட்டி clinker சிமிட்டி ஆஸ்பெஸ்டாஸ், சிமிட்டி உற்பத்திக்குத் தேவையான ஏனைய பொருட்கள் ஆகியவற்றை விற்பதே இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந் நிறுவனம் நான்கு தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. அவையாவன: (i) ஆலங்குளம் சிமென்ட் ஒர்க்ஸ், (ii) அரியலூர் சிமென்ட் ஒர்க்ஸ், (iii) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ், (iv) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப் ப்ராஜெக்ட்ஸ், அரியலூர் சிமென்ட் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இந்நிறுவனத் திடம் திட்டமுள்ளது. மதுரை மாவட்டம், பாளையத்தில் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு அனுமதி வேண்டி இந்நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

[1985 ஜூன் 14

**5. தமிழ்நாடு கனிம நிறுவனம்.**—சிவகங்கையில் கிடைக்கும் கிராபைட் தாதுப்பொருளைப் பயன்படுத்துவதற்கு ரூ. 1.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. மேலும், அரசு பங்கு மூலதனமாக ரூ. 20 இலட்சமும் வழங்கியுள்ளது. ரூ. 3.85 கோடி மூலதனச் செலவில் கருங்கற்களை வெட்டி மெருகேற்றுவதற்கான மற்றொரு தொழிற்சாலையைத் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசின் பங்கு மூலதனத் தொகை ரூ. 30 இலட்சமாகும். இத்தொழிற்சாலைப் பணி 1985-86 ஆம் ஆண்டில் தொடங்கும்.

6. தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்.—மாக்னசைட்டைப் பயன்படுத்தி ரூ. 80 கோடி மொத்தச் செலவில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் கருதியுள்ளது. முதற்கண் ரூ. 7.65 கோடி செலவில் மாக்னசைட் தாதுப் பொருளை கரிந்த மாக்னசைட் தாதுப் பொருளாக மாற்றுவதற்கு சுழல் சூளை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டப் பணி 1985 ஆம் ஆண்டு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இரண்டாம் கட்டப் பணியாக வெட்டி எடுக்கப்பட்ட தாதுப் பொருளிலிருந்து அதிக அளவில் மாக்னசைட் எடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, மேக்னசைட் தாதுப் பொருளை இரசாயன முறையில் சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 26.5 கோடி செலவில் 1987-ல் தொடங்கக் கருதப் பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்திற்கு அனுமதி வழங்கப்படும். மூன்றாம் கட்டப் பணியாக நவீன உருக்கு ஆலைகளில் பயன்படுத்துவதற்கான ரூ. 45 கோடி மதிப்பீட்டுச் செலவில் உயர்ந்த ரக வெப்பந் தாங்கிக் கற்களைத் தயாரிக்கத் தனித் தொழிற்சாலை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

**7. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.**—தற்போது சர்க்கரை ஆலைகளில் எரிந்துவிடப்படும் கரும்புச் சக்கைகளை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தித் தாள், அச்சுத்தாள், எழுதும் தாள் ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுவரும் செய்தித்தாள் காகிதத்திற்குக் கொடுக்கப் படும் அந்நியச் செலாவணித் தொகையில் ஆண்டுதோறும் ரூ. 40 கோடி அளவில் இந் நிறுவனத்தில் செய்தித்தாள் காகிதம்



1985 ஜூன் 14]

தயாரிக்கப்படுவதால் மிச்சம் ஏற்படும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் காகிதக் கூழையும் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் பணி ஏற்கெனவே தொடங்கப் பட்டுள்ளதோடு, அப்பணி வெற்றிகரமாக நடைபெற்றும் வருகிறது. இவ்வாலை, வணிக முறையிலான உற்பத்தியை விரைவில் தொடங்கும்.

**8. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.**—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மாநில அளவில் உள்ள நிதி நிறுவனங்களில் முதன்மையானதொன்றாகும். வளர்ச்சியைத் தீவிரமாக அதிகரிக்கும் நோக்கத்துடன் நிதியுதவி வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். காலந்தாழ்ந்த தொகை வழங்குவதற்கான உத்தரவாதம், பங்கு மூலதன நிதி உதவி அளிப்பதுடன், கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள் சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்கு வதற்கும் இந்நிறுவனம் கடன் உதவி வழங்குகிறது. கடன் மனுக் களுக்கு விரைவில் முடிவு எடுக்கும் நோக்குடன், கடன் மனுக்கள் வரப்பெற்ற 45 நாட்களுக்குள் அதற்கு முடிவு எடுக்குமாறு இந்நிறுவனத்திற்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

9. தொழில் நுட்பம் அறிந்தவர்கள் அல்லது போதிய முன்னனுபவம் உடையவர்கள் ஆகியோர் முதல் முறையாகத் தொழில் தொடங்கினால் அவர்களுக்குக் குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் திட்டத்தின் விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன; அவ்வாறு அவர்கள் தொடங்கும் தொழில்கள், பின்தங்கிய பகுதியில்லாத இடத்தில் இருந்தால் அவர்களுக்கு வழங்கும் கடன் தொகையின் உயர் வரம்பு மீதான 10 சதவீதக் கட்டுப்பாடும் பின்தங்கிய பகுதியில் அமைந்திருந்தால் 15 சதவீதக் கட்டுப்பாடும் விலக்கப்படுகிறது.

**10. மத்திய அரசின் முதலீடு.**—தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டு வரும் மத்தியத் துறையின் முதலீட்டுத் தொகை மிகவும் குறைவாக உள்ளது. அதிக அளவில் மத்தியத் திட்டங்களைச் செயற்படுத்துமாறு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. மாநிலத்தின் ஏற்றத்தாழ்வை சீர்செய்யுமாறு மாநிலத்தில் புதிய திட்டங்களை மேற்கொண்டும் செயற் படுத்துமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது.

டி 2 A 165—22

**11. சென்னை ஏற்றுமதி மண்டலம்.**—ஏற்றுமதி மண்டலத்தை ஏற்படுத்துவதற்கென்று, சைதாப்பேட்டை வட்டம், தாம்பரத்திற்கருகில் அமைந்துள்ள 228 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மண்டலத்தின் முதல் கட்டப் பணியைத் தொடங்குவதற்கான கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டில் அவை செயற்படுத்தப்படும். இம்மண்டலத்தில் தொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கென்று இதுவரை 26 தொழில் முனைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். இம் மண்டலத்தின் இரண்டாவது கட்டப் பணிக்காக, சுமார் 292 ஏக்கர் நில எடுப்புப் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**12. பெரிய நடுத்தரத் தொழில் ஏற்படுத்த ஒரே மைய அமைப்புக் கோட்பாடு.**—தமிழ்நாட்டில் நடுத்தர பெரிய தொழில்களுக்கு ஒரே மைய அமைப்பாக செயற்பட தொழில் துறை அரசு ஆணையாளர்-செயலாளர் தலைமையில், சம்பந்தப்பட்ட ஏனைய முதுநிலை அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்ட உயரதிகாரக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழு, திங்களுக்கு ஒரு முறை கூடி, நடுத்தர, பெரிய தொழில்களுக்கு அனுமதியுரிமைகள் வழங்குவதையும் அத்தொழில்களுக்கு தேவையான இன்றியமையா அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதையும் விரைவுபடுத்துகிறது.

**13. சர்க்கரைத் தொழில்.**—சர்க்கரை உற்பத்தித் தொழில், கிராமப்புற மக்களுக்குப் பெருமளவில் நேரடியாகவும் பிறவகையிலும் வேலைவாய்ப்புகளை அளித்துக் கொண்டிருக்கிறது. அது, உழவர்களின் பொருளாதார மேம்பாட்டில் வேளாண் சார்புத் தொழிலாக இருக்கும். சர்க்கரை இன்றியமையாத ஒரு பொருளாகும். இத்தொழில் சர்க்கரை வழங்குவதுடன் இந்த ஆலைகள், சாராயத்தை ஆதாரமாகக் கொண்ட தொழில்களுக்கு முக்கிய மூலப் பொருளான கறுப்பஞ்சாற்றுக் கசண்டையும் வழங்கி வருகின்றன. சர்க்கரையின் மற்றொரு துணைப் பொருளான கரும்புச் சக்கை காகிதத் தயாரிப்புக்கு முக்கியமானதொரு மூலப்பொருளாகப் பயன்படுகிறது. சர்க்கரைத் தொழிலின் நன்மையைக் கருதி, 1969-ல் தனியொரு துறை அமைக்கப்பட்டது. இத்துடன் அரசுத் துறையில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கென தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் என்னும் அரசு நிறுவனமொன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது, 11 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 8 தனியார் துறை சர்க்கரை ஆலைகள், 3 அரசுத் துறை சர்க்கரை ஆலைகள், மத்திய



அரசு நிர்வாகத்தில் ஒரு சர்க்கரை ஆலை உள்ளன. புதிதாக சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கென விண்ணப்பங்கள் பல மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்துள்ளன. இம் மாநிலத்தில், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் 10 புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**14. மின் அணுவியல் தொழில்.**—மின் அணுவியல் தொழிலுக்கு மின்சாரம், நீர் ஆகியவை குறைந்த அளவே தேவைப்படுவதாலும், இத்தொழில் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளதாலும், இத்தொழில் தமிழ்நாட்டிற்கு மிகவும் பொருத்தமானதாகும். இம் மாநிலத்தில் மின் அணுவியல் தொழிலை விரைந்து விரிவாக்க சிறப்பான பொறுப்பை மேற்கொள்ளும் நோக்குடனும், தற்கால நவீன வாழ்க்கையில் மின் அணுவியல் தொழில் நுட்பப் பயன்பாட்டை விரைந்து பெருக்கும் நோக்குடனும், மின் அணுவியல்—அறிவியல்—தொழில் நுட்பவியல் என்னும் துறை ஒன்று புதிதாக தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சிறு அளவிலான மின் அணுவியல் தொழிற் பிரிவுகளை ஏற்படுத்த கவனம் செலுத்தப்படுகிறது. இவை குறைந்த மூதலீட்டில் அதிக அளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்ட புதிய வகைத் தொழில் முனைவர்களை உருவாக்க உதவியும் புரிகிறது. இந்நோக்கங்களை எய்த தொழில் நுட்ப அளவில் பயிற்சி பெற்ற, தொழில்களைத் தொடங்கி நடத்த வேண்டும் என்ற முனைப்புடைய, தகுதிவாய்ந்த பணியாளர்கள் இம்மாநிலத்தில் பெருவாரியாக உள்ளனர். பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி. பட்டம் பெற்ற ஏராளமான பெண்களை இத்தொழிலில் பயன்தரத்தக்க விதத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம். மின் அணுவியல் தொழிலுக்கு மிகவும் பொருத்தமான தட்பவெப்ப நிலைகளைக் கொண்ட உதகமண்டலம், ஏற்காடு, கொடைக்கானல், நீலகிரி போன்ற பல மலைப் பகுதிகளை இம்மாநிலம் கொண்டுள்ளது. சோதனை நிலையங்களுக்கென்றே உரிய மின் அணுவியல் தொழில் பிரிவுகளுக்காக தொழிற்பேட்டைகளை அமைப்பதன் மூலம், மின் அணுவியல் தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதற்கு சிறந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் சோதனையிடும், தரக்கட்டுப்பாடு செய்யும் பணிகளை குறைந்த செலவில் செய்கின்றன. இதன்மூலம் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அடிப்படைத்

தொழில் நுட்பத் தகவலை அளிக்கும் புள்ளி விவர வங்கிக்கும் தகவல் நிலையத்திற்கும் உதவி புரிகிறது. இம்மாநிலத்தில், மின் அணுவியல் தொழிலை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட அரசு நிறுவனமாக "எல்காட்", ஓசூரில் நிறுவப்பட்டுள்ள மின்பிரி மின்னியல் உறைகலம் தயாரிக்கும் தொழிற்சாலை, சென்னையில் தகவல் தொடர்பு முறைத் திட்டம்; அடையாறு இன்ஸ்ட்ரானிக்ஸ் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள எண்காட்டி மணி காட்டும் எலக்ட்ரானிக்ஸ் கைக் கடியாரம் தயாரிக்கும் திட்டம் போன்ற பொதுத் துறைத் திட்டங்களை எடுத்துக் கொண்டுள்ளது. இவற்றுடன் பல கூட்டுத் துறைத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குவார்ட்ஸ் அனலாக் வால் இளாக்ஸ்—டைம் சிஸ்டம்களை சிறு அளவில் தயாரிப்போருக்கு விற்பனை வசதியையும் இக் கழகம் செய்து கொடுக்கிறது. ஏற்றுமதி வாய்ப்பைக் கொண்ட திட்டங்களுக்கு குறிப்பாக கம்யூட்டர் சாப்ட்வேர் திட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்க இக்கழகம் கருதியுள்ளது. இம்மாநிலத்தில் மின் அணுவியல் தொழிலை விரைந்து வளர்ச்சியடையச் செய்வது தொடர்பாக, 23—3—1985 ஆம் நாளன்று சென்னைக்கு வருகை தந்த மத்திய அரசு மின் அணுவியல் குழுத் தலைவர் டாக்டர் சஞ்சீவி ராவ் அவர்களுடன் மாண்புமிகு தொழிலமைச்சர் ஏற்கெனவே விரிவாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார்.

### தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

### (டிட்கோ.)

தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு நான்கு கிளை நிறுவனங்கள் உள்ளன. இம்மாநிலத்தில் கூட்டுத் துறை நிறுவனங்களைத் தொடங்குவதில் தான் டிட்கோ தனது முழு முயற்சியையும் மேற்கொண்டு வருகின்றது. கூட்டுத் துறை நிறுவனத்திற்கு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 26 சதவீதம் பங்குத் தொகையையும் இதன் சக தொழில் முனைவர் 25 சதவீத பங்குத் தொகையையும் கொடுக்கின்றனர்.



எஞ்சியுள்ள 49 சதவீதத்திற்கு இந் நிறுவனம் பொதுமக்களை நாடுகின்றது. பொதுவாகத் திட்டச் செலவில் 1/3 பங்கு பங்கு மூலதனத் தொகையாகவும், 2/3 நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகவும் பெறப்படுகிறது.

2. 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி (a) உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகள் (b) நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை பற்றிய விவரங்களைப் பின்வரும் அறிக்கை காட்டுகிறது :—

| விவரம். | தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்). | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| I. பொதுத் துறை— | | | |
| உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகள். | 6 | 65.49 | 3,815 |
| நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள். | 4 | 51.48 | 1,335 |
| II. கூட்டுத் துறை— | | | |
| உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகள். | 23 | 229.13 | 6,655 |
| நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள். | 9 | 218.97 | 4.155 |
| மொத்தம் .. | 42 | 565.07 | 15,960 |

3. 1—1—1985ஆம் நாள் முதல் 31—3—1985ஆம் நாள் வரையிலான கால அளவில், பின்வரும் தொழிற்சாலைகள் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1985 ஜூன் 14

| விவரம். | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்). | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I. பொதுத் துறை— | | |
| ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் தொழிற்சாலை. | 9.45 | 283 |
| II. கூட்டுத் துறை— | | |
| 1. பையர் பைப்ஸ் (இந்தியா) லிமிடெட். | 2.00 | 300 |
| 2. ஃபாப்லின் லிமிடெட் .. .. | 1.34 | 410 |
| 3. தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிகல்ஸ் லிமிடெட். | 18.20 | 307 |
| மொத்தம் .. | 30.99 | 1,300 |

4. 1985–86 ஆம் ஆண்டில் பின்வரும் தொழிற்பிரிவுகள் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப் பட்டுள்ளது :—

| விவரம். | மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்). | வேலை வாய்ப்பு) (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I. பொதுத் துறை— | | |
| 1. தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் எக்ஸ்ப்ளோசிவ் லிமிடெட். | 20.85 | 540 |
| 2. மக்னீசியம் உலோகத் தொழிற்சாலை. | 5.20 | 110 |
| II. கூட்டுத் துறை— | | |
| ஆட்டுத் தோல் தொழிற்சாலை .. | 1.60 | 150 |
| மொத்தம் .. | 27.65 | 800 |



1985 ஜூன் 14]

5. இன்றைய நாள் வரையில் உற்பத்தி செய்து வரும் நிறைவேறிவரும் 42 திட்டங்களில் 31 திட்டங்கள் மாநிலத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் நிறைவேற்றப் படுகின்றன. குறிப்பாகத் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமாறு டிட்கோ கவனித்துக் கொள்கிறது.

6. மேற்கண்டவற்றுடன் திட்டச் செலவு ரூ. 276.82 கோடி ஆகக்கூடியதும், 6,100 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கக்கூடியது மான 16 தொழில் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்களின் குறிக்கோள்களை வகுத்தல், சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரித்தல், தொழில் உரிமம் பெறுதல்/தொழில் நுட்ப வளர்ச்சி மேளாண்மை இயக்குநரிடம் பதிவுசெய்தல் முதலிய பல்வேறு நிலைகளில் இத்திட்டங்கள் உள்ளன.

7. டிட்கோ நிறுவனம் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கி யுள்ள திட்டங்களின் மூலம் இதுவரை ஏறக்குறைய 10,500 பேருக்கு வேலை வாய்ப்பு நல்கியுள்ளது.

8. 1984 ஆம் ஆண்டில் 'டிட்கோ' நிறுவனம் கூட்டுத் துறையில் ஆறு தொழில் முனைவோருடன் சேர்ந்து தொழில் தொடங்க அதற்கான ஒப்பந்தங்களில் கையொப்பமிடப் பட்டுள்ளது. டிட்கோ நிறுவனத்தின் அனுமதியளிக்கப்பட்ட மூலதனத்தை ரூ. 60 கோடிக்கு அரசு உயர்த்தியுள்ளது. கூட்டுத் துறையில் செயற்படுத்த லீனியர் ஆல்கைல் பென்சீன் தயாரிக்கும் ஒரு முக்கியமான திட்டம் சமீபத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

9. டிட்கோ நிறுவனத்திற்கு வரி செலுத்துவதற்கு முன்னர் கிடைத்துள்ள ஆதாயம் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | ஆதாயத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1980-81 | 29.60 |
| 1981-82 | 159.80 |
| 1982-83 | 192.75 |
| 1983-84 | 163.03 |

1984-85 ஆம் ஆண்டிலும் டிட்கோ நிறுவனம் நல்ல ஆதாயத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இனி வரும் ஆண்டுகளிலும் இதே போல் ஆதாயத்தை ஈட்டும் என்று டிட்கோ நிறுவனம் நம்புகிறது.

### தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் (டான்செம்).

1. பொது.

1.1. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் (டான்செம்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுவதும் சொந்தமான கிளை நிறுவனமாக 11—2—1976 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது.

1.2. இந்நிறுவனம் ரூ. 10 கோடி அனுமதியளிக்கப்பட்ட மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. இந்த மூலதனம் 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ரூ. 11 கோடியாக உயர்த்தப்பட்டு, 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ரூ. 12.50 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டது. இத்தொகையில் ரூ. 12.36 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

1.3. டான்செம் 1—4—1976 ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது. சிமெண்ட்டை உற்பத்தி செய்து விற்பனை செய்தல், சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், சுட்ட சுண்ணாம்பு, சிமெண்ட்கல் நார் தகடுகள் முதலியனவும், சிமெண்டு தயாரிப்புக்குத் தேவையான ஏனைய தொடர்புடைய பொருட்களையும் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்த நிறுவனம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தனது நோக்கங்களை நிறைவேற்றி வருகிறது.

2. தற்பொழுது பின்வரும் நான்கு தொழில் பிரிவுகள் 'டான்செம்' நிறுவனத்தின்கீழ் இயங்கி வருகின்றன :—

| சிமெண்டுத் தொழிற் பிரிவு. | உற்பத்தி. | ஆண்டு ஒன்றுக்கு நிறுவு திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (a) ஆலங்குளம் சிமெண்டு ஆலை. | சிமெண்டு | 4 இலட்சம் மெ. டன். |
| (b) அரியலூர் சிமெண்டு ஆலை. | சிமெண்டு | 5 இலட்சம் மெ. டன். |



| சிமெண்டுத் தொழிற் பிரிவு. | உற்பத்தி. | ஆண்டு ஒன்றுக்கு நிறுவு திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல் நார் தொழிற் பிரிவு. | | |
| (a) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ். | கல் நார் தகடுகள், துணைப் பொருட்கள். | 36,000 மெ. டன். |
| (b) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் பிரஸ்ஸர் பைப் திட்டம். | கல் நார் அழுத்தக் குழாய்கள். | 36,000 மெ. டன். |

2.1. அரியலூர் சிமெண்டு ஆலையின் உற்பத்தித்திறனைப் பெருக்க அதாவது ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்த டான்செம் நிறுவனம் கருதியுள்ளது.

### 3. ஆலங்குளம் சிமெண்டு ஆலை.

3.1. ஆலங்குளம் சிமெண்டு ஆலையானது 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த ஆலை 1970 ஆம் ஆண்டில் வணிக முறையிலான உற்பத்தியில் ஈடுபட்டது. அப்போது இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

3.2. இந்த ஆலை தமது உற்பத்தி இலக்கினை எய்த இயலவில்லை. தேசிய அளவில் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டது, உயர் அழுத்த மின்சாரத் தேவைக்கு தடை விதித்து, உயர் அழுத்த மின்சக்தி பயனீட்டாளர்களுக்கு மின்வெட்டு விதித்தது, போதிய அளவிற்கு ரயில்வே வேகன்கள் கிடைக்காதது முதலிய வெளியில் ஏற்பட்ட பெரிய இடர்ப்பாடுகளின் காரணமாக இந்த ஆலையின் உற்பத்தித்திறன் குறைந்தது.

3.3. இந்த ஆலையின் உற்பத்தி, விற்பனை பற்றிய விவரங்கள் 1—4—1976 ஆம் நாளிலிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | இந்த ஆண்டில் உற்பத்தி. (மெட்ரிக் டன்களில்). | இந்த ஆண்டில் விற்பனை. (மெட்ரிக் டன்களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1976–77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977–78 .. .. .. | 3,09,105 | 3,07,607 |
| 1978–79 .. .. .. | 3,19,277 | 3,20,377 |
| 1979–80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980–81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981–82 .. .. .. | 2,93,515 | 2,92,399 |
| 1982–83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |
| 1983–84 .. .. .. | 2,43,435 | 2,38,158 |
| 1984–85 .. .. .. (31—3—1985 வரை). | 3,40,031 | 3,44,09 |

3.4. இந்த ஆலையில் நவீனமயமாக்குதல், மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 490 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1984 ஜனவரி மாதத்திலிருந்து ஆலங்குளம் ஆலையின் உற்பத்தியானது சீராக உள்ளது. 1984 ஜனவரியிலிருந்து 1985 ஜனவரி வரையில் ஆன சராசரி உற்பத்தித் திறனானது நிறுவுத் திறனில் 92.47 சதவீதமாகும். இக்கால அளவில் 6 மாதங்களுக்காக ஆலை நிறுவுதிறனில் 100 சதவீதத்திற்கும் மேல் உற்பத்தி இருந்தது.

3.5. ஆலங்குளம் ஆலையானது பின் தங்கிய பகுதிகளில் ஏறத்தாழ 1,600 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளிப்பதோடு மூலப் பொருட்களையும், வேலை நிறைவு பெற்ற பொருட்களையும் கொண்டு செல்வதற்காக அப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேறு வகையில் கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

## 4. அரியலூர் சிமெண்டு ஆலை.

4.1. அரியலூர் சிமெண்டு ஆலையானது ஓர் உலர் செய்முறை ஆலையாகும். இதன் ஆண்டொன்றின் நிறுவுத்திறனானது 5 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். டிட்கோ நிறுவனம் இத்திட்டத்தை ரூ. 2,876 இலட்சம் செலவில் முதன் முதலில் தொடங்கியது. இத்திட்டத்திற்கு சம பங்குத் தொகை என்ற வகையில்



பூட்டோ நிறுவனம் ரூ. 575 இலட்சம் ரூபாயும், அனைத்திந்திய நிதி உதவி நிறுவனம், நிதி உதவி (கடன்) என்ற வகையில் 1,800 இலட்சம் ரூபாயும், வணிக் வங்கிகள் 501 இலட்சம் ரூபாயும் நிதி உதவி அளித்தன.

4.2. இத்திட்டப் பணிகள் அரியலூரில் 1977 ஜனவரியில் தொடங்கப்பட்டன. 1—8—1979 ஆம் நாளன்று சிமெண்டு உற்பத்தி தொடங்கப்பட்டது. அரியலூர் சிமெண்டு ஆலை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டதோடு மட்டுமின்றி, அடிக்கல் நாட்டிய 30 மாதங்களுக்குள் வணிக ரீதியில் உற்பத்தியையும் தொடங்கியது.

4.3. இந்த ஆலையின் உற்பத்தி, விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | இந்த ஆண்டில் உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | இந்த ஆண்டில் விற்பனை. (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979–80 .. .. .. (8 மாதங்களுக்கு) | 1,15,919 | 1,15,525 |
| 1980–81 .. .. .. | 2,46,733 | 2,41,949 |
| 1981–82 .. .. .. | 2,84,350 | 2,87,474 |
| 1982–83 .. .. .. | 2,47,300 | 2,47,836 |
| 1983–84 .. .. .. | 3,01,366 | 2,99,377 |
| 1984–85 .. .. .. (31-3-1985 வரையில்). | 2,84,366 | 2,80,569 |

4. 4. இது செயல்படத் தொடங்கிய கால அளவில் நிலக்கரி பற்றாக்குறை, மின்சக்தி பயன்படுத்துவதிலான தடைகள் போதிய எண்ணிக்கைக்கு இரயில்வே வேகன்கள் கிடைக்கப் பெறாமை முதலிய புறக்கட்டுப்பாடுகளையும், இயந்திர இயக்க கோளாறுகளையும் இந்த ஆலை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இயந்திர இயக்க கோளாறுகள் பெரும்பாலும் சரி செய்யப்பட்டுள்ளன. புறக்கட்டுப்பாடுகளை சமாளிப்பதும், சுண்ணாம்புக் கற்களில் உள்ள ஈரப்பதத்தால் ஏற்படும் பிரச்சினைகளை நீக்கவும்

தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1986—87 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூ. 826 இலட்சம் செலவில் இந்த ஆலையில், நவீன மயமாக்குதல்-மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துதல் கருதப்படுகிறது.

4.5. மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு இந்த ஆலை குறைந்த அளவு உற்பத்தி செய்து வருவதால், தொடர்ந்தாற்போல் இந்த ஆலைக்கு இழப்பு ஏற்பட்டு வருகிறது.

4.6. அரியலூர் சிமெண்டு ஆலை சுமார் 900 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மூலப் பொருட்கள், பணி நிறைவு பெற்ற பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையில் அப்பகுதியில் கணிசமான அளவில் மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

### 5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடு தொழிற்சாலை)

5.1. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தொழிலைப் பரவலாக்குவதில் முதற்படியாக அனைத்து இந்திய நிதி நிறுவனங்களில் நிதி உதவியுடன், ஆண்டு ஒன்றுக்கு 36,000 மெட்ரிக் டன் அளவில் உற்பத்தித்திறனுடன் ரூ. 250 இலட்சம் செலவில் சிமெண்டு தகடுகளை உற்பத்தி செய்ய ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு தகடு தொழிற்சாலையை அமைத்துள்ளது. இத்தொழிற்சாலை தன் வாணிப உற்பத்தியை 1—10—1981-ல் தொடங்கியது.

5.2. இத்தொழிற்பிரிவின் உற்பத்தி, விற்பனை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆண்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்). | ஆண்டு விற்பனை (மெட்ரிக் டன்னில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1981–82 (ஆறு மாதங்கள்) .. .. | 8,251 | 5,067 |
| 1982–83 .. .. | 19,091 | 19,867 |
| 1983–84 .. .. | 17,839 | 16,886 |
| 1984–85 (31–3–1985 வரை). .. | 25,606 | 26,612 |



5.3. 1983-84 ஆம் ஆண்டின்போது மின் வெட்டு காரணமாக உற்பத்தி அளவு குறைந்தது. நடப்பாண்டில் அதாவது 1984 ஏப்ரல் முதல் 1985 ஜனவரி வரை இதன் சராசரி உற்பத்தி 92 சதவீதத்தை எட்டியுள்ளது.

5.4. இத்தொழிற்சாலை சுமார் 250 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், கச்சாப் பொருட்கள், பணி நிறைவு பெற்ற பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையில் பெருமளவுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

### 6. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்த் தயாரிப்பு தொழிற்சாலை.

6.1. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு, 36,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன் 80மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்டஅளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் திருச்சி மாவட்டம் மாயனூரில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டப் பணிகள் பிப்ரவரி 1983-ல் துவங்கப்பட்டன. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்களில் உற்பத்தி சோதனை அடிப்படையில் (பரிட்சார்த்தமாக) 1984 ஜூன் திங்களிலும் வணிக அடிப்படையில் 1—10—1984 ஆம் திட்ட அட்டவணைப்படி துவங்கியது.

6.2. ரூபாய் 945 இலட்சம் செலவிலான இத்தொழிற்சாலைக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ) அனைத்து இந்திய நிதி நிறுவனமும் நிதி உதவி அளித்துள்ளன. இந்த ஆலை நடப்பு ஆண்டில் 9,000 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்களையும், 1985-86-ல் 25,000 மெட்ரிக் டன் எடையுள்ள அழுத்தக் குழாய்களையும் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6.3. இத்தொழிற்சாலை சுமார் 300 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், பெருமளவில் மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

7. அரியலூர் சிமெண்டு ஆலையின் விரிவாக்கத் திட்டம்.

7.1. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம், அரியலூர் சிமெண்டு ஆலையின் உற்பத்தித் திறன் அளவை ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக் டன்கள் வரை அதிகரித்திட கருதியுள்ளது. இதற்கென தேவைப்படும் இசைவுக் கடிதமும் பெற்றிட மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் வேண்டுகோளை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. அதற்கான இசைவுக் கடிதம் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

7.2. மத்திய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் பெறுவதற்கு உட்பட்டு 1985-86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு அடுத்து நான்கு ஆண்டு காலத்திற்குள் நிறைவு அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 60 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்ப்பார்க்கப்படும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, சுமார் 1,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் கணிசமான அளவில் மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கும்.

8. பாளையம் சிமெண்டு ஆலைத் திட்டம், மதுரை மாவட்டம்.

8.1. மதுரை மாவட்டம் பாளையம் என்னும் பகுதியில், ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறன் அளவு கொண்ட ஓர் சிமெண்டு ஆலையை நிறுவ தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் இதற்கென இசைவுக் கடிதம் பெற மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இசைவுக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

### பின்னணியும் நோக்கங்களும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மார்ச் 1971 முதல் தமிழக அரசிற்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக துவங்கப்பட்டு, தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான பணியினை தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்த நிறுவனம் ஜனவரி 1972 முதல் செயல்பட்டு வருகிறது. இந் நிறுவனம் துவங்கி தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்



களின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டு கோலாகவும், இம் மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் விரைந்து தொழில் மயமாக்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. 1984 ஆம் வருடம் மார்ச் திங்கள் 31 ஆம் தேதிவரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூபாய் 229.90 கோடி உதவித் தொகையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன் மூலம் 83,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலை வாய்ப்புக்கு வகை செய்துள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும், அதற்குரிய நிதியுதவிக்கும் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது :—

1. தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2. இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குவது.

3. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின் கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

4. தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

**பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் :**

(அ) **ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்.**—இத்திட்டம் 1981 முதல் புதிய முறையில் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித்தொகை ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களை கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றி ஆய்வுகளை சிப்காட் தொழில் முனைவோர்க்குச் சலுகை விலையில் அளிக்கிறது. இந்த ஆய்வுகள் மொத்த விலையில் 10 விழுக்காடுகளை செலுத்தினால் அளிக்கப்படுகின்றது. மிஞ்சிய 40 விழுக்காட்டுத் தொகை, தொழில் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த பிறகு திரும்ப செலுத்தவேண்டிய கடனாக மாற்றப்படும். எஞ்சிய 50 விழுக்காடு சிப்காட்டிலிருந்து தரப்படும் மானியமாக அளிக்கப்படும்.

புதிய திட்டத்தின் கீழ் 28 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 14 ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்காக பரிசீலனையில் உள்ளது. மொத்தம் 22 தொழில் முனைவோர் இந்த ஆய்வுகளை பயன்படுத்தியுள்ளனர்.

**(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.—ஊக்கச் சலுகை** தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாம் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி நகர்ப்பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் தேதியில் இருந்து சுலபமாக்கப்பட்ட இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியின் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும்போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ. இச்சலுகை கிடைக்கும் அத்தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும், அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்துக்கோ, அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும்போது ரூபாய் 7·50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்தபிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சமதொகைகளாக வட்டி இன்றி இந்தக் கடன் தொகைகளை திருப்பியடைக்க வேண்டும்.





புதிய தொழில் இணையங்களை ஏதேனும் பின்தங்கிய மாவட்டங்களில் அமைத்திடவும், மற்றும் மறைமலைநகர், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் வரும். இத்திட்டத்தின்கீழ் நிறுவப்பட உள்ள புதிய தொழிற் கூடங்களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டுதோறும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன், முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை வரித் தொகைக்கு சமமானதாகவும் நிலையான இருப்புகளில் 20 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்திற்கோ, எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்தக் கடன் கால் ஆண்டுக்கு ஒரு முறை, தொகை 100 இலட்சத்திற்குள் 24 காலாண்டுகளுக்கு என்ற அடிப்படையில் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி ஏதுமின்றி திருப்பிச் செலுத்தப்படவேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி வரை 221 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 25,55.52 இலட்சத்துக்கு ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 23,14.43 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

கடந்த பதிமூன்று ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

**ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.**

| ஆண்டு. | ஒப்புதல். | ரத்து செய்யப்பட்டது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1972-73 .. | 79.19 | .. | 12.19 |
| 1973-74 | 57.72 | .. | 31.56 |
| 1974–75 .. | 73.63 | .. | 91.48 |

[1985 ஜூன் 14

| ஆண்டு. | ஒப்புதல். | ரத்து செய்யப்பட்டது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1975–76 | 2.82 | .. | 57.60 |
| 1976–77 .. | 79.44 | 0.59 | 78.58 |
| 1977–78 .. | 1,13.30 | 1.82 | 91.23 |
| 1978–79 .. | 1,53.29 | 0.10 | 1,53.04 |
| 1979–80 .. | 2,49.63 | 3.85 | 1,85.00 |
| 1980–81 .. | 2,35.80 | 3.46 | 2,30.44 |
| 1981–82 .. | 1,69.48 | 9.93 | 2,00.28 |
| 1982–83 .. | 3,75.79 | 8.37 | 2,63.30 |
| 1983–84 .. | 4,70.51 | .. | 4,26.99 |
| 1984–85 .. மார்ச் 1985 வரை. | 4,94.92 | .. | 4,92.74 |
| மொத்தம் .. | 25,55.52 | 28.12 | 23,14.43 |

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட தொகையின் வருட வாரியான விவரங்கள் :—

| ஆண்டு. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1972–73 .. .. .. .. .. | 23.18 |
| 1973–74 .. .. .. .. .. | 40.00 |
| 1974–75 .. .. .. .. .. | 74.66 |
| 1975–76 .. .. .. .. .. | 75.00 |
| 1976–77 .. .. .. .. .. | 75.00 |
| 1977–78 .. .. .. .. .. | 1,00.00 |
| 1978–79 .. .. .. .. .. | 1,50.00 |
| 1979–80 .. .. .. .. .. | 1,80.00 |
| 1980–81 .. .. .. .. .. | 2,50.00 |
| 1981–82 .. .. .. .. .. | 3,00.00 |
| 1982–83 .. .. .. .. .. | 3,00.00 |
| 1983–84 .. .. .. .. .. | 3,00.00 |
| 1984–85 .. .. .. .. .. | 3,00.00 |



1985 ஜூன் 14]

**(இ) மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை.**—மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத் தின்கீழ் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 30 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந் திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானிய மாகப் பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத, முன்பு கூறப் பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும், அந்தத் தொழில் பிரிவுகள்கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத்தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித்தொகையும் வழங்கப்படும். மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவி தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து ஈட்டுத்தொகை பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடே தொடர்ந்து முந்நிலை வகித்து வருகிறது.

1—4—1983 முதல் மேலும், இலகுவான நிதியுதவி பெற அனுமதிக்கப்பட்டுள்ள 9 பின்தங்கிய மாவட்டங்கள் 10 சதவீதம் மத்திய நேரடி மானியம் பெற அனுமதிக்கப்பட்டன. இத்திட்டம் ஏற்கனவே 15 சதவீதம் மானியம் அறிவிக்கப்பட்டுள்ள வட்டங் களுக்கோ, 31—3—1983-ம் நாள் 30 கோடி தொழில் மூலதனம் உள்ள பகுதிகளுக்கோ அனுமதிக்கப்படமாட்டாது.

**(ஈ) மாநில அரசின் மானியம் (உதவித்தொகை).**—இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 15 சதவீத மான்ய திட்டத் தின்கீழ் வராத 35 பின்தங்கிய வட்டங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலும், தென்னாற்காடு மாவட்டத் திலுள்ள கடலூரிலும் அமைக்கப்படவிருக்கும் இணையங்களி லும், எந்தத் தொழில் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதம் மானியத்தின் இணையான தொகையோ, அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதை

பெறும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறிய, நடுத்தர, மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறும். இது 1981-ம் ஆண்டு அக்டோபர் 3-ம் நாள் அமுலுக்கு வந்தது. 1984—85 (மார்ச் 1985) ஆண்டுகளுக்காக ஒப்புதல் அளிக்கவும், வழங்கவும் குறிக்கப்பட்ட குறியீடுகள் ரூபாய் 100 இலட்சமாகும். இதில் முறையே ரூபாய் 3,38.46 இலட்சமும், ரூபாய் 1,79.99 இலட்சமும் நடைமுறையில் கொண்டுவரப்பட்டது.

**(2) குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியத் திட்டம்.**

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானியத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு மற்றும் மோட்டார் வாகன உபரி தொழில்கள் மேலும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கருவிகளை தயாரிக்கும் பிரிவுகளுக்கும், சூரிய சக்தி கருவிகளையும், குறிப்பிடப்பட்டுள்ள புதுப்பிக்கும் சக்தியைக் கொண்டு இயங்கும் கருவிகளையும் பயன்படுத்தும் பிரிவுகளுக்கும் இந்த மானியம் அளிக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட தொழில்கள் மத்திய மற்றும் மானிய திட்டத்தின் கீழ்வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூ. 20,000 அல்லது ரூ. 10 இலட்சம் ரூபாய் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதைப் பெறலாம். இத்திட்டம் பாரதத்தின் எந்தப் பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1981-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ம் நாள் முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.





நேரடி நிதி உதவி.

(1) **தவணைக் கடன்.**—கடந்த பதிமூன்று ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணைகளில் காணலாம்.

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடியாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1973–73 .. | 108.50 | .. | 1,08.50 | 26.11 |
| 1973–74 .. | 197.89 | 7.55 | 1,90.34 | 33.90 |
| 1974–75 .. | 1,91.28 | 7,99 | 1,83.29 | 1,17.61 |
| 1975–76 .. | 27.08 | 7.25 | 19.83 | 1,62.87 |
| 1976–77 .. | 1,40.75 | 47.25 | 92.50 | 82.15 |
| 1977–78 .. | 3,40.55 | 69.48 | 2,71.07 | 1,23.82 |
| 1978–79 .. | 2,33.96 | 10.00 | 2,23.96 | 1,41.85 |
| 1979–80 .. | 5,80.50 | 12.74 | 5.67.76 | 2,96.61 |
| 1980–81 .. | 19,58.10 | 27,86 | 19,30.24 | 7,86.52 |
| 1981–82 .. | 18,99.05 | 2,25.01 | 16,74.04 | 14,05.86 |
| 1982–83 .. | 30,36,91 | 4,76.20 | 25,60.71 | 15,75.93 |
| 1983–84 .. | 38,48.95 | 5,36.91 | 38,12.04 | 19,33.70 |
| 1984–85 .. (மார்ச் 1985 வரை.) | 46,38.45 | 2,61.32 | 43,77.13 | 29,82.81 |
| | 1,67,77.97 | 16,89.56 | 1,59,30,41 | 96,69,74 |

மேற்கண்ட அட்டவணையை நோக்குங்கால் 1980—81 இல் இருந்தே மொத்தம் ஒப்புதல் அளிக்கப்பட்டது, 1979—80-ம் ஆண்டு நிலையை நோக்குங்கால் வெகுவாக உயர்வடைந்துள்ளது.

1983—84-ம் ஆண்டு 71.68 சதவீதம் நீண்டகால நிலுவைத் தொகை திரும்பப் பெறப்பட்டது. சிப்காட் நிர்வாகக் குழுவின் துணைக்குழு அவ்வப்போது கூடி நிலுவை ஆய்வு கூட்டங்களில் நிலுவைகளை பரிசீலனை செய்து உதவிபெறும் நிறுவனங்களுக்கு தக்க முறையில் உதவி புரிந்ததாலும் கணிசமாக திரும்பப்பெறும் சதவீதத்தை உயர்த்த முடிந்தது.

**(2) உத்தரவாதமளித்தல்/நேரடி சந்தா :**

பொறுப்புகளுக்கு உத்தரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக, கடந்த பதிமூன்று ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. | 23.20 | .. | .. |
| 1973–74 .. | 24.30 | .. | .. |
| 1974–75 .. | 5.00 | .. | 0.55 |
| 1975–76 .. | 16.50 | .. | 1.29 |
| 1976–77 .. | 11.00 | 18.50 | 2.00 |
| 1977–78 .. | 16.00 | 13.30 | 1.13 |
| 1978–79 .. | 5.00 | 3.50 | 0.37 |
| 1979–80 .. | 6.20 | 2.50 | 1.53 |
| 1980–81 .. | 24.40 | .. | 12.29 |
| 1981–82 .. | 13.75 | .. | 8.03 |
| 1982–83 .. | 18.25 | .. | 1.52 |
| 1983–84 .. | 26.50 | 8.00 | 15.67 |
| 1984–85 (மார்ச் 1985 வரை). | 56.40 | .. | 7.65 |
| | 2,46.50 | 45.80 | 52.03 |



(3) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம், ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின் கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில் நுட்ப, தொழில் அனுபவ, தொழில் முனைவோர்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல், நடுத்தர தொழில் திட்டத்திற்கு, வங்கியானது, திட்டச் செலவில் 80 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. இத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளித்தலிலும் வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம் :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. .. .. | 4.00 | .. |
| 1978–79 .. .. .. | 9.15 | 4.00 |
| 1979–80 .. .. .. | 12.90 | 21.47 |
| 1980–81 .. .. .. | 26.50 | 16.28 |
| 1981–82 .. .. .. | 38.58 | 20.10 |
| 1982–83 .. .. .. | 69.07 | 29.70 |
| 1983–84 .. .. .. | 86.20 | 93.38 |
| 1984–85 (மார்ச் 1985 வரை) .. .. .. | 1,84.40 | 1,30.33 |
| | 4,30.80 | 3,15.26 |

[1985 ஜூன் 14

(4) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவுசெய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பத்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாகக் கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல், நேரடி சந்தா ஆகிய நிதிஉதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும், ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள், தங்கள் தொழில் பற்றிய முன் முதலீட்டு ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன்பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

### இ. வளர்ச்சி மையங்கள்.

| இணையத்தின் பெயர். | மார்ச் 1985 வரை முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) (ஏக்கர்.) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| இராணிப்பேட்டை .. .. | 729.78 | 1,58.88 |
| ஓசூர் .. .. .. .. | 233.86 | 3,54.14 |
| மானாமதுரை .. .. | 492.08 | 93.39 |



1985 ஜூன் 14]

| இணையத்தின் பெயர். | மார்ச் 1985 வரை முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) (ஏக்கர்.) | (3) (ரூபாய் இலட்சத்தில்). |
| புதுக்கோட்டை .. .. | 423.00 | 61.24 |
| கும்மிடிப்பூண்டி.. .. .. | 301.00 | 63.93 |
| கடலூர் .. .. .. | 463.00 | 1,05.52 |
| தூத்துக்குடி .. .. .. | .. | 12.24 |

இராணிப்பேட்டை :

அரசு 728.78 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இதில் ஒதுக்கப்படுவதற்கான பகுதி 93 மனைகளைக் கொண்ட 480.68 ஏக்கர். இதில் 478.38 ஏக்கர் கொண்ட 90 மனைகள் 73 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டது. இவற்றில் 54 நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தி துவக்கியுள்ளது. எஞ்சிய நிறுவனங்கள் தமது கட்டுமானப் பணியில் பல்வேறு நிலையில் உள்ளன. இந்தப் பகுதியில் உள்ள கடுமையான தேவையை நோக்கி கூடுதலாக 44 ஏக்கர்கள் ஏற்கெனவே இரண்டாவது பகுதி, முதல் பகுதியை யொட்டி அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்டது. 52 ஏக்கர்கள் இந்த இரண்டாவது இணையத்தில் ஒதுக்கப்பட்டது.

ஓசூர் :

தேசிய நெடுஞ்சாலை எண் 7 இன் இரு மருங்கிலும் ஒதுக்கப் படுவதற்காக வளர்ச்சி 1,235 ஏக்கர்கள் வளர்ச்சி செய்யப்பட்டது. விற்பனைக்குகந்த 938 ஏக்கர் பரப்பில் 825 ஏக்கர்கள் 110 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டது. இதில் 71 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தித் துவக்கியுள்ளன. எஞ்சிய 39 தொழில் நிறுவனங்கள்

பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. தொழில் முனைவோரின் தேவையைக் கருதியும், சமூகத் தேவைகளைக் கருதியும் 508 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மானாமதுரை :**

மதுரையிலிருந்து 45 கி. மீட்டர் தூரத்திலுள்ள மானாமதுரை தொழில் இணையம் தண்ணீரைச் சார்ந்து அமையாத பொதுவான தொழில்களுக்காக அமைக்கப்பட்டது. தொழில் முனைவோர்க்கு வழங்குவதற்கு சாலைகள், உணவு விடுதி, சினிமா, கடைகள், குடியிருப்புகள் போன்ற வசதிகள் கொண்ட 492 ஏக்கர் நிலம் வளர்ச்சி செய்யப்பட்டுள்ளது. விற்பனைக்குகந்த 363 ஏக்கரில் 86.67 ஏக்கர் நிலப்பரப்புள்ள 30 மனைகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டது.

**புதுக்கோட்டை :**

பிற்பட்ட பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முனைப்படுத்தப்பட்ட தொழில் இணையங்களை அமைக்க வேண்டும் என்ற இந்திய அரசின் கொள்கைக்கேற்ப முனைப்படுத்தப்பட்ட மின் அணு இணையத்தை மேன்மேலும் தொழில் வளர்ச்சிக்காக புதுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இதற்கான முன் அளவை செய்யப்பட்டு அனுப்பப்பட்ட அறிக்கை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இது மின் அணு தொழில்களுக்கும் மின் பொறியியல் தொழில்களுக்கும் மிகவும் பொருத்தமாக அமைகிறது. 438 ஏக்கர்களை ஏற்கெனவே சிப்காட் தன்வசம் எடுத்துக் கொண்டது. மேலும் 167 ஏக்கர் நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு நிறுவனங்களுக்கு மேல் மொத்தம் 120 ஏக்கர் நிலத்தை ஒதுக்கும்படி மனு செய்துள்ளனர். இதில் 8 நிறுவனங்களுக்கு 40 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

**கடலூர் :**

கடலூரிலிருந்து 7 கி. மீட்டர் தொலைவிலுள்ள இந்தத் தொழில் இணையம், தென்னாற்காடு மாவட்ட தலைமையிடமான கிழக்குப் பகுதியில் கடலூர்—சிதம்பரம் சாலையில் அமைந்துள்ளது. இதற்கு அருகான விமான நிலையம் 200 கி. மீட்டர் தொலைவிலுள்ள மீனம்பாக்கம் விமான நிலையமாகும். அடிப்



படையாக மின்சாரத்தையும், நீரையும் சார்ந்து அமையும் இராசாயன மற்றும் முறைப்படுத்தும் தொழில்களுக்காக இவ்விணையம் அமைக்கப்பட்டது. இவ்விணையம் தற்போது 443.12 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. மேலும் 100 ஏக்கர் நில்த்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 310.43 ஏக்கரில் அமைந்துள்ள 43 மனைகளில், 10 நிறுவனங்களுக்கு 13 மனைகளிலான 140.25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பல்வேறு தொழில் முனைவோரிடமிருந்து 31 மனுக்கள் வந்துள்ளன.

**கும்மிடிப்பூண்டி :**

சென்னையிலிருந்து 45 கி. மீட்டர் தொலைவில் சென்னை—நெல்லூர் நெடுஞ்சாலையில் சென்னை—கல்கத்தா அகல இரயில் பாதையையொட்டி சிப்காட்டின் கும்மிடிப்பூண்டி தொழில் இணையம் அமைந்துள்ளது. வாகன உபரிகள் உற்பத்தி தொழில்களுக்கும், பொறியியல் தொழில்களுக்கும் பெரிதும் அனுகூலமான அடிப்படையாக இவ்விணையம் அமைகிறது. நிலக் கையகப்படுத்தும் விதிகளில் உள்ள அவசரப் பிரிவின்கீழ் 804 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த அறிவிக்கப்பட்டு, இதில் 315 ஏக்கர் நிலம் இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டது. 70 நிறுவனங்களுக்கு 209.19 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 55 நிறுவனங்கள் நிலத்தை தம் கைவசம் எடுத்து அதில் 4 நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தியை துவங்கியுள்ளன. 32 நிறுவனங்கள் கட்டுமானப் பணியில் பல்வேறு நிலைகளில் உள்ளன. நிலம் கோரி மேன்மேலும் விசாரணைகள் வந்த வண்ணம் உள்ளது.

**தூத்துக்குடி :**

தூத்துக்குடியில் தொழில் இணையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் அரசினால் அங்கீகரிக்கப்பட்டது. நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றமடைந்து வருகிறது.

**பொது :**

கீழ்க்கண்ட மாவட்டங்களில் தொழில் இணையங்கள் அமைப்பதற்கான பரிந்துரைகளை அரசு ஏற்று உத்தரவிட்டுள்ளது :—

1. மதுரை.
2. தஞ்சாவூர்.
3. மேற்கு இராமநாதபுரம்.
4. திருச்சிராப்பள்ளி.
5. பெரியார்.
6. சேலம்.
7. கோயம்புத்தூர்.
8. கன்னியாகுமரி.
9. நீலகிரி.
10. தர்மபுரி.
11. வட ஆற்காடு.

**அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கான குழு :**

அயல்நாடுகளில் வசிக்கும் அல்லது பணிபுரியும் இந்தியர்கள் தமிழக தொழில்களில் மூலதனமிட ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அயல்நாடுகளில் வசிக்கும் தனி நபர்களும், ஸ்தாபனங்களும் இது தொடர்பாக தொடர்பு கொள்ளப்பட்டனர். இதுவரை அயல்நாடுகளிலுள்ள இந்தியர்களிடமிருந்து, முக்கியமாக அமெரிக்கா, கடைசி மேற்றிசை நாடுகளிலுள்ளவர்களிடமிருந்து 649 விசாரணைகள் வரப்பெற்றுள்ளது. அயல்நாடுகளில் வசிக்கும் இவர்களோடு தொடர்ச்சியாக தொடர்பு கொள்ள வழி வகுக்கப்பட்டுள்ளது. இதுவரை 9 திட்டங்கள் ரூபாய் 586 இலட்சம் திட்டச் செலவில் செயலாக்கப்பட்டுள்ளன. மேலும் ரூபாய் 787 இலட்சத்திலான 11 திட்டங்கள் செயலாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் :**

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் முகமைப் பொறுப்பை சிப்காட்டிடம் தமிழக அரசு ஒப்படைத்தது. தாம்பரம் எலும்புருக்கி நோய் மருத்துவமனையின் பின்புறம் 228 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இதில் 93 ஏக்கர் நிலம் இக்கேந்திரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 298.64 ஏக்கர் நிலத்தை இக்கேந்திரத்தின் இரண்டாவது நிலைக்குக் கையகப்படுத்த பணிகள் முன்னேற்றமடைந்து வருகிறது.



இம்மண்டலம் அமைப்பதற்கான முதல்கட்ட கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இம்மண்டலத்தைச் சுற்றிலும் 4 கி.மீ. எல்லைச் சுவர்கட்டுதல் மற்றும் சாலை அமைக்கும் பணி தமிழ்நாடு கட்டுமான கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அதனை நிறைவேற்றும் பணி நடைபெற்று வருகிறது.

நிலையுறு வரைவில் கட்டப்படும் தொழிற்சாலையின் கட்டிடப் பணி தேசீய கட்டிட கட்டுமான கழகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் நிர்வாக கட்டிடம் கட்டும் பணியை விரைவில் துவங்க உள்ளார்கள். ஏற்கனவே 19 மனைகள் வகுக்கப்பட்டு சிறந்த தொழில் முனைவோர்க்கு பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட தயாராயுள்ளது. மேன்மேலும் மனைகள் பகுக்கப்படும் பணி முன்னேற்றமடைந்து வருகிறது. சில நாட்களுக்குமுன் இதுகுறித்த சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் ஒப்புதல் அளிக்கும் குழுவினரால் அணு, இரசாயணம், தரமான பாத்திரங்கள், நகைகள் போன்ற தொழில்களுக்கான 26 மனுக்கள் ஒப்புதல் பெற்றன. அவைகளுக்கு விரைவில் மனை ஒதுக்கப்படும்.

### பணியின் முடிவுகள்.

1983—84 ஆம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும், தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 1,24,42 இலட்சம். 1982—83 ஆம் ஆண்டு இலாபம் 104.39 இலட்சமாகும்.

### இணைப்பு இரண்டில்.

### திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விபரங்கள்.

1. 1983—84 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1984—85, 1985—86-ஆம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்ட குறியீடுகள்.

### வேலைவாய்ப்பு.

1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிய சுமார் 83,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

[1985 ஜுன் 14

இதுவரை ஏற்படுத்திய வேலைவாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டுவாரியாக :—

| ஆண்டு. | வேலை பெற்றவர் களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1981–82 .. .. | 5,700 |
| 1982–83 .. .. | 9,000 |
| 1983–84 .. .. | 9,000 |
| 1984–85 .. .. (மார்ச் 1985 வரை). | 10,000 |

## இணைப்பு I.

மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம் 1971.

அ. ஒப்புதல் (மொத்தம்).

| ஆண்டு. | பெரிய மற்றும் நடுத்தர தொழில். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 154 | 9,78.89 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 46 | 2,84.04 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 52 | 3,33.72 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 69 | 5,28.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 46 | 2,89.98 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 103 | 7,40.69 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 47 | 3,58.49 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை. | 38 | 3,19.96 |
| பிப்ரவரி 1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை. | 555 | 38,34.19 |



1985 ஜுன் 14]

| ஆண்டு. | சிறு தொழில்கள் | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 749 | 1,79.47 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 181 | 62.85 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 406 | 78.86 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 637 | 2,18.26 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 544 | 2,13.38 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 2,369 | 8,95.76 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 560 | 228.46 |
| ஏப்ரல் 1984 முதல் 31 டிசம்பர் 1984 வரை. | 456 | 1,56.21 |
| 31–12–1984 வரை ஒப்புதல் அளிக்கப் பட்ட மொத்தத் தொகை. | 5,902 | 20,33.25 |

| ஆண்டு. | மொத்தத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 903 | 11,53.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 227 | 3,46.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 458 | 4,12.58 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 706 | 7,46.68 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 590 | 5,03.36 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 2,472 | 16,36.45 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 607 | 5,86.95 |
| ஏப்ரல் 1984 முதல் 31 மார்ச் 1985 வரை. | 494 | 4,76.17 |
| 31–3–1985* வரை ஒப்புதல் அளிக்கப் பட்ட மொத்தத் தொகை. | 6,457 | 58,67.44 |

*சிறு தொழில்கள் 31–12–1984 வரை.

[1985 ஜூன் 14

ஆ. வழங்குதல்.

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | சிறு தொழில்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1978 மார்ச் 31 வரை .. | 6,18.43 | 1,51.62 | 7,70·05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. | 1,76.03<br>2.24 | 30.09 | 2,06.12<br>2.24 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. | 2,32.26 | 41.78 | 2,74.04 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை .. | 3,19.09 | 1,09.33 | 4,28.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை .. | 3,07.50 | 1,55.64 | 4,63.14 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. .. | 3,60.77 | 1,08.13 | 4,63.90 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை .. | 4,26.40 | 3,61.96 | 7,88.36 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை .. | *3,87.22 | **2,44.99 | @32.12 |
| 1985 மார்ச் வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத்தொகை .. | 28,29.94 | 12,03.51 | @40,33.45 |

*தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மட்டும்.

**சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும்.

@டிசம்பர் 1984 வரை.



1985 ஜூன் 14]

இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட். | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2). | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 4,48.30 | 6,15.59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 1,61.51 | 2,29.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 1,25.54 | 1,65.57 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 3,01.91 | 4,25.35 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 2,15.52 | 3,76.94 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 1,92.23 | 2,89.99 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 5,01.97 | 8,16.42 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை. | 3,82.17 | 9,24.20 |
| 31-3-1985 வரையான மொத்த் தொகை. | 23,29.15 | 38,43.69 |

## இணைப்பு 2.

1983–84 மற்றும் 1984–85 ஆண்டுகளுக்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள்—1983–84 மற்றும் 1984–85 ஆண்டுகளுக்கான திட்டங்களின் குறியீடுகள்.

| விவரம். (1) | 1983–84 முன்னேற்ற விவரம். (2) | 1983–84 வரவு செலவு திட்ட மதிப்பீடு. (3) | 1984–85-ல் செயலாக்கப்பட்டது. (4) | 1984–85, 1985–86-க்கான செயல் இலக்கு. 1984–85. (5) | 1985–86. |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **பகுதிக் கடன்—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 3,848.95 | 3,500.00 | 4,638.45 | 3,800.00 | 4,000.00 |
| வழங்குதல் .. .. .. | 1,933.70 | 2,200.00 | 2,982.81 | 2,800.00 | 3,200.00 |
| **முக்கிய மூலதனத் திட்டம்—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 86.20 | 1,20.00 | 1,84.40 | 1,50.00 | 2,00.00 |
| வழங்குதல் .. .. .. | 93.38 | 1,00.00 | 1,30.33 | 1,50.00 | 1,50.00 |
| **வட்டியில்லா விற்பனை வரிக் கடன்—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 4,70.51 | 3,00.00 | 4,94.92 | 3,75.00 | 3,75.00 |
| வழங்குதல் .. .. .. | 4,26.99 | 3,00.00 | 4,92.74 | 3,75.00 | 3,75.00 |



| விவரம். (1) | 1983–84 முன்னேற்ற விவரம். (2) | 1983–84 வரவு செலவு. திட்ட மதிப்பீடு. (3) | 1984–85-ல் செயலாக்கப்பட்டது. (4) | 1984–85, 1985-86-க்கான செயல் இலக்கு. 1984–85 (5) | 1985–86. (6) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **மத்திய உதவி (சிப்காட்) தனியாக மானியம்—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 3,58.49 | 2,50.00 | 3,19.97 | 3,50.00 | 3,50.00 |
| வழங்குதல் .. .. .. | 4.26.00 | 2,50.00 | 3,87.22 | 3,50.00 | 3,50.00 |
| திரும்பப் பெறுவது .. .. | 5,01.97 | 2,50.00 | 3,82.71 | 3,50,00 | 3,50.00 |
| **உத்திரவாதமளித்தல் நேரடிச் சந்தா—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 18.50 | 25.00 | 56.40 | 25.00 | 50.00 |
| வழங்குதல் .. .. .. | 15.67 | 25.00 | 7.65 | 25.00 | 50.00 |
| **மாநில உதவி (மானியம்)—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 1,83.11 | 1,00.00 | 3,38.46 | 1,00.00 | 200.00 |
| வழங்குதல் .. .. .. | 67.52 | 1,00.00 | 1,79.99 | 1,00.00 | 1,00.00 |

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

### 1. நோக்கங்களும் அலுவல்களும் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டிக்) மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் முதன்மையான நிறுவனமாகச் செயல் பட்டு வருவதோடு, 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவிக் கழகச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரி நிர்வாகத்திலும் உள்ள சிறிய நடுத்தர, தொழில்களின் மேம்பாட்டுக்கும் அவற்றின் விரைவான வளர்ச்சிக்கும் நிதியுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

2. நிலம், கட்டிடம், தளவாடம், இயந்திரச் சாதனம் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு இந்த நிறுவனம் தவணைக் கடன்களை வழங்குவதுடன் காலவரம்பை கடந்து தொகை செலுத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. நிதியுதவிப் பெறும் தொழில் நிறுவனப் பிரிவுகளின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப் பகுதியிலும் பெருமளவுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் நோக்குடன், அப்பகுதியில் உள்ள சிறிய, மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்குச் சிறப்பு முன்னுரிமை அளிக்கிறது. குறைந்தளவு வட்டி வீதம், குறைந்தளவு பிணையத் தொகை, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு தாராளமாக கால அளவு போன்ற சலுகைகளின் அடிப்படையில், பின்தங்கிய பகுதிகளிலுள்ள சிறிய தொழில் பிரிவுகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவாக்கவும், பல்திறப்படுத்தவும் அவற்றை நவீனப் படுத்தவும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. 5,000 ரூபாயிலிருந்து 30.00 இலட்சம் ரூபாய் வரையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### 3. தொழில் பிரிவுகளின் செயல்களை ஆய்வு செய்தல் :

பல ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், கடந்த ஐந்தாண்டுகளில் கடன் தொகை அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இந்த நிறுவனம் ஆற்றிய பணி கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.



கடந்த ஐந்து ஆண்டுகளில் கடன் தொகை அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் குறித்த ஒப்பீட்டுத் தகவல் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | அமதித்த தொகை. | வழங்கப் பட்ட தொகை. | வசூலித்த தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்). | | |
| 1979–80 | 17.19 | 10.67 | 10.55 |
| 1980–81 | 36.90 | 22.59 | 11.47 |
| 1981–82 | 52.13 | 35.07 | 13.76 |
| 1982–83 | 55.87 | 39.56 | 19.85 |
| 1983–84 | 59.74 | 41.11 | 25.23 |
| 1984–85 (31–1–1985 வரையில்). | 67.97 | 48.65 | 32.40 |

கடந்த மூவாண்டுகளில் ஒவ்வோராண்டும் அனுமதித்த கடன்களில் 99 சதவீதமானது சிறிய தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்டது. மேலும், இவ்வாண்டுகளில் அனுமதித்த மொத்தக் கடனளவில் 85 முதல் 95 சதவீதம் சிறிய தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்டது.

4. **சுய வேலைவாய்ப்பு மேம்பாடு.**—சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சுயவேலைவாய்ப்பிற்கான மேம்படுத்தும் பொருட்டு, இந்த நிறுவனம் பெருமளவு நிதியுதவியை அளிக்கிறது. லாரிகள், டிராக்டர்கள், சுற்றுலா வாடகை வண்டிகள், டெம்போக்கள், வேன்கள் முதலியன போன்ற போக்குவரத்து வண்டிகளில் ஓட்டுநர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கும் நோக்குடன், அவ்வண்டிகளை வாங்க அவர்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 10.33 கோடி ரூபாய்க்கு 917 பேருக்கு போக்குவரத்துக் கடன்களை இந்த நிறுவனம் அளித்துள்ளது.

5. முக்கிய அம்சங்கள்/சாதனைகள் :

(அ) சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்ற தொழில் முனைவோர் ஆலோசனைக் குழு, திட்டத்தைத் தெரிந்தெடுப்பது, விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்து, திட்ட அறிக்கைகள் தயாரிப்பது போன்றவற்றில் ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் தகவல்களை வழங்குவதோடு, ஆலோசனையும் நல்குகிறது. மேலும் நிதியுதவியையும் அளிக்கிறது. சிறியதும், மிகச் சிறியதுமான தொழில் பிரிவுகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இந்த வசதி பெருமளவு உதவுகிறது.

(ஆ) மத்திய, மாநில அரசுகள், தகுதிவாய்ந்த தொழில் முனைவோருக்கு உதவித் தொகையை அளித்த பிறகே, மத்திய, மாநில அரசு பங்கு முதலீட்டு உதவித் தொகையைப் பெற அவர்கள் தகுதியுடையவர்களாகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த இடைப்பட்ட கால அளவில், தொழில் முனைவோருக்கு இணைப்புக் கடன் அனுமதிக்கப்படுவதால், தொழில் முனைவோர் வட்டி செலுத்த வேண்டியதாகிறது. மாநில அளவிலான குழுவால் அனுமதிக்கப்பட்டவுடன் இந்த நிறுவனமானது 1—7—1983 ஆம் நாளிலிருந்து வட்டியில்லா உதவித் தொகையை அளித்து வருகிறது. இதன் பயனாக தொழில் முனைவோர்கள், குறிப்பாக சிறு தொழில் பிரிவுகள், செலவு, நேரவகையில் பெருமளவு பயனடைந்திருக்கின்றன.

(இ) முகப்பேர், பாடி ஆகிய இடங்களில் தொழில் கூடங்களுக்கும் உற்பத்தி அடிப்படை வசதிகளுக்கும் வகை செய்து கொடுப்பதற்கான திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நிருவாக முகவர் அமைப்பாக, தமிழ்நாடு அரசு மூலம், உலக வங்கி நிதி உதவியுடன் ஆன சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II என்றழைக்கப்படும் தொழில் மேம்பாட்டுச் சிறப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகிறது.

**6. தொழில் ஏற்பாடுகளையும், நடைமுறைகளையும் சீரமைத்தல்.**—தேவையான கடன் உதவியைப் பெறுவதற்கு, தொழில் முனைவோருக்கு குறிப்பாக சிறுதொழில் துறையில் உள்ளவர்களுக்கு இயலும் பொருட்டு, தொழில் ஏற்பாடுகளையும், நடைமுறைகளையும் எளிதாக்க இந்த நிறுவனம் அனைத்து





முயற்சிகளையும் எடுத்து வருகிறது. விண்ணப்பப் படிவங்கள் தக்கவாறு எளிதாக்கப்பட்டுள்ளன. கவனமாக பரிசீலனைக்குப் பின்னர், நிதியுதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் சீரமைக்கப் பட்டுள்ளன. பதிவு பெற்ற அடைமானத்தை நியாயமான அளவிலான அடைமானத்தைப் பெறத் தற்போது இருந்துவரும் நடைமுறைக்குப் பதிலாக, அடைமானப் பத்திரம் எழுதிக் கொடுப்பதின் பேரில் குத்தகை வளாகங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை வாங்குவதற்கு ரூ. 5.00 இலட்சம் வரையில் தற்போது கடன் வழங்குவது ஏற்றுக்கொள்ளப்படும்.

**7. சிலவகைத் தொழில்களுக்கு நிதியுதவி பெறுவதற்கு பதிவு செய்வதை நீக்குதல்.**—தகுதியுள்ள வகைத் தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதை உறுதி செய்வதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டும், பின்தங்கிய பகுதிகளில் தொழிலை மேம்படுத்துவதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டும், தொழில்களின் தனித் தியங்கும் தன்மையைக் கருத்திற்கொண்டும் சிலவகைத் தொழிற் பிரிவுகளில் பெருகிவரும் தேவையை நிறைவு செய்யவும் சில வகைத் தொழில்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு விதிக்கப்பட் டிருந்த தற்காலிக தடையை நீக்குவதென முடிவு செய்யப் பட்டது. இதன் விளைவாக நிதி அச்சு இயந்திரப் பிரிவுகள், மாவு ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மரம் அறுக்கும் ஆலைகள், பனிக்கட்டி தயாரிப்புப் பிரிவு போன்ற வாலாயமான தொழிற் சாலைகளுக்கு மீண்டும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

8. மாநிலத்தின் தொழில்வளர்ச்சியை மேம்படுத்தும் பொது வான நோக்குடன் வட்டார ஏற்றத்தாழ்வுகளை அகற்றும் பொருட்டு, மாநிலத்திலுள்ள பின்தங்கிய பகுதிகள், வட்டாரங் களை மேம்படுத்துவதற்கும் சமூகத்தின் நலிந்த ஏழைப் பிரிவினரை மேம்படுத்துவதற்கென பெருமளவு வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்குவதற்கும் வகை செய்யும் திட்டங்களுக்கு ஆதரவு நாடும் அரசின் சமூக, பொருளாதார கொள்கைகளை செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொடர்ந்து முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

9. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொழில் முனைவோருக்கு உடனடியாக நிதியுதவி வழங்க அனைத்து முயற்சியையும் எடுத்து தாமதத்தைத் தடுக்கிறது. 45 நாட்களுக்குள் பெறப்பட்ட கடனுதவி விண்ணப்பங்களை ஆராய்ந்து பார்த்து உடனடியாக கடனுதவி அளிக்க வேண்டும் என்று இந்நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை.**

மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை என்னும் புதிய துறையானது தொழில் வளர்ச்சியின் முக்கியமான ஒரு பகுதிக்குப் பொறுப்பேற்று அதன் துரித வளர்ச்சிக்கு வகை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் வலுவூட்டப்பட்டு, மின்னணுவியல் தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு பெரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆற்றலைப் பெற்றுள்ளது. அத் தொழில்களின் வளர்ச்சி தமிழகத்திற்கு மின்னணுவியலில் முதன்மையிடத்தைப் பெற்றுத்தரும்.

2. இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழில்களை விரைவில் பெருகச் செய்வதும், நவீன வாழ்வின் பல்வேறு துறைகளிலும் மின்னணுவியல் மற்றும் தொழில் நுட்பவியலின் பயன்பாட்டை விரிவாக்குவதும் அரசின் கொள்கையாகும். பெருந்தொழில்கள், நடுத்தரத்தொழில்கள், சிறு தொழில்கள் ஆகிய அனைத்துக்குமே முறையான வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறு தொழில்களுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. காரணம் அவற்றில் முதலீடு குறைவு; வேலை வாய்ப்புக்கள் அதிகம்; தொழில் வல்லுநர் குழாம் ஒன்று புதியதாக அவற்றின் மூலம் உருவாக்கப்படுகிறது. மின்னணுவியல் தொழில்களைப் பேணி வளர்க்க இம் மாநிலத்தில் போதுமான அளவுக்கு விரிவான, வலுவான அடிப்படை வசதிகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. ஆங்காங்கு தொழிற்பேட்டைகளில் ஆய்வுக் கூடங்களும், சோதனை மையங்களும் அமைக்கப்பட்டு மிகக் குறைந்த கட்டணத்தில் சோதனை மற்றும் தாக்கட்டுப்பாட்டு வசதிகள் தரப்பட்டுள்ளமையால் மின்னணுவியல் பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. மருத்துவமனைகளில் பயன்படும் மின்னணுவியல் கருவிகளையும் மின்னணுவியல் சோதனைச் சாலைகளிலுள்ள கருவிகளையும் பழுதுபார்த்துப் பராமரித்து





வருவதற்கான தனிப் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. தகவல் வங்கி மற்றும் தகவல் மையத்தின் மூலம் அடிப்படையான தொழில் நுட்ப விவரங்களை வழங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அடிப்படை வசதிகள் ஏழு மையங்களில் உள்ளன. இவை மின்னணுவியல் தொழில்களுக்கு சிறந்த நாற்றங்காலாகப் பயன் படுகின்றன. இம் மையங்களின் பயன்கள் இறுதியாகப் பொது மக்களுக்கே செல்கின்றன. தொழில் வல்லுநர்கள் நிருவாகத் திறனை வளர்த்துக் கொள்ளவும், தகுதிபெற்ற தொழிலியல் பயின்றவர்களும் தொழில் வல்லுநர்களும் தக்க வேலை வாய்ப்புக்களைப் பெறவும் இம் மையங்கள் பயன்படுகின்றன. தொழில் நடத்துபவர் யாரும் சாதாரணமாக தனது தொழிற்சாலைக்குள் இத்தகைய வசதிகளை தங்கள் சொந்தச் செலவில் செய்து கொள்ள இயலாது.

3. கக்களூரில் உள்ள மைய மின் சோதனை ஆய்வகமும் அடையாறில் உள்ள மின்னணுவியல் சோதனை மற்றும் வளர்ச்சி மையமும் முழுமையான சோதனை வசதிகளையும் தொழில்நுட்ப அறிவுரைகளையும் தருகின்றன. உற்பத்தியில் பயன்படும் அளவைக் கருவிகள் துல்லியமாக சரிசெய்து தருவதற்கும், உற்பத்தி செய்வதற்குரிய பொருள்களைப் பற்றி ஆலோசனை கூறுவதற்கும், உற்பத்திக்கு உகந்த சுற்றுப்புற நிலைகள் பற்றிய சோதனைகளைச் செய்வதற்கும் இந்த ஆய்வுக்கூடங்களில் வசதிகள் உள்ளன.

4. மருத்துவத் துறையில் பயன்படும் மின்னணுவியல் கருவிகளுக்கான பராமரிப்பு மையங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ளன. அரசு மருத்துவமனைகளில் உள்ள பல்வேறு மின்னணுவியல் கருவிகளைப் பராமரிப்பதும் பழுதுபார்த்துத் தருவதும் அவற்றின் பணியாகும்.

5. அடையாற்றிலுள்ள "தகவல் வங்கி மற்றும் தகவல் மையம்" தகவல்களைப் பரப்புவதோடு எங்கெங்கு எத்தகைய தொழில்களைத் தொடங்க வாய்ப்பு உண்டு என்பது குறித்து தொழில் வல்லுநர்களுக்கு வழிகாட்டியும் வருகிறது. கடைசி நிமிடம் வரையிலான தகவல்களை அனைவருக்கும் தருவதுடன் தொழில்களில் முதலீடு செய்பவர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் அது தெரிவிக்கிறது.

[1985 ஜூன் 14

6. தொழில் துறைச் செயலாளர், தொழில் வாணிபத்துறை இயக்குநர் ஆகியோரின் கீழ் "மாநில தொழில்நுட்பக் குழுக்கள்" செயல்பட்டு வருகின்றன. இவை தொழில் வல்லுநர்களின் உற்பத்தித் திட்டங்களுக்கு அரசின் கொள்கைகளுக்கும் விதிமுறைகளுக்கும் ஏற்ப அனுமதி தருகின்றன. 81 இனங்களுக்கான அனுமதியை இக்குழுக்கள் தருகின்றன. 1984 டிசம்பர் முடிய இத்தகைய 161 அனுமதிகளை வழங்கியுள்ளன. சாதாரண தொலைக்காட்சி பெட்டிகள் செய்வதற்கான 19 அனுமதிகள் தரப்பட்டுள்ளன. (மொத்தம் 1,90,000 தொலைக்காட்சிப் பெட்டிகள்) இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலை மேலும் வளப்படுத்த பல முக்கியமான கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை:—

1. தொழில் தொடங்க அனைத்து வசதிகளும் கொண்ட அடிமனைகள் வழங்குவதற்காக பெருங்குடியில் அமைந்துள்ள தொழில் பேட்டையில் கொட்டகைகள் கட்டுதல்;

2. சென்னையை அடுத்து நந்தம்பாக்கத்தில் உபபொருட்கள் (ancillary) தயாரிக்கும் தொழிற் பேட்டை ஒன்றை நிறுவுதல்;

3. கக்களூரிலுள்ள மைய மின் சோதனை ஆய்வுக்கூடத்திலுள்ள சோதனை வசதிகளை நவீனப்படுத்துதல்;

4. கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு மையங்களை அமைத்தல்;

5. சென்னையில் கச்சாப் பொருள் கிடங்கு அமைத்தல்;

6. கோயம்புத்தூர் தொழிற்பேட்டையில் அனைவரும் பயன்படுத்தற்குரிய வசதிகளைக் கொண்ட மையம் அமைத்தல்;

7. திருச்சிராப்பள்ளி உற்பத்திப்பொருள் வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்;

8. "தகவல் வங்கி மற்றும் தகவல் மையத்தை" தரமுயர்த்தி நவீனப்படுத்துதல்;

9. மின்னணுவியல் உபபொருள்களையும் கருவிகளையும் உற்பத்தி செய்ய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்;



1985 ஜூன் 14]

10. உயர்தர தொழில் நுட்பவியல் சார்ந்த உபபொருட்கள் மின்னணுவியல் அமைப்புக்கள், கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியை திட்டமிட்டு தயாரிக்க உதவுவதற்காக மிக நவீனமான முழுமையான மிக நுட்பம் வாய்ந்த மின் அணுவியல் பொருட்கள் "சோதனை மற்றும் உருவாக்க மையம்" ஒன்றை ஐக்கிய நாடுகள் சங்க உதவியுடன் அமைத்தல். (இதற்கு ஏற்கெனவே மைய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது).

## தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம்.

மின்னணுவியல் தொழில்களின் விரைந்த முறையான வளர்ச்சிக்கு அரசு முதன்மைதந்து வலியுறுத்தி வருகிறது. மின்னணுவியல் தொழில் வளர்ச்சியின் தரத்தையும் தன்மையையும் உயர்த்துவதுடன் குறைந்த முதலீட்டில் மிகுதியான வேலை வாய்ப்புக்களையும் தருகிறது. தமிழ் நாடு மின்னணுவியல் நிறுவனம் பொதுத்துறையில் பின்வரும் நான்கு உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அலுமினியம் மின்னாற் பகுப்பு உலைக்கலன்களை (capacitors) உற்பத்தி செய்யும் பிரிவு, ஓசூர்; மின்தொடர்பு சாதனங்கள் உற்பத்திப் பிரிவு, சென்னை, பயன்படுத்துவோர் தேவைக்குத் தக்கவாறு கருவிகளைத் திட்டமிட்டுத் தயாரிப்பதற்கான ஒப்பந்த வேலைப் பிரிவு ஒன்று (சென்னை அடையாறில்); எண்காட்டும் மின்னணுவியல் கடிகார உற்பத்திப் பிரிவு இன்ஸ்ட்ரானிக்ஸ் வளாகம், அடையாறு ஆகியவையே அந்நான்கு உற்பத்தித் திட்டங்களாகும். இவை போக சிறு தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை குறிப்பாக குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரங்கள்; நேரம் காட்டும் பிற கருவிகளை விற்பனை செய்யவும் இந்நிறுவனம் உதவி செய்து வருகிறது.

2. அரசும் தனியாரும் சேர்ந்து முதலீடு செய்யும் "கூட்டுத் துறை" தொழில் முயற்சிகள் 19-க்கு இந்நிறுவனம் ஒப்புதல் பெற்றுள்ளது. மின்னணுவியல் தொழிலின் அனைத்துப் பிரிவுகளும் இம் முயற்சிகளில் அடங்கும். ஏற்கனவே தொடங்கி உற்பத்தி நடைபெற்றுவரும் "கூட்டுத்துறை" முயற்சிகளில் பின்வருவனவும் அடங்கும்:— அதாவது மின்னணுவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்றுமதியைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டம் ஒன்று; "ரெசிஸ்டர்" உற்பத்தி மையம், மதுரை;

தொலைக் காட்சிப்பெட்டி மற்றும் நுகர்வோர் மின்னணுவியல் திட்டம், சென்னை; மைக்ரோ பிராசஸர்களைக்கொண்டு அமைந்த நுண்கருவிகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகளைச் செய்யும் பிரிவு, மருத்துவ மின்னணுவியல் கருவிகள் தயாரிப்புச் சாலை ஆகியவை அடங்கும். ஒலி அலைகளுக்கான வடிகட்டும் கருவி; தொலைக் காட்சிப்பட குழாய்கள். . (Ferrits), தொழில் வாணிக தகவல் கருவிகள், வெப்பமூட்டும் கருவிகள், மின்சாரக் கட்டுப்பாட்டுக் கருவிகள், தொலைகாட்சி (Deflection) , உப பாகங்கள், தொலை பேசிகளுக்கான கருவிகள், மின் ஓட்டங்காட்டும் பலகைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. மின்னணுவியல் அமைப்புப் பொறியியல் (Systems engineering) பிரிவு ஒன்றும் "கூட்டுத் துறையில்" அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகத் தொலை தொடர்புச் சாதனங்கள் பற்றிய அமைப்புத் திட்டங்கள் தயாரித்து பயன் பெறுபவர் உடனடியாகச் செயல்படுத்தக்கூடிய விதத்தில் அவ்வமைப்புத் திட்டங்கள் செயலில் நிறைவேற்றியும் தரக்கூடியதாக அப்பிரிவு அமையும் தனியார்த் துறை முதலீட்டுத் தொகைகளையும் வளர்ச்சிப்பணிக்கு ஈர்த்து தொழில் வளர்ச்சியை மேலும் தீவிரமாக்கும் நோக்கமுடன் "கூட்டு முயற்சிகளை" தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் தொடங்கியுள்ளது. இவற்றின் மூலம் தொழிலியல் அறிஞர்களே தொழில் நடத்துபவர்களாக ஆகி இம் மாநிலத்தின் தொழில் நடத்துபவர்களாக ஆகி இம் மாநிலத்தின் தொழில்களைப் பெருக்குவதுடன் மிக உயர்ந்த தொழில் நுட்பங்களை தமிழகத்தில் பரவலாக்க முடியும் என்பதே "கூட்டு முயற்சிக்" கொள்கைக்கு அடிப்படையாகும். வரும் பத்து ஆண்டுகளில் அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் சேர்த்து மொத்தம் ரூ. 200 கோடிக்கு மேல் முதலீடு செய்ய வகைசெய்ய முடியும் என்று தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் எதிர்பார்க்கிறது. 31—3—1984 உடன் முடிவடைந்த ஆண்டில் மிகக் குறைவான 35 இலட்சம் ரூபாய் மொத்தம் வருமான அளவில் இருந்த இந்த நிறுவனம் 31—3—1985 ஆம் ஆண்டில் ரூ. 3.5 கோடி மொத்த வருமானத்தை அடைந்துள்ளது. 1985-86-ல் ரூ. 15 கோடியை மிஞ்சும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் வளர்ச்சி வியக்கத்தக்கதாக இருக்கிறது என்பதற்கு இப்புள்ளி விவரங்களே சான்றாகும்.



## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.

செய்தித்தாள் காகிதம் மட்டுமே இன்னமும் இந்தியாவில் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. சாதாரணமாக மென்மையான மரமும், யூகலிப்ட்ஸ் மரத்தின் பலதரப்பட்ட பட்டைகளும் செய்தித்தாள் காகிதம் தயாரிக்க பயன்படும் மூலப் பொருளாகும். ஆனால் இந்த மூலப் பொருட்கள் அதிக அளவில் கிடைக்காமையின் காரணமாக பெரிய அளவில் காகித ஆலை நிறுவுவதை தடுத்து வருகிறது. எனவே இந்த மூலப் பொருட்களுக்கு மாற்றான ஒரு மூலப் பொருளை செய்தித்தாள் காகிதம் தயாரிக்க பயன்படுத்த கண்டுபிடிப்பது ஒரு தேசிய பிரச்னையாக உருவாகியுள்ளது. கரும்புச் சக்கை இந்த சாதாரண மூலப் பொருட்களுக்குப் பதிலாக பயன்படுத்தப் படுவதற்குரிய எல்லா குணங்களையும் பெற்றுள்ளது. ஏராளமான அளவில் கரும்புச் சக்கை ஒவ்வொரு ஆண்டிலும் நாட்டில் தயாரிக்கப்படுகிறது. துர் அதிர்ஷ்டவசமாக தற்போது கிடைக்கும் கரும்புச் சக்கையில் பெரும்பகுதி சர்க்கரை ஆலைகளில் நீராவி தயாரிக்க பயன்படும் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

2. கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் காகிதம் போன்ற ஒரு முக்கியமான பொருளை தயாரிப்பது என்பது, உலகில் வேறெங்கும் கிடைக்கக்கூடிய அனுபவத்தை கொண்டு செயல்படும் வளரும் நாடுகளுக்குண்டான ஒரு மாற்றான வாய்ப்பாகும். வளரும் நாடுகளில் இந்தியா இந்த புதிய தொழில் நுட்பத்தை வளர்ப்பதில் நல்ல அமைப்பில் உள்ளது. கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுதுதாள் காகிதம் தயாரிக்கும் ஒரு ஆலையை நிறுவும் திட்டம் நீட்டும் வேலை மேற்கொள்ளப் பட்டது. மத்திய அரசின் தீவிரமான ஒத்துழைப்பு மற்றும் அறிவுரைகளுடனும், நாட்டிலேயே முதன்முதலாக நிறுவப்பட வுள்ள இந்த ஆலையின் மிகப் பெரிய அளவையும் அதற்காகும் பணச் செலவையும் கருத்திற்கொண்டு, தமிழக அரசு 1978-79-ல் கரும்புச் சக்கையை மூல பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுதும் காகிதம் தயாரிக்கும் ஒரு ஆலையை நிறுவும் பணியை மேற்கொண்டது. இந்தத் திட்டம், தற்போதுள்ள செய்தித்தாள் மற்றும் எழுது காகிதம் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், அதிக அளவில் கிடைக்கக்கூடிய கரும்புச்

[1985 ஜூன் 14

சக்கையை பயன்படுத்துதல் ஆகிய இரண்டு முக்கி நோக்கங்களையும் கருத்தில் கொண்டு திட்டப்பட்டது. இந்த காரணங்களுக்காகவே தமிழக அரசு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை துவக்கியது. இந்த நிறுவனம் 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி பதிவு செய்யப்பட்டது, மற்றும் பணியை 1979-ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் தேதி துவக்கியது. ஆண்டொன்றுக்கு 50,000 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன்கள் அச்சிடும் மற்றும் எழுதும் காகிதமும், தயாரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்விரண்டு பொருட்களும் முடிவுபெற்ற நிலையில் 75 சதவீதத்துக்கு குறையாமல் கரும்புச் சக்கையை உள்ளடக்கியிருக்கும். இந்த ஆலை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கும். திருச்சி மாவட்டத்தில் புகளூர் பகுதியில் நிறுவப்பட்டு வருகிறது.

3. இத் திட்டத்திற்கான பணம், பங்கு முதலீடு மற்றும் தவணைக் கடன்களாகவும் நிதிநிறுவனங்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் பெறப்படுகிறது. தமிழக அரசும், சர்க்கரை ஆலைகளும் ரூ. 34 கோடியை மூலதனமாக அளிக்க வேண்டும். நிதி நிறுவனங்களும் மற்றவர்களும் ரூ. 31.00 கோடியை அளிக்க வேண்டும். 1985 மார்ச் மாதம் வரை டி. என். பி. எல். ரூ. 64.05 கோடி பங்கு மூலதனத்தின் முன்பணமாகவும் சேகரித்துள்ளது. இந் நிறுவனம் ஐ.டி.பி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ., ஐ.எப்.சி.ஐ. மற்றும் வங்கிகளிடமிருந்தும் ரூ. 125 கோடியை கடனாக பெற்றுள்ளது. இத்துடன் ரூ. 14.50 கோடியை மத்திய மாநில அரசு மூலமாக இந் நிறுவனத்திற்கு சுலபக் கடனாக அளித்துள்ளது. இந்த தொகை முழுவதும் மாநில அரசிடமிருந்து இந்நிறுவனம் பெற்றுக் கொண்டு விட்டது.

இத்திட்டத்தின் முன்னோடியான விசேஷத் தன்மையின் காரணமாகவும், உலகிலேயே முதன்மையாக கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கக் கூடிய இவ்வாலை திட்டத்திற்கு உலக வங்கி 100 மில்லியன் டாலர் பண உதவி அளித்துள்ளது. ஐ.டி.பி.ஐ. நிறுவனத்தின் மூலமாக உலக வங்கி 22.5 மில்லியன் டாலர்களை பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது.



1985 ஜூன் 14]

இத்திட்டத்தில் கட்டுமான வேலைகள் 95 சதவீதமும், இயந்திரங்கள் நிறுவுதலில் 95 சதவீதமும் மொத்தத்தில் 80 சதவீத நிர்மாண வேலைகளும் முடிந்துள்ளன.

இந்த ஆலை ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட மரக் கூழைக் கொண்டு உற்பத்தியை துவங்கியுள்ளது. 1984-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 2,000 டன்கள் செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு பலதரப்பட்ட செய்தித்தாள் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக கரும்புச் சக்கையிலிருந்து தரமான கூழ் தயாரிப்பது, இந்த நிதியாண்டின் இறுதிக்குள் செயல்படுத்தப்படும்.

இந்நிறுவனத்தின் மேல்நிலை அதிகாரிகளையும் சேர்த்து சுமார் 850 பேர் பணியாற்றுகின்றனர். நேரடியாக 1,200 பேர்களுக்கும், மறைமுகமாக 5,000 பேர்களுக்கும் வேலை வாய்ப்பளிப்பது இத்திட்டத்தின் இலக்காகும்.

இத்திட்டத்தின் வெற்றிகரமான செயல்படுத்தும் திறன், நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும். தனித்தன்மை வாய்ந்த இத்திட்டம் இந்தியாவின் மற்ற கரும்பு விளையும் மாநிலங்களில் மட்டுமல்லாது, உலகின் இதர தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இதுபோன்ற ஆலைகளை ஏற்படுத்த முன்னோடியாகும்.

ஆண்டொன்றுக்கு 8 சதவீதம் அதிகரித்து வரும் செய்தித்தாள் காகித இறக்குமதியை குறைப்பதன் மூலம், இந்நிறுவனம் நாட்டில் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடிக்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும். அத்துடன் செய்தித்தாள் காகிதத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையேயுள்ள இடைவெளியை குறைக்கும்.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் நிறுவப்பட்டு, 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம்,

ரூ. 130 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருள்கள் தயாரிப்பது ஆகும்.

## மாரியூர்–வாலிநோக்கம் உப்புத் திட்டம்.

இத்திட்டம் 1975 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தொடங்கப் பட்டு, 1976 ஆம் ஆண்டு முதல் மேம்பாட்டுப் பணிகளோடு உற்பத்தியும் தொடங்கியது. வேறு எந்த தொழிலும் ஆரம் பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந் துள்ளதுமான இத்திட்டம், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் பின்தங்கிய பகுதியை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் 1984-ஆம் ஆண்டு இரசாயன தொழிற்சாலைக்குத் தகுந்த தரமான 31,100 டன்கள் உப்பு உற்பத்தி செய்தது. ஏப்ரல் 1984 வரை மழையிருந்ததால் ஜனவரி 1984-ல் ஆரம்பிக்க வேண்டிய உற்பத்தியானது மே 1984-ல் ஆரம்பிக்கப்பட்டு மே 1984 இறுதியில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் இரசாயன தொழிற்சாலைக்கு தேவையான உப்பு விற்பனை கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது எதிர்பாராத மழையின் காரணமாக உணவு/தொழிற்சாலைக்கு உகந்த உப்பின் தேவை யானது கடந்த ஜனவரி முதல் மே 1984 வரை அதிகரித்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேங்கியிருந்த உப்பின் பெரும்பகுதியை இந்நிறுவனம் விற்பனை செய்தது. இப் பொழுது தூத்துக்குடி அல்காலி கெமிகல்ஸ் (T.A.C. Ltd.), திருவாங்கூர் கொச்சின் கெமிகல்ஸ் (T.T.C. Ltd) ) மற்றும் கோத்தாரி இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் (Kothari) ) ஆகிய நிறுவனங்களிலிருந்து தொடர்ந்து உப்பு வேண்டி விண்ணப்பம் வந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு உப்பு விற்பனைச் செய்யப்பட்ட 12,116 டன்களை ஒப்பிடும் பொழுது இவ்வாண்டு 6—12—1984 வரை 40,035 டன் உப்பு விற்பனைச் செய்யப்பட் டுள்ளது.



இந்நிறுவனத்தின் விடா முயற்சியினால் தமிழகத் திட்டக் குழு ரூ. 75 இலட்சம் செலவில் வாலிநோக்கத்தில் ஒரு சிறிய துறைமுகம் அமைக்க அனுமதி அளித்துள்ளது. மாநில துறை முகத் துறை, சிறிய துறைமுகம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்துறைமுகம் செயல்பட்டால் மாரியூர் வாலி நோக்கத்தில் தயாரிக்கப்படும் உப்பை மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் இதர இடங்களுக்கு ஏற்றுமதி செய்து உப்பு விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

1985ஆம் ஆண்டில் இத்திட்டம் இரசாயன தொழிற் சாலைக்குத் தகுந்த சுமார் 60,000 டன் உப்பை உற்பத்தி செய்யும். ரூ. 15 இலட்சம் செலவில் அலுவலர் குடியிருப்பு கட்ட உத்தேசிக் கப்பட்டுள்ளது. மேலும் உப்பளத்திற்குள் வாகனங்கள் செல்லு வதற்காக சாலையை மேம்படுத்துதல், தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியை விரிவு படுத்துதல் மற்றும் குறைந்த அழுத்த மின் வசதியை உப்பளத்தில் உள்ள மின்சார பம்புகளுக்குப் பெற்றுத் தருதல் போன்ற வேலைகள் நடைபெறத் திட்டமிடப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக சுமார் 10 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 800 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்படுவதுடன் உப்பைக் கொண்டு செல்லுவதற்கான பணிகள் மூலம் சார்பு வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

## சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம்.

1979 ஆம் ஆண்டில் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது. இவ் வாண்டில் (1984) இத்திட்டத்தில் பாத்தி அமைத்தல் போன்ற உப்பு உற்பத்தி வேலைகளை 1984 ஏப்ரலில்தான் தொடங்க முடிந்து மே 1984-ல் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. உப்பு உற்பத்திக்கு உகந்த காலமான ஜூலை 1984-ல் இடையிடையே ஏற்பட்ட மழையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டதால் இத்திட்டத்தில் எஞ்சியுள்ள கால நிலையை பயன்படுத்தி 3,111 டன் மட்டுமே உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

[1985 ஜூன் 14

1985-ஆம் ஆண்டு இத்திட்டம் சுமார் 16,000 டன் உப்பு, உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரயில் பாதை வசதி மற்றும் சாலை வசதி உப்பு உற்பத்தி செய்யும் இடத்திற்கு அருகில் இருப்பதினால் உப்பு விற்பனைச் செய்ய அதிகச் சிரமம் இராது என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் சுமார் 400—500 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும், 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிப்பதுடன் சார்பு வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

4. புதுத் திட்டங்கள்.

தமிழ்நாடு கெமிக்கல்ஸ் ஃப்ராடக்ட்ஸ் நிறுவனம் (T.C.P. Ltd.) சுமார் ரூ. 5 கோடி செலவில் வாலிநோக்கத்தில் மெக்னீசியம் மெட்டல் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது. இந்த வகையில் இதுதான் இந்தியாவிலேயே முதல் திட்டமாகும். இதில் தயாரிக்கப்படவிருக்கும் உலோகம், விமானத் தயாரிப்புத் தொழிற்சாலைக்கும், நாணயம் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கும் பயன்படும். சுமார் 16,000 டன் அளவுள்ள 36 உப்புக் கழிவு நீர் ( Bitterness ) இத்திட்டத்திற்கு மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டம் அளிக்கும். இந்நிறுவனம் 1985 ஆம் ஆண்டு ரூ. 6·35 இலட்சம் செலவில் உப்புக் கழிவு நீரை Bitterness ) பிராசஸ் (Process ) செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தும்.

மெக்னீசம் மெட்டல் திட்டத்திற்காக உப்புக் கழிவு நீர் (Bitterness) ) அளிக்கும் பொழுது உப்பைச் சார்ந்த மெக்னீசம் சல்பேட், பொட்டாசியம் குளோரேட், பொட்டாசியம் சோனைட், சோடியம் சல்பேட் போன்ற உப்பு இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன. இந் நிறுவனம் பவநகரில் அமைந்துள்ள ( (C.S.M.C.R.I.) நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. இத் திட்டங்கள் நன்றாகச் செயல்படுமா என்பதனை விரிவாக ஆராய்ந்து இத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.



1985 ஜூன் 14]

மாரியூர் வாலிநோக்கத்தில் தயாரிக்கப்படும் உப்பை ஊட்டச் சத்துக்களால் வளப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு தமிழக அரசு மூலமாக இந் நிறுவனத்திற்குக் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. இந் நிறுவனம் இதற்கு இசைந்துள்ளது. மேலே சொன்ன திட்டத்தினால் இந் நிறுவனம் எந்தவிதமான செலவையும் ஏற்க நேரிடாது.

சர்தார் வேதாரத்தின் உப்புத் திட்டத்தில் அயாடின் கலந்த உப்பு ( (Iodised salt) ) தொழிற்சாலையை ஏற்படுத்த உப்பு ஆணையர் மூலமாக இந் நிறுவனம் யூனிசெஃப் ( (UNISEF) நிறுவனத்தின் உதவியை அணுகியது. இதற்கான உதவியின் ஆணையை மத்திய அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

பவநகரில் அமைந்துள்ள ( (C.S.M.C.R.I.) ) நிறுவனம் தமிழக அரசு மற்றும் மத்திய உப்புத் துறையின் கூட்டு மூலமாக மாதிரி உப்புப் பண்ணையை வாலிநோக்கத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இந் நிறுவனம் நல்ல முறையில் உப்பு உற்பத்தி செய்யவும் மற்றும் தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல் போன்றவற்றில் பயன் அமையும். மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மாதிரி உப்புப் பண்ணைக்குத் தேவையான 200 ஏக்கர் நிலத்தை வழங்க ஒத்துக் கொண்டுள்ளது. மற்றும் மத்திய உப்புத் துறை அதிகாரிகள் சமீபத்தில் மாரியூர் வாலி நோக்கம் உப்புத் திட்டத்தை பார்வையிட்டு விரிவான அறிக்கையை அளித்துள்ளார்கள். இந்நிறுவனத்திற்குச் சொந்தமான சுமார் 200 ஏக்கர் நிலப் பரப்பில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட விருக்கிறது. இத் திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 80.81 இலட்சம். இம்முதலீடானது மூன்றில் ஒரு பங்கு விதம் (C.S.M.C.R.I.) மத்திய உப்புத் துறை மற்றும் இந்நிறுவனம் மூலமாக பகிர்வு செய்யப்படும். ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு இத்திட்டத்தை இந் நிறுவனம் ஏற்று நடத்தும். மேற்கொண்டு தகவல்கள் ( (C.S.M.C.R.I.) மிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திட்ட உதவி.

1985-86 ஆம் வருடத்தில் இப்பொழுது செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்களுக்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மத்திய திட்டக் குழுவிற்குப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

1985ஆம் ஆண்டில் அதிக அளவு உற்பத்தி விற்பனை எதிர்பார்க்கப்படுவதினால் இந்நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறன் 1985ஆம் ஆண்டில் மேம்படும். 1986ஆம் ஆண்டில் பண இழப்பைத் தவிர்த்துப் பின்வரும் ஆண்டுகளில் இலாபகரமாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கனிவள நிறுவனங்கள்.**

**தமிழ்நாடு கனிம நிறுவனம்:**

தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான கனிமப் பொருட்களை வெட்டி எடுப்பதற்கும் கருப்பு மற்றும் சாம்பல் நிற கற்களை வெட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) அரசு நிறுவனம் ரூபாய் 100 லட்சங்கள் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. டாமின் தனது புதிய திட்டங்களை செயல்படுத்தவும், சுரங்கங்களின் எண்ணிக்கையை உயர்த்தி உற்பத்தியைப் பெருக்க ஏதுவாக இருக்கும்பொருட்டும் அரசு அனுமதிக்கப்பட்ட மூலதனத்தை தற்பொழுது ரூ. 300 இலட்சத்திற்கு உயர்த்தியுள்ளது. இதுவரை ரூ. 172.50 லட்சம் மூலதனமாக செலுத்தப்பட்டுள்ளது.

2. 1984-85 ஆம் ஆண்டில் (1984 டிசம்பர் மாதம் வரையில்) 'டாமின்' நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் 1983-84 ஆம் வருடத்தில் செயல் முறைகளுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளன.

(1) கனிம உற்பத்தி.

| | 1983—84 | | 1984—85 | |
|---|---|---|---|---|
| (1) | அளவு (2) | மதிப்பு. (3) (ரூபாய்இலட்சத்தில்) | அளவு (4) | மதிப்பு. (5) (ரூபாய்இலட்சத்தில்) |
| கருப்பு கற்கள் .. | 2,631 க.மீ. | 82.45 | 3,587 க.மீ. | 117.70 |
| சாம்பல் நிறக்கற்கள் | 1,818 க.மீ. | 17.30 | 3,432 க.மீ. | 42.80 |
| முக்கிய கனிப் பொருட்கள். | 29,124 டன். | 31.50 | 87,674 டன். | 49.80 |
| | | 1,31.25 | | 2,10.30 |



(2) கனிம விற்பனை.

| | 1983—84 | | 1984—85 | |
|---|---|---|---|---|
| (1) | அளவு (2) | மதிப்பு. (3) (ரூபாய் இலட்சத்தில்). | அளவு (4) | மதிப்பு. (5) (ரூபாய் இலட்சத்தில்) |
| கருப்பு கற்கள் | 2,643 க.மீ. | 1,66.90 | 3,165 க.மீ. | 2,21.82 |
| சாம்பல் நிறக்கற்கள் | 1,847 க.மீ. | 54.13 | 3,402 க.மீ. | 1,05.95 |
| பெருங்கனிப் பொருட்கள். | 23,683 மெ.டன். | 20.90 | 92,200 மெ.டன். | 80.43 |
| | | 2,41.93 | | 4,08.20 |

இந்நிறுவனம் 1984-85 ஆம் ஆண்டின் மொத்த விற்பனையின் அளவை கடந்து விட்டது. இந்த வருடத்தின் மொத்த விற்பனையின் அளவு ரூ. 408.20 இலட்சமாகும். இந்நிறுவனம் 1984-85-ல் நடைமுறை இலாபமாக ரூ. 110 இலட்சங்களும், நிகர இலாபமாக (வரிக்குப்பின்) ரூ. 8.14 இலட்சங்களும் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1983-84-ன் நடைமுறை இலாபமான ரூ. 100.00 இலட்சத்திற்கும் நிகர இலாபமான ரூ. 7.88 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளது. இந்நிறுவனம் தற்சமயம் 2,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. இது 1985-86-ல் 2,750-க்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**3. அறுத்து மெருகேற்றும் தொழிற்கூடம்:**

தமிழ் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கும் கரும் பாறைகளை வெட்டி மெருகேற்றி பன்னாட்டுச் சந்தையில் விற்கும்பொருட்டு ரூ. 385 இலட்சம் செலவில் சென்னைக்கு அருகில் மணலியில் இறக்குமதி செய்த இயந்திரங்களுடன் நூறு விழுக்காடு ஏற்றுமதி

உரிமம் பெற்ற நவீன தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க டாமின் திட்டமிட்டுள்ளது. வெட்டி மெருகேற்றிய பாறைகளை டாமின் நேரடியாக அயல்நாடுகளுக்கு அனுப்பி அதன் மூலம் அதிக இலாபம் பெற இத்திட்டம் வழி வகுக்கும். இதில் இந்திய தொழில் முன்னேற்ற வங்கியிடமிருந்து ரூ. 120 இலட்சங்களும் இந்திய தொழில் நிதியுதவி நிறுவனத்திடமிருந்து ரூ. 39 இலட்சங்களும் ஆக மொத்தம் ரூ. 159 இலட்சங்கள் இதுவரை உதவித் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.

அரசு இத்திட்டத்திற்கு ரூ. 3.85 இலட்சம் மதிப்பில் ஒப்புதல் அளித்து சென்னைக்கருகிலுள்ள மணலி கிராமத்தில் இத் தொழிற்சாலைக்கு கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலங் களை வழங்கியுள்ளது. அரசு, ரூ. 80 இலட்சங்கள் மூலதனப் பங்கு உதவியையும் அளித்துள்ளது. இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கி (ஐ.டி.பி.ஐ. ரூ. 1.70 இலட்சங்களும், இந்திய தொழில் நிதி உதவிக் கழகம் (ஐ.எப்.சி.ஐ.) ரூ. 55 இலட்சங் களும், ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 50 இலட்சங்களும் ஆக மொத்தம் ரூ. 2.75 இலட்சங்கள் கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளன.

இந்தத் திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கட்டிட வேலை சீராக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தத் தொழிற்சாலை 1985 ஆம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் தனது உற்பத்திப் பணியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த தரமுள்ள 50,000 சதுர மீட்டர் அளவுள்ள மெருகிட்ட பாளங்களும் 10,000 சதுர மீட்டர் அளவுள்ள மெருகிட்ட உருவ கற்களும் உற்பத்திச் செய்ய முடியு மென எதிர்பார்க்கப்படுகிறது.

4. சிவகெங்கை கிராபைட்டை வெட்டியெடுக்கும் தொழிற்சாலை.

உலகிலேயே சிறந்ததாகக் கருதப்படும் மடகாஸ்கருடன் ஒப்பிடக் கூடிய கிராபைட் தாது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கையில் கிடைக்கிறது. வெட்டி யெடுக்கப்பட்ட தாதுக்களை சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்குத் தேவைப்படும் 1,104 ஏக்கர் நிலத்தில் 600 ஏக்கர் புறம்போக்கு



நிலமாகவும் 504 ஏக்கர் பட்டா நிலமாகவும் இருக்கும். அரசு புறம்போக்கு நிலத்தில் தாது எடுப்பதற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 283 ஏக்கர் பட்டா நிலம் கையகப் படுத்தப்பட்டுவிட்டது. மீதி நிலங்களைக் கையகப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஜாம்சட்பூர் தேசிய கனிவள ஆய்வுக் கூடம் ஆகியவற்றுடன் கலந்து ரூ. 250 இலட்சங்கள் செலவு மதிப் பீட்டில் தயாரிக்கப்பட்ட கிராபைட் வெட்டி சுத்தப்படுத்தும் திட்டத்திற்கு அரசும் ஒப்புதல் அளித்துள்ளது. நிதி உதவி நிறுவனங்களான இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கியும், இந்தியத் தொழில் நிதியுதவி நிறுவனமும் தேவையான உதவித் தொகையை விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டிற்கு வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் மிகுந்த கிராக்கியுள்ளது. இத் திட்டம் தனது உற்பத்தியை 1985-86-ன் முடிவில் தொடங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இத் திட்டம் ஒரு நாளுக்கு 100 டன் தாதுக்களை வெட்டி எடுத்து இதில் 14 டன்கள் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டைத் தயாரிக்கும் திறனுடையது. அரசு இத் திட்டத்திற்கு மூலதன பங்காக ரூ. 20 இலட்சங்கள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

டாமின் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. மேலும் வெளிநாட்டு கூட்டு ஒப்பந்தத்துடன் கிராபைட்டை அடிப்படை யாகக் கொண்ட விமான பாகங்கள் தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைப்பது பற்றிய சாத்தியக் கூறுகளை டாமின் ஆய்வு செய்து கொண்டு வருகிறது.

## தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்.

திருவாளர்கள் தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் கச்சா மாக்னசைட்டை வெட்டியெடுக்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு நிறுவனமாக ரூ. 2.00 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் 17—1—1979-ல் நிறுவப்பட்டது. சுழலும் சூளைத் திட்டம் மற்றும் கச்சா மாக்னசைட்டைச் சுத்தம் செய்து மேம்படுத்தும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்த

இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு அதனுடைய பங்கு மூலதனமாக ரூ. 4.00 இலட்சம் வழங்கியுள்ளது. திருவாளர்கள் தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட், தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டின் துணை நிறுவனமாகும். சூடுக்காலைச் செங்கற்கள், உரங்கள், இரசாயனப் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் கச்சாப் பொருட்களான மிதமாக எரிக்கப்பட்ட மாக்னசைட் மற்றும் முழுமையாக எரிக்கப்பட்ட மாக்னசைட் என்ற நடுத்தரப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதே துணை நிறுவனத்தின் முக்கிய பணியாகும்.

2. 1984-85-ம் ஆண்டில் (31—1—1985 வரை) கச்சா மாக்னசைட்டின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் 1983-84-ம் ஆண்டிற்கான செயல்பாடுகளுடன் கீழே ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

| | 1983-84 (டன்கள்) | 1984-85 (டன்கள்) |
|---|---|---|
| 1. உற்பத்தி | 117,856 | 109,845 |
| 2. விற்பனை | 107,818 | 102,474 |

**எதிர்காலத் திட்டங்கள்.**—தமிழ்நாடு அரசு, கச்சா மாக்னசைட்டை நடுத்தரப் பொருளாக மாற்றுவதற்கு, சுமார் 765 இலட்சம் செலவு மதிப்பீட்டில் சுழலும் சூளை ஒன்றினை நிறுவுவதற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அது நடப்பு ஆண்டில் (1985-ம் ஆண்டு ஜூலை மாதத்தில்) உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு சுமார் ரூ. 26.13 இலட்சம் செலவில் கச்சா மாக்னசைட்டை சுத்தம் செய்து மேம்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்ற தேவையான தொழில் நுட்பத் திறனை சுவிட்சர்லாந்தில் உள்ள திருவாளர்கள் சுல்சர் பிரதர்ஸ் லிமிடெட், வின்டெர்தூர் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்காக இந் நிறுவனம் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. இத் தொழிற்சாலைக்குத் தேவையான பொறியியல் பணிகளை வழங்குவதற்கும், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கும் கல்கத்தாவிலுள்ள திருவாளர்கள் எம். என். தஸ்தூர் அண்டு கம்பெனியை, டான்மாக் தொழில்





நுட்ப ஆலோசகர்களாக அமர்த்தியுள்ளது. டான்மாக் இத் திட்டத்திற்கு ஏற்கெனவே சுமார் ரூ. 1,07.45 இலட்சம் செலவு செய்துள்ளது. 1988 ஆம் ஆண்டு இறுதியில் இத் திட்டம் நிறைவு பெற்று உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. ஆஸ்திரியாவிலுள்ள திருவாளர்கள் ரிப்ராக்டரீ கன்சல்ட்டன்ட்ஸ் இன்ஜினியரிங் கூட்டு ஒப்பந்தத்துடன் வெப்பந்தாங்கிக் கற்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு டான்மாக் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இந்நிறுவனம் இந்திய அரசின் அனுமதி பெற்று இதுவரை ரூ. 4.90 இலட்சம் முதலீடு செய்தது. இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு மற்றும் சம்பந்தப்பட்ட அடிப்படை விவரங்களை ராஞ்சியிலுள்ள மெட்டலூர்ஜிக்கல் அண்டு இன்ஜினியரிங் கன்சல்ட்டன்ட்ஸ் (இந்தியா) லிமிடெட், தயாரித்து வருகிறது.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை.

தொழில்துறை இயக்குநரகத்தின் இயங்கி வந்த மாநில புவியியல் பிரிவு கடந்த 25 ஆண்டுகளில் முறையாக பல கனிம ஆய்வுகளை மேற்கொண்டது. இதன் பயனாக தனியார் மற்றும் பொதுத் துறையில் கனிமம் சார்ந்த பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கனிம சலுகை மனுக்களை விரைவில் பரிசீலித்து அரசிற்கு முறையான பரிந்துரைகள் அனுப்புவதற்கும் கனிம நிர்வாகத்தில் கொள்கை அடிப்படையிலான சில முடிவுரைகளை விரைவில் மேற்கொள்வதற்கும் புவியியல் தொழில் நுட்ப அலுவலர்கள் உதவி புரிகின்றனர்.

1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ல் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்ககம் என்ற புதிய துறையை அரசு ஏற்படுத்தியது. இதன் மூலம் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பணிபுரிந்து வந்த தனிச் சுரங்க பணியாளர்கள் புதிய இயக்குநகரத்தின்கீழ் பணியமர்த்தப்பட்டனர்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநரகத்தின் பணிகள் :—

(1) கனிம ஆய்வு

(2) கனிம நிர்வாகப் பணி

என இரு வகைப்படும்.

**கனிம ஆய்வு :**

1985-86 ஆம் ஆண்டுகள் கீழ்க்கண்ட கனிம ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. தர்மபுரி மாவட்டம், கிருட்டிணகிரி வட்டம், மகராஜ கடை பகுதியில் தங்கத்திற்கான முதற்கட்ட பிரிவுக்கான ஆய்வு 1983-ல் முடிக்கப்பட்டது. இரண்டாவது நிலை பகுதியில் ஆய்வுப் பணிகள் துவங்கியுள்ளன.

2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் ஆனந்தவாடி, கைருலாபாத், அமீலாபாத் மற்றும் பெரிய நாசனூர் பகுதிகளில் படிந்தவகை சுண்ணாம்புக் கற்களுக்கான விரிவான ஆய்வு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்குறித்த இவ் வாய்வுப்பணியானது திருவாளர்கள் தமிழ் நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தினரின் வேண்டுகோளுக் கிணங்க அவர்களின் விரிவாக்கத் திட்டத்தின் தேவைக்காக கூடுதல் சுண்ணாம்புக்கல் இருப்பு அளவினை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இப் பணியில் சுமார் 35 துளைகளிட்டு சுமார் 2,000 மாதிரிகள் இரசாயன பரிசோதனை களுக்காகச் சேகரிக்கப்பட உள்ளன.

(19—12—1985.)

3. இராமநாதபுரம் மாவட்டம், ஆலங்குளத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தினரின் சுரங்கக் குத்தகைப் பகுதிகள் மற்றும் ஆலங்குளத்தை சுற்றி 20 கி.மீ. ஆரச்சுற்றில் காணப்படும் படிக வகை சுண்ணாம்புக் கற்களுக்கான விரிவான ஆய்வு.

4. பெரியார் மாவட்டம், காங்கேயத்தைச் சுற்றியுள்ள பகுதியிலும். திருச்சிராப்பள்ளி மாவட்டம், சின்னதாராபுரம் பகுதிகளிலும் வெங்கக் கல் மற்றும் பெல்சுபார் கனிமங்களுக்கான விரிவான ஆய்வு.

5. நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் ஊட்டி பகுதிகளில் புவிநுட்பவியல் சார்ந்த ஆய்வுப் பணிகள்.

6. மதுரை மாவட்டம், பெரியாறு நீர்த்தேக்கத்தில் துறப்பண ஆய்வு.



இவ்வாய்வுப் பணியானது பெரியாறு அணையில் உள்ளமைப்பை அறியவும் அதனை வலுப்படுத்தும் முறைகளை முடிவு செய்யவும் தலைமைப் பொறியாளர் (நீர்ப் பாசனம்) அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பு ஆய்வுப் பணியாகும்.

7. சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் செவிட்டு ரெங்கன்பட்டியன் மணிக் கற்கள் மற்றும் குறைமணிக் கற்களுக்கான ஆய்வு.

8. தென்னாற்காடு மாவட்டம், மாமண்டூரில் காணப்படும் செம்பு கனிம அமைப்பு பற்றிய மறு மதிப்பீடு.

9. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்திற்காக தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் அருகில் களிமண் பற்றிய ஆய்வு.

கீழ் குறிப்பிட்டுள்ள நான்கு செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(1) தென்னாற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளில் சுரங்கக் குத்தகையற்ற பகுதிகளில் விரிவான ஆய்வு மற்றும் துறப்பணப் பணிகள் மேற்கொள்ளுதல்.

(2) மகராசகடை பகுதியில் கோலார் சிஸ்ட் வரை பாறை களின் தென் தொடர்ச்சியில் தங்கம் கிடைப்பதனை அறிவதற்காக விரிவான ஆய்வும், துறப்பணப் பணியும் திட்டமிடப்பட்டுள்ளன.

(3) நீலகிரி மாவட்டம், ஊட்டி பகுதியில் நகர அமைப்பு தொழில் அமைப்பு மற்றும் விவசாயம் இவைகளினால் புவியியல் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றி அறிதல்.

(4) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்தில் தேயிலை மற்றும் உருளை பயிரிடுதல் மூலம் நிலச் சரிவுக்கு உட்படும் தன்மை ஆய்தல்.

மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் மற்றும் கூடலூர் வட்டங்களில் நிலச்சரிவு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், நிலச்சரிவு பற்றிய அபாயங்களை கண்டறிந்து நிலத்தை பயன்படுத்தும்

அமைப்புகளுக்கு அறிவுரை கூறவும் குன்னூரை தலைமை இடமாகக் கொண்டு 'புவிநுட்பவியல் குழு' ஒன்றினை அமைக்கத் திட்டம் ஒன்று உள்ளது.

**கனிம மேம்பாட்டு ஆய்வகம் :**

வடஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலைப் பகுதியில் காணப்படும் இரும்புத் தாதுவை அடர்வூட்டி உருண்டைகள் செய்து "ஸ்பான்ச் இரும்பு" உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வதற்காக மாதிரிகள் சேகரிக்கவும், சோதனைகளுக்காகவும் அரசு ரூ. 1.50 இலட்சம் அனுமதித்துள்ளது. இப்பணிக்காக சுமார் 1 டன் எடையுள்ள இரும்புத் தாது மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சேலத்தில் அமைந்துள்ள கனிம மேம்பாட்டு ஆய்வகத்தில் அடர்வூட்டும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இவ்வடர்வூட்டப்பட்ட இரும்புத் தாது சென்னையிலுள்ள தேசிய உலோகவியல் ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டு பூர்வாங்க சோதனைகள் முடிக்கப் பட்டுள்ளன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட உருண்டைகள் ஸ்பான்ஞ்ச் இரும்பு உற்பத்தியில் பொருந்தும் தன்மை அறிவதற்காக ஆந்திரப் பிரதேசத்தில் கம்மம் என்னுமிடத்தில் அமைந்துள்ள "இந்திய ஸ்பான்ஞ்ச் அயர்ன் லிமிடெட்" நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும் கனிம மேம்பாட்டு ஆய்வகத்தில் பொதுத் துறை தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட சுமார் 60 மாதிரிகள் சோதனையிடப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன. புதிதாக பெறப்பட்டுள்ள கனிம மேம்பாட்டு இயந்திரங்களை நிறுவுவதற்கான அடித்தள மேடை அமைக்கும் பணிகளும், 250 கி.வோ. சக்தி மின்மாற்றுக் கருவியினை நிர்மாணிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் கனிம மேம்பாட்டு அனைத்து இயந்திரங்களும் தொடர் நிலைப் பணி ஆற்ற ஏதுவாகும்.

**கனிம நிர்வாகம் :**

மாநில புவியியல் பிரிவு, புவியியல் மற்றும் சுரங்கத் துறையாக உயர்த்தப்பட்ட பின்னர் கனிம நிர்வாகத்தில் பகுதி நிர்வாகப் பணி மேற்கொள்ளப்படுகிறது. 15 மாவட்டங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ள அலுவலகங்களின் மூலம் உதவி இயக்குநர்கள் மாவட்ட





ஆட்சித் தலைவர்களுக்கு கனிம நிர்வாகத்தில் உதவி புரிகின்றனர். மாவட்ட அளவில் முறையான கூட்டங்கள் நடைபெறுவதன் மூலம் கனிம நிர்வாகம் செவ்வனே செயல்படுவதற்கும் ஒத்த கொள்கைகள் அமையவும் ஏதுவாகிறது. கனிம நிர்வாகப் பணியில் ஏற்படும் அடிப்படை இடையூறுகள் பற்றி சுரங்கத் தொழிலதிபர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு அவைகளை உடன் களைவதற்கான சாத்தியக் கூறுகள் மாவட்ட அளவில் தலைமை இடத்தில் சுரங்க சொந்தக்காரர்களின் நபர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

வருவாய்த் துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் சேர்ந்த பணி, கனிம குறைந்த மதிப்பீடுகளையும், கனிமங்களையும் கொண்டு செல்வதிலும் உள்ள சட்ட குறைபாடுகளை கண்டறிவதில் பெரும்பங்கு வகிக்கிறது. இதன் மூலம் சட்டத்திற்குப் புறம்பான முறையில் கனிமம் கொண்டு செல்லும் பணி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிறு சுரங்க குத்தகைதாரர்களின் வேண்டுகோளிற்கிணங்க, அனுமதிச் சீட்டுகளின் செல்லுபடி காலம் 10 நாட்களில் இருந்து 15 நாட்களுக்கும், தாங்களே கனிமத்தை பயன்படுத்து வோருக்கு 15 நாட்களில் இருந்து 1 மாதத்திற்கும் உயர்த்தப் பட்டுள்ளது. மணல், கல் மற்றும் களிமண் முதலிய சிறுவகை கனிமங்களை ஏலத்தில் விடுகிறபோது அவைகளின் தனியுரிமை பாதிக்காதவாறு கவனம் செலுத்தப்படுகிறது.

1984–85 ஆம் ஆண்டுகளில் 235 ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் மாநில முழுவதிலும் இருந்து சுமார் 200 சுரங்க குத்தகை மனுக்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டன. இத்துடன் சுமார் 70 உயர் நீதிமன்ற வழக்குகளும், வழக்கு மேல்முறையீடுகளும் பெரிய வகை மற்றும் சிறிய வகை கனிமங்கள் சம்பந்தமாக பெறப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டன.

மேற்குறித்த காலத்தில் உரிம வரி, உள்ளூர் தளவரி, உள்ளூர் தளவரி மீது சிறப்பு வரி இவைகளின் மூலம் ரூ. 4.36.01 இலட்சங்கள் வருவாய் கிட்டியுள்ளது ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்குவதில் புதியனவற்றிற்கு ரூ. 86,000-ம் மறு அளிப்பிற்கு ரூ. 31,175 பெறப்பட்டன. ஜனவரி 85 திங்களில் மேற்படி வருவாய் ரூ. 11,500-ம் ரூ. 27,750-ம் ஆகும்.

மேற்குறித்த வருவாயில் கடந்த ஐந்தாண்டு வருவாய்த் தகவல் கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பார்க்கும்போது புதிய இயக்குநரகம் அமைத்த பின் வருவாய் கணிசமாக உயர்ந்துள்ளது தெரிய வரும்.

கனிம வருவாய்.

| ஆண்டு. | மொத்தகனிம வருவாய். | மாக்ன செட் விற்பனை மூலம் வருவாய், |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980—81 .. .. .. .. | 4,11.48 | 2,38.58 |
| 1981—82 .. .. .. .. | 4,33.08 | 2,60.00 |
| 1982—83 .. .. .. .. | 5,74.82 | 3,08.20 |
| 1983—84 .. .. .. .. | 2,83.09 | ... |
| டிசம்பர்வரை .. .. .. | 4,36.1 | ... |

பரிசீலிக்கப்பட்ட சுரங்க குத்தகை மனுக்களின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| 1981—82 .. .. .. .. .. | 81 |
| 1982—83 .. .. .. .. ... | 98 |
| 1983—84 .. .. .. .. ... | 100 |
| பிப்ரவரி 1984—அக்டோபர் 1984 .. ... | 200 |





ஒப்புதல் சான்றிதழ்கள் அளிக்கப்பட்ட விவரமும் வருவாயும்:—

| ஆண்டு. | புதியன. | வருவாய். | மறு அளிப்பு. | வருவாய். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | | ரூ. |
| 1980—81 .. | 88 | 44.000 | 160 | 40,000 |
| 1981—82 .. | 107 | 53,500 | 204 | 53,500 |
| 1982—83 .. | 175 | 87,500 | 219 | 54,750 |
| 1983-84 (டிசம்பர் 83 முடிய). | 111 | 55,500 | 118 | 39,500 |
| 1984 .. | 172 | 86,000 | 266 | 31,175 |
| ஜனவரி 1985 .. | 23 | 11,500 | 111 | 27,750 |

சர்க்கரைத் தொழில்.

1985-86.

வேளாண்மையை அடிப்படையாகக்கொண்ட சர்க்கரைத் தொழில் விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான தலையாய அங்கம் வகிக்கின்றது. மேலும் சர்க்கரை ஒரு பொதுப் பயனுடைய அத்தியாவசிய பண்டமாதலால் முக்கிய பங்கு வகிக்கிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஒருங்கிணைந்து செயல்படச் செய்தல் இந்த ஆலைகளை மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளை கவனிப்பதற்காக அரசு 1969 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தனியாக சர்க்கரைத் துறை இயக்ககத்தை தோற்றுவித்தது.

1.2. இம் மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் 11 சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையில் 3 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையில் 3 சர்க்கரை ஆலைகளும், மத்திய அரசு நிர்வாகத்தின்கீழ் ஒரு சர்க்கரை ஆலையும் உள்ளன. புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க தனியார் துறையை ஊக்குவிக்கலாம் என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி தனியார் துறையில் இருந்து பெறப்பட்ட

8 விண்ணப்பங்களை மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசு இதுகாறும் 3 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையில் அமைக்க முன் உரிமம் வழங்கியுள்ளது. இரண்டு விண்ணப்பங்கள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. எஞ்சியுள்ள 3 விண்ணப்பங்கள் மைய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறையில் கூட்டுறவுத் துறையில் நாளொன்றுக்கு 1,250 டன் பிழிதிறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க மத்திய அரசு 1984 செப்டம்பர் திங்களில் முன் உரிமம் வழங்கியுள்ளது. இவ்வாலை கூட்டுறவுத் துறையில் தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு கிராமத்தில் நிறுவப்படுகிறது. இத் திட்டத்தின் திருத்திய திட்ட மதிப்பீடு ரூபாய் 1,190 இலட்சம். மாநில அரசு இதுவரை இத்திட்டத்திற்கான பங்கு மூலதனத் தொகையான ரூ. 357 இலட்சத்தில் ரூ. 150 இலட்சம் வெளியிட்டுள்ளது. இவ்வாலை 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி பகுதியில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை அமைப்பது குறித்து தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இணையம் அனுப்பியுள்ள விண்ணப்பம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் 10 சர்க்கரை ஆலைகள் புதியதாக அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### (2) தமிழக சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள்.

2.1. தமிழக சர்க்கரை ஆலைகளின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் பொதுவான செயல்பாட்டு விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.2. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு போன்ற விவரங்களும் 1984-85 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடும் கொண்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



| வரிசை எண். (1) | சர்க்கரை ஆண்டு (2) | | பிழியப்பட்ட கரும்பின் அளவு. (3) | உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு. (4) | சர்க்கரை கட்டுமானம். (5) | நிறுவிய பிழிதிறனை பயன்படுத்திய அளவு. (6) |
|---|---|---|---|---|---|---|
| | | | (இலட்சம் டன்களில்). | | (விழுக்காடுகள்). | |
| 1 | 1981—82 | .. | 85.93 | 7.55 | 8.78 | 120 |
| 2 | 1982—83 | .. | 72.02 | 6.51 | 9.04 | 101 |
| 3 | 1983—84 | .. | 45.55 | 4.24 | 9.30 | 60 |
| 4 | 1984—85* | .. | 63.94 | 5.81 | 9.09 | 84 |

* மதிப்பீடுகள்.

2.3. 1983-84 ஆம் ஆண்டில் சில பகுதிகளில் நிலவிய வறட்சியின் காரணமாக இம் மாநிலத்தில் 1984-85 ஆம் ஆண்டில் 63.94 இலட்சம் டன் மட்டுமே கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.4. 1983-84 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 4.24 இலட்சம் டன்களாக இருந்தது. 1984-85 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 5.81 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### (3) கரும்பின் விலை.

3.1. 1984-85 ஆம் ஆண்டு அரவைப்பருவத்திற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்கு குறைவான சதவீத சர்க்கரை சத்துடைய கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 140 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. சர்க்கரை கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின் 0.1 சதவீதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றிற்கு 16.4706 பைசா வீதம் அதிகமாக கொடுக்கப்பட வேண்டும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

கரும்பு உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த அளவு விலை ஆதாய மற்றது என முறையீடுகள் எழுந்ததாலும், வேளாண்மை இடுபொருள் விலை, கூலி உயர்வு ஆகியவற்றை கருத்திற் கொண்டும் 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 185 என்று 1984-85 ஆம் ஆண்டிற்கு கொடுக்க வேண்டும் என தமிழக அரசு சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை கூறியுள்ளது. சர்க்கரை கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின் 0.1 விழுக்காடுக்கு 21.7647 பைசா வீதம் அதிகமாக வழங்கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் 1984-85 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளிடம் பதிவு செய்து கரும்பு வழங்கும் கரும்பு பயிரிடுவோர்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 10 மானியமாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மானியம் 1984-85 ஆம் ஆண்டில் ஆலையிடம் பதிவு செய்து கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கவும் மாநில அரசு பரிந்துரை செய்யப்பட்ட கரும்பு விலையான ரூ. 185 பெறுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் இத் தொகைக்கு கொள்முதல் வரி விலக்கு அளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

3.2. 1983-84 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஏற்கனவே மாநில அரசு அறிவுறுத்திய கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 160 உடன் டன் ஒன்றுக்கு ரூ. 20 மானியமாக வழங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**(4) கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்.**

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தான் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் கரும்பு மீதான மேல்வரி (செஸ்) அரசுக்கு செலுத்துகின்றன. மேற்படித் தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சாலைகளை பராமரித்தல் போன்ற இனங்களுக்கு செலவழிக்கப்படுகின்றது. 1984-85 ஆம் ஆண்டில் கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு செலவிட ரூ. 175 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**5. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்.**

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காகவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டும் தமிழக அரசு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந்நிறுவனம் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.

**6. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (டாஸ்கோ).**

6.1. பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கென தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது.

6.2. இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட மூன்று சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையில் இயங்கி வருகின்றன :—

(1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(3) மதுரை சர்க்கரை ஆலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.

6.3. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையும், ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலையும் 1983-84 ஆம் ஆண்டில் தமது நிறுவிய பிழிதிறனில் முறையே 87.28 சதவீதம் மற்றும் 75.66 சதவீதம் அளவுக்கு உற்பத்தித் திறனை பயன்படுத்தி உள்ளன.

6.4. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பாண்டியராஜ புரத்தில் உள்ள மதுரை சர்க்கரை ஆலையை எடுத்துக்கொள்ள தமிழக அரசால் அவசரச் சட்டம் இயற்றப்பட்டது. இவ்வாலை தற்போது பொதுத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வாலையின் இயந்திர தளவாடங்களை புதுப்பித்து ரூபாய் 485 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்ய தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1985 ஜூன் 14

**7. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (கோஜெனரேசன் பிளாண்ட்).**

சர்க்கரை ஆலைகள் கரும்புச் சக்கையை எரிபொருளாகப் பயன்படுத்தி தங்கள் சொந்த உபயோகத்திற்காக மின்சாரம் தயாரிக்கின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன்களை பயன்படுத்தி இதே அளவு கரும்புச் சக்கையை எரிபொருளாகப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து அதன்மூலம் கிடைக்கும் உபரி மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் முதலில் பாலக்கோட்டிலுள்ள தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிறுவப்படும். இத்திட்டம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு இதற்கான முதலீட்டு முறைகள் ஆய்வில் உள்ளன.

**8. வேலை வாய்ப்பு.**

சர்க்கரைத் தொழில் பெருமளவில் நேரடி வேலை வாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் சுமார் 18,500 பேர் நேரடிப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.



1985 ஜூன் 14]

**இணைப்பு.**

**தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்.**

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். 3. | 1983–84 நாளொன்றுக்கு பிழிதிறன். | 1982–83 பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1982–83 உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1982–83 சராசரி சர்க்கரை கட்டுமானம். | 1983–84 பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1983–84 உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1983–84 சராசரி சர்க்கரை கட்டுமானம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) (டன்களில்) | (3) (டன்களில்) | (4) (டன்களில்) | (5) (விழுக்காடுகளில்). | (6) (டன்களில்) | (7) (டன்களில்) | (8) (விழுக்காடுகளில்) |
| (அ) கூட்டுறவுத் துறை— | | | | | | | |
| 1 ஆம்பூர் .. | 2,200 | 3,08.728 | 30,765 | 9.97 | 1,15,034 | 11,831 | 10.29 |
| 2 மதுராந்தகம் | 1,750 | 3,33,199 | 30,274 | 9.09 | 2,75,316 | 25,900 | 9.42 |
| 3 அமராவதி | 2,000 | 3,31,813 | 29,401 | 8.86 | 1,13,326 | 11,588 | 10.23 |
| 4 சேலம் .. | 2,500 | 5,87,299 | ..52,237 | 8.89 | 3,01,665 | 26,673 | 8.84 |
| 5 கள்ளக்குறிச்சி | 2,000 | 3,14,455 | 28,172 | 8.96 | 2,04,015 | 17,875 | 8.76 |
| 6 நேஷனல் .. | 1,500 | 3,02,565 | 27,791 | 9.19 | 1,80,277 | 17,348 | 9.62 |
| 7 தர்மபுரி .. | 1,250 | 2,57,267 | 25,249 | 9.81 | 1,65,608 | 17,884 | 10.80 |
| 8 வேலூர் .. | 1,250 | 2,68,299 | 22,598 | 8.42 | 2.01,062 | 19,802 | 9.85 |
| 9 திருப்பத்தூர் | 1,250 | 2,01,813 | 18,352 | 9.09 | 59,067 | 5,715 | 9.68 |
| 10 செங்கல்ராயன் | 1,250 | 2,11,986 | 19,007 | 8.97 | 2,31,032 | 21,612 | 9.35 |
| 11 திருத்தணி | 1,250 | புதிய ஆலை—அரைவையை ஆரம்பிக்கவில்லை. | | | 4,345 | 186 | 4.29 |
| கூட்டுறவுத் துறை மொத்தம். | 18,200 | 31,17,424 | 2,83,846 | 9.11 | 18,50,747 | 1,76,414 | 9.54 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) தனியார் துறை— | | | | | | | |
| 12 இ.ஐ.டி. பாரி | 4,000 | 5,56,020 | 46,635 | 8.39 | 3,30,076 | 27,952 | 8.47 |
| 13 டெக்கான் | 1,850 | 4,24,633 | 34,677 | 8,17 | 1,54,610 | 12,842 | 8.31 |
| 14 சவுத் இந்தியா | 2,700 | 3,59,570 | 30,187 | 8.40 | 2,39,033 | 19,989 | 8.36 |
| 15 அருணா .. | 4,000 | 5,83,381 | 55,164 | 9.46 | 5,82,450 | 55,436 | 9.52 |
| 16 சக்தி .. | 4,000 | 8,03,716 | 79,295 | 9.87 | 3,39,704 | 34,375 | 10.12 |
| 17 கோத்தாரி | 2,000 | 3,00,464 | 27,098 | 9.02 | 2,64,486 | 23,870 | 9.03 |
| 18 திரு. ஆரூரான் | 2,000 | 3,05,994 | 27,856 | 9.10 | 2,69,269 | 24,365 | 9.05 |
| 19 பொன்னி | 1,250 | புதிய ஆலை—அரைவையை ஆரம்பிக்கவில்லை. | | | 42,556 | 3,854 | 9.06 |
| தனியார் துறை மொத்தம். | 21,800 | 33,33,778 | 3,00,912 | 9.02 | 22,22,184 | 2,02,683 | 9.12 |
| (இ) பொதுத் துறை— | | | | | | | |
| 20 தஞ்சாவூர் | 1,250 | 2,03,837 | 18,624 | 9.14 | 1,87,560 | 16,662 | 8.88 |
| 21 பெரம்பலூர் | 1,250 | 2,28,644 | 22,106 | 9.67 | 1,62,670 | 15,352 | 9.44 |
| 22 மதுரா .. | 800 | 1,09,778 | 7,679 | 7.00 | 4,427 | 345 | 7.80 |
| பொதுத்துறை மொத்தம். | 3,300 | 5,42,259 | 48,409 | 8.92 | 3,54,657 | 32,359 | 9.14 |
| (ஈ) மைய அரசின் நிர்வாகத்தில் உள்ளது— | | | | | | | |
| 23 காவேரி .. | 1,250 | 2,08,997 | 17,834 | 8.53 | 1,36,498 | 12,892 | 9.45 |
| மொத்தம் .. | 1,250 | 2,08,997 | 17,834 | 8.53 | 1,36,498 | 12,892 | 9.45 |
| ஆக மொத்தம் | 44.550 | 72,02,458 | 6,51,001 | 9.04 | 45,64,086 | 4,24,348 | 9.29 |



## தமிழ் நாடு பீங்கான் நிறுவனம் (டாசல்).

இம் மாநிலத்தில், பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக, பீங்கான் சம்பந்தப்பட்ட 8 தொழிற் பிரிவுகளைக் கொண்டு தமிழ் நாடு பீங்கான் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இத்தொழிற் பிரிவுகள் பெரும்பாலும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில் அமைந்துள்ளன. இந் நிறுவனத்தின் தொழிற் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| தொழிற் பிரிவுகள். | உற்பத்தி செய்யப்படும் பொருட்கள். |
|---|---|
| **(அ) வர்த்தகப் பிரிவுகள் :—** | |
| 1. டாசல் பீங்கான் தொழிலகம், விருத்தாசலம். | துப்புரவுச் சாதனங்கள், பீங்கான் கோப்பை, தட்டு வகை மற்றும் பீங்கானிலான மின் காப்புப் பொருட்கள். |
| 2. டாசல கற்குழாய் தொழிலகம், விருத்தாசலம். | கற்குழாய்கள் மற்றும் அதன் சிறப்பு வகைகள். |
| 3. டாசல் இயந்திரச் செங்கற் சூளை, திருமழிசை. | கம்பி அறுவை வகை செங்கற்கள் (wire cut bricks). |
| **(ஆ) பீங்கான் தொழில் வளர்ச்சி நோக்குடைய பிரிவுகள் :—** | |
| 4. பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம் (முகவர் அடிப்படையில் நடத்தப்படுவது.) | பீங்கான் சிறு தொழில் முனைவோர்களுக்கு சலுகை வாடகையில் தொழிற் கூடங்களை அளித்தல். |
| 5. டாசல் பீங்கான் பணிவசதி நிலையம், விருத்தாசலம். | விருத்தாசலத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள பீங்கான் சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்கு பதப்படுத்தப்பட்ட களிமண், வண்ணம் மற்றும் எரியூட்டு வசதி செய்து தருதல். |

(இ) பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு நோக்கில் நடத்தப்படும் பிரிவுகள்:—

| | | |
|---|---|---|
| 6. | டாசல் கலைப் பொருள் நிலையம், விருத்தாசலம். | கலைவண்ணமுள்ள மட்பாண்டங்கள். |
| 7. | டாசல் பீங்கான் மையம், ஓமலூர். | பல்வகை வடிவமைப்புள்ள ஊறுகாய் ஜாடிகள் மற்றும் வெப்பந்தாங்கிச் செங்கற்கள். |

2. விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டை, பீங்கான் சிறு தொழில் முனைவோர்களுக்கு குறைந்த வாடகையில் தொழிற் கூடங்களை அளிக்கிறது. இத் தொழில் முனைவோர்களுக்கு பதப்படுத்தப்பட்ட மூலப் பொருட்களை வழங்குவது மூலமாகவும் அவர்களது உற்பத்திப் பொருட்களை நவீன சுரங்கச் சூளையில் சுட்டு கொடுப்பது மூலமாகவும் அந்தப் பகுதியில் பீங்கான் தொழில் வளர்ச்சி பெற பீங்கான் பணி வசதி நிலையம் பேருதவி புரிகிறது.

3. டாசல் நிறுவனத்தால் பயிற்சி நோக்கில் நடத்தப்படும் இரு தொழில் பிரிவுகள், குறைந்த படிப்பறிவுடைய கிராமப்புற இளைஞர்களுக்கு, பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுணுக்க உத்திகளில் பயிற்சி அளித்து வருகிறது. ஓமலூரில் உள்ள பீங்கான் மையத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊறுகாய் ஜாடிகளும், திருமழிசை இயந்திரச் செங்கற் சூளையில் உற்பத்தியாகும் கம்பி அறுவை வகை செங்கற்களும் தரத்தில் சிறந்தவையாக பெயர் பெற்றுள்ளன.

4. அண்டை மாநிலங்களில் விற்பனையை விரிவாக்கும் நோக்கத்துடன் டாசல் நிறுவனம் சென்னை மற்றும் பெங்களூரிலும் எர்ணாகுளத்திலும் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையுடன் தரத்தில் சிறந்தவையாகவும் இருப்பதால் இம் மாநிலத்திலும் வெளி மாநிலங்களிலும் அங்காடியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. இந் நிறுவனம் சுமார் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் 1,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கிறது.



5. 1983-84 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தில் அனைத்துத் தொழிற் பிரிவுகள், மொத்தம் ரூ. 206.58 இலட்சம் மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்தன. 1984-85-ல் அவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 252.14 இலட்சத்தை எட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில் கடும் மழை, மின்வெட்டு, நிலக்கரி விநியோகத்தில் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும், இந் நிறுவனம் தன் உற்பத்தியளவை நிலை நிறுத்தியுள்ளது.

6. 1983-84 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ. 49.92 இலட்சம் ஆகும். 1984-85 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் இயக்கம் ரூ. 43.43 இலட்சம் இழப்பில் முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ரூபாய் 30 இலட்சம் செலவில், விருத்தாசலத்திலுள்ள கற்குழாய் தொழிலகத்தில் எரியூட்டு செலவைக் குறைத்து உற்பத்தியை நிலைநிறுத்த தொடர் அடுக்கு சூளை (Continuous chamber kiln) ஒன்று நிர்மாணிக்க டாசல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத் திட்டம் டாசல் நிறுவனத்தின் இழப்புகளை பெருமளவில் குறைக்கும் நோக்குடையது.

7. **டாசல் நிறுவனத்தின் எதிர் காலத் திட்டங்கள்**—டாசல் நிறுவனத்தின் இயக்கத்தை செம்மைப்படுத்தவும், கிராமப் புறங்களில் அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும் பீங்கான் தொழில்களைத் தொடங்கவும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90). கீழ்க்கண்ட திட்டங்களை ரூ. 250 இலட்சம் அரசு உதவியுடன் நிறைவேற்ற உத்தேசித்துள்ளது.

| வரிசை எண்ணும் திட்டமும். | தேவைப்படும் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1. தொழிற்பேட்டை, திருமழிசை | 75 |
| 2. தொழிற்பேட்டை, ஓமலூர் | 75 |
| 3. பீங்கான் தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 5 |
| 4. மின்னணுவியல் சார்பான பீங்கான் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 5 |

[1985 ஜூன் 14

| வரிசை எண்ணும் திட்டமும். (1) | தேவைப்படும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) (2) |
|---|---|
| 5. சிறு பீங்கான் சாமான்கள் பிரிவை நவீனப் படுத்துதல் | 10 |
| 6. பீங்கான் இழைகளைத் தயாரித்தல் | 5 |
| 7. திருமழிசையில் உள்ள செங்கற் தொழிற் சாலையை சுவர் ஓடு தயாரிக்கும் தொழிலக மாக (கூட்டுத்துறையில்) மாற்றுதல் | 5 |
| 8. பெரியார் மாவட்டத்தில் கூட்டுத்துறையில் வெள்ளை தரை ஓடு, மற்றும் சுவர் ஓடு தயாரித்தல் | 70 |
| மொத்தம் | 250 |

மேற்கண்ட திட்டங்களைப் பற்றிய விவரங்கள் கீழே சுருக்க மாக தரப்பட்டுள்ளன :—

(1) திருமழிசையில் ஏற்கெனவே உள்ள நிலத்தில் ரூ. 75 லட்சம் செலவில் ஒரு தொழிற்பேட்டை உருவாக்க திட்டமிடப் படுகிறது. இதில் தொழில் முனைவர்களுக்கு பணிவசதி செய்து கொடுக்க, ஒரு பணிவசதி நிலையத்துடன் 10 தொழிற்கூடங்கள் கட்டப்படவுள்ளது. ஓடுகள், பிளாக்குகள், ஹூருடிகள் போன்ற கனரக களிமண் பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும். இதனால் சுமார் 500 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

சேலம் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய ஓமலூரில் மற்றொரு தொழிற்பேட்டை ரூ. 75 இலட்சத்தில் தொடங்கப்படுகிறது. இத் தொழிற்பேட்டை பீங்கான் பொருள் களையும் சூளைக் கற்களையும், சிறப்பு வகை ஜாடிகளையும் செய்வதற்கு வசதியாகவுள்ள தொழிற்கூடங்களைப் பெற்றதாகி இருக்கும். இத் தொழிற்பேட்டை சுமார் 250 பேர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்.



1985 ஜூன் 14]

(2) மேலே உள்ள பட்டியலில் இனம் 3, 4 மற்றும் 6 ஆகிய வற்றில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் புதிய முயற்சிகளாகும். பீங்கான் (செராமிக்) தொழில் நுணுக்கத்தில் முன்னேறியுள்ள மற்ற நாடுகளிலிருந்து தொழில் நுணுக்க செய்முறைகளை தெரிந்து கொள்வதற்கும் கூட்டுமுறையில் தொழில் தொடங்கு வதற்கான தகுதிகள் வாய்ந்த கூட்டாளியைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டும் திட்ட அறிக்கையை தயார் செய்வதற்கு வேண்டிய நிதி தனியாக ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(3) விருத்தாசலத்தில் ஏற்கெனவேயுள்ள பீங்கான் தொழில் சிறு பொருள்கள் பகுதியை, ஆதாயம் தரும் வகையில் முன்னேற்றம் செய்வதற்காக, தற்போது செய்யப்படும் பீங்கான் பொருள்களின் தரத்தை உயர்த்த மற்றும் அழகுபடுத்த, மேற்கொண்டு இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(4) திருமழிசை இயந்திர செங்கற் தொழிற்சாலையை பெருமளவு இழப்பிலிருந்து மீட்கும் வகையில், ஏற்கெனவேயுள்ள நிலம், கட்டிடம் மற்றுமுள்ள எந்திர வசதிகளை பயன்படுத்திக் கொண்டு கூட்டுத் துறையில் பளிங்கு சுவர் ஓடுகள் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) வெளி நாடுகளில் தரையில் பதிக்க புதுவகை ஓடுகளான பளிங்கு ஓடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இது பல்வண்ண ஓடுகளின் (மொசைக்) முன்னேற்றமாகும். வெளி நாட்டு தொழில் நுணுக்கத்துடன் கூட்டுமுறையில் இப் பளிங்கு ஓடுகளை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

8. மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், டாசல் நிறுவனத்தின் இயக்கம் விரிவாக்கப்பட்டு அதனால் இந் நிறுவனம் வணிக முறையில் இயங்குவதற்கு ஏதுவாகும் என்றும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பையும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[1985 ஜூன் 14

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையிலும், அவைகளை கலைப்பதற்கான நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும், தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிப்பதற்காகவும், 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரணம் தேவைப்படும் நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின்கீழ் இந் நிறுவனங்களை விடுப்பு நிறுவனங்களாக அரசு அறிவிக்கின்றது. விடுப்பு நிறுவனங்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் உதவியுடன் மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவதற்கு இச்சட்டம் வழி செய்கிறது. இச் சட்டத்தின்கீழ் விடுப்பு நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தவர்களின் பிடியிலிருந்து சிறிது காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மற்றும் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. மேலும் விடுப்பு நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டவை பின்வருமாறு :—

திருவாளர்கள் :

(1) ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்), தர்மபுரி.

(3) சதர்ன் ஸ்விட்ச் கியர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

(5) தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூர்.

(6) மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(7) அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.

(8) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.

(9) சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்.

(10) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

(11) பிளாஸ்டிக் ரெஸின் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், சாகுபுரம், திருநெல்வேலி.



1985 ஜூன் 14]

(12) மாருதி கிரிஸ்டல்ஸ் சால்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.

(13) சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.

(14) குன்னியூர் பேப்பர் அண்டு போர்ட் மில்ஸ் லிமிடெட், சென்னை.

(15) மஹாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட், மதுரை.

(16) ஜெயலட்சுமி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(17) ஸ்ரீஹரி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.

(18) தி ஜெனரல் ரிப்லெக்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை.

பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம். | 14.35 |
| (2) மது ஸ்பின்னிங்ஸ் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், கோயம்புத்தூர். | 30.00 |
| (3) மீனாட்சி மில்ஸ், மதுரை | 56.00 |
| (4) பின்னி லிமிடெட், சென்னை | 1,00.00 |
| (5) செயலட்சுமி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிங்காநல்லூர். | 30.00 |
| (6) ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் | 50.00 |

நலிவுற்ற தொழிற் பிரிவுகள் விற்பனை வரி பாக்கிகளையும், பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத் தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேலும், இதற்கான விற்பனை விலைச் சலுகைகளையும் அளிக்கின்றது.

### மைய அரசு செய்த முதலீடுகள்.

தமிழ்நாட்டில் மைய அரசு செய்த முதலீடுகள் மிகவும் குறைவு. தமிழ்நாட்டில் மேலும் பல மத்திய அரசுத் திட்டங்களை நிறுவ வேண்டுமென மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

**1. புதிய திட்டங்கள் :**

நவீன போர் டாங்கிகளை தயாரிப்பதற்காக ஆவடியில் உள்ள கனரக டாங்கி தொழிற்சாலை தனது தொழிற்சாலையை விரிவாக்க கருதியுள்ளது. நவீன போர் டாங்கிகளை சோதித்துப் பார்ப்பதற்காக செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டத்தில் 3,761 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை தமிழ்நாடு அரசு மத்திய அரசிற்கு இலவசமாக கொடுத்துள்ளது.

நாட்டில் இரயில் பெட்டி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், ரூ. 47.60 கோடி செலவில் நவீன உற்பத்தி திட்டம் ஒன்றை சென்னை இணைப்பு இரயில் பெட்டி தொழிற்சாலை நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் ரூ. 30 கோடி செலவில் மின்னணுவியல் தொழிற்சாலை ஒன்றை அமைக்க பெங்களூர் பாரத் மின்னணுவியல் நிறுவனம் கருதியுள்ளது. நந்தம்பாக்கத்தில் இதனை அமைப்பதற்காக 49.99 ஏக்கர் நிலம் அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருச்சி படைக்கலத் தொழிற்சாலைக்கருகே ரூ. 70 கோடி செலவில் ஹெவி அலாய் பெனிட்டிரேடர் பிராஜெக்ட் அமைக்க மத்திய அரசு பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இத் தொழிற்சாலைக்கு வேண்டிய நிலத்தை இலவசமாக வழங்க மாநில அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

கனரக ஆயுதம் தாங்கி ஊர்திகளை தயாரிக்க படைக்கலத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மத்திய அரசு கருதியுள்ளது. இத் தொழிற்சாலையை அமைப்பதற்கு தகுந்த இடம் ஒன்றை தேர்ந்தெடுக்க மத்திய அரசு குழு ஒன்றை நியமித்துள்ளது. தரும்புரியில் ஒன்றும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்றுமாக இரண்டு இடங்களுக்கான விவரங்கள் இக் குழுவிற்கு அனுப்பப்





பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு 1984 ஜனவரியில் மேற்படி குழு வந்து இந்த இரண்டு இடங்களை பார்வையிட்டு மைய அரசுக்கு அறிக்கையை கொடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் உருக்காலையை ஒருங்கிணைந்த உருக்காலையாக விரிவுபடுத்துவதற்கும் மத்திய அரசு வலியுறுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைக்கு அருகிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கருகில் நாப்தா கிராக்கர் பிரிவு ஒன்றை அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சென்னை சுத்திகரிப்பு ஆலை விரிவுபடுத்தப்பட்ட பிறகு அங்கு கிடைக்கும் நாப்தாவை இப் பிரிவு பயன்படுத்தலாம். பெட்ரோ கெமிகல் பொருள்களை தயாரிப்பதற்குப் பல தொழிற்சாலைகளை நிறுவத் தேவையான பொருள்களை வழங்கும். இது குறித்து மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

### II. தற்போதுள்ள தொழிற்சாலைகள்—சென்னை பெரம்பூர் இணைப்புப் பெட்டி தொழிற்சாலை.

சுவிட்ஜர்லாந்து, ஜூரிச், சீலிரியன் திருவாளர்கள் சுவிஸ் கார் மற்றும் எலிவேட்டர் தயாரிப்பு நிறுவனத்தின் உடனுழைப்புடன் உருக்கி பற்றவைக்கப்பட்ட இலேசான எடையுள்ள ஆண்டி-டெலஸ்கோபிக் கட்டுமான அமைப்புடன் கூடிய இணைப்புப் பெட்டிகளை தயாரிப்பதற்காக சென்னை இணைப்புப் பெட்டி தொழிற்சாலை 1955-ல் அமைக்கப்பட்டது.

இந்திய இரயில்வேயின் பல்வேறு தேவைகளை இத் தொழிற்சாலை நிறைவு செய்கிறது. பிற நாடுகளுக்கும் இரயில் பெட்டிகளை ஏற்றுமதி செய்கிறது.

நிறுவனத் திறன் 800 பெட்டிகள் என்றிருக்க இணைப்புப் பெட்டி இரயில் தொழிற்சாலை 1984ல் 817 பெட்டிகளை தயாரித்தது. நடப்பாண்டில் 825 பெட்டிகளை தயாரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 87 கோடியாகும். இத் தொழிற்சாலையில் 15,300 பேருக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

இரயில் பெட்டித் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 1,000 பெட்டிகள் தயாரிப்பதென தற்போது கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்க 1984-85 இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 47.00 கோடி செலவில் நவீன திறன் உற்பத்தித் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.

**நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி :**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 14—11—1956 அன்று தொடங்கப்பட்டது. இது ஒருங்கிணைந்த தொழில் தொகுதி ஆகும். இதில் பின்வரும் தொழிற் பிரிவுகள் அடங்கும் :—

(அ) திறந்த வகையிலான பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

(ஆ) அனல் மின் நிலையம்.

(இ) உரத் தொழிற்சாலை.

(ஈ) நிலக்கரி பாளங்கள் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை.

(உ) களிமண் சுத்தப்படுத்தும் ஆலை.

இச் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையத்திற்கும், நிலக்கரி கட்டித் தயாரிப்பு கரிம ஆலைக்கும் மூலப் பொருளாக உள்ளது. இரசாயன ஆலைகளில் பயன்படுத்தத் தேவைப்படும் நீராவியை உற்பத்தி செய்யவும் மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது. அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தேவைக்கு அனுப்பப்பட்ட பின்னர் தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் தொகுப்புக்கு அனுப்பப்படுகிறது. களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை பழுப்பு நிலக்கரி சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் கச்சா வெள்ளை களி மண்ணை செய்முறைப்படுத்தி இதில் ஒரு பகுதியை தூளாக்கி தொழிற்சாலை பயனுக்கு உகந்ததாக விற்பனை செய்கிறது. லீக்கோ சுட்ட நிலக்கரி ஆகியவை தொழில் எரிபொருளாக விற்பனை செய்யப்படுகின்றன.

**தொழிற்சாலையின் நிறுவு திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—**

| | | |
|---|---|---|
| (அ) சுரங்கம் I | ... | ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன். |
| (ஆ) அனல் மின் நிலையம் I | ... | 600 மெ.வா. |





| | | |
|---|---|---|
| (இ) உரத் தொழிற்சாலை | ... | ஆண்டொன்றுக்கு 19,200 டன் யூரியா. |
| (ஈ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியமாக மாற்றும் ஆலை. | ... | 262 000 டன்கள் கல் கரி. |
| (உ) களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை. | ... | சுத்தப்படுத்தப் பட்ட 6,000 டன். களிமண். |

இந் நிறுவனத்தின் பங்குத் தொகை ரூ. 633.82 கோடியாகும். இந்நிறுவனம், மத்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் முறையே ரூ. 50.71 கோடியும், ரூ. 0.79 கோடியும் கடனாகப் பெற்றுள்ளது.

1984-85 க்கு தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 2,100 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தி வழங்குவது 13—12—1984 அன்று பூர்த்தியாகியது. அதாவது திட்டமிட்ட 108 நாட்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டுவிட்டது. முந்தைய சாதனையைவிட 9 நாட்கள் முன்னதாகவே வழங்கப்பட்டது.

1984 ஏப்ரல் முதல் 1984 டிசம்பர் வரை உள்ள கால அளவில் 150,044 டன் கல்கரி உற்பத்தி செய்தது. கடந்த 15 ஆண்டுகளில் நிகரான கால அளவில் தயாரித்ததைக் காட்டிலும் இது அதிகமாகும்.

முந்தைய ஆண்டில் நிகரான கால அளவில் இருந்த 99.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை உள்ள கால அளவில் லிக்னைட் உற்பத்தி வகையில் இச் சுரங்கம் 107 சதவீதம் பயன்படுத்தியது. மேற்பரப்பு அகற்றல் வகையில் முந்தைய ஆண்டில் 102.9 சதவீதம் பயன்படுத்தியது என்பதற்கு மாறாக 114.2 பயன்படுத்தியது.

முந்தைய ஆண்டில் நிகரான கால அளவில் உள்ள 113 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை உள்ள கால அளவில் அனல் மின் நிலையம் 117 சதவீதம்

உற்பத்தித் திறனை பயன்படுத்தியது. முந்தைய ஆண்டில் 73.16 சதவீதம் மின்சுமை இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டு 75.76 சதவீதம் மின் சுமையாக இருந்தது.

சுரங்கம் I, அனல் மின் நிலையம் I ஆகியவை தேசிய உற்பத்தித் திறன் பரிசை பெற்றன. உரத் தொழிற்சாலை தேசிய உற்பத்தித்திறன் குழுவிடமிருந்து 1983-ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு பரிசைப் பெற்றது.

**கட்டுமான திட்டங்கள் :**

பின்வரும் திட்டங்கள் குறித்த பணி நடந்தேறி வருகிறது :—

(அ) ஆண்டொன்றுக்கு 4.7 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி பெறும் வகையில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல் ;

(ஆ) 630 மெ.வாட். உற்பத்தி செய்யும் இரண்டாவது அனல் மின் நிலையம் தொடங்குதல்.

**புதிய திட்டங்கள் :**

பின்வரும் திட்டங்கள் குறித்த தொடக்க அறிக்கைகள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன : (அ) சுரங்கம் I விரிவாக்கம்—6.5 முதல் 10.5 மில்லியன் டன்களாக அதிகரித்தல் ; (ஆ) அனல் மின் நிலையம் II விரிவாக்கம்—உற்பத்தித் திறனை 720 மெ. வாட்டாக உயர்த்த 120 மெ. வாட். உற்பத்தி பிரிவு ஒன்றை ஏற்படுத்தல் ; (இ) உயர் வெப்ப கல்கரி இயந்திரம்—ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் கல்கரி தயாரித்தல், (ஈ) சுரங்கம் III—ஆண்டொன்றுக்கு 11.0 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி ; (உ) அனல் மின் நிலையம் III—1,500 மெ. வாட். (3 500 மெ. வாட்.); (ஊ) அனல் மின் நிலையம் III இரண்டாம் நிலைக்கும் அனல் மின் நிலையம் III-க்கும் 400 கே.வி. மின் கம்பி டிரான்ஸ்மிசன் கம்பிகள் அமைத்தல்.

மேற்சொன்ன திட்டங்களைச் செயல்படுத்தி 7-வது மற்றும் 8-வது திட்டக் காலத்தில் ரூ. 3.626 கோடி என்ற மாபெரும் அளவில் முதலீடு செய்ய வேண்டிவரும்.



**இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை :**

டெலிபிரிண்டர்களையும் துணைச் சாதனங்களையும் தயாரிப்பதற்காக இத்தாலியைச் சேர்ந்த திருவாளர்கள் Ing. C. Olivatti நிறுவனத்தின் உடனுழைப்புடன் 1960 டிசம்பரில் நிறுவனம் அமைக்கப்பட்டது. தற்போது இந்த நிறுவனம் ஆண்டொன்றுக்கு 8,500 டெலிபிரிண்டர்களை தயாரிக்கும் திறன் கொண்டதாக உள்ளது. தபால்-தந்தித் துறை, பாதுகாப்புப் படை, இரயில்வே, விமானப் போக்குவரத்து துறை, செய்தி நிறுவனங்கள் ஆகியவற்றின் தேவையை இது நிறைவு செய்கிறது.

இந் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 380 இலட்சமாகும். இதில் ரூ. 298 இலட்சத்தை மத்திய அரசு வழங்கியது. 1973, 1982 ஆண்டுகளில் இந்த நிறுவனம் ரூ 62 இலட்சம் அளவிற்கு ஊதியத் தொகை பங்குகளாக வழங்கியது. 31—3—1984 அன்றுள்ளவாறு இத் திட்டத்தில் பயன்படுத்தப் பட்ட மூலதனம் ரூ. 1,450 இலட்சமாகும்.

1983-84-ல் இந்த நிறுவனம் 8.147 டெலிபிரிண்டர்கள் உற்பத்தி செய்தது. 1983-84-ல் இது ரூ. 80.07 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களை தயாரித்தது.

1984 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 5,444 டெலிபிரிண்டர் இயந்திரங்களை தயாரித்துள்ளது. ரூ. 61.54 இலட்சம் மதிப்புள்ள உதிரிப் பாகங்களை அனுப்பியுள்ளது.

அதன் பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந் நிறுவனம் மின்சாரத் தட்டச்சு இயந்திரத்தையும் மின்னணுவியல் டெலிபிரிண்டர்களையும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த திருவாளர்கள் ஒலிவெட்டி நிறுவனத் திடமிருந்து வரப் பெற்ற 400 எஸ்.கே.டி. தட்டச்சு இயந்திரத் திலிருந்து இந்த நிறுவனம் 400 மின்சாரத் தட்டச்சு இயந் திரத்தை உருவாக்கியது. மின்சாரத் தட்டச்சு இயந்திரங்களின் விற்பனை விலையைக் குறைக்கும்பொருட்டு, இந்த நிறுவனம் உற்பத்தியை உள்நாட்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

மின்னணு டெலிபிரிண்டர்களைத் தயாரிப்பதற்காக திருவாளர்கள் சாகெம் (பிரான்சு) (Mess s Sagem) என்ற நிறுவனத்துடன் உடனுழைப்பு ஒப்பந்தத்தை அது முடித்துக் கொண்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 8,000 மின்னணு டெலிபிரிண்டர்களை தயாரிப்பதற்கான இசைவுக் கடிதம் இந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டம், ஓசூரில் 'சிப்காட்' தொழில் தொகுதியில் இத் திட்டம் அமைக்கப் பட உள்ளது. இதற்கு தேவையான நிலத்தை அந்த நிறுவனம் ஏற்கெனவே கையகப்படுத்தியுள்ளது. எஸ்.கே.டி., சி.கே.டி.-லிருந்து மின்னணு டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்வது 1985-86-ல் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம்.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் நிறுவனம் 1960-ல் அமைக்கப்பட்டு 1967-ல் உற்பத்தியைத் தொடங்கியது. இந் நிறுவனத்தின் மொத்த நிறுவுத் திறன் அதாவது உதகமண்டலத்திலும், சென்னை அம்பத்தூரிலும் உள்ள தொழிற்சாலைகளில் ஒருங்கிணைந்த உற்பத்தியும் பெரிய படச் சுருள்களைச் சிறிய சுருள்களாக மாற்றும் உற்பத்தியும் 15.32 மில்லியன் சதுர மீட்டராகத் தற்போதுள்ளது.

இந் நிறுவனம் நுட்பமான புகைப்படச் சுருள்களையும் காகிதத்தையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந் நிறுவனத்தில் இரு தயாரிப்புப் பிரிவுகள் உள்ளன. இதில் முதன்மையான தொழில் பிரிவு உதகமண்டலத்தில் உள்ளது. இங்கு எல்லா நிலைகளிலும், புகைப்படச் சுருள் காகிதம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது.. இதில் மற்றொன்று சென்னைக்கு அருகில் அம்பத்தூரில் தொழிற்பேட்டையில் அமைந்துள்ளது. இது பணி நிறைவு செய்யும் தொழிற் பிரிவு ஆகும். இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு எக்ஸ் கதிர் படச் சுருள், கிராபிக் ஆர்ட் படச் சுருள் ஆகியவற்றை செய்முறைப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

ஒருங்கிணைந்த உற்பத்தியில் அடங்கும் உற்பத்திப் பொருட்கள்—

(அ) திரைப்பட பாஸிடிவ் படச் சுருள்—கருப்பு, வெள்ளை.

(ஆ) திரைப்பட படச்சுருள் ஒலி நெகட்டிவ்.





(இ) மருத்துவ எக்ஸ் கதிர் படச் சுருள்.

(ஈ) புகைப்படக் காகிதம்.

பெரிய படச் சுருள்களை சிறியவையாக மாற்றும உற்பத்தியில் அடங்கும் பொருட்கள்—

(அ) திரைப்பட கலர் பாசிடிவ் படச்சுருள்

(ஆ) அமெச்சூர் ரோல் திரைப்படச்சுருள் கருப்பு, வெள்ளை.

(இ) தொழில் எக்ஸ் கதிர் படச் சுருள்.

(ஈ) கிராபிக் ஆர்ட் படச்சுருள்.

(உ) கலர் காகிதம்.

இவை தவிர எக்ஸ் கதிர் படச்சுருள் கிராபிக் ஆர்ட் படச்சுருள் ஆகியவற்றை கழுவுவதற்காக இரசாயனப் பொருள்கள் (Developer chemicals) தயாரிப்பதும் தயாரிப்புப் பணியில் ஒரு பகுதியாகும்.

இந்நிறுவனத்தின் சாதனைகள் பின்வருமாறு :—

| | 1983-84-ஆம் ஆண்டு கணக்கு. | 1984-85-ஆம் ஆண்டில் உற்பத்தி. |
|---|---|---|
| உற்பத்தி அளவு (மி.மீ. 2) | 11,705 | 12,100 |
| மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 8,763 | 9,826 |
| விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 8.653 | 10,000 |
| ஆதாயம் (ரூபாய் இலட்சத்தில்) | 496 | 650 |

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 16,32 இலட்சமாகும்.

31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி இந்நிறுவனத்தில் 3,187 பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் 592 பேர் ஆதிதிராவிடர், பழங்குடியினராவர். இது தவிர சிப்பம் செய்வதற்குரிய பொருட்கள், உயர்ரக இரசாயனப் பொருட்கள், உதிரிப் பாகங்கள் ஆகியவற்றை இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள 29 துணைத் தொழில் பிரிவுகள் மூலமாக 1,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பு நல்கப் பட்டுள்ளது.

[1985 ஜூன் 14

நடப்பு ஆண்டிற்கு 12 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 1984 டிசம்பர் வரை 8.646 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. அதன் மதிப்பு ரூ. 65.94 இலட்சம் ஆகும். இதுபோல இக்கால அளவில் ரூ. 5,654.97 இலட்சம் விற்பனையாகியது. ஆனால் 65,33.27 இலட்சம் விற்பனை செய்யவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டு செலவிலான கூடுதல் மேல் பூச்சு தொழில் பிரிவு முடிக்கப்பட்டு 13—1—1985 ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனத்திற்கு அதிகப்படியாக தேவைப்படும் அதாவது 1.2 மில்லியன் சதுர மீட்டர் எக்ஸ்கதிர் படச் சுருள்களை வழங்குவதற்கும் அமெச்சூர் ரோல் படச் சுருள்களை ஒருங்கிணைந்த முறையில் தயாரிக்கவும் இத்தொழில் பிரிவு உதவியாக இருக்கும். இதனால் 102 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான ஆராய்ச்சி வளர்ச்சி நிலையத்தை அமைக்கும் திட்டம் குறித்த பணி ரூ. 197 இலட்சம் மதிப்பீட்டு செலவில் நடைபெற்று வருகிறது. இது 115 பேர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கும்.

**திரைப்பட கலர் படச்சுருள் தயாரிப்பு தொழில் பிரிவு.**

பெல்ஜியத்தில் உள்ள திருவாளர்கள் ஆக்பா-கவரட் என்ற நிறுவனத்துடன் தொழில் ஒத்துழைப்புக்கு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. முதலீடு செய்வது குறித்து முடிவெடுப்பதற்காக இத்திட்டம் பற்றிய அறிக்கையை மைய அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.

**காந்த நாடா தயாரிப்புத் தொழிற் பிரிவு.**

காந்த நாடா (Magnetic tape) தயாரிப்பதற்குத் தொழில் உரிமம் பெற நிறுவனம் விண்ணப்பித்துள்ள அத்திட்டத்திற்காக சாத்தியக்கூறு அறிக்கையும் மைய அரசு பரிசீலனையில் உள்ளன.

**நவீன மேற்பூச்சு கருவி தயாரிப்பு நிறுவனம்.**

மருத்துவ எக்ஸ்கதிர் படச்சுருள் தயாரிப்புத் தொழில் பிரிவில் திறனை அதிகரிப்பதற்குத் தொழில் உரிமம் பெற இந்த நிறுவனம் விண்ணப்பித்துள்ள விண்ணப்பம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.



1985 ஜூன் 14]

**பாரத கனரக மின்நிறுவனம், திருச்சிராப்பள்ளி.**

திருச்சியில் உள்ள உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை 1960 ஆம் ஆண்டு தொடக்கத்தில் உருவாக்கப்பட்டு 1965-ல் உற்பத்தியை தொடங்கியது. தொடக்கத்தில் 24.5 கோடி முதலீடு செய்யப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 750 மெகாவாட் திறனுள்ள கொதிகலன் உதிரிப் பாகங்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் இந்தத் தொழிற்சாலை வடிவமைக்கப்பட்டது. இது இந்திய—செக்கோஸ்லோவியா பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ், செக்கோஸ்லோவிய உடனுழைப்புடன் தொடங்கப்பட்டதாகும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் இதன் உற்பத்தித் திறனை எய்தியது. கூடுதலாக ரூ. 4.08 கோடி, ரூ. 17.86 கோடி முதலீடு செய்து முறையே ஆண்டொன்றுக்கு 1,100 மெகாவாட், 2,500 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடிய வகையில் விரிவாக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

விரிவாக்கத்தின் அடுத்த கட்டப் பணி ரூ. 35.48 கோடி செலவில் அண்மையில் முடிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் உற்பத்தித் திறனை மேற்கொள்ளும்.

திருச்சியில் தொழிற்சாலை பயனுக்காக அடைப்பான்களை (வால்வுகளை) தயாரிப்பதற்கான ரூ. 5.67 கோடி முதலீட்டுத் திட்டத்துடன் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக அதற்கிணையாக வேறு பொருட்களை தயாரிக்கும் ஒரு முயற்சியாக ரூ. 58.2 கோடி முதலீட்டுடன் 40,000 டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் இணைப்பு இடைவெளியற்ற உருக்கு குழாய் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இது இப்போது வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

திருச்சியிலுள்ள பாரத் கனரக மின்நிறுவனத்தில் 16,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். திருச்சி பாரத் கனரக மின்நிறுவனத்தின் பயிற்சி நிலையம் மனித சக்தியை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு தொழில்களில் அடிப்படைத் திறனைப் பெற்றுள்ள இளைஞர்

களுக்கு பாரத் கனரக மின்நிறுவனத்தில் பணியை மேற்கொள்ள பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் மாநிலத்தில் உள்ள சிறந்த பயிற்சி நிறுவனம் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

துணைத் தொழில் சிறுதொழில்பேட்டை 1969-ல் தொடங்கப் பட்டது. இப்போது பாரத் கனரக மின் நிறுவனத்தின் துணைத் தொழில்-சிறுதொழில் பிரிவுகளில் சுமார் 12,000 பேர் பணி புரிகின்றனர். ஆனால் 1969-ல் 200 பேர் மட்டுமே இருந்தனர். துணைத் தொழில் சிறுதொழில் பிரிவுகள் அண்டை மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன. துணைத் தொழில் சிறு தொழில் பிரிவுகளின் வளர்ச்சி பாரத கனரக மின் நிறுவனத்தின் விரைவான வளர்ச்சிக்கு இணையாக வளர்ந்து வந்துள்ளது.

**பாரத கனரக மின் நிறுவனத்தின், கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை, இராணிப்பேட்டை**

கொதிகலன் துணைப் பாகங்களான எலெக்ட்ரோஸ்டேட்டிக் பிரிசிபிடேட்டார் (Electrostatic Precipitators) ஏர்பிரிஹிட்டர்ஸ் (Air Preheaters) என்சின் மின்விசிறி (Fans) போன்ற பாகங்களை, ஆண்டொன்றுக்கு 4,00 மெகாவாட் அளவிற்குத் தயாரிக்கும் வசதிகளை இத்தொழிற்சாலை பெற்றுள்ளது. ரூ. 3,280 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், இதற்கான ஒப்புதலை அரசு அளித்தது. இத்தொழிற்சாலை தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் 57,000 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் அமைக்கப் பெற்றுள்ளது. இது சுமார் 4,000 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பளிக்கிறது.

1982 ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியது. இத்தொழிற்சாலை, 17,000 மெட்ரிக் டன் எடையுள்ள எலெக்ட்ரோஸ்டேடிக் பிரிசிபி டேட்டார்ஸ் (Electrostatic Precipitators) ஏர் ப்ரிஹிட்டர்ஸ் (Air Preheaters) என்ஜின் மின்விசிறி (Fans) போன்ற துணைக் கருவிகளை 1982-83-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்தது. இத்தொழிற்சாலை, 1983-84-ஆம் ஆண்டில் 34,000 மெட்ரிக் டன் எடையுள்ள கருவிகளை உற்பத்தி செய்தது. 1984-85-ஆம்



ஆலை இயக்குவதிலுள்ள சில சிக்கல்களை நீக்கி, நிறுவனத் திறனை எய்தும் அளவுக்குத் தேவைப்படும் சாதனங்கள் சில வற்றை நிறுவுவதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆலை நிறுவு திறன் 2.5 மில்லியன் டன்னிலிருந்து 2.8 மில்லியன் டன்னாக உயர்த்தப்பட்டது. இந் நிறுவனம் ரூ. 158.8 கோடி செலவில் தன்னுடைய ஆண்டொன்றின் நிறுவு திறனை 5.6 மில்லியன் டன்னாக இரட்டிப்பாக்கவும் ஆண்டொன்றுக்கு 20,000 டன் மெழுகினை உற்பத்தி செய்ய பாரபின் மெழுகுத் தொழிற் சாலையை நிறுவவும் வேண்டி எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை மேற்கொண்ட பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. 17.74 கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்ட பாரஃபின் மெழுகுத் தொழிற்சாலையானது. களிமண் பிரிவு, (கிலே கான்டாக்டிங் யூனிட்) நீங்கலாக, 31—3—1984 ஆம் நாளி லிருந்து செயல்படத் தொடங்கியது. கச்சா எண்ணெய் காய்ச்சி வடிக்கும் பிரிவு 1984 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கியது. புளூயிட் கேட்டலிடிக் க்ரேக்கிங் தொழிற் பிரிவு 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வெற்றிகரமாகச் செயல்படத் தொடங்கும் என்றும் இவ்விரிவாக்கத் திட்டத்தின் மூலம் கச்சா எண்ணெய் காய்ச்சி வடிகட்டும்போது கிடைக்கும் பொருள் ஆண்டொன்றுக்கு 1.1 மில்லியன் டன்னிலிருந்து 3.7 மில்லியன் டன்னாக உயரும் பெட்ரோலிய திரவ வாயு (LPG) வின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 44,000 டன்னிலிருந்து 1,15,000 டன்னாக உயரும்.

**புதிய திட்டங்கள்:**

**லியூப் விரிவாக்கம்:**

ஆண்டொன்றுக்கு பிரைட் ஸ்டாக் (Bright Stock) சுமார் 50,000 டன் உட்பட மதிப்பீட்டுச் செலவு ரூ. 94,000 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு 2,70,000 டன் அளவிற்கு லியூப் அடிப்படையில் தயாரிக்கப்படும் பொருளின் உற்பத்தித் திறனைப் பெருக்க கருதப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு நடுவில் இத் திட்டம் முடிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்தியை அதிகரித்தால், போக்குவரத்துத் துறை, ஏனைய தொழில் துறைகளின் தேவைகளை எளிதாக ஏற்க இயலும்.

**பிராப்பிலினைத் தயாரித்தல்:**

ஆண்டொன்றுக்கு 16,000 டன்னிலிருந்து 17,000 டன் வரையிலான அளவிற்கு பிராப்பிலினைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை 13.8 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நிறுவ கருதப்பட்டுள்ளது. இச் செயற் குறிப்பினை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இதற்குத் தேவையான ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 1988-ல் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் நிறுவனத்திலிருந்து கிடைக்கப்பெறும் ஈடு பொருள் இருப்பினைப் பயன்படுத்தி ஆண்டொன்றுக்கு 50,000 டன் லினார் அல்கில் பென்சைனைத் தயாரிப்பதற்குரிய இசைவுக் கடிதத்தினை திருவாளர்கள் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (டிட்கோ) அளித்துள்ளது. இத் திட்டத்திற்குத் தேவையான ஏற்பளிப்பு பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. டிட்கோ நிறுவனத்திற்குத் தேவையான இடுபொருள் இருப்பினை வழங்கத் தேவையான வசதிகளை அளிக்கவும் ல. பாராஃபின் வடித்தெடுத்த பின்னர் அதிலிருந்து கிடைக்கும் பொருளை மீண்டும் பயன்படுத்தும் பொருட்டு தொழிற் பிரிவு ஒன்றும் சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் நிறுவனத்தில் நிறுவப்படும்.

**சென்னை உர நிறுவனம், மணலி.**

சென்னை உர நிறுவனம், அரசு நிறுவனமாகும். இது 1966 ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்டது. இதில் மத்திய அரசு 51 சதவீத மூலதன பங்குகளை வகித்து வருகிறது. அமெரிக்காவிலுள்ள அமோகோ ஆயில் கம்பெனியும் ஈரானிலுள்ள நேஷனல் ஈரானியன் ஆயில் கம்பெனியும் ஒவ்வொன்றும் 24.5 சதவீத பங்குகளை வைத்துள்ளது. நாளொன்றுக்கான சென்னை உர நிறுவனத்தின் நிறுவு திறன் 750 மெட்ரிக் டன் அமோனியா, 885 மெட்ரிக் டன் யூரியா, 1,800 மெட்ரிக் டன் கலப்பு உரமாகும். 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கியது. இந்த அறிக்கை ஆண்டின் முந்தைய இரு ஆண்டுகளில் சென்னை உர நிறுவனத்தின் சாதனைகள் கீழ்க்கண்டவாறாகும்:—



| (1) | 1982–83 (2) | 1983–84 (3) | 1984–85 (1984 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையில்). (4) |
|---|---|---|---|
| 1 உற்பத்திச் சாதனை (அளவு 000 மெட்ரிக் டன்னில்). | | | |
| அமோனியா .. | 202.422 | 130.221 | 153.774 |
| யூரியா .. .. | 421.850 | 156.730 | 179.794 |
| என். பி. கே. .. | 603.560 | 508.300 | 469.132 |
| சாதனை அளவு சதவீதத்தில். .. | 99 | 80 | .. |
| 2 விற்பனை (அளவு 000 மெட்ரிக் டன்னில்). | 641.4 | 665.00 | 565.2 |
| 3 வியாபாரத் தொகை (ரூபாய் கோடியில்). | 171.95 | 172.40 | 166.306 |
| 4 வரி விதிப்பிற்கு முன் ஏற்பட்ட ஆதாயம் (ரூபாய் கோடியில்). | 16.5 | 9.27 | 1.23 |
| 5 ஆதாயப் பங்கு (சதவீதத்தில்). | 25 | 25 | .. |
| 6 தேசிய கருவூலத்திற்கு அளிக்கப்படும் பங்குத் தொகை (ரூபாய் கோடியில்). | 29.03 | 22.89 | புள்ளி விவரம் கிடைக்க வில்லை. |

[1985 ஜூன் 14

நாளொன்றுக்கு 1,350 மெட்ரிக் டன் அளவிற்கு அமோனியா
தயாரிக்கும் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 2,000 மெட்ரிக் டன்
அளவிற்கு யூரியா உரம் தயாரிக்கும் தொழிற்சாலை, நாளொன்
றுக்கு 800 மெட்ரிக் டன் அளவிற்கு டி.ஏ.பி உரம் தயாரிக்கும்
தொழிற்சாலை ஆகியவற்றைக் கட்டுவதன் மூலம் உற்பத்தியை
இரட்டிப்பாக்கும் செயற் குறிப்பினை சென்னை உர நிறுவனம்
மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்
திற்கு ரூ. 550 கோடி செலவாகும். வருங்காலத்தில் இந்நிறுவனம்
பாதிப்பிற்குள்ளாகாத வகையில் நிறுவனத்தின் செயற் குறிப்பு
களுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி வழங்கும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது.

**படைக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.**

இத் தொழிற்சாலை சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்
வதற்காக 3—7—1966 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது.

தற்போது, இத்தொழிற்சாலையிலும், இதன் துணை நிறு
வனங்களிலும், அதிகாரிகள், பணியாளர்கள், தொழிலாளர்கள்
ஆகியோர் உட்பட ஏறக்குறைய 2,900 பணியாளர்களுக்கு வேலை
வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இராணுவத் தேவையை நிறைவு
செய்யும் பொருட்டு பல்வேறு வகையான சிறிய-நடுத்தர
படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்காக இத் தொழிற்சாலை
அமைக்கப்பட்டது.

**சேலம் உருக்காலை, சேலம்.**

சேலம் உருக்காலைத் தொழிற்சாலை, மத்திய அரசின் நிறு
வனமான இந்திய உருக்கு அதிகார மன்றத்தின் ஒரு பிரிவாகும்.
2,20,000 டன் அளவுள்ள எவர்சில்வர் உருக்குகள், மின் உருக்குகள்,
ஏனைய தனி உருக்குகள் ஆகியவற்றை இரு நிலைகளில் உற்பத்தி
செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றினை அமைக்கவுள்ளது
என்று சேலம் உருக்காலை தனது திட்டம் குறித்து விரிவான
அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஆனால், ஒருங்கிணைந்த திட்டம்
அல்லாத கொள்கை அடிப்படையில், இத் திட்டத்தின் முதல்
கட்டப் பணிக்கு 1977ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில்தான்
இசைவளிக்கப்பட்டது. 13—9—1981ஆம் நாளன்று இத் திட்டத்
தின் முதல் கட்டப் பணி தொடங்கப்பட்டது. வணிக ரீதியான
உற்பத்தி 1982ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடங்கப்
பட்டது.



1985 ஜூன் 14]

ஆண்டில் 37,500 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்ய
மதிப்பிடப்பட்டுள்ளது. 1985—86-ஆம் ஆண்டில் எலெக்ட்
ரோஸ்டேட்டிக் பிரிசிபிடேட்டார்ஸ் (Electrostatic Precipitators)
ஏர் பிரிஹீட்டார்ஸ் (Air Pre-heaters) என்சின் மின்விசிறி
(Fan) போன்ற துணைக்கருவிகள் உட்பட 43,000 மெட்ரிக்
டன் அளவிற்கு உற்பத்தி செய்ய மதிப்பிடப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டில் இயந்திர
மின்விசிறி பிரிவில் தயாரிப்பு தொடங்கப்பட்டது. இந்த
ஆண்டில், இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் 57,000
மெட்ரிக் டன்னாக இருக்கும்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக்கழகம், தமிழ்நாடு
மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம்
துணை நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக சுமார் 43 தொழில்
முனைவோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்துணை நிறுவனங்
கள் அனைத்திலும் உற்பத்தி தொடங்கப்பட்டது. 1984—85 ஆம்
ஆண்டில் இத்துணை நிறுவனங்களில் 15,000 மெட்ரிக் டன்
அளவிற்கு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது.

நிலங்கள் குறித்து ஏற்பட்ட செலவில் ரூ. 75 இலட்சம் வரை
ஏற்க ஒப்புக்கொள்வதன் மூலம் மாநில அரசு தன் ஒத்துழைப்
பினை மேலும் அளித்துள்ளது. இதைத் தவிர, நெடுஞ்சாலைகள்
துறை, கிளைச் சாலையினையும் அமைத்துதவியது.

இத்திட்டத்திற்கு பெண்ணை ஆற்றிலிருந்து நீர் வழங்கும்
திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்
டுள்ளது.

**மணலி, சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை.**

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையானது
1965-ல் சென்னையில் உள்ள மணலியில் நிறுவப்பட்டது. இந்த
ஆலை. 1969 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது.
இவ்வாலை செயல்படத் தொடங்கியதிலிருந்து மாநிலத்திற்குத்
தேவைப்படும் பெட்ரோலியப் பொருட்கள் முழுவதும், அதாவது
மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய், உயர்வேக டீசல்

எண்ணெய், குறைந்தவேக டீசல் எண்ணெய், தார் (ஆஸ்பால்ட்), உலை எண்ணெய், லியூப் எண்ணெய், சமையல் வாயு, நாப்தா முதலிய பெட்ரோலிய உற்பத்திப் பொருட்கள் இந்த தூய்மைப் படுத்தும் ஆலையிலிருந்து பெறப்பட்டன.

1984 மார்ச் மாதம் நிலவரப்படி இந்நிறுவனத்தின் செலுத்தப் பட்ட மூலதனம் 98.25 கோடி ரூபாய் ஆகும். இந்த நிறுவனச் சமபங்கு மூலதனத்தில் மத்திய அரசின் பங்கு 96.6 சதவீதமாகும். இருவெளிநாட்டு உடனுழைப்பு நிறுவனங்களாகிய "நேஷனல் ஈரானியன் ஆயில் கம்பெனி ஆஃப் ஈரான்" "அமோகோ இந்தியா இன்கார்பெரேடேட் ஆஃப் யூ.எஸ்.ஏ." ஆகிய ஒவ்வொன்றின் பங்கு 1.7 சதவீதம் ஆகும். இந்த இரு வெளிநாட்டு உடனுழைப்பு பங்குதாரர்கள், தங்களது சமபங்குத் தொகையை அந்நியச் செலவாணியாகக் கொடுத்துள்ளனர். இந்த நிறுவனம் செயல் படத் தொடங்கிய முதல் ஆண்டிலிருந்து செலுத்தப்பட்ட மொத்த ஆதாயப் பங்குத் தொகையானது சமபங்கு மூலதனத்தில் 177.5 சதவீதமெனக் கணக்கிடப்படுகிறது.

எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையானது தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளதால், வளர்ச்சி குன்றிய தொழிற்சாலைகளை மேம்படுத்த இது தூண்டுகோலாக இருப்பதோடு, இரசாயன உரத் தொழிற்சாலை, பெட்ரோலிய இரசாயனத் தொழிற் சாலைகளின் வளர்ச்சிக்கு முதன்மைத் தொழிற்சாலையாகவும் செயல்படுகிறது. வளர்ச்சி குன்றிய தொழிற்சாலைகளில் மிகவும் முக்கியமானவை, சென்னை இரசாயன உரத் தயாரிப்பு நிறு வனத்திற்கு அருகிலுள்ள இரசாயன உரத் தொழிற்சாலையும் "இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்" நிறுவனத்தைச் சேர்ந்த "லியூப் கலவை டிரம்" தயாரிப்புத் தொழிற்சாலை யும் "மதராஸ் பெட்ரோசெம் லிமிடெட்" நிறுவனத்தைச் சேர்ந்த டிரான்ஸ்பார்மர் எண்ணெய்த் தயாரிப்புத் தொழிற்சாலையும் ஆகும். இத் தொழிற்சாலைகளில் வேலைக்கு நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள் 2,000 பேரும் மறைமுகமாக நியமிக்கப் பட்டவர்கள் 3,000-க்கு மேற்பட்டவர்களும் ஆவர்.





முதல் கட்டமாக, இவ்வுருக்காலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர்சில்வர் மென் உருக்கு சுருள்கள், தகடுகள், மின் கம்பிச் சுருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறனைக் கொண் டிருந்தது. தற்சமயம் உருக்கு வளைவுகள், இடு பொருட்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. மூலப் பொருட் களை உள் நாட்டிலேயே தயாரிப்பதற்கான முயற்சி மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

இத் தொழிற்சாலையில் முதல் கட்டத்தில் 1,300 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் பணி நடை பெறும் இடங்கள், பராமரிப்பு, பொது நிருவாகப் பணிகள், கட்டு மானப் பணிகள் ஆகியவற்றில் பயிற்சியாளர்கள் உட்பட இன்று 1,229 பணியாளர்கள் பணி புரிகிறார்கள்.

இத் தொழிற்சாலையில் முதல் கட்ட மூலதனச் செலவு, ரூ. 181.19 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் ரூ. 179.16 கோடி செலவிடப் பட்டுள்ளது.

1982-83ஆம் ஆண்டில் இந்த உருக்காலையில் உற்பத்தி 6,247 டன்னாக இருந்தது. 1983-84 ஆம் ஆண்டில் இவ்வுருக் காலையில் உற்பத்தி 6,934 டன்னாகும். 1984-85ஆம் ஆண்டில் இதன் இலக்கு 16,800 டன் என்று நிர்ணயிக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் இந்த உருக்காலையின் உற்பத்தி 11,520 டன்னாகும். 1985-86ஆம் ஆண்டில் இந்த உருக்காலையின் உற்பத்தி இலக்கு 21,600 டன் என்று தற்காலிக மாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி திறனை உரிய அளவு பயன்படுத்துவதற்காக 55.75 கோடி ரூபாய் செலவில், இரண்டாவது சென்ஸிமிர் Second Sendsirmir மில்லை நிறுவுவதன் மூலம் உற்பத்திறனை இரட்டிப்பாக்கும் செயற் குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

13640 5

எனவே, உறுப்பினர் ஒட்டு மொத்தமாகச் சொன்ன குற்றச்சாட்டை நீக்கி விடுகிறேன். திரு. நடராசன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஆ. நடராசன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகள் இருக்கின்றனவே அந்தக் குற்றச்சாட்டுகளை அவர்கள் நிரூபித்திருக்கின்றார்களா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெட்டி பெட்டியா வாங்கினார்கள் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன். ஆதாரபூர்வமாகக் குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள்.

* *

(குறுக்கீடுகள்)

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறுபடியும் பொதுப்படையான குற்றச்சாட்டுதான் சொல்லப்படுகின்றது. தாங்கள் ஏற்கெனவே அளித்த தீர்ப்பு மீறப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசும் போது மீண்டும் அவ்வாறு குறிப்பிட்டது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றது. இது சட்ட மன்றம்; பொதுக்கூட்டத்தில் பேசுவது போன்று பேசக்கூடாது. குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் முன்கூட்டியே அதற்கான ஆதாரத்தை என்னிடம் காட்டி, என் அனுமதி பெற்றுப் பேசவேண்டும்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி, பொதுவான நிகழ்ச்சிகளைப் பற்றி, திட்டவட்டமான நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே பேசுகின்றபோது நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சி என்று

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொல்வதுதான் பொருத்தம் என்று கழகத்தின் சார்பாக என்னுடைய கட்சி உறுப்பினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும் என்று நீங்கள் சொன்னீர்கள். நான் தயாராக இருக்கிறேன். ஆனால். . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் நேரிடையாகப் பேசக் கூடாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீதுதான் பேசுகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையின் மீது பேசவில்லை என்று சொல்லிவிட்டு அவர்கள் பேச ஆரம்பித்தவுடனே இவர் நிதிநிலை அறிக்கையைப் பற்றித்தான் பேசப் போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால் அவரும் வேறு எங்கெங்கோ போய்ப் பேசுகிறார். அப்படிப் பேசாமல் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொல்வது போன்று குற்றச்சாட்டுக்களைப் பற்றிச் சொல்லக் கூடாது என்றில்லை; சொல்கிற குற்றச்சாட்டைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் சொல்லவேண்டும். இந்த அவை கடைப்பிடித்து வருவதைப் பொறுத்தவரையில் நிதிநிலை அறிக்கையைப் பற்றி குறை சொல்லுங்கள், இதை, இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். ஆனால் பொதுப்படையாக ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டை வாரி வீசுவதன் மூலம் அவையின் பெருமை கெடுகிறது, என்பதோடு உறுப்பினர்கள் ஒருவரையொருவர் மதிக்கத் தவறுகிறோம் என்றும் ஆகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல முறையினைப் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களும், கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களும் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு உடன்படுகின்ற

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 30

வகையிலே நான் சொல்கிறேன். ஆனால் இங்கே பெரிய கருத்துக்கள் இந்த பட்ஜெட் பற்றி இல்லை என்ற காரணத்தால் தான் நானும் பட்ஜெட்டை விட்டு வெளியே சென்று பேச வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்குக் காரணம் இந்தக் குற்றச்சாட்டுகளிலே ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதைக் காட்டவும் ஒரு அரசாங்கம் திருத்தவேண்டிய குறைபாடுகளைப்பற்றி திருத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நான் சொல்கிறேன். அதே நேரத்தில் நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு காரியங்களுக்காக நிதி ஒதுக்கி இருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஏராளமான நிதியினை முதியோர் ஓய்வூதியத்திற்காக நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே நிதியமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் பல ஆண்டுக் காலமாக எங்களுடைய பகுதியில் பல முதியவர்கள் விண்ணப்பித்து அவர்கள் இறந்துகூட போய்விட்டார்கள். மேலும் இதுவரை பல பேருக்கு முதியோர் உதவித் தொகை கிடைக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கெல்லாம் நீங்கள் உதவுகின்றவகையில் விண்ணப்பிக்கின்ற அத்தனை பேர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்தவரையில் ஒரு கருத்துச் சொன்னார்கள்.

கி.பி. 2000 ஆவது ஆண்டுக்குள்ளாக மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிப்பதாக இந்த அரசு முடிவு செய்திருக்கின்றது என்று சொன்னீர்கள். உள்ளபடியே அதை நான் பாராட்டு கிறேன். ஆனால் நிதியமைச்சர் அவர்கள் அப்போது நிதியமைச்சராக இருக்கமாட்டார்கள். நாங்களும் கேட்க வாய்ப்பு இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் 15 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் அந்த காரியத்தைச் செய்ய முடியும் என்று நீங்கள் சொல்லியிருப்பது நியாயமான காரிய மல்ல. இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னபோது அவற்றிற்குப் பதில்



1985 மார்ச் 30] [திரு. ஆ. நடராசன்]

சொன்னீர்கள். ஆனால் ஒவ்வொரு மருத்துவ மனையும் இன்றையதினம் நரகமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற காட்சியைத் தான் நாம் பார்க்க வேண்டியிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1984-ஆம் ஆண்டில் டிசம்பர் வரை 2343 துணை சுகாதார நிலையங்களை உருவாக்கத் திட்ட மிட்டு அதிலே 2254 துணை நிலையங்களை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். என்னுடைய பேரூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சுகாதார நிலையம் கூட, அதாவது 5,000 பேருக்கு ஒருவர் என்று சொல்கின்ற அந்த வகையிலே கூட துணை நிலையம் ஒன்று கூட துவக்கப்பட வில்லை. அதைப்போல, என்னுடைய தொகுதியிலே இருக்கிற அரிசிபாளையம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் இல்லை, மருந்து இல்லை. அந்த மருத்துவர்களுக்குக் கொடுக்கப் படுகிற சம்பள அளவிலே கூட மருந்துகள் கிடைக்காத நிலையை நாம் பார்க்கிறோம். இவற்றை எல்லாம் சீர்படுத்த வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப் பவர்களுக்கு வீட்டுவசதி அளிப்பதற்காக மேலும் 5,000 வீடு களைக் கட்டுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதி யிலே இருக்கிற வேலாண்டிபாளையம், சீரநாய்க்கன்பாளையம், கும்மிட்டிபதி, ஒக்கிலிபாளையம் ஆகிய ஊர்களிலே இந்த 5,000 வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், அப்பகுதிகளுக்குத் தேவையான வீடுகளை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த அளவில் 850 ஆசிரியர்களை நியமிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றையதினம் 4,000 ஆசிரியர்கள் தேவை என்கிற அளவிற்கு நிலைமை இருக்கிறது. 4,000 ஆசிரியர்கள் என்று சொன்னால் ஒரு ஆசிரியருக்கு 50 பிள்ளைகள் என்று நிர்ணயித்தால்கூட 2 இலட்சம் பிள்ளைகள் இன்றைய தினம் ஆசிரியர்கள் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதை பார்க்கிறோம். இந்த நிலைமையை மாற்றுவதற்கு, அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 30

அதைப்போல வெள்ளாண்டிப்பாளையம் பகுதியிலே இருக்கிற ஆயிரக்கணக்கான மக்கள் பள்ளிக்காக வெகு தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே ஒரு உயர் நிலைப் பள்ளியைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குனியமுத்தூர் பகுதியிலே இருக்கிற மேல்நிலை பள்ளியும் மதுக்கரை மேல்நிலைப் பள்ளியும் கட்டிடங்கள் இல்லாமல் பல்லாண்டுக் காலமாக இருக்கின்றன. 7 ஆண்டுக் காலமாக அமைச்சரிடத்திலே மனுக்கள் கொடுத்தார் அதற்கு மக்களுடைய பங்குத் தொகை கட்டப்பட்டும் இன்னும் அங்கே கட்டிடங்கள் கட்டப்படவில்லை. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குனியமுத்தூரில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியில் சைக்கிள் ஸ்டாண்டிலே வகுப்புகள் நடத்தப்படக்கூடிய பரிதாபமான நிலைமை இருந்து வருகிறது. அது மாத்திரமல்ல, படிக்கட்டிலிருந்து இறங்குகிற இடத்திலும், மாத்தடியிலும் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அவற்றை நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கரையை ஒட்டிய பகுதியிலும் பொங்களூர், பல்லடம் வட்டாரத்திலும் இருக்கக்கூடிய விவசாயிகள் தங்களுடைய நிலத்திற்கு நீர் வேண்டுமென்பதற்காக நீண்ட காலமாக நீராறு திட்டம், சோலையாறு திட்டம், பாண்டியாறு, புன்னம்புழா திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். அதைச் செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். மேற்கு நோக்கி போகின்ற ஆற்றுநீர் வீணாகப் போய் கடலிலே வீணாகின்ற காட்சியைப் பார்க்கிறோம். அந்த நிலைமையை மாற்றுவதற்குக் கேரள அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கத்திடம் பேச்சு வார்த்தை நடத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டிலே மத்திய அரசு அதை ஆராய்வதற்காக ஒரு கமிட்டிக்கு ஏற்பாடு செய்தது. அந்த கமிட்டியின் அறிக்கையின் அடிப்படையிலே விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். முன்னாள் இராணுவத்தினரைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாங்களும் இன்னொரு நல வாரியத்தை உருவாக்கப் போகிறோம், வெல்பேர்



1985 மார்ச் 30] [திரு. ஆ. நடராசன்]

போர்டை உருவாக்கப் போகிறோம், அதன்மூலம் பல காரியங் களைச் செய்யப் போகிறோம், கடன் தரப் போகிறோம், தொழில் களை உருவாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன், ஏற்கனவே முன்னாள் இராணுவத்தினர் குடியிருந்து வருகிற வீடுகளுக்கு வீட்டு வரியிலேயிருந்து விலக்கு அளிப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று 1981 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, இப்பொழுது இருக்கிற எக்ஸ் சர்வீஸ்மென் வெல்பேர் போர்டில் விண்ணப்பங்கள் எல்லாம் வாங்கப்பட்டு 4 ஆண்டுக்காலமாகப் பயனற்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல பல மாண்புமிகு உறுப்பினர்கள் சத்துணவிலே நாங்கள் சரித்திரத்தைச் சமைக்கப் போகிறோம் என்று குறிப் பிட்டார்கள். ஆனால், நான் உங்களிடத்திலே கேட்கிறேன், அமைப்பாளருக்கு ரூ. 150 ஆயாவுக்கு ரூ. 30, ரூ. 60 சம்பளம். அமைப்பாளருக்கு ரூ. 150 சம்பளம் என்று கொடுத்தால், அங்கே கொடுக்கப்படுகிற உணவுப் பொருள்கள் ஆயாக்களுக்கும் அமைப்பாளர்கள் வீடுகளுக்கும் போகுமே தவிர, குழந்தைகளுக்குப் போய்ச் சேராது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அங்கே பணி யாற்றக் கூடிய ஊழியர்களுக்கு நியாயமான ஊதியத்தைத் தர அரசாங்கத்தினுடைய மினிமம் வேஜஸ் ஆக்ட் கூட அந்தத் தொழிலாளர்களுக்கு, அங்கே பணியாற்றக் கூடியவர்களுக்கு இல்லை என்பது வருந்தக்கூடிய ஒரு காரியம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப் போல கயிறு தொழிற்சாலை துவங்குவதற்காகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேரூர் பகுதியிலே ஏராளமான தென்னை மரங்கள் இருக்கின்றன. அந்தத் தென்னந் தோப்பு களில் கிடைக்கிற மட்டைகளைப் பயன்படுத்துகிற வகையிலே ஒரு கயிறு தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

10 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உருவாக்க இருப்பதாகவும், மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. 1974-75 ஆம் ஆண்டில் கூட்டுறவு ஆலைக்காக கோவை புதூரில் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான காரியங்கள்

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 30

நிறைவேற்றப்பட்டதற்கு பின்னாலும், கோவை மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை என்கிற அமைப்பை கலைத்து பங்கு பணத்தை திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் மீண்டும் கூட்டுறவு அமைப்பிலே ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோவையிலிருந்து பாலக்காட்டிற்குச் செல்லும் வழியில் கந்தேகவுண்டன்சாவடியில் என். எச். 47 நெடுஞ்சாலையில் நூற்றுக்கணக்கான வீடுகளை நியாயமற்ற முறையில் இடித்து தள்ளியிருக்கிறார்கள். மத்திய அரசு ஒரு பை-பாஸ் ரோடு அங்கே போடுகிறது. சென்னைக்கு போகிற அந்த பை-பாஸ் ரோடு மதுக்கரையில் பிரிந்து நீலாம்பூர் போய் சேர்கிறது. பல்லாண்டு காலமாக பணம் ஒதுக்கப்பட்டும் அந்த நேஷனல் ஹைவேஸ் என். எச். 47-ல் ரோடுகள் இன்னும் போடப்படவில்லை. ஆனால் அதேநேரத்தில் கந்தேகவுண்டன் சாவடியில் இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான வீடுகளை அதிகாரிகள் முறையான அறிவிப்பு செய்யாமல் இடித்து விட்டார்கள். இடித்து ஒரு ஆண்டிற்குப் பின்னாலும் மீண்டும் இடிக்கவேண்டும். முதலில் தவறாக இடித்துவிட்டோம். இப்போது இன்னும் 100 அடி, 120 அடி இடிக்க வேண்டுமென்று இன்றையதினம் அளந்து கொண்டிருக்கிறார்கள். இது நியாய மற்ற காரியம். முதலில் இடித்ததுபோக மீதி இடங்களில் ஆயிரக் கணக்கான ரூபாய்களை போட்டு மக்கள் வீடுகளை கட்டி விட்டார்கள். எனவே மீண்டும் அந்தப் பாதையை அகலப் படுத்துகிற காரியத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து; எனக்கு முன்னாலே பேசிய ஜனதா கட்சி உறுப் பினர் கூறியதைப் போல எங்களுடைய மாவட்டத்தில் ஸ்ரீஹரி மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ், ஜோதி மில்ஸ், ஜெயலஷ்மி மில்ஸ், உமா ஸ்பின்னிங் மில்ஸ், ஆகிய பஞ்சாலைகளிலும். இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் என்கிற பொறியியல் தொழிற்சாலையிலும் பணியாற்றக்கூடிய ஏறத்தாழ 2,500 தொழிலாளர்கள் அந்த நிறுவனங்கள் மூடப் பட்டு இருப்பதால் இரண்டு ஆண்டு காலமாக பஞ்சத்தோடும், பசியோடும் பரிதவிக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. ஆ. நடராசன்]

அடுத்து அரிசன நலத்துறையைப் பொறுத்தவரையில் அங்கே மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்கப்படவில்லை. அதனால் அவர்கள் பெறவேண்டிய கடன் தொகையை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதை உடனடியாக பட்டா தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கோவை குமாரசாமி ஏரி பகுதியில் 1,500 குடும்பங்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை, கூடைய முடையக்கூடிய மக்களுக்கும் உடனடியாக பட்டா வழங்கி அவர்களுக்கும் கடன், பெறுகிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அரிசன மக்களுக்கு கலைஞர் அவர்கள் காலத்தில் 40 ஆயிரம் கான்கிரிட் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் இவ்வரசு ஒரு வீட்டைக் கூட கட்டவில்லை. மத்திய அரசின் நிதியுதவியின் மூலமாக என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலம் சில வீடுகளை கட்டியிருந்தாலும் கூட, கலைஞர் அவர்களுடைய காலத்தில் 40 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டன. அந்தத் திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பல கிராமங்களில் கழிப்பிட வசதி இல்லை. அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செட்டிப்பாளையத்திலிருந்து வடசித்தூர் போகிற வழியில் மணல்துறை என்ற ஆறு இருக்கிறது. அந்த ஆற்றின் வழியாக ஏறத்தாழ அரை கிலோமீட்டருக்கு பேருந்துகளும், மற்ற வண்டி களும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே ஒரு பாலத்தை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல குமிட்டிபதி ஆற்றில் ஒரு பாலத்தை கட்டித்தர, கேட்டுக்கொள்கிறேன்.

குட்டைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. எங்கள் பகுதியில் 5 ஆண்டுகளுக்கு முன்னால் இடிந்துபோன மதுக்கரை குட்டையையும், ஈச்சநாரி குட்டையையும் உடனடியாக கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல புதிய குட்டைகளாக கந்தேகவுண்டன் சாவடியிலும், குமார பாளையத்திலும், குமிட்டிபதியிலும், மதுக்கரையிலும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 30

அடுத்து வளர்ந்து வருகிற கோவைப்புதூர் பகுதிக்கு கோவையிலிருந்து குறைந்த தூரத்தில் செல்ல வசதியாக உள்ள பாதையை விரிவுபடுத்தி செப்பனிட நீண்ட காலமாக ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். கோவை புதூரிலிருந்து கோவைக்கு செல்வபுரம், புட்டுவிக்கு வழியாகச் செல்லுகிற அந்தப் பாதையை போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிச்சி, பேரூர் பகுதி பெல்ட் ஏரியா என்று அறிவிக்கப்பட்டு நீண்டகாலமாக 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வந்தது. அதை 1982-ல் அரசு 5 லிட்டராக குறைத்து இருக்கிறது. அதை உடனடியாக 10 லிட்டராக வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கை கடந்த கால சம்பவங்களை குறிப்பிடக்கூடியதாக இருக்கிறது என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. சோ. கலிதீர்த்தான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே இரண்டாவது முறையாக பேச வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும்; இந்த வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த சங்கராபுரம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கு நன்றி கூறி, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை முழுமூரமாகச் செயல்படுத்துவதற்கு சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறார்கள். இத்தகைய நல்வாழ்வுத் திட்டங்களை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கும்போது, என்ன திட்டம் என்று வரையறை செய்யும் போது கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

கிராமப்புறங்களில் சமுதாயத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதைவிட்டு, கிராமங்களில் இருக்கிற வளங்களை அடிப்படையாகக் கொண்டு, உற்பத்தி நோக்கத்தைக் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். அதனால் கிராமங்களில் வேலை வாய்ப்பு பெருகும். மேலும் கிராமங்களில் எரிசக்தி திட்டங்களை அதிகமாகப் போட வேண்டும்.

இந்திய பொருளாதாரம் மழையினை மட்டும் நம்பிக்கொண்டிராமல் ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கும் வகையில் நீர்வளத் திட்டங்களைப் பெருக்க வேண்டும்.

தென்னாற்காடு, வடாற்காடு, சேலம் போன்ற மாவட்டங்கள் திருச்சி, தஞ்சை மாவட்டங்களைப்போல் இல்லாமல் கிணற்று நீர்ப் பாசனத்தையே நம்பியுள்ளதால், இந்த நிலையை மாற்றி யமைக்க சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டங்களை பெரு மளவில் அரசு கொண்டுவந்து, அந்த மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னாற்காடு, வடாற்காடு, சேலம் மாவட்டங்களில் பெருமளவுக்கு வேர்க்கடலை பயிரிடப்படுகிறது. அதை கச்சாப் பொருளாகக் கொண்டு அங்கே ஒரு எண்ணெய் பிழியும் தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

கல்ராயன் மலைப் பகுதியில் அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்து, மலைவாழ் மக்கள் பயனடைய ஏற்பாடு செய்ய வேண்டும். கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் பல இடங்களில் நீர் இல்லாமல் வறண்டிருக்கிறது, பல இடங்களில் போதிய அளவுக்கு நீர் கிடைக்கவில்லை. மக்களின் தேவைக்கு ஏற்ப நீர் கிடைக்கும் வகையில் வறட்சி கண்ட குழாய்க் கிணறுகளை மாற்றி வேறு இடங்களில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செயற்கை மழைத் திட்டம் நிறைவேற்றப்பட்ட இடங்களில் நீர் வளம் நிறைந்திருக்கிறது. அதனால் கிராமப்புறங்களில் இந்தத் திட்டத்தை கொண்டுவந்து, கிராம மக்களின் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்த்துவைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் நிதி உதவியிலிருந்து தமிழக அரசு நிறைவேற்றும் பல திட்டங்கள் கிராமப்புறங்களில் எதிர்பார்த்த பலன் ஓரளவுக்கு கிடைக்கிறது என்றாலும் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற அதிகாரிகள் அந்தப் பகுதிகளிலிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை கலந்தாலோசிக்காமல் செய்கிறார்கள்; சட்டமன்ற உறுப்பினர்களை கலந்தாலோசித்து செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 3,000 பேர்களுக்கு ஒரு சுகாதார நிலையம் அமைப்பதாக அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். இதனால் மலைவாழ் மக்களுக்கு நல்ல பயன் ஏற்படும். 30,000 மக்கள் வாழ்கிற கல்ராயன் மலைப் பகுதியில் இப்போது மூன்று சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அங்கே ஏழை எளிய மக்கள் மலைவாழ் மக்கள் சுகாதார வசதி போதுமான அளவுக்கு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை போக்க இன்னும் ஒரு துணை சுகாதார நிலையத்தை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசை நான் கேட்டுக்

(முற்பகல் 11-20)

கொள்கிறேன். பெரும்பாலான ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் புளி, மஞ்சள், மிளகு ஆகியவற்றின் விலையைக் குறைக்கும் வகையில் திட்டம் உள்ளது, வரவேற்கத்தக்கது. அதேபோல் எண்ணெய், வெங்காயம் ஆகியவற்றின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சங்கராபுரத்தை ஒரு தலைமையிட வட்டாரமாக அறிவிக்க வேண்டும். நான் ஏற்கெனவே இதுபற்றி இந்தச் சட்டமன்றத்திலே பேசும்போது, கள்ளக்குறிச்சி பெரிய வட்டாரமாக இருக்கிறது, எனவே அதைப் பிரித்துக் கொடுத்து, நிர்வாகத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு, சங்கராபுரத்தை ஒரு தனி வட்டாரமாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன்.





அதற்கு எந்தவிதமான அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. எனவே பின்னாலேயாவது அதைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சங்கராபுரத்திலே அரசு மருத்துவ மனை ஒன்று உள்ளது. அங்கே நோயாளிகள் தினமும் அதிகமாக வருகிறார்கள். ஏன் என்றால், அது பேரூராட்சியாக இருக்கிறது. எனவே நோயாளிகள் வந்து தங்கி சிகிச்சை பெறுவதற்கு முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் சுமார் 40, 50 கி.மீ. தூரத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இல்லை என்றால், அவர்கள் சேலம், கடலூர் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே இந்த நிலைமையை மாற்ற, அங்கே படுக்கை வசதிகள் கொண்ட ஒரு மருத்துவமனையாக அதை மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சர்கராபுரம் பேரூராட்சி மிகவும் பின்தங்கியிருப்பதால் அதை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்ராயன் மலைப்பகுதியில் இயற்கை வளம் அமைந்துள்ள மேகம் என்ற இடத்திலே நீர் வீழ்ச்சிகள் இருக்கின்றன. இன்று நம்முடைய நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், அங்கே நீர் மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இதுபற்றி நான் இந்த அவையிலே பேசி இருக்கிறேன். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கூட இங்கே 10 மெ. வாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய நிலையத்தை அமைக்கலாம் என்று கூறியிருந்தார்கள். எனவே அந்தத் திட்டத்தை இப்போது செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக அரசு நிதியை வழங்கி இருக்கிறது, அதற்கு முதல் அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த நிலையம் அமைப்பதற்கு வேண்டிய இடத்தை கையகப்படுத்தி, விரைவிலே அதைச்

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1985 மார்ச் 30

செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், மலைப் பகுதிகளிலே மின்சாரம் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தால், அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய கல்ராயன் மலைப் பகுதி மிக உயரமான இடத்திலே, அதாவது 4,500 அடி உயரத்திலே உள்ளது. எனவே அங்கே ஒரு தொலைக்காட்சி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்தால், அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கிற, விழுப்புரம் மற்றும் ஆத்தூர், அந்தப் பக்கத்திலே இருக்கிற அரூர் மற்றும் இந்தப் பகுதியிலே இருக்கிற திருவண்ணாமலை போன்ற இடங்களில் இருக்கின்ற மக்கள் எல்லாம் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும் மிகவும் வசதியாக இருக்கும். கல்ராயன் மலைப் பகுதியிலே வாழ்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கும் அது வாய்ப்பாக இருக்கும். எனவே அங்கே ஒரு தொலைக்காட்சி நிலையத்தை அமைக்க ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சியிலேதான் அங்கே சாலைகள் எல்லாம் அமைக்கப்பட்டன. போக்குவரத்தும் இப்போது ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. எனவே அங்கே உள்ள நீர் வீழ்ச்சியை எல்லாம் சென்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் வகையிலே, அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே உள்ள மூங்கில் துறைப்பட்டு என்ற இடத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. அங்கே ஏராளமான தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். எனவே அது நிறைய பொதுமக்கள் வாழ்கின்ற இடமாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு அங்கே குடிநீர் வசதி இல்லாத நிலைமையிருப்பதால், அவர்கள் மிகவும், கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்களுக்காக ஒரு பெரிய திட்டத்தை தீட்டி அங்கே உள்ள தொழிலாளர்களுக்கும், அந்தப் பகுதியில் வாழ்கிற பொது மக்களுக்கும் வேண்டிய குடிநீர் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான்



1985 மார்ச் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், அது மிகவும் மலைப் பாங்கான மேட்டுப் பகுதி. எனவே உடனடியாக அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய சங்கராபுரம் பகுதியில் உள்ள மக்களுக்கு வேண்டிய குடிநீர் வழங்கும் திட்டத்தை இப்போது ஆரம்பித்து, அதைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டம் இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது. அது ஒரு பெரிய பேரூராட்சியாக இருக்கின்ற காரணத்தால், விரைவிலே அதைச் செயல்படுத்துவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கல்ராயன் மலைப்பகுதியிலே மைக்கா போன்ற தாதுப் பொருள்கள் எல்லாம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே அதை ஆய்வு செய்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் முல்குந்தா நதியிலே — நான் ஏற்கனவே இதைப்பற்றி பல முறை இங்கே சொல்லியிருக்கிறேன்—ஒரு அணைக்கட்டு கட்டி, அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கனவே சொல்லியும், இதுவரையிலும் அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப் படவில்லை. இந்தத் திட்டத்தை ஆய்வு செய்ததாகத் தெரிகிறது. எனவே விரைவாக அதை ஆய்வு செய்து, இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் உள்ள கோமுகி அணை, மணிமுத்தாறு அணைகளில் இரண்டு ஆண்டுக்காலமாக தூர் எடுக்காமல் இருக்கிறது. அந்த அணையிலேயிருந்து வெளியிலே பாசனத்திற்கு செல்லுகின்ற அந்த தண்ணீர் சேதம் அடையாமல் இருப்பதற்கு, கால்வாய்களின் ஓரத்தில் லைனிங் செய்து கொடுத்து, அந்தப் பகுதி விவசாய மக்களின் பயிர்களை பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், கல்ராயன் மலையிலே செயலற்றுப் போய் ஏற்கனவே இருந்த அந்த ஊராட்சி மன்றத்தினை, இப்போது

புதிதாக ஊராட்சி ஒன்றியத்தை தொடங்கிக் கொடுத்து, அந்த மலைவாழ் மக்களுக்கு நல்ல திட்டங்களை எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஊராட்சி மன்றத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்கி மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டு திட்டங்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கல்ராயன் மலையிலிருந்து வெள்ளிமலை வரையிலும் சாலை போட 5 கோடி ரூபாயை நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி தந்து, சாலையை செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாலை மலைச்சாலையாக இருப்பதினால் மழைக் காலங்களில் தண்ணீர் எடுத்து ஓடி, சாலைகள் கரைந்து போகிற நிலையிலே இருக்கின்றன. விரைவிலே அவைகளுக்கு ஜல்லி போட்டு, தார் போட்டும் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அந்த ரோடுகளில் பேருந்துகளை விட முடியும். அதற்கு வழி வகை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கள்ளக்குறிச்சியிலேயிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கே மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பை எடுத்துச் செல்ல விவசாயிகள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அதேபோல வேலூர், திருப்பதி போன்ற இடங்களுக்கெல்லாம் செல்வதற்கு, அதுதான் பெருவழித்தடமாக இருப்பதால், அதை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள மாத்தூரில் இருந்து செல்லம்பட்டு வரை செல்லும் சாலை ஏற்கெனவே கிராமச் சாலைத் திட்டத்தின் மூலம் செப்பனிடப்பட்டு, ஜல்லி போட்டு விட்டுவிட்டார்கள். மேற்கொண்டு தார் போட்டு கெட்டிப்படுத்தாமல் விட்டுவிட்டதனால் அந்தச் சாலை பழுதடைந்து இப்போது பேருந்து செல்வதற்கு வழி இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அந்தச் சாலையை இந்த நடப்பு ஆண்டு திட்டத்திலேயே எடுத்துக் கொண்டு, நல்ல தார் சாலையாக செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல முஷ்குந்தா நதியிலிருந்து, ராவப்பனூர், பிரம்மகுண்டம் வரை செல்லும் சாலையிலுள்ள ஆற்றிலே ஒரு





பாலம் கட்டிக் கொடுத்து, அங்கே கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிகள் தாங்கள் விவசாயம் செய்த கரும்புகளை எடுத்துச் செல்ல வழி வகை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கள்ளக்குறிச்சியிலிருந்து பம்பரப்பட்டு வழியாக கச்சிராப்பாளையம் வழியாக தந்தை பெரியார் நகரப் பேருந்து ஒன்று ஓடவிட்டு, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்து, 10 கிராம மக்கள் இதனால் பலன் அடையக் கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தித் தருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையிலிருந்து மூங்கில்துறைப்பட்டு வரை வருகின்ற நகரப் பேருந்துகளை எனது தொகுதியில் உள்ள மேல்பெண்ணூர் கூட்டு ரோடு வரை நீடித்துக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல சங்கராபுரத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சியிலே காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்றும், கள்ளக்குறிச்சியிலே ஒரு கோட்ட வளர்ச்சி அதிகாரி அலுவலகம் ஒன்றும், கள்ளக்குறிச்சியிலே ஒரு வருவாய் கோட்ட அலுவலகம் ஒன்றும், கள்ளக்குறிச்சி பகுதியிலே மலைவாழ் மக்கள் அதிகமாக இருப்பதினால், ஒரு கல்லூரியையும் ஏற்படுத்திக் கொடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, ஒரு தொழில் நுட்பக் கல்லூரியையும் அரசின் சார்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு வாய்ப்பினை தந்த தலைவருக்கும், இங்கே பேசுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நன்றி கூறி, அண்ணா நாமம் வாழ்க என்று கூறி முடிக்கிறேன்.

* திரு. செ. இரத்தினவேலு: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் நடக்கக் கூடிய விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அடுத்து, மூப்பிறவி கண்டு மூன்றாம் முறை பதவி ஏற்றிருக்கிற, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடிய வள்ளலாரின் வழி நின்று வாடிய பிஞ்சு முகங்களைக் கண்டு, மனம் வாடி, சிறு வயதில் தான் இருந்த

நிலை நினைத்து, சத்துணவு ஈந்த தலைவன், தஞ்சையில் பல்கலைக் கழகம் அமைத்துக் கொடுத்த தானைத் தலைவன், எங்களைப் போன்ற நடுத்தர மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கி, நான் இந்தச் சட்ட மன்றத்திலே அங்கம் வகித்து பணியாற்ற வெற்றியைத் தேடிக் கொடுத்த 4½ கோடி மக்களுடைய இதய தெய்வம் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறி நான் சார்ந்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுடைய அணிக்கு வாக்கு அளித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த முசிறி தொகுதி மக்களுக்கும், எல்லாப் பணிகளிலும் துணையாக நின்று, பல்வேறு இன்னல்களையும் தாங்கி, வெற்றிக் கனியை ஈட்டித் தருவதற்கு உறுதுணையாக இருந்த முற்போக்குக் கூட்டணி கட்சிகளுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் கூறி என்னுடைய உரையை ஆரம்பித்து, சில கருத்துக்களைக் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதனை மனதில் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை தயாரித்த நிதியமைச்சர் அவர்கள், இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களின் முகத்திலே சிரிப்பை காண வேண்டும் என்ற எண்ணத்திலே தயாரித்திருக்கிறார்கள். ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால், அந்த நாட்டிலே இரண்டு புரட்சிகள் ஏற்பட்டாக வேண்டும். ஒன்று பசுமைப் புரட்சி. மற்றொன்று தொழில் புரட்சி. இந்த இரண்டையும் மனதில் கொண்டுதான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கடந்த 7 ஆண்டுகளாக பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு அளித்து வருகிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சார திட்டத்தை இந்தியாவிலேயே தமிழகம் தான் முதன் முதலாக அறிவித்திருக்கிறது என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதேபோல இதர விவசாயிகளுக்கும் குதிரைத் திறன் அடிப்படையிலே கட்டணம் நிர்ணயித்ததன் மூலம் அவர்களுக்கும் மின் கட்டணச் சலுகை வழங்கியுள்ளது. இந்த நடவடிக்கை





விவசாயிகள் வாழ்க்கை மேம்படுத்துவதற்கு இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது, ஆர்வம் காட்டுகிறது என்பதை தெளிவாகக் காட்டுகின்றது. சிற்சில இடங்களில் இந்த நல்ல திட்டமான இலவச மின்சாரத் திட்டம் ஏழை மக்களுக்குக் கிடைக்க இடையூறாக ஓரிரு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, இத் திட்டத்தின் முழுமையான பலனைப் பெற விவசாயிகளுக்கு வழிகோல வேண்டும் என்று சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோல இந்தத் திட்டத்தை, இலவச மின்சார சலுகையை துஷ்பிரயோகம் செய்வோர் மீதும் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஏழை எளிய மக்களின் குழந்தைச் செல்வங்களை நாளைய இந்த நாட்டின் மன்னர்களாக கருதி, சாதி சமய இன பாகுபாடு இன்றி உண்ண சத்துணவும், உடுக்க சீர் உடையும் அளிப்பதிலே, இந்தியாவிலேயே நம்முடைய புரட்சித் தலைவர் அரசு தான் செயல்படுத்தி வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்வதிலே நாம் பெருமை அடைகிறோம். பள்ளி மாணவர்களுடைய ஆக்கப்பூர்வமான சிந்தனையை வளர்ப்பதற்கு தற்போதுள்ள பாட முறையையும், தேர்வு முறையையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கிராமத்திலே உள்ள முதியவர்களுக்கும், விதவை களுக்கும், அநாதைகளுக்கும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தில், கிராமங்களில் நிறைய பேர் உதவித் தொகை வாங்கக் கூடிய தகுதி இருந்தாலும் உதவித் தொகை கிடைக்காத நிலை இருக்கிறது. அவர்களுக்கு கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வரவு-செலவுத் திட்டத்தில் ஏழை எளிய மக்களின் அன்றாட உபயோகப் பொருள்களான மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி, மிளகு இவைகளின் மீதான பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியதன் மூலம், தமிழக அரசு ஏழைப் பங்காளிகளின் அரசு என்பதை மறுபடியும் நிரூபித்து காட்டி உள்ளது. ஆனால் பல சமயங்களில் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர், திருச்சியை தமிழகத்தின் தலைநகரமாக மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தினை

மீண்டும் நாங்கள் வலியுறுத்தி, திருச்சியினை தமிழகத்தினுடைய தலைநகரமாக மாற்றித் தர வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலே பாரதிதாசன் பல்கலைக் கழகம் கண்ட தமிழக அரசு, மருத்துவ மனை கல்லூரியையும் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத்தில் நகரத்தின் மையத்தில் மட்டும் இரண்டு மூன்று மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன. திருச்சி அல்லாத வேறு பகுதியிலே மகளிர் கல்லூரிகள் இல்லை. இந்த நிலையை மாற்றி முசிறியில் மகளிர் கல்லூரியை அமைக்க வேண்டும். அதனால் அருகில் உள்ள தாலுக்காக்களிலும், அருகில் உள்ள கிராமத்திலேயுள்ள மகளிர், கல்லூரிக்கு சென்று படிப்பதற்கு ஏதுவாகும்.

அதுபோல குடிநீர் பிரச்சனையைப் போக்குவதற்கு அரசு போர்க் கால நடவடிக்கை எடுத்து வருகிறது. என்னுடைய தொகுதியில் காவேரிக் கரையை ஒட்டியுள்ள பகுதிகள் தவிர எஞ்சியப் பகுதிகளில் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முசிறி தாலுக்கா தொழிற் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப் பட்டுள்ளது. எனவே முசிறியில் ஒரு தொழிற்பேட்டையை துவங்க அரசு ஆவன செய்ய வேண்டும். தமிழகத்தில் 10 இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைப்பதில் முசிறிக்கு முன்னுரிமை அளித்து அங்கு ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டும். அங்குள்ள கரும்பு விவசாயிகள் இதனால் பயன் அடைவார்கள். கணிசமான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அந்த வேலைக்கு தேவையான கரும்பை உற்பத்தி செய்யக் கூடிய நஞ்சை நிலங்கள் அங்கே இருக்கின்றன. முசிறிக்கு அருகில் உள்ள புகளூர் பேப்பர் மில்லுக்குத் தேவையான மூலப் பொருளான கரும்புச் சக்கையை இந்த ஆலையின் மூலம், அங்கிருந்து புகளூருக்கு அனுப்ப முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிக்கடி தமிழகத்தில் வழக்கறிஞர்களுக்கும், காவல் துறையினருக்கும் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை அவ்வப்போது தீர்வு காண, மாவட்ட நீதிபதி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள், மாவட்ட வழக்கறிஞர் சங்கத்





தலைவர் கொண்ட ஒரு உயர் மட்டக் குழுவினை அமைத்து ஆங்காங்குள்ள பிரச்சனைகளை தீர்வு காண நமது அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான முசிறிக்கு அருகில் தொட்டியம் தொகுதிக்கும் விவசாயத்திற்கு நீர் வரக்கூடிய வடக்கு கால்வாயில் கோடை காலத்தில் நீர் வருவதில்லை. காவேரிக் கரைக்கு அருகில் உள்ள ஸ்ரீராமசமுத்திரத்தில் தற்காலிகமாக கரம்பை கட்டி பாசனத்திற்கு நீர் கொண்டு வருவார்கள். கரம்பை கட்டுவதற்கு ஒரு ஆண்டிற்கு ரூ. 1 இலட்சம் ஆகும். அந்த கரம்பையை நிரந்தரமாக சிமெண்டினால் கட்டினால் அரசுக்கு ஆக வேண்டிய செலவு குறையும். இதனால் முசிறி, தொட்டியம் தொகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள், எப்போது தண்ணீர் வரும். எப்போது தண்ணீர் வராது என்ற பயம் இன்றி விவசாயம் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து முசிறியிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவமனைதான் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு பெரிய மருத்துவ மனையாக விளங்குகிறது. அங்கே படுக்கை வசதிகள் அதிகமாக இல்லை. படுக்கை வசதிகள் அதிகமாகக் கொண்ட மருத்துவ மனையாக அதை ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உத்தனாம்பட்டி, கோட்டாத்தூர் அருகிலே ஒரு காட்டாறு ஓடுகிறது. அங்கே மழை பெய்தால் 3 நாட்களுக்குத் தொடர்ந்து வெள்ளம் வரும். அப்போது அந்தப் பகுதியிலே எந்தவிதமான போக்குவரத்தும் நடத்த முடியாது. அந்த இடத்திலே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்தால்--25 ஆண்டுக் காலமாக அந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிற — அந்த மக்களுக்குக் கட்டிக் கொடுத்தால் இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரிசி ஆலைகள் அதிகமாக இருக்கக்கூடிய மணச்சநல்லூர் பகுதியை தாலுக்காவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே காவிரியிலிருந்து முள்ளுப்பாடி ஏரிக்கு வரக்கூடிய நீரை தெய்வேலி வரை கொண்டுவர அரசு உதவுமானால்

[திரு. செ. இரத்தினவேலு] [1985 மார்ச் 30

திட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கர் வரை பாசனத்திற்கு நீர் கிடைக்கும். அப்போது அங்கே இருக்கின்ற நிலங்கள் எல்லாம் விவசாயத்திற்கேற்ற நிலங்களாக மாறி பசுமைப் புரட்சி ஏற்படும் என்று சொல்லி அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மீண்டும் ஒரு முறை என்னைப் பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இங்கே அங்கம் வைத்துப் பேச உறுதுணையாக இருந்த எங்களை வழிநடத்திச் செல்லக்கூடிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. வி. கோ. செல்லப்பா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் நான் பேசுவதற்கு முன்பு என்னை ஆளாக்கி இந்த அளவுக்கு உருவாக்கிய எங்கள் இயக்கத்தினுடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கும் அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் அஞ்சலியைச் செலுத்திப் பேச விரும்புகிறேன். எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும் ஆருயிர் அண்ணன் சிவாஜி அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்து பேசத் தொடங்குகிறேன்.

நான் முதன்முறையாகப் பேசுகின்ற காரணத்தினால் என் தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேச விரும்புகிறேன். பள்ளி பிள்ளை களுக்கு சீருடை வழங்குவதும், பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்குவதும் ஆகிய திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்றால் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முறையிலே ஏழை எளிய பிள்ளைகள் படிப்பதற்காக வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள், இன்றைய தினம் அந்தத் திட்டத்தை விரிவாக்கி இருக்கிற முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சாராயத்திற்கு வரியை உயர்த்தியிருப்பதையும் நாங்கள் வரவேற்கிறோம். காரணம், இந்த நாட்டிலே பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்ற நேரத்திலே சாராயத்தைத் முடித்து விட்டு அதன் மூலமாக சமுதாயத்தை அழித்துக்



1985 மார்ச் 30] [திரு. வி. கோ. செல்லப்பா]

கொண்டிருக்கிறவர்கள்—அதன் விலை உயர்கிற காரணத்தினால் ஏழை எளியவர்களாக இருந்து குடிக்கின்றவர்கள் அந்தத் தீய பழக்கத்திலிருந்து விடுபடுவார்கள் என்ற காரணத்தினால்—அந்த நிலை மாறும் என்பதால் நாங்கள் அதை வரவேற்கிறோம்.

அதேபோன்று ஒருமுனை வரியை அறிவித்திருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில முக்கியமான பொருள்களுக்கு ஒருமுனை வரி விதித்திருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று எல்லாப் பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரியை விதிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலமாக ஏழை எளிய மக்கள் நல்வாழ்வுக்கு உதவி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் கடலூர் பகுதியில் சிப்காட் தொழிற் பேட்டை ஒன்று இருக்கிறது. அது முன்பே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதை விரிவுபடுத்துவதற்கு உதவி செய்வதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

சத்துணவு மையக் கூடங்கள் நன்றாகச் செயல்படுகின்றன. என் தொகுதியிலே சத்துணவு மையக் கூடங்களுக்குத் தனியாகக் கட்டடங்கள் இல்லை. இதனால் அவர்களிடம் வழங்கப்படுகிற உணவு, அரிசி, பருப்பு, போன்றவற்றைப் பாதுகாப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. அதன் காரணமாக பல தவறுகள் ஏற்படுகின்றன. எனவே அதைத் தடுப்பதற்காக தனியாகக் கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வித் திறனை பெருக்க வேண்டும். கல்வித் திறன் திறனைப் பெருக்கினால் தான் நன்றாக இருக்கும். [illegible] பள்ளிகளை வளர வேண்டுமானால் அங்கு இருக்கின்ற பள்ளிகளை [illegible] இருக்கின்ற பள்ளிக் சீர்திருத்தம் செய்ய வேண்டும். [illegible] வேண்டும். அதே கட்டிடங்களை நல்ல முறையில் [illegible] பல பிள்ளைகள் சமயத்தில் சத்துணவு அளிப்பதன் மூலம் [illegible] இருக்கின்றார்கள். அதனால் ஆரம்பப் படிப்பதற்கு [illegible] கொண்டு பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் அதிகமாகக் கொண்டு [illegible] ஆனால் அங்கே ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். [illegible] ஆசிரியர்களை அதிகமாக நியமிக்க இந்த [illegible] எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வி. கோ. செல்லப்பா] [1985 மார்ச் 30

ரேஷன் கடைகளுக்கு பல திட்டங்கள் போட்டு நல்ல வேலைகளை செய்து கொண்டு வருகிறீர்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் ரேஷன் கடைகளின் மூலம் இந்த அரசு கொடுக்கின்ற பொருட்கள் அந்த மக்களுக்கு கிடைக்கின்றதா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இன்று போய் நாளை வா என்று சொல்லுகின்ற நிலைமை தான் அங்கே இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த எந்த பொருட்கள் கார்டில் பதிவு செய்யப்படாமல் இருக்கிறதோ அந்தப் பொருட்களை எல்லாம் அரசுக்கு திருப்பித் தர வேண்டும் என்று சட்டத்தின் மூலமாக செய்ய வேண்டும். அப்போது தான் இதுபோன்ற தவறுகளை நீக்குவதற்கு வசதியாக இருக்கும்.

எங்கள் தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவ மனையில் சரியான முறையில் மருந்துகள் இல்லை. அங்கே கொண்டு செல்லும் கால்நடைகளுக்கு சரியான முறையில் மருந்து கொடுக்கப்படாமல் கால்நடைகள் மடிய நேரிடுகின்றன.

மற்றும் கடலூரை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கவில்லை. கடலூர் தொகுதியின் வட பகுதியில் முன்னேற்றம் காணவில்லை. ஏன் என்றால் வட பகுதியைப் பொறுத்தவரையில் பாண்டிச்சேரி மாநிலமும், தமிழக மாநிலமும் விட்டு விட்டு வருகின்ற காரணத்தால் அங்கே முன்னேற்றம் காணவில்லை. குறைந்தது 20 ஆண்டுகளுக்கு முன்பாக போட்ட ரோடுகள் தான் அங்கே உள்ளன. அவைகளில் மாட்டு வண்டிகள் கூட செல்ல முடியாத நிலையில் உள்ளன. அதைப் போக்குவதற்கு கடலூர் தொகுதியை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்ப்பதன் மூலமாக பல நன்மைகள் ஏற்படுத்த முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு விவசாயிகளுக்காக கரும்புக்கு 185 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். எங்கள் பகுதியான நெல்லிக்குப்பத்திலும், முண்டியம்பாக்கத்திலும் அந்த விலை கொடுக்கவில்லை. ஆனால் அரசால் நடத்தப்படுகின்ற அந்த கூட்டுறவு கரும்பு ஆலையில் 213 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரே ஆலை தான் பக்கத்தில் பக்கத்தில் இருக்கின்றது. அந்த கூட்டுறவு ஆலை இப்போது தான் ஏற்பட்டு இருக்கிறது. முன்பு அங்கு இருந்தவர்கள்,



1985 மார்ச் 30] [திரு. வி. கோ. செல்லப்பா]

முண்டியம்பாக்கத்திற்கும், நெல்லிக்குப்பத்திற்கும் அந்த கரும்பை அனுப்பிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் இப்போது கூட்டுறவு ஆலை ஏற்பட்ட உடன் அவைகளை பிரித்து இதில் கொஞ்சம் அதில் கொஞ்சம் எடுத்து அந்தக் கூட்டுறவு ஆலைக்கு கரும்பை அனுப்புகிறார்கள். அவர்கள் 213 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் தனியார் நடத்துகின்ற அந்த ஆலைகளில் அரசு நிர்ணயித்து இருக்கிற அந்த 185 ரூபாய் கொடுக்க மறுக்கிறார்கள். இந்த அரசு அதை கவனித்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த கரும்பு விவசாயிகளுக்கு முக்கியமாக அந்த 185 ரூபாய்க்கு குறையாமல் கிடைக்க நீங்கள் வழிவகை செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக இன்றையதினம் பத்திரிகையில் பார்த்தவை மக்களுக்கு பெரும் பீதியை ஏற்படுத்தும். கடலூரில் அரசு வேலை வாய்ப்பு நிறுவனத்தில் ஏற்பட்டு இருக்கிற தவறை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடலூர் என்னுடைய சட்டமன்ற தொகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே வேலைவாய்ப்பு நிறுவனத்திற்குப் போட்டியாக ஒரு வேலைவாய்ப்பு நிறுவனம் நடைபெற்று இருக்கிறது. விழுப்புரம் கல்வி மையத்திலிருந்து 6 ஆட்கள் தேவை என்று அந்த வேலை வாய்ப்பு நிறுவனத்திடம் கேட்டு இருக்கிறார்கள். அதற்கு ஒரு பெயரை மட்டும் அங்கிருந்து வந்ததன் காரணத்தால் அந்த கல்வி மையத்தின் டி.இ.ஓ. அவர்களுக்கு சந்தேகம் வந்து அந்த வேலை வாய்ப்பு நிறுவனத்திடம் கேட்ட நேரத்தில் இந்தக் குற்றச்சாட்டு தெரிய வந்திருக்கிறது. இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு மேலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் என்றால் ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பு நிறுவனத்தை நம்பியிருக்கிறார்கள். தங்களுக்கு அரசு மூலமாக வேலை பெற முடியும் என்று நம்பியிருக்கிற அந்த ஏழை எளிய மக்களுக்கு இந்தத் தவறுகள் தெரிய வருமானால் தங்களுக்கு வேலை வாய்ப்பு நிறுவனம் மூலம் வேலை கிடைக்காது என்ற சந்தேகமும் ஐயப்பாடும் ஏற்படும். ஆகவே அங்கே தவறு செய்து இருக்கிறவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். மேலும் இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வி. கோ. செல்லப்பா] [1985 மார்ச் 30

எங்களுடைய கடலூர் தொகுதியில் நான் வோட்டு கேட்க சென்ற நேரத்தில் பலயிடங்களில் நாங்கள் வோட்டு அளிக்க மாட்டோம் என்று கூறி அவர்கள் நோட்டீஸ் போஸ்ட்டர் எல்லாம் அடித்து இருந்தார்கள். ஏன் என்றால் இதுவரையில் அந்தத் தொகுதியில் இன்றும் நிலப்பரப்போடு தொடர்பு கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு பாலம் இல்லை. அங்கே கார்கள் செல்வதற்கு முடியவில்லை. ஏன் என்றால் அங்கே பால வசதி இல்லை. குறுக்கே ஆறு இருக்கிறது. மக்கள் அங்கே காரில் சென்று பார்க்க முடியவில்லை. அந்தத் தொகுதியில் உள்ள குண்டுஉப்பலவாடி, தாழங்குடா, நானபேடு போன்ற ஊர்களுக்கு மக்கள் நடந்து தான் செல்ல வேண்டும். கட்டை வண்டி கூட செல்வதற்கு லாயக்கு அற்ற முறையில் அவைகள் இருக்கின்றன. அங்கே ஒரு தரை பாலம் கூட இல்லை. தற்சமயம் அதை நீங்கள் அமைத்துத் தருவதற்கு முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய கடலூரிலே பழைய நகர் என்று இருக்கிறது—கடலூர் ஓ.டி. என்று இருக்கிறது. அங்கிருந்து அக்கரையான மறுபுறத்தில் ஒரு ஆறு இருக்கிறது, கடலும் இருக்கிறது. இப்படித் தண்ணீரால் சூழப்பட்ட அந்த இடம் ஒரு தீவுத் திடலாகத் தனியாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அங்கே யார் செல்ல வேண்டுமென்றாலும் போட்டில்தான் செல்ல வேண்டும். ஏனென்றால் அது அவ்வளவு ஆழமான பகுதியாகும். அங்கே பாலம் கட்டுவதற்காக 1975 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அது கட்டப் படாமல் நிறுத்தப்பட்டதற்கான காரணம் புரியவில்லை. இந்த அரசு ஏழைகளுக்கும், மீனவர்களுக்கும் நன்மை செய்கின்ற அரசாக இருப்பதால் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வேலைவாய்ப்பிற்காக 15 இலட்சம் பேர்களுக்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கான வேலை வாய்ப்பிற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தத் திட்டத்தையும் தெரிவிக்காமல் இருப்பதைக் கண்டு வேதனைப் படுகிறேன்.



1985 மார்ச் 30] [திரு. வி. கோ. செல்லப்பா]

கடலூர்ப் பெருநகரமானது ஒரு நகராட்சியாகும். அங்கே சரியான ரோடுகள் இல்லை. அங்குள்ள ஆணையாளரிடம், இவ்வாறு ரோடுகள் இல்லை என்று கேட்டால் அவர்கள் நிதி இல்லை என்று சொல்கிறார்கள். பெரிய பேக்டரிகளைப் பொறுத்தவரையில் சொல்வார்களே, சிக் பேக்டரி என்று, அதைப் போல, இந்த நகராட்சி சிக் நகராட்சியைப் போல இருக்கிறது. அந்த நகராட்சியில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. அங்குள்ள ஏழை எளிய மக்களுக்குக் குடிதண்ணீர் வசதிகூடச் செய்து கொடுக்க முடியாத நிலையில் அந்த நகராட்சி உள்ளது. என்னுடைய தொகுதியில் தண்ணீர் நிறையக் கிடைக்கும்; ஆனால் அதை உபயோகிக்க முடியாது. ஏனென்று கேட்டால், அது கடல் பகுதியாக இருப்பதால் அங்குள்ள தண்ணீர் உப்புக் கரிக்கிறது. ஆகவே, நல்ல தண்ணீரைக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்கள் மிகுதியாக வாழும் இடத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் பல நன்மைகளைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கிருக்கின்ற ஆசிரியப் பெருமக்கள் சம்பளம் பெறுவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு மாதம் கழித்துக் கூட சம்பளம் பெறுகின்ற அவல நிலைமை இருக்கிறது. இதனால் இளஞ்சிறார்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கின்ற அவர்கள் நிம்மதியாக வாழ முடியாததால் கல்வித் தரம் மிகவும் குறைந்து வருகிறது. எனவே, அரசாங்கம் இது குறித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மக்களுக்கு ரோடு வசதி, தண்ணீர் வசதி போன்றவைகளைச் செய்து, பாலம் கட்டித் தந்து, அதைச் சிறப்பானதொரு தொகுதியாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டமான தென்னார்க்காடு மாவட்டத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்த கூட்டணியாக 21 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டோம்; அந்த 21 சட்டமன்றத் தொகுதிகளிலேயும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். நம்மை

நம்பி அந்த மாவட்டத்து மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். எனவே, அந்த மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து, தொழில் முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து, அந்த மாவட்டத்திற்கு நல்ல வடிவம் கொடுப்பார்கள் என்று நம்பி இந்தக் கூட்டணிக்கு அந்த மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். எனவே, அந்த மாவட்டத்து மக்களுக்கு நல்லது செய்து தாருங்கள் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு நல்கிய அனைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், ஜெய்ஹிந்த்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : வணக்கத்துக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதித்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அறிஞர் பெருமக்களும், சான்றோர்களும் மிக்க அமைந்திருந்து ஆட்சி நடத்திய இந்த மாமன்றத்திலே சாமான்யமான என்னையும் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி அழகு பார்க்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய இதயங்கலந்த நன்றியினை முதலில் காணிக்கையாக ஆக்கிக் கொள்ளுகின்றேன்.

திராவிட இயக்கம் தொடங்கிய காலந்தொட்டு, அண்ணாவின் தம்பிகளை சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கிப் பார்க்க முடியாத அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இந்த முறை முதன் முதலாக என்னைத் தேர்ந்தெடுத்துள்ளது. அவ்வாறு தேர்ந்தெடுத்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய அம்பாசமுத்திரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் பல நல்ல திட்டங்கள் உள்ளன. முதலில், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியர்களுக்குச் சீருடை வழங்குதல், இலவச புத்தகங்கள் வழங்குதல் ஆகியவை உள்ளன.





(முற்பகல் 11-50)

ஆதி திராவிடர் நலனுக்காக 20 அம்சத் திட்டத்தின் கீழ் 125 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது. கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள் போன்றவர்களின் பாதுகாப்புத் திட்டத்திற்காக தமிழக அரசு அனுமதி அளித்திருக்கின்றது. எனது தொகுதியிலுள்ள சேர்வலாறு புனல் மின் திட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தொழிலாளர் நலனுக்காக பல திட்டங்கள் கூறப்பட்டுள்ளது. கிராம நகர பகுதிகளில் உள்ள மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது. இவ்வாறு பல நல்ல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே காண முடிகிறது. மேலும் பல நல்ல திட்டங்களைப் புரட்சித் தலைவர் அரசு செயலாற்ற இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியைப் பொறுத்தமட்டில் அது மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களும், ஆலைத் தொழிலாளர்களும், நெசவாளர்களும் அடங்கிய ஒரு தொகுதியாகும். இந்தத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்றது. ஆனால் எனது தொகுதியின் தேவைகள் மிக அதிகம். அவை அனைத்தும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசால் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று நான் உளமாற நம்புகிறேன்.

எனது தொகுதியில் பெண்களுக்கென்று ஒரு கல்லூரி வேண்டும். குற்றாலத்திலிருந்து புறப்பட்டால், பாளையங்கோட்டையில்தான் பெண்களுக்கான தனிக் கல்லூரி இருக்கின்றது. அதற்கு இடைப்பட்ட தொகுதியான அம்பாசமுத்திரம் தொகுதியில் பெண்களுக்கான கல்லூரி தனியாக இல்லை. அவ்வாறு ஒரு தனிக் கல்லூரி பெண்களுக்காக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எனது தொகுதியில் நிறைய கிராமங்களில் குடிதண்ணீர் இல்லாமல் இருக்கின்றது. குறிப்பாக வெள்ளங்குளி, மாதாபுரம், ஆசீர்வாதபுரம், வெள்ளிகுளம் ஆகிய கிராமங்களில் குடிநீர் இல்லை. எனது தொகுதியில் தாமிரபரணி ஆறு ஓடுகின்றது.

[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்] [1985 மார்ச் 30

இந்த ஆற்றிலிருந்து எனது தொகுதியிலுள்ள அலைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்கலாம். ஆனால் இந்த ஆண்டு கொடுக்கப்படவில்லை. இவைகள் எல்லாம் நிச்சயமாக வரக்கூடிய காலத்திலேயாவது கொடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன். அதேபோல் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கும் ஏறத்தாழ 94 தெருக்கள் விடுபட்டிருக்கின்றன. அவ்வாறு விடுபட்டுப் போன தெருக்களுக்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அதை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியில் போக்குவரத்து அதிகமாக இருக்கின்றது. ஆனால் சாலைகளை நீண்டகாலமாகச் செப்பனிடப்படாததன் காரணத்தால் பெருத்த சிரமங்கள் ஏற்படுகின்றன. உடனடியாக அந்தச் சாலைகளைப் பழுது பார்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசத்தையும், அகஸ்தியர் அருவியையும், மாவட்ட சுற்றுலா மையமாக அரசு அறிவித்துள்ளது. அங்கு பிரயாணிகள் தங்குவதற்காக சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா விடுதி கட்ட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடையம் வட்டாரத்தில் கடனாநதி அணைக்கட்டு ஒன்று இருக்கின்றது. அந்த அணையைக் கட்டும்போது பெரியதாகக் கட்ட வேண்டும் என்று திட்டம் போட்டார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அதைக் கட்டும்போது சிறியதாகக் கட்டியிருக்கிறார்கள். அதன் காரணத்தால் ஒரு வார மழை பெய்தாலும் கூட அந்த அணை நிரம்பிவிடும். மீதித் தண்ணீர் எல்லாம் ஆற்றிலே வீணாகப்போய் கடலிலே சேர்கின்றது. அந்த அணையை விரிவாக்குவதற்கான வாய்ப்புள்ளது. அந்த அணையையும் இராமநதி அணையையும் ஒன்றாக இணைக்க வேண்டும். அப்படி இணைத்தால் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு வராது. அப்படி இரண்டையும் ஒன்றாக இணைக்காவிட்டாலும் கூட கடனா நதி அணையை நிச்சயமாக விரிவுபடுத்த வாய்ப்பிருக்கின்றது. அவ்வாறு விரிவு



1985 மார்ச் 30] [திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

படுத்துவதன் மூலம் ஏறத்தாழ பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு மேலே பாசன வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விக்கிரமசிங்கபுரத்திற்கு மேற்கே செட்டிப்பணங்காட்டில் ஒரு சிறிய காட்டாறு இருக்கின்றது. அங்கே மழைக்காலங்களில் தண்ணீர் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும். அதன் காரணத்தால் சுற்றியுள்ள நிலங்களில் அரிப்பு ஏற்படுகிறது. எனவே அந்தப் பகுதியிலே சிறிய நீர்த்தேக்கத்தைக் கட்டினால் அந்தப் பகுதியில் உள்ள ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அதை உடனடியாக அரசு நிறைவேற்றித்தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கடையம் வட்டாரம் மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே பல சிறு தொழில்கள் நிறுவ அரசு முன் வரவேண்டும். குறிப்பாக, ஒரு தொழில் பேட்டையைக் கடையம் வட்டாரத்திலே நிறுவவேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் எனது தொகுதியில் எந்த வீடுகளும் கட்டப்படவில்லை. அரசு அலுவலர்களுக்கு எனது தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எனது தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்குக் கழிப்பிட வசதி செய்து தரவேண்டும். குறிப்பாக, விக்கிரமசிங்கபுரம் போன்ற ஜனநெருக்கம் உள்ள நகரங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கழிப்பிட வசதி உடனடியாக செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சிவந்திபுரம் கிராமத்தில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டும் அங்கு வீடுகளுக்கு கனெக்ஷன் கொடுக்காமல் அப்படியே உள்ளது. அதை உடனடியாக மறுபரிசீலனை செய்து, வீடுகளுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டம் மாற்றப்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமானாலும் தாமிரபரணி ஆற்றிலிருந்து பெற வாய்ப்பு உள்ளது. அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் எவ்வளவு தண்ணீர்

[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்] [1985 மார்ச் 30

வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, அந்தத் திட்டத்தை மாற்றி அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் அளவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து இல்லாத எல்லா கிராமங்களுக்கும் நகரப் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். விக்கிரமசிங்கபுரம், மணிமுத்தாறு சாலையில் தாமிரபரணி நதியின் மீது ஒரு பாலம் கட்டப்பட வேண்டும். ஆலைத் தொழிலாளர்கள் தற்போதுள்ள இரும்புப் பாலத்தின் வழியாக— சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்ட பாலத்தின் வழியாக—தான் போகிறார்கள். அது இப்பொழுது பழுதடைந் திருக்கிறது. அந்தப் பாலத்தின் மீது ஏறத்தாழ தினமும் 10,000 மக்கள் போகிறார்கள், வருகிறார்கள், நிறைய வாகனங்கள் செல்கின்றன. ஆகவே, அந்தப் பாலத்தை உடனடியாக மாற்றி, நல்ல பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சேர்வலாறு நீர் மின் திட்டத்தை சீக்கிரம் நிறை வேற்றப் போவதாக பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதையும் சீக்கிரம் முடித்துத் தர பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன்.

பாபநாசம் சுற்றியுள்ள காடுகளில் மரங்கள் கூடுமான வரையில் இன்னும் நிறைய நட வேண்டும். அவை தற்போது மரங்கள் இல்லாமல் பொட்டல் நிலமாகக் காட்சியளிக்கின்றன. அந்தக் காடுகளில் மரங்கள் நட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விக்கிரமசிங்கபுரம் ஏறத்தாழ 60,000 மக்கட் தொகை உள்ள நகரமாகும். அதிலே சிறிய மருத்துவ மனைதான் உள்ளது. அதை விரிவுபடுத்த வேண்டும். அதுபோல பொட்டல்புதூர் கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். வேறு எந்த விதமான பெரிய மருத்துவமனையும் இல்லை. அங்கு ஒரு மருத்துவமனை வேண்டும்.

அதேபோல், விக்கிரமசிங்கபுரத்தில் கால்நடை மருத்துவமனை இல்லை. எனது தொகுதியிலே நகரத்தில் மட்டும்தான் கால்நடை மருத்துவ மனை உள்ளது. ஆகவே, விக்கிரமசிங்கபுரம், ஆழ்வார்குறிச்சி, கடையம் போன்ற நகரங்களில் கால்நடை மருத்துவ மனை வேண்டும்.



1985 மார்ச் 30] [திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியின் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்தக் கட்டி டத்தைப் பழுது பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய நகரப் பஞ்சாயத்துக்கள் ஜன நெருக்கம் உள்ள பகுதி. அந்த நகர பஞ்சாயத்துக்களை நகராட்சிகளாக மாற்றக்கூடிய ஒரு திட்டம் முன்பு அரசு பரிசீலனையில் இருந்தது. அதை உடனடி யாக பரிசீலித்து இரண்டு பேரூராட்சிகளையும் நகராட்சிகளாக ஆக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணி வன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுக் கட்சி உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசும் பொழுது தொழிற்சாலைகள் அடைக்கப்பட்டுள்ளன என்று கூறி னார்கள். ஆனால், எனது தொகுதியிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகத்தில் சுமார் ரூ. 10 இலட்சத்துக்கு வரவு-செலவு நடத்தக்கூடிய கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்று உள்ளது. பண்டகசாலை ஊழியர்கள் நீண்ட காலத்திற்குப் பின் சம்பள உயர்வு கேட்டதற்காக அந்தப் பண்டகசாலையை மூடினார்கள். ஏறத்தாழ 85 நாட்களுக்குப் பிறகு அந்தப் பண்டகசாலை அரசுத் தலையீட்டின் பேரில் திறக்கப்பட்டுள்ளது. அந்தப் பண்டகசாலைக்கு ஏறத்தாழ 3 ஆண்டுக்காலம் நிர்வாகம் நடத்தத்தான் தொழிலாளர்கள் வாக்களித்தார்கள். ஆனால் 4½ ஆண்டுக் காலமாக அந்த நிர்வாகப் பொறுப்பிலே அவர்கள் இருக் கிறார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை. அது சம்பந்த மாக ஏதாவது உத்தரவு போடப்பட்டிருந்தாலும் கூடிய விரை விலே அந்தப் பண்டகசாலைக்குத் தேர்தலோ அல்லது தனி அதிகாரி மூலமாகவோ அந்த நிர்வாகத்தை நடத்த அரசு உத்தர விட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது.)

(நண்பகல் 12-00)

**திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த மதிப்பிற்குரிய பேரவையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். என்னை இந்தப் பேரவைக்கு தேர்ந் தெடுத்து அனுப்பிய என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதி

மக்களுக்கு இந்தப் பேரவையின் மூலம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களின் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வழி வந்த நான் இந்தப் பேரவையில் இந்த அளவிற்கு நாங்கள் 62 பேர்கள் வெற்றி பெற வாய்ப்பளித்த மாண்புமிகு இராஜீவ் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

1985-86 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலுள்ள முக்கிய அம்சங்களை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை குறிப்பிட விரும்புகிறேன். கம்போஸ்ட் உரங்கள் மீது வரி ரத்து செய்துள்ளதை நான் பாராட்டுகிறேன்.

1977 ஆம் ஆண்டில் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பழனி பாராளுமன்ற தொகுதியில் நின்று வெற்றி பெற்ற போது மேற்கு நோக்கி கேரளாவிற்கு செல்லும் மூணாறு திட்டத்தை நிறைவேற்றினால் திருமூர்த்தி அணைக்கும், அமராவதி அணைக்கும் நீர்வரத்து அதிகமாக கிடைக்கும்; இதனால் உடுமலை, தாராபுரம், பழனி, ஒட்டன்சத்திரம், மூலனூர், பல்லடம், அவிநாசி போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கப் பெற்று, சுமார் 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும்; மேலும், குடிதண்ணீர் வசதியும் ஏற்படும்; பல லட்ச மக்கள் பயனடைவார்கள்; வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும் என்று தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி இந்திரா அம்மையார் அவர்கள் பழனி கூட்டத்தில் தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதாக வாக்குறுதியும் கொடுத்தார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து மனு ஒன்றை மாண்புமிகு புரட்சித் தலைவரிடம் கொடுத்துள்ளேன். நம்முடைய மாண்புமிகு உப ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்களிடத்திலும் மகஜர் ஒன்றை இதற்காக கொடுத்திருக்கிறேன். கேரள அரசிடமும், மத்திய அரசிடமும் பேசி கலந்து இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுத்து மக்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான உடுமலைப்பேட்டையில் குடிதண்ணீர் கிடைக்க மானுப்பட்டி, பூலாங்கிணறு ஆகிய இரண்டு கூட்டு குடிநீர்த் திட்டம் வேலை ஆரம்பிக்கப்பட்டு ஒரு ஆண்டு



காலமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தில் விடுபட்ட பாக்கி கிராமங்களையும் சேர்த்து இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரும்படியாக கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் இந்தப் பணிகளை உடனடியாக முடித்து வறட்சிப் பகுதியாக இருக்கிற உடுமலைப்பேட்டைத் தொகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும்படியாக இந்த மகாசபையை கேட்டுக் கொள்கிறேன்.

திருமூர்த்தி மலையை சுற்றுலா மையமாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே என்னுடைய தொகுதியில் இரண்டு மந்திரிகள் இருந்தும்கூட இன்னும் பல திட்டங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. வல்லக்குண்டாபுரத்தில் தாய்-சேய் நல விடுதி பழுதடைந்திருக்கிறது. அதனை செப்பனிட்டுக் கொடுக்கும்படி கோருகிறேன். மடத்துக்குளம் பஞ்சாயத்து யூனியன் நடத்தி வரும் மடத்துக்குளம் தாய்-சேய் நல விடுதியை அரசே எடுத்து விரிவுபடுத்தித் தருமாறு கோருகிறேன். காரணம், 1967 ஆம் ஆண்டிற்கு முன்னால் நான் மடத்துக்குளம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தபோது கட்டியது அந்த தாய்-சேய் நல விடுதி. இப்போது ஜனத்தொகை அதிகமாகி இருக்கிறது. அங்கே மூன்று பேப்பர் மில்லும், ஒரு நூல் மில்லும் உள்ளன. ஆகவே மக்கள் தொகை அதிகமாகி இருப்பதால் அந்த தாய்-சேய் நல விடுதியை அரசாங்கமே எடுத்து அரசு மருத்துவ மனையாக கட்டித்தருமாறு இந்த மகாசபையின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கணியூரிலுள்ள பிரைமரி சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் குடியிருப்பு கட்டிடங்கள் அமைத்து சீராக நடைபெற ஏற்பாடு செய்ய கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தக் கட்டிடம் பழுதடைந்து சரியாகச் செயல்படாமல் இருக்கிறது. அதனை சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள ரோடுகளை செப்பனிட்டுத் தர கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக சின்னபொம்மன்சாலை, ஈடுக்கம்பாளையம், தேவனூர், பகார், வுண்டியார் போன்ற கிராமங்களுக்கு ரோடு வசதிகள் சரியாக இல்லை. ஆகவே இப்போன்ற கிராமங்களுக்கும் ரோடு வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அமராவதி பழைய ஆயக்கட்டில் உள்ள 12 வாய்க்கால்களைச் செப்பனிட்டுத் தரும்படியாக கேட்டுக் கொள்கிறேன். அதன் காரணமாக தண்ணீர் சுலபமாக வந்து பாசனம் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

அமராவதி புதுக்கால்வாய் பாசனப் பகுதியை கரும்பு அபிவிருத்தி பகுதியாக அறிவித்து அதற்கேற்ற முறையில் அமராவதி அணையில் இருந்து ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இரண்டு தண்ணீர் வீதமும் பாசன முறையை மாற்றி அமைத்து அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நல்ல முறையில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை உள்ளது. அது நலிவடைந்த நிலையில் உள்ளது. அது நலிவடைந்த நிலையில் ஆறு கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. காரணம் அமராவதி அணையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதால் அதிகம் கரும்பு பயிரிட முடியவில்லை. ஆகையால் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் மாதம் இருமுறை தண்ணீர் கொடுத்தால் பயிரிட முடியும். செப்டம்பரிலிருந்து ஐந்து மாதங்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கொடுத்தும் கடைசியில் மார்ச், ஏப்ரல் இரண்டு மாதங்களுக்கு மாதம் இருமுறை தண்ணீர் கொடுத்தும் உதவினால் தொழிலும் நல்ல முறையில் ஆறு மாதங்களுக்குமேல் ஓடும் என்பதை இந்த அவையில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

உடுமலைப் பகுதியிலுள்ள திருமூர்த்தி அணையை பாசனத்திற்குட்பட்ட திருமூர்த்தி அணை வாய்க்காலில் வருடம் நான்கு மாதங்கள் தண்ணீர் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, உடுமலை வாய்க்காலிலும் புலாங்கிணறு வாய்க்காலிலும் தண்ணீர் கொடுத்து உதவினால் சர்க்கரை ஆலைக்கு 5,000 ஏக்கர் கரும்பு உற்பத்தி செய்து, ஆலைக்குக் கொடுப்பதாக அக்ரிமென்ட் கொடுத்துள்ளார்கள். இந்தத் திட்டத்தை நல்லமுறையில் அரசாங்கம் நிறைவேற்றிக் கொடுத்தால் வருஷம் முழுவதும் வேலை கிடைக்கும். பத்து மாதங்கள் அந்த ஆலையும் நிற்காமல் ஓடும். ஆகையால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





உடுமலையில் தற்போது குடிதண்ணீர் சரியானபடி கிடைப்பதில்லை. கமிஷனரைக் கேட்டதால் திருமூர்த்தி மலை டேமில் இருந்து அடிஷனல் ஸ்கீம் ஒன்று தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதாகக் கூறினார். ஆகையால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து குடிதண்ணீர் பஞ்சத்தை போக்கும்படி இந்த சபையின்வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி புதுவாய்க்கால் பாசனத்திற்குட்பட்ட, 1966 ஆம் ஆண்டு திரு. இராமய்யா அவர்கள் பி.டபிள்யூ.டி. மினிஸ்டராக இருந்தபோது, வாய்க்காலில் காங்கிரீட் போட்டு உடுமலை தாராபுரம் இரண்டிலும் விட்டுப்போன நிலங்களை ஆயக்கட்டில் செலுத்தி தண்ணீர் கொடுத்துவிட்டு, இன்னும் கீழ்பகுதிக்கு தண்ணீர் கொடுப்பதாக ஒரு ஒப்பந்தம் செய்தும், 1966-லிருந்து 19 ஆண்டுகளாக காங்கிரீட் வேலை முடியவில்லை. ஆகையால் மேற்படி வேலையை சீக்கிரம் முடித்துவிட்டு, பிரிவு வாய்க்காலுக்கும் காங்கிரீட் போட்டு முடிக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி ஆயக்கட்டுப் பகுதிக்கு ஆகஸ்ட் மாதத்தில் கொடுக்க வேண்டிய தண்ணீரை அக்டோபர் மாதத்தில் கொடுத்து, விவசாயிகள் எல்லாம் கரும்பும் நெல்லும் பயிரிட்டதில் ஜனவரி மாதத்தில் 42 அடி தண்ணீர் அணையில் இருந்ததை இடைவிடாது கீழ்ப்பகுதிக்கு தண்ணீரை எடுத்துவிட்டதன் காரணமாக தண்ணீர் குறைவு ஏற்பட்டு, இரண்டு தண்ணீர் பற்றாக்குறையினால் நெல் பயிர்கள் கதிர்வாங்கிக் காய்த்துவிட்டபடியால், மேற்படி ஆயக்கட்டுப் பகுதிக்குட்பட்ட நிலங்களுக்கு தண்ணீர் தீர்வையை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சபையில் என்னை பேசுவதற்கு அனுமதித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் சபையின் உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கியதற்கு முதலில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னால் இந்த அளவுக்கு என்னை ஆளாக்கிய தமிழக முதல்வர், என் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர்

[திரு. ஆதிமூலம் என்கிற தில்லை.காந்தி] [1985 மார்ச் 30

அடுத்து எங்கள் பகுதியில், பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் அரியலூரில் அரசினர் கலைக் கல்லூரி இருந்துகொண்டிருக்கிறது. அது தொடங்கப்பட்டு 18 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இதுவரையில் அங்கே பட்ட மேற்படிப்பும், பி.காம்., பட்டப்படிப்பும் கொண்டுவரப்படவில்லை. மேலும் அக்கல்லூரியில் இடவசதி இல்லாமல் இருக்கின்றது. இந்தக் குறைகளை எல்லாம் நீக்குகின்ற வகையில் அந்தக் கல்லூரியில் பட்டமேற்படிப்புக்கும், பி.காம். பட்டப்படிப்பிற்கும் அனுமதி வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அது எங்கும் இருந்து கொண்டிருக்கின்ற பிரச்சினையாக இருக்கின்றது. புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அந்தக் குறையினைப் போக்குகின்ற வகையில் அதி தீவிரமான திட்டங்களை எல்லாம் தீட்டி இன்றைக்குச் செயல்படுத்தி வருகிறது. இருந்தாலும் கூட முழுமையாக அந்தக் குறையினைத் தீர்க்க முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக எங்களை எல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற தாய்மார்கள் அந்தக் குறைகளை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் தாய்மார்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில் மேன்மேலும் அந்தக் குடிநீர்த் திட்டங்களைத் தீட்டு கின்ற வகையில் அந்தத் திட்டங்கள் சீரோடும், சிறப்போடும் செயலாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இநத வாய்ப்பினை நல்கிய புரட்சித்தலைவர், பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி இந்த அளவில் அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஜெ. ராஜாபாபு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆசியாவின் ஜோதி பண்டித நேரு பெருமகனார் ஈன்றெடுத்த வீரப் புதல்வி, இந்திய மக்களின் இதயத் தலைவி இந்திரா காந்தி அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி புதிய பாரதத்தைப் படைக்கின்ற பொறுப்பேற்றிருக்கும் இளைய தலைமுறையின் தானைத் தலைவர் பிரதமர் ராஜீவ் காந்தியின் கமல பாதங்களுக்கு என் நன்றியினைச் செலுத்தி என் தொகுதி மக்களுக்கும் நன்றி தெரிவித்து, என் கன்னிப் பேச்சைப் பேச அனுமதித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன்.



1985 மார்ச் 30] [திரு. ஜெ. ராஜாபாபு]

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்து விட்டது. அண்மைக் காலமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாகி விட்டன. தவறு செய்வோர் முழுமையாகத் தண்டிக்கப்படாததன் விளைவாகத் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் சில தவறுகளுக்குத் துணைகளும் உடந்தையாக இருப்பதையும் பார்த்து அரசும் மௌனம் சாதிப்பதேன்.

கண்ணகி பிறந்த தமிழகம், கற்புக்குப் பெருமை பெற்ற தமிழகம், மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்டிருந்த தமிழகம் இன்றைக்குத் தலைகுனிந்து பல அப்பாவைப் பெண்களின் கற்பு சூறையாடப்பட்டும், பல பெண்களைப் பலவந்தப்படுத்தி வீடியோ மூலம் படமெடுத்து கற்பைக் காசாக்கு கின்ற சூழ்நிலையும் தமிழகத்தின் தலைநகரில் நடந்து கொண் டிருக்கின்றன. இச்செய்திகளை கடந்த வாரம் செய்தித்தாள் களில் பார்க்கும்போது வேதனையாக உள்ளது.

இந்தியாவிற்குப் பெருமை சேர்த்த தமிழகம் பல முதல்வர் களைக் கண்டாலும் இன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பேற் றிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர்மீது தமிழகத்து அனைத்து மக்களும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதிலும் குறிப்பாக இன்றைக்கு நாய்க்குடை முளைக்கின்ற சூழ்நிலையில் சட்டம், ஒழுங்கைப் பேணிக்காக்க முடியாமல் அவல நிலையில் இருப்பதை இந்த மாமன்றம் எண்ணிப் பார்க்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டம், ஒழுங்கை மீறுபவர்கள் யாராக இருந் தாலும், செல்வமும், அதிகாரமும் தவறுக்கு உடந்தையாக இருப் பதைத் தகர்த்து எறிந்து சட்டத்தையும், ஒழுங்கையும் பேணிக் காக்க காவல்துறை பொறுப்பேற்று இருக்கும் மாண்புமிகு முதல் வரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு தலைவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் கட்டப்பட்டு உள்ளன. மேலும் பல தலைவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் கட்டப்பட உள்ளன. இந்த வரவேற்புடன் பாரதத்தின் நலனுக்காக தன்னையே அர்ப்பணித்த அன்னை

[1985 ஜூன் 14

(4) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவுசெய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாகக் கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல், நேரடி சந்தா ஆகிய நிதிஉதவி களையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற் சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன் றுக்கு 11 சதவீதம் வட்டியும், ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப் படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப் படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீத மாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள், தங்கள் தொழில் பற்றிய முன் முதலிட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன்பண மாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

**இ. வளர்ச்சி மையங்கள்.**

| இணையத்தின் பெயர். | மார்ச் 1985 வரை முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மார்ச் 1985 வரை முன்னேற்றம். மூலதனச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) (ஏக்கர்.) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| இராணிப்பேட்டை .. .. | 729.78 | 1,58.88 |
| ஒசூர் .. .. .. | 233.86 | 3,54.14 |
| மானாமதுரை .. .. | 492.08 | 93.39 |



1985 ஜூன் 14]

| இணையத்தின் பெயர். | மார்ச் 1985 வரை முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மார்ச் 1985 வரை முன்னேற்றம். மூலதனச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) (ஏக்கர்.) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| புதுக்கோட்டை .. .. | 423.00 | 61.24 |
| கும்மிடிப்பூண்டி.. .. .. | 301.00 | 63.93 |
| கடலூர் .. .. .. | 463.00 | 1,05.52 |
| தூத்துக்குடி .. .. .. | .. | 12.24 |

இராணிப்பேட்டை :

அரசு 728.78 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இதில் ஒதுக்கப்படுவதற்கான பகுதி 93 மனைகளைக் கொண்ட 480.68 ஏக்கர். இதில் 478.38 ஏக்கர் கொண்ட 90 மனைகள் 73 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டது. இவற்றில் 54 நிறுவனங்கள் கட்டுமானப் பணி களை முடித்து உற்பத்தி துவக்கியுள்ளது. எஞ்சிய நிறுவனங்கள் தமது கட்டுமானப் பணியில் பல்வேறு நிலையில் உள்ளன. இந்தப் பகுதியில் உள்ள கடுமையான தேவையை நோக்கி கூடுதலாக 44 ஏக்கர்கள் ஏற்கெனவே இரண்டாவது பகுதி, முதல் பகுதியை யொட்டி அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்டது. 52 ஏக்கர்கள் இந்த இரண்டாவது இணையத்தில் ஒதுக்கப்பட்டது.

ஒசூர் :

தேசிய நெடுஞ்சாலை எண் 7 இன் இரு மருங்கிலும் ஒதுக்கப் படுவதற்காக வளர்ச்சி 1,235 ஏக்கர்கள் வளர்ச்சி செய்யப்பட்டது. விற்பனைக்குகந்த 938 ஏக்கர் பரப்பில் 825 ஏக்கர்கள் 110 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டது. இதில் 71 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத் தித் துவக்கியுள்ளன. எஞ்சிய 39 தொழில் நிறுவனங்கள்

டி2 A 165—25

6. தொழில் துறைச் செயலாளர், தொழில் வாணிபத்துறை இயக்குநர் ஆகியோரின் கீழ் "மாநில தொழில்நுட்பக் குழுக்கள்" செயல்பட்டு வருகின்றன. இவை தொழில் வல்லுநர்களின் உற்பத்தித் திட்டங்களுக்கு அரசின் கொள்கைகளுக்கும் விதி முறைகளுக்கும் ஏற்ப அனுமதி தருகின்றன. 81 இனங்களுக்கான அனுமதியை இக்குழுக்கள் தருகின்றன. 1984 டிசம்பர் முடிய இத்தகைய 161 அனுமதிகளை வழங்கியுள்ளன. சாதாரண தொலைக்காட்சி பெட்டிகள் செய்வதற்கான 19 அனுமதிகள் தரப்பட்டுள்ளன. (மொத்தம் 1,90,000 தொலைக்காட்சிப் பெட்டிகள்) இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலை மேலும் வளப்படுத்த பல முக்கியமான கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை:—

1. தொழில் தொடங்க அனைத்து வசதிகளும் கொண்ட அடிமனைகள் வழங்குவதற்காக பெருங்குடியில் அமைந்துள்ள தொழில் பேட்டையில் கொட்டகைகள் கட்டுதல்;

2. சென்னையை அடுத்து நந்தம்பாக்கத்தில் உபபொருட்கள் (ancillary) தயாரிக்கும் தொழிற் பேட்டை ஒன்றை நிறுவுதல்;

3. கக்களூரிலுள்ள மைய மின் சோதனை ஆய்வுக்கூடத்திலுள்ள சோதனை வசதிகளை நவீனப்படுத்துதல்;

4. கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு மையங்களை அமைத்தல்;

5. சென்னையில் கச்சாப் பொருள் கிடங்கு அமைத்தல்;

6. கோயம்புத்தூர் தொழிற்பேட்டையில் அனைவரும் பயன்படுத்தற்குரிய வசதிகளைக் கொண்ட மையம் அமைத்தல்;

7. திருச்சிராப்பள்ளி உற்பத்திப்பொருள் வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்;

8. "தகவல் வங்கி மற்றும் தகவல் மையத்தை" தரமுயர்த்தி நவீனப்படுத்துதல்;

9. மின்னணுவியல் உபபொருள்களையும் கருவிகளையும் உற்பத்தி செய்ய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்;



10. உயர்தர தொழில் நுட்பவியல் சார்ந்த உபபொருட்கள் மின்னணுவியல் அமைப்புக்கள், கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியை திட்டமிட்டு தயாரிக்க உதவுவதற்காக மிக நவீனமான முழுமையான மிக நுட்பம் வாய்ந்த மின் அணுவியல் பொருட்கள் "சோதனை மற்றும் உருவாக்க மையம்" ஒன்றை ஐக்கிய நாடுகள் சங்க உதவியுடன் அமைத்தல். (இதற்கு ஏற்கெனவே மைய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது).

## தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம்.

மின்னணுவியல் தொழில்களின் விரைந்த முறையான வளர்ச்சிக்கு அரசு முதன்மைதந்து வலியுறுத்தி வருகிறது. மின்னணுவியல் தொழில் வளர்ச்சியின் தரத்தையும் தன்மையையும் உயர்த்துவதுடன் குறைந்த முதலீட்டில் மிகுதியான வேலை வாய்ப்புக்களையும் தருகிறது. தமிழ் நாடு மின்னணுவியல் நிறுவனம் பொதுத்துறையில் பின்வரும் நான்கு உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அலுமினியம் மின்னாற்பகுப்பு உலைக்கலன்களை (capacitors) உற்பத்தி செய்யும் பிரிவு, ஓசூர்; மின்தொடர்பு சாதனங்கள் உற்பத்திப் பிரிவு, சென்னை, பயன்படுத்துவோர் தேவைக்குத் தக்கவாறு கருவிகளைத் திட்டமிட்டுத் தயாரிப்பதற்கான ஒப்பந்த வேலைப் பிரிவு ஒன்று (சென்னை அடையாறில்); எண்காட்டும் மின்னணுவியல் கடிகார உற்பத்திப் பிரிவு இன்ஸ்ட்ரானிக்ஸ் வளாகம், அடையாறு ஆகியவையே அந்நான்கு உற்பத்தித் திட்டங்களாகும். இவை போக சிறு தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை குறிப்பாக குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரங்கள்; நேரம் காட்டும் பிற கருவிகளை விற்பனை செய்யவும் இந்நிறுவனம் உதவி செய்து வருகிறது.

2. அரசும் தனியாரும் சேர்ந்து முதலீடு செய்யும் "கூட்டுத் துறை" தொழில் முயற்சிகள் 19-க்கு இந்நிறுவனம் ஒப்புதல் பெற்றுள்ளது. மின்னணுவியல் தொழிலின் அனைத்துப் பிரிவுகளும் இம் முயற்சிகளில் அடங்கும். ஏற்கனவே தொடங்கி உற்பத்தி நடைபெற்றுவரும் "கூட்டுத்துறை" முயற்சிகளில் பின்வருவனவும் அடங்கும்:— அதாவது மின்னணுவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்றுமதியைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டம் ஒன்று; "ரெசிஸ்டர்" உற்பத்தி மையம், மதுரை;

[1985 ஜூன் 14

தொலைக் காட்சிப்பெட்டி மற்றும் நுகர்வோர் மின்னணுவியல் திட்டம், சென்னை; மைக்ரோ பிராசஸர்களைக்கொண்டு அமைந்த நுண்கருவிகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகளைச் செய்யும் பிரிவு, மருத்துவ மின்னணுவியல் கருவிகள் தயாரிப்புச் சாலை ஆகியவை அடங்கும். ஒலி அலைகளுக்கான வடிகட்டும் கருவி; தொலைக் காட்சிப்பட குழாய்கள். . (Ferrits), தொழில் வாணிக தகவல் கருவிகள், வெப்பமூட்டும் கருவிகள், மின்சாரக் கட்டுப்பாட்டுக் கருவிகள், தொலைகாட்சி (Deflection), உப பாகங்கள், தொலை பேசிகளுக்கான கருவிகள், மின் ஓட்டங்காட்டும் பலகைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. மின்னணுவியல் அமைப்புப் பொறியியல் (Systems engineering) பிரிவு ஒன்றும் "கூட்டுத் துறையில்" அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகத் தொலை தொடர்புச் சாதனங்கள் பற்றிய அமைப்புத் திட்டங்கள் தயாரித்து பயன் பெறுபவர் உடனடியாகச் செயல்படுத்தக்கூடிய விதத்தில் அவ்வமைப்புத் திட்டங்கள் செயலில் நிறைவேற்றியும் தரக்கூடியதாக அப்பிரிவு அமையும் தனியார்த் துறை முதலீட்டுத் தொகைகளையும் வளர்ச்சிப்பணிக்கு ஈர்த்து தொழில் வளர்ச்சியை மேலும் தீவிரமாக்கும் நோக்கமுடன் "கூட்டு முயற்சிகளை" தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் தொடங்கியுள்ளது. இவற்றின் மூலம் தொழிலியல் அறிஞர்களே தொழில் நடத்துபவர்களாக ஆகி இம் மாநிலத்தின் தொழில் நடத்துபவர்களாக ஆகி இம் மாநிலத்தின் தொழில்களைப் பெருக்குவதுடன் மிக உயர்ந்த தொழில் நுட்பங்களை தமிழகத்தில் பரவலாக்க முடியும் என்பதே "கூட்டு முயற்சிக்" கொள்கைக்கு அடிப்படையாகும். வரும் பத்து ஆண்டுகளில் அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் சேர்த்து மொத்தம் ரூ. 200 கோடிக்கு மேல் முதலீடு செய்ய வகைசெய்ய முடியும் என்று தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் எதிர்பார்க்கிறது. 31—3—1984 உடன் முடிவடைந்த ஆண்டில் மிகக் குறைவான 35 இலட்சம் ரூபாய் மொத்தம் வருமான அளவில் இருந்த இந்த நிறுவனம் 31—3—1985 ஆம் ஆண்டில் ரூ. 3.5 கோடி மொத்த வருமானத்தை அடைந்துள்ளது. 1985-86-ல் ரூ. 15 கோடியை மிஞ்சும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் வளர்ச்சி வியக்கத்தக்கதாக இருக்கிறது என்பதற்கு இப்புள்ளி விவரங்களே சான்றாகும்.



1985 ஜூன் 14]

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.**

செய்தித்தாள் காகிதம் மட்டுமே இன்னமும் இந்தியாவில் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. சாதாரணமாக மென்மையான மரமும், யூகலிப்ட்ஸ் மரத்தின் பலதரப்பட்ட பட்டைகளும் செய்தித்தாள் காகிதம் தயாரிக்க பயன்படும் மூலப் பொருளாகும். ஆனால் இந்த மூலப் பொருட்கள் அதிக அளவில் கிடைக்காமையின் காரணமாக பெரிய அளவில் காகித ஆலை நிறுவுவதை தடுத்து வருகிறது. எனவே இந்த மூலப் பொருட்களுக்கு மாற்றான ஒரு மூலப் பொருளை செய்தித்தாள் காகிதம் தயாரிக்க பயன்படுத்த கண்டுபிடிப்பது ஒரு தேசிய பிரச்னையாக உருவாகியுள்ளது. கரும்புச் சக்கை இந்த சாதாரண மூலப் பொருட்களுக்குப் பதிலாக பயன்படுத்தப் படுவதற்குரிய எல்லா குணங்களையும் பெற்றுள்ளது. ஏராளமான அளவில் கரும்புச் சக்கை ஒவ்வொரு ஆண்டிலும் நாட்டில் தயாரிக்கப்படுகிறது. துர் அதிர்ஷ்டவசமாக தற்போது கிடைக்கும் கரும்புச் சக்கையில் பெரும்பகுதி சர்க்கரை ஆலைகளில் நீராவி தயாரிக்க பயன்படும் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

2. கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் காகிதம் போன்ற ஒரு முக்கியமான பொருளை தயாரிப்பது என்பது, உலகில் வேறெங்கும் கிடைக்கக்கூடிய அனுபவத்தை கொண்டு செயல்படும் வளரும் நாடுகளுக்குண்டான ஒரு மாற்றான வாய்ப்பாகும். வளரும் நாடுகளில் இந்தியா இந்த புதிய தொழில் நுட்பத்தை வளர்ப்பதில் நல்ல அமைப்பில் உள்ளது. கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுதுதாள் காகிதம் தயாரிக்கும் ஒரு ஆலையை நிறுவும் திட்டம் தீட்டும் வேலை மேற்கொள்ளப் பட்டது. மத்திய அரசின் தீவிரமான ஒத்துழைப்பு மற்றும் அறிவுரைகளுடனும், நாட்டிலேயே முதன்முதலாக நிறுவப்படவுள்ள இந்த ஆலையின் மிகப் பெரிய அளவையும் அதற்காகும் பணச் செலவையும் கருத்திற்கொண்டு, தமிழக அரசு 1978-79-ல் கரும்புச் சக்கையை மூல பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுதும் காகிதம் தயாரிக்கும் ஒரு ஆலையை நிறுவும் பணியை மேற்கொண்டது. இந்தத் திட்டம், தற்போதுள்ள செய்தித்தாள் மற்றும் எழுது காகிதம் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், அதிக அளவில் கிடைக்கக்கூடிய கரும்புச்

[1985 ஜூன் 14

சக்கையை பயன்படுத்துதல் ஆகிய இரண்டு முக்கி நோக்கங்களையும் கருத்தில் கொண்டு தீட்டப்பட்டது. இந்த காரணங்களுக்காகவே தமிழக அரசு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை துவக்கியது. இந்த நிறுவனம் 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி பதிவு செய்யப்பட்டது, மற்றும் பணியை 1979-ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் தேதி துவக்கியது. ஆண்டொன்றுக்கு 50,000 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன்கள் அச்சிடும் மற்றும் எழுதும் காகிதமும், தயாரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்விரண்டு பொருட்களும் முடிவுபெற்ற நிலையில் 75 சதவீதத்துக்கு குறையாமல் கரும்புச் சக்கையை உள்ளடக்கியிருக்கும். இந்த ஆலை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கும். திருச்சி மாவட்டத்தில் புகளூர் பகுதியில் நிறுவப்பட்டு வருகிறது.

3. இத் திட்டத்திற்கான பணம், பங்கு முதலீடு மற்றும் தவணைக் கடன்களாகவும் நிதிநிறுவனங்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் பெறப்படுகிறது. தமிழக அரசும், சர்க்கரை ஆலைகளும் ரூ. 34 கோடியை மூலதனமாக அளிக்க வேண்டும். நிதி நிறுவனங்களும் மற்றவர்களும் ரூ. 31.00 கோடியை அளிக்க வேண்டும். 1985 மார்ச் மாதம் வரை டி. என். பி. எல். ரூ. 64.05 கோடி பங்கு மூலதனத்தின் முன்பணமாகவும் சேகரித்துள்ளது. இந் நிறுவனம் ஐ.டி.பி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ., ஐ.எப்.சி.ஐ. மற்றும் வங்கிகளிடமிருந்தும் ரூ. 125 கோடியை கடனாக பெற்றுள்ளது. இத்துடன் ரூ. 14.50 கோடியை மத்திய மாநில அரசு மூலமாக இந் நிறுவனத்திற்கு சுலபக் கடனாக அளித்துள்ளது. இந்த தொகை முழுவதும் மாநில அரசிடமிருந்து இந்நிறுவனம் பெற்றுக் கொண்டு விட்டது.

இத்திட்டத்தின் முன்னோடியான விசேஷத் தன்மையின் காரணமாகவும், உலகிலேயே முதன்மையாக கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கக் கூடிய இவ்வாலை திட்டத்திற்கு உலக வங்கி 100 மில்லியன் டாலர் பண உதவி அளித்துள்ளது. ஐ.டி.பி.ஐ. நிறுவனத்தின் மூலமாக உலக வங்கி 22.5 மில்லியன் டாலர்களை பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது.



1985 ஜூன் 14]

இத்திட்டத்தில் கட்டுமான வேலைகள் 95 சதவீதமும், இயந்திரங்கள் நிறுவுவதில் 95 சதவீதமும் மொத்தத்தில் 80 சதவீத நிர்மாண வேலைகளும் முடிந்துள்ளன.

இந்த ஆலை ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட மரக்கூழைக் கொண்டு உற்பத்தியை துவங்கியுள்ளது. 1984-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 2,000 டன்கள் செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு பலதரப்பட்ட செய்தித்தாள் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக கரும்புச் சக்கையிலிருந்து தரமான கூழ் தயாரிப்பது, இந்த நிதியாண்டின் இறுதிக்குள் செயல்படுத்தப்படும்.

இந்நிறுவனத்தின் மேல்நிலை அதிகாரிகளையும் சேர்த்து சுமார் 850 பேர் பணியாற்றுகின்றனர். நேரடியாக 1,200 பேர்களுக்கும், மறைமுகமாக 5,000 பேர்களுக்கும் வேலை வாய்ப்பளிப்பது இத்திட்டத்தின் இலக்காகும்.

இத்திட்டத்தின் வெற்றிகரமான செயல்படுத்தும் திறன், நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும். தனித்தன்மை வாய்ந்த இத்திட்டம் இந்தியாவின் மற்ற கரும்பு விளையும் மாநிலங்களில் மட்டுமல்லாது, உலகின் இதர தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இதுபோன்ற ஆலைகளை ஏற்படுத்த முன்னோடியாகும்.

ஆண்டொன்றுக்கு 8 சதவீதம் அதிகரித்து வரும் செய்தித்தாள் காகித இறக்குமதியை குறைப்பதன் மூலம், இந்நிறுவனம் நாட்டில் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடிக்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும். அத்துடன் செய்தித்தாள் காகிதத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையேயுள்ள இடைவெளியை குறைக்கும்.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் நிறுவப்பட்டு, 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம்,

ரூ. 130 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருள்கள் தயாரிப்பது ஆகும்.

### மாரியூர்—வாலிநோக்கம் உப்புத் திட்டம்.

இத்திட்டம் 1975 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு, 1976 ஆம் ஆண்டு முதல் மேம்பாட்டுப் பணிகளோடு உற்பத்தியும் தொடங்கியது. வேறு எந்த தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந்துள்ளதுமான இத்திட்டம், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் பின்தங்கிய பகுதியை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் 1984-ஆம் ஆண்டு இரசாயன தொழிற்சாலைக்குத் தகுந்த தரமான 31,100 டன்கள் உப்பு உற்பத்தி செய்தது. ஏப்ரல் 1984 வரை மழையிருந்ததால் ஜனவரி 1984-ல் ஆரம்பிக்க வேண்டிய உற்பத்தியானது மே 1984-ல் ஆரம்பிக்கப்பட்டு மே 1984 இறுதியில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் இரசாயன தொழிற்சாலைக்கு தேவையான உப்பு விற்பனை கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது எதிர்பாராத மழையின் காரணமாக உணவு/தொழிற்சாலைக்கு உகந்த உப்பின் தேவையானது கடந்த ஜனவரி முதல் மே 1984 வரை அதிகரித்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேங்கியிருந்த உப்பின் பெரும்பகுதியை இந்நிறுவனம் விற்பனை செய்தது. இப்பொழுது தூத்துக்குடி அல்காலி கெமிகல்ஸ் (T.A.C. Ltd.), திருவாங்கூர் கொச்சின் கெமிகல்ஸ் (T.T.C. Ltd) ) மற்றும் கோத்தாரி இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் (Kothari) ) ஆகிய நிறுவனங்களிலிருந்து தொடர்ந்து உப்பு வேண்டி விண்ணப்பம் வந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு உப்பு விற்பனைச் செய்யப்பட்ட 12,116 டன்களை ஒப்பிடும் பொழுது இவ்வாண்டு 6—12—1984 வரை 40,035 டன் உப்பு விற்பனைச் செய்யப்பட்டுள்ளது.



இந்நிறுவனத்தின் விடா முயற்சியினால் தமிழகத் திட்டக் குழு ரூ. 75 இலட்சம் செலவில் வாலிநோக்கத்தில் ஒரு சிறிய துறைமுகம் அமைக்க அனுமதி அளித்துள்ளது. மாநில துறைமுகத் துறை, சிறிய துறைமுகம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்துறைமுகம் செயல்பட்டால் மாரியூர் வாலிநோக்கத்தில் தயாரிக்கப்படும் உப்பை மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் இதர இடங்களுக்கு ஏற்றுமதி செய்து உப்பு விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

1985ஆம் ஆண்டில் இத்திட்டம் இரசாயன தொழிற்சாலைக்குத் தகுந்த சுமார் 60,000 டன் உப்பை உற்பத்தி செய்யும். ரூ. 15 இலட்சம் செலவில் அலுவலர் குடியிருப்பு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் உப்பளத்திற்குள் வாகனங்கள் செல்லுவதற்காக சாலையை மேம்படுத்துதல், தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியை விரிவு படுத்துதல் மற்றும் குறைந்த அழுத்த மின் வசதியை உப்பளத்தில் உள்ள மின்சார பம்புகளுக்குப் பெற்றுத் தருதல் போன்ற வேலைகள் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக சுமார் 10 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 800 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்படுவதுடன் உப்பைக் கொண்டு செல்லுவதற்கான பணிகள் மூலம் சார்பு வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

### சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம்.

1979 ஆம் ஆண்டில் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது. இவ்வாண்டில் (1984) இத்திட்டத்தில் பாத்தி அமைத்தல் போன்ற உப்பு உற்பத்தி வேலைகளை 1984 ஏப்ரலில்தான் தொடங்க முடிந்தது மே 1984-ல் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. உப்பு உற்பத்திக்கு உகந்த காலமான ஜூலை 1984-ல் இடையிடையே ஏற்பட்ட மழையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டதால் இத்திட்டத்தில் எஞ்சியுள்ள கால நிலையை பயன்படுத்தி 3,111 டன் மட்டுமே உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

[1985 ஜூன் 14

பெறும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறிய, நடுத்தர, மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறும். இது 1981-ம் ஆண்டு அக்டோபர் 3-ம் நாள் அமுலுக்கு வந்தது. 1984—85 (மார்ச் 1985) ஆண்டுகளுக்காக ஒப்புதல் அளிக்கவும், வழங்கவும் குறிக்கப்பட்ட குறியீடுகள் ரூபாய் 100 இலட்சமாகும். இதில் முறையே ரூபாய் 3,38.46 இலட்சமும், ரூபாய் 1,79.99 இலட்சமும் நடைமுறையில் கொண்டுவரப்பட்டது.

**(2) குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியத் திட்டம்.**

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானியத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு மற்றும் மோட்டார் வாகன உபரி தொழில்கள் மேலும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கருவிகளை தயாரிக்கும் பிரிவுகளுக்கும், சூரிய சக்தி கருவிகளையும், குறிப்பிடப்பட்டுள்ள புதுப்பிக்கும் சக்தியைக் கொண்டு இயங்கும் கருவிகளையும் பயன்படுத்தும் பிரிவுகளுக்கும் இந்த மானியம் அளிக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட தொழில்கள் மத்திய மற்றும் மானிய திட்டத்தின் கீழ்வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூ. 20,000 அல்லது ரூ. 10 இலட்சம் ரூபாய் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதைப் பெறலாம். இத்திட்டம் பாரதத்தின் எந்தப் பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1981-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ம் நாள் முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.



1985 ஜூன் 14]

**நேரடி நிதி உதவி.**

**(1) தவணைக் கடன்.**—கடந்த பதிமூன்று ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணைகளில் காணலாம்.

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடியாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1973–73 .. | 108.50 | .. | 1,08.50 | 26.11 |
| 1973–74 .. | 197.89 | 7.55 | 1,90.34 | 33.90 |
| 1974–75 .. | 1,91.28 | 7,99 | 1,83.29 | 1,17.61 |
| 1975–76 .. | 27.08 | 7.25 | 19.83 | 1,62.87 |
| 1976–77 .. | 1,40.75 | 47.25 | 92.50 | 82.15 |
| 1977–78 .. | 3,40.55 | 69.48 | 2,71.07 | 1,23.82 |
| 1978–79 .. | 2,33.96 | 10.00 | 2,23.96 | 1,41.85 |
| 1979–80 .. | 5,80.50 | 12.74 | 5.67.76 | 2,96.61 |
| 1980–81 .. | 19,58.10 | 27,86 | 19,30.24 | 7,86.52 |
| 1981–82 .. | 18,99.05 | 2,25.01 | 16,74.04 | 14,05.86 |
| 1982–83 .. | 30,36,91 | 4,76.20 | 25,60.71 | 15,75.93 |
| 1983–84 .. | 38,48.95 | 5,36.91 | 38,12.04 | 19,33.70 |
| 1984–85 .. (மார்ச் 1985 வரை.) | 46,38.45 | 2,61.32 | 43,77.13 | 29,82.81 |
| | 1,67,77.97 | 16,89.56 | 1,59,30,41 | 96,69,74 |

மேற்கண்ட அட்டவணையை நோக்குங்கால் 1980—81 இல் இருந்தே மொத்தம் ஒப்புதல் அளிக்கப்பட்டது, 1979—80-ம் ஆண்டு நிலையை நோக்குங்கால் வெகுவாக உயர்வடைந்துள்ளது.

பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. தொழில் முனைவோரின் தேவையைக் கருதியும், சமூகத் தேவைகளைக் கருதியும் 508 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மானாமதுரை :**

மதுரையிலிருந்து 45 கி. மீட்டர் தூரத்திலுள்ள மானாமதுரை தொழில் இணையம் தண்ணீரைச் சார்ந்து அமையாத பொதுவான தொழில்களுக்காக அமைக்கப்பட்டது. தொழில் முனைவோர்க்கு வழங்குவதற்கு சாலைகள், உணவு விடுதி, சினிமா, கடைகள், குடியிருப்புகள் போன்ற வசதிகள் கொண்ட 492 ஏக்கர் நிலம் வளர்ச்சி செய்யப்பட்டுள்ளது. விற்பனைக்குகந்த 363 ஏக்கரில் 86.67 ஏக்கர் நிலப்பரப்புள்ள 30 மனைகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டது.

**புதுக்கோட்டை :**

பிற்பட்ட பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முனைப்படுத்தப்பட்ட தொழில் இணையங்களை அமைக்க வேண்டும் என்ற இந்திய அரசின் கொள்கைக்கேற்ப முனைப்படுத்தப்பட்ட மின் அணு இணையத்தை மேன்மேலும் தொழில் வளர்ச்சிக்காக புதுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இதற்கான முன் அளவை செய்யப்பட்டு அனுப்பப்பட்ட அறிக்கை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இது மின் அணு தொழில்களுக்கும் மின் பொறியியல் தொழில்களுக்கும் மிகவும் பொருத்தமாக அமைகிறது. 438 ஏக்கர்களை ஏற்கெனவே சிப்காட் தன்வசம் எடுத்துக் கொண்டது. மேலும் 167 ஏக்கர் நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு நிறுவனங்களுக்கு மேல் மொத்தம் 120 ஏக்கர் நிலத்தை ஒதுக்கும்படி மனு செய்துள்ளனர். இதில் 8 நிறுவனங்களுக்கு 40 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

**கடலூர் :**

கடலூரிலிருந்து 7 கி. மீட்டர் தொலைவிலுள்ள இந்தத் தொழில் இணையம், தென்னாற்காடு மாவட்ட தலைமையிடமான கிழக்குப் பகுதியில் கடலூர்—சிதம்பரம் சாலையில் அமைந்துள்ளது. இதற்கு அருகான விமான நிலையம் 200 கி. மீட்டர் தொலைவிலுள்ள மீனம்பாக்கம் விமான நிலையமாகும். அடிப்



படையாக மின்சாரத்தையும், நீரையும் சார்ந்து அமையும் இராசாயன மற்றும் முறைப்படுத்தும் தொழில்களுக்காக இவ்விணையம் அமைக்கப்பட்டது. இவ்விணையம் தற்போது 443.12 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. மேலும் 100 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 310.43 ஏக்கரில் அமைந்துள்ள 43 மனைகளில், 10 நிறுவனங்களுக்கு 13 மனைகளிலான 140.25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பல்வேறு தொழில் முனைவோரிடமிருந்து 31 மனுக்கள் வந்துள்ளன.

**கும்மிடிப்பூண்டி :**

சென்னையிலிருந்து 45 கி. மீட்டர் தொலைவில் சென்னை—நெல்லூர் நெடுஞ்சாலையில் சென்னை—கல்கத்தா அகல இரயில் பாதையையொட்டி சிப்காட்டின் கும்மிடிப்பூண்டி தொழில் இணையம் அமைந்துள்ளது. வாகன உபரிகள் உற்பத்தி தொழில்களுக்கும், பொறியியல் தொழில்களுக்கும் பெரிதும் அனுகூலமான அடிப்படையாக இவ்விணையம் அமைகிறது. நிலக் கையகப்படுத்தும் விதிகளில் உள்ள அவசரப் பிரிவின்கீழ் 804 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த அறிவிக்கப்பட்டு, இதில் 315 ஏக்கர் நிலம் இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டது. 70 நிறுவனங்களுக்கு 209.19 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 55 நிறுவனங்கள் நிலத்தை தம் கைவசம் எடுத்து அதில் 4 நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தியை துவங்கியுள்ளன. 32 நிறுவனங்கள் கட்டுமானப் பணியில் பல்வேறு நிலைகளில் உள்ளன. நிலம் கோரி மேன்மேலும் விசாரணைகள் வந்த வண்ணம் உள்ளது.

**தூத்துக்குடி :**

தூத்துக்குடியில் தொழில் இணையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது. நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றமடைந்து வருகிறது.

**பொது :**

கீழ்க்கண்ட மாவட்டங்களில் தொழில் இணையங்கள் அமைப்பதற்கான பரிந்துரைகளை அரசு ஏற்று உத்தரவிட்டுள்ளது :—

1. மதுரை.
2. தஞ்சாவூர்.
3. மேற்கு இராமநாதபுரம்.
4. திருச்சிராப்பள்ளி.
5. பெரியார்.
6. சேலம்.
7. கோயம்புத்தூர்.
8. கன்னியாகுமரி.
9. நீலகிரி.
10. தர்மபுரி.
11. வட ஆற்காடு.

**அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கான குழு :**

அயல்நாடுகளில் வசிக்கும் அல்லது பணிபுரியும் இந்தியர்கள் தமிழக தொழில்களில் மூலதனமிட ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அயல்நாடுகளில் வசிக்கும் தனி நபர்களும், ஸ்தாபனங்களும் இது தொடர்பாக தொடர்பு கொள்ளப்பட்டனர். இதுவரை அயல்நாடுகளிலுள்ள இந்தியர்களிடமிருந்து, முக்கியமாக அமெரிக்கா, கடைசி மேற்றிசை நாடுகளிலுள்ளவர்களிடமிருந்து 649 விசாரணைகள் வரப்பெற்றுள்ளது. அயல்நாடுகளில் வசிக்கும் இவர்களோடு தொடர்ச்சியாக தொடர்பு கொள்ள வழி வகுக்கப்பட்டுள்ளது. இதுவரை 9 திட்டங்கள் ரூபாய் 586 இலட்சம் திட்டச் செலவில் செயலாக்கப்பட்டுள்ளன. மேலும் ரூபாய் 787 இலட்சத்திலான 11 திட்டங்கள் செயலாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் :**

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் முகமைப் பொறுப்பை சிப்காட்டிடம் தமிழக அரசு ஒப்படைத்தது. தாம்பரம் எலும்புறுக்கி நோய் மருத்துவமனையின் பின்புறம் 228 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இதில் 93 ஏக்கர் நிலம் இக்கேந்திரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 298.64 ஏக்கர் நிலத்தை இக்கேந்திரத்தின் இரண்டாவது நிலைக்குக் கையகப்படுத்த பணிகள் முன்னேற்றமடைந்து வருகிறது.



இம்மண்டலம் அமைப்பதற்கான முதல்கட்ட கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இம்மண்டலத்தைச் சுற்றிலும் 4 கி.மீ. எல்லைச் சுவர்கட்டுதல் மற்றும் சாலை அமைக்கும் பணி தமிழ்நாடு கட்டுமான கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அதனை நிறைவேற்றும் பணி நடைபெற்று வருகிறது.

நிலையுறு வரைவில் கட்டப்படும் தொழிற்சாலையின் கட்டிடப் பணி தேசீய கட்டிட கட்டுமான கழகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் நிர்வாக கட்டிடம் கட்டும் பணியை விரைவில் துவங்க உள்ளார்கள். ஏற்கனவே 19 மனைகள் வகுக்கப்பட்டு சிறந்த தொழில் முனைவோர்க்கு பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட தயாராயுள்ளது. மேன்மேலும் மனைகள் பகுக்கப்படும் பணி முன்னேற்றமடைந்து வருகிறது. சில நாட்களுக்குமுன் இதுகுறித்த சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் ஒப்புதல் அளிக்கும் குழுவினரால் அணு, இரசாயணம், தரமான பாத்திரங்கள், நகைகள் போன்ற தொழில்களுக்கான 26 மனுக்கள் ஒப்புதல் பெற்றன. அவைகளுக்கு விரைவில் மனை ஒதுக்கப்படும்.

**பணியின் முடிவுகள்.**

1983—84 ஆம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும், தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 1,24,42 இலட்சம். 1982—83 ஆம் ஆண்டு இலாபம் 104.39 இலட்சமாகும்.

**இணைப்பு இரண்டில்.**

திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விபரங்கள்.

1. 1983—84 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1984—85, 1985—86-ஆம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்ட குறியீடுகள்.

**வேலைவாய்ப்பு.**

1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிய சுமார் 83,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 14

இதுவரை ஏற்படுத்திய வேலைவாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டுவாரியாக :—

| ஆண்டு. | வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| 1981–82 .. .. | 5,700 |
| 1982–83 .. .. | 9,000 |
| 1983–84 .. .. | 9,000 |
| 1984–85 .. .. (மார்ச் 1985 வரை). | 10,000 |

## இணைப்பு I.

மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம் 1971.
அ. ஒப்புதல் (மொத்தம்).

| ஆண்டு. | பெரிய மற்றும் நடுத்தர தொழில். | |
| --- | --- | --- |
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 154 | 9,78.89 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 46 | 2,84.04 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 52 | 3,33.72 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 69 | 5,28.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 46 | 2,89.98 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 103 | 7,40.69 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 47 | 3,58.49 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை. | 38 | 3,19.96 |
| பிப்ரவரி 1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை. | 555 | 38,34.19 |



1985 ஜூன் 14]

| ஆண்டு. | சிறு தொழில்கள் | |
| --- | --- | --- |
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 749 | 1,79.47 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 181 | 62.85 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 406 | 78.86 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 637 | 2,18.26 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 544 | 2,13.38 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 2,369 | 8,95.76 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 560 | 228.46 |
| ஏப்ரல் 1984 முதல் 31 டிசம்பர் 1984 வரை. | 456 | 1,56.21 |
| 31–12–1984 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை. | 5,902 | 20,33.25 |

| ஆண்டு. | மொத்தத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | |
| --- | --- | --- |
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 903 | 11,53.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 227 | 3,46.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 458 | 4,12.58 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 706 | 7,46.68 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 590 | 5,03.36 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 2,472 | 16,36.45 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 607 | 5,86.95 |
| ஏப்ரல் 1984 முதல் 31 மார்ச் 1985 வரை. | 494 | 4,76.17 |
| 31–3–1985* வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை. | 6,457 | 58,67.44 |

*சிறு தொழில்கள் 31–12–1984 வரை.

[1985 ஜூன் 14

ஆ. வழங்குதல்.

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | சிறு தொழில்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1978 மார்ச் 31 வரை .. | 6,18.43 | 1,51.62 | 7,70·05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. | 1,76.03<br>2.24 | 30.09 | 2,06.12<br>2.24 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. | 2,32.26 | 41.78 | 2,74.04 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை .. | 3,19.09 | 1,09.33 | 4,28.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை .. | 3,07.50 | 1,55.64 | 4,63.14 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. .. | 3,60.77 | 1,08.13 | 4,63.90 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை .. | 4,26.40 | 3,61.96 | 7,88.36 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை .. | *3,87.22 | **2,44.99 | @32.12 |
| 1985 மார்ச் வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத்தொகை .. | 28,29.94 | 12,03.51 | @40,33.45 |

*தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மட்டும்.

**சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும்.

@டிசம்பர் 1984 வரை.



1985 ஜூன் 14]

இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட். | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2). | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 4,48.30 | 6,15.59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 1,61.51 | 2,29.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 1,25.54 | 1,65.57 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 3,01.91 | 4,25.35 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 2,15.52 | 3,76.94 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 1,92.23 | 2,89.99 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 5,01.97 | 8,16.42 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை. | 3,82.17 | 9,24.20 |
| 31-3-1985 வரையான மொத்த் தொகை. | 23,29.15 | 38,43.69 |

## இணைப்பு 2.

1983–84 மற்றும் 1984–85ஆம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள்—1983–84 மற்றும் 1984–85 ஆண்டுகளுக்கான திட்டங்களின் குறியீடுகள்.

| விவரம். | 1983–84 முன்னேற்ற விவரம். | 1983–84 வரவு செலவு திட்ட மதிப்பீடு. | 1984–85-ல் செயலாக்கப்பட்டது. | 1984–85, 1985–86-க்கான செயல் இலக்கு. 1984–85. | 1985–86. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பகுதிக் கடன்— | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 3,848.95 | 3,500.00 | 4,638.45 | 3,800.00 | 4,000.00 |
| வழங்குதல் .. .. .. | 1,933.70 | 2,200.00 | 2,982.81 | 2,800.00 | 3,200.00 |
| முக்கிய மூலதனத் திட்டம்— | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 86.20 | 1,20.00 | 1,84.40 | 1,50.00 | 2,00.00 |
| வழங்குதல் .. .. .. | 93.38 | 1,00.00 | 1,30.33 | 1,50.00 | 1,50.00 |
| வட்டியில்லா விற்பனை வரிக் கடன்— | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 4,70.51 | 3,00.00 | 4,94.92 | 3,75.00 | 3,75.00 |
| வழங்குதல் .. .. .. | 4,26.99 | 3,00.00 | 4,92.74 | 3,75.00 | 3,75.00 |



| விவரம். | 1983–84 முன்னேற்ற விவரம். | 1983–84 வரவு செலவு. திட்ட மதிப்பீடு. | 1984–85-ல் செயலாக்கப்பட்டது. | 1984–85, 1985-86-லான செயல் இலக்கு. 1984–85 | 1985–86. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மத்திய உதவி (சிப்காட்) தனியாக மானியம்— | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 3,58.49 | 2,50.00 | 3,19.97 | 3,50.00 | 3,50.00 |
| வழங்குதல் .. .. .. | 4.26.00 | 2,50.00 | 3,87.22 | 3,50.00 | 3,50.00 |
| திரும்பப் பெறுவது .. .. | 5,01.97 | 2,50.00 | 3,82.71 | 3,50,00 | 3,50.00 |
| உத்திரவாதமளித்தல் நேரடிச் சந்தா— | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 18.50 | 25.00 | 56.40 | 25.00 | 50.00 |
| வழங்குதல் .. .. .. | 15.67 | 25.00 | 7.65 | 25.00 | 50.00 |
| மாநில உதவி (மானியம்)— | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 1,83.11 | 1,00.00 | 3,38.46 | 1,00.00 | 200.00 |
| வழங்குதல் .. .. .. | 67.52 | 1,00.00 | 1,79.99 | 1,00.00 | 1,00.00 |

[1985 ஜூன் 14

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

### 1. நோக்கங்களும் அலுவல்களும் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டிக்) மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் முதன்மையான நிறுவனமாகச் செயல் பட்டு வருவதோடு, 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவிக் கழகச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரி நிர்வாகத்திலும் உள்ள சிறிய நடுத்தர, தொழில்களின் மேம்பாட்டுக்கும் அவற்றின் விரைவான வளர்ச்சிக்கும் நிதியுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

2. நிலம், கட்டிடம், தளவாடம், இயந்திரச் சாதனம் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு இந்த நிறுவனம் தவணைக் கடன்களை வழங்குவதுடன் கால்வரம்பை கடந்து தொகை செலுத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. நிதியுதவிப் பெறும் தொழில் நிறுவனப் பிரிவுகளின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப் பகுதியிலும் பெருமளவுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் நோக்குடன், அப்பகுதியில் உள்ள சிறிய, மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்குச் சிறப்பு முன்னுரிமை அளிக்கிறது. குறைந்தளவு வட்டி வீதம், குறைந்தளவு பிணையத் தொகை, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு தாராளமாக கால அளவு போன்ற சலுகைகளின் அடிப்படையில், பின்தங்கிய பகுதிகளிலுள்ள சிறிய தொழில் பிரிவுகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவாக்கவும், பல்திறப்படுத்தவும் அவற்றை நவீனப் படுத்தவும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. 5,000 ரூபாயிலிருந்து 30.00 இலட்சம் ரூபாய் வரையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### 3. தொழில் பிரிவுகளின் செயல்களை ஆய்வு செய்தல் :

பல ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், கடந்த ஐந்தாண்டுகளில் கடன் தொகை அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இந்த நிறுவனம் ஆற்றிய பணி கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.



1985 ஜூன் 14]

கடந்த ஐந்து ஆண்டுகளில் கடன் தொகை அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் குறித்த ஒப்பீட்டுத் தகவல் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | அமதித்த தொகை. | வழங்கப் பட்ட தொகை. | வசூலித்த தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்). | | |
| 1979–80 .. .. | 17.19 | 10.67 | 10.55 |
| 1980–81 .. .. | 36.90 | 22.59 | 11.47 |
| 1981–82 .. .. | 52.13 | 35.07 | 13.76 |
| 1982–83 .. .. | 55.87 | 39.56 | 19.85 |
| 1983–84 .. .. | 59.74 | 41.11 | 25.23 |
| 1984–85 (31–1–1985 வரையில்). | 67.97 | 48.65 | 32.40 |

கடந்த மூவாண்டுகளில் ஒவ்வோராண்டும் அனுமதித்த கடன்களில் 99 சதவீதமானது சிறிய தொழில்களுக்கு அனுமதிக்கப் பட்டது. மேலும், இவ்வாண்டுகளில் அனுமதித்த மொத்தக் கடனளவில் 85 முதல் 95 சதவீதம், சிறிய தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்டது.

4. சுய வேலைவாய்ப்பு மேம்பாடு.—சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சுயவேலைவாய்ப்பிற்கான மேம்படுத்தும் பொருட்டு, இந்த நிறுவனம் பெருமளவு நிதியுதவியை அளிக்கிறது. லாரிகள், டிராக்குகள், சுற்றுலா வாடகை வண்டிகள், டெம்போக்கள், வேன்கள் முதலியன போன்ற போக்குவரத்து வண்டிகளில் ஓட்டுநர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கும் நோக்குடன், அவ்வண்டிகளை வாங்க அவர்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 10.33 கோடி ரூபாய்க்கு 917 பேருக்கு போக்குவரத்துக் கடன்களை இந்த நிறுவனம் அளித்துள்ளது.

[1985 ஜூன் 14

5. முக்கிய அம்சங்கள்/சாதனைகள் :

(அ) சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்ற தொழில் முனைவோர் ஆலோசனைக் குழு, திட்டத்தைத் தெரிந்தெடுப்பது, விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்து, திட்ட அறிக்கைகள் தயாரிப்பது போன்றவற்றில் ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் தகவல்களை வழங்குவதோடு, ஆலோசனையும் நல்குகிறது. மேலும் நிதியுதவியையும் அளிக்கிறது. சிறியதும், மிகச் சிறியதுமான தொழில் பிரிவுகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இந்த வசதி பெருமளவு உதவுகிறது.

(ஆ) மத்திய, மாநில அரசுகள், தகுதிவாய்ந்த தொழில் முனைவோருக்கு உதவித் தொகையை அளித்த பிறகே, மத்திய, மாநில அரசு பங்கு முதலீட்டு உதவித் தொகையப் பெற அவர்கள் தகுதியுடையவர்களாகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த இடைப்பட்ட கால அளவில், தொழில் முனைவோருக்கு இணைப்புக் கடன் அனுமதிக்கப்படுவதால், தொழில் முனைவோர் வட்டி செலுத்த வேண்டியதாகிறது. மாநில அளவிலான குழுவால் அனுமதிக்கப்பட்டவுடன் இந்த நிறுவனமானது 1—7—1983 ஆம் நாளிலிருந்து வட்டியில்லா உதவித் தொகையை அளித்து வருகிறது. இதன் பயனாக தொழில் முனைவோர்கள், குறிப்பாக சிறு தொழில் பிரிவுகள், செலவு, நேரவகையில் பெருமளவு பயனடைந்திருக்கின்றன.

(இ) முகப்பேர், பாடி ஆகிய இடங்களில் தொழில் கூடங்களுக்கும் உற்பத்தி அடிப்படை வசதிகளுக்கும் வகை செய்து கொடுப்பதற்கான திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நிருவாக முகவர் அமைப்பாக, தமிழ்நாடு அரசு மூலம், உலக வங்கி நிதி உதவியுடன் ஆன சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II என்றழைக்கப்படும் தொழில் மேம்பாட்டுச் சிறப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகிறது.

**6. தொழில் ஏற்பாடுகளையும், நடைமுறைகளையும் சீரமைத்தல்.**—தேவையான கடன் உதவியைப் பெறுவதற்கு, தொழில் முனைவோருக்கு குறிப்பாக சிறுதொழில் துறையில் உள்ளவர்களுக்கு இயலும் பொருட்டு, தொழில் ஏற்பாடுகளையும், நடைமுறைகளையும் எளிதாக்க இந்த நிறுவனம் அனைத்து



1985 ஜூன் 14]

முயற்சிகளையும் எடுத்து வருகிறது. விண்ணப்பப் படிவங்கள் தக்கவாறு எளிதாக்கப்பட்டுள்ளன. கவனமாக பரிசீலனைக்குப் பின்னர், நிதியுதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் சீரமைக்கப் பட்டுள்ளன. பதிவு பெற்ற அடைமானத்தை நியாயமான அளவிலான அடைமானத்தைப் பெறத் தற்போது இருந்துவரும் நடைமுறைக்குப் பதிலாக, அடைமானப் பத்திரம் எழுதிக் கொடுப்பதின் பேரில் குத்தகை வளாகங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை வாங்குவதற்கு ரூ. 5.00 இலட்சம் வரையில் தற்போது கடன் வழங்குவது ஏற்றுக்கொள்ளப்படும்.

**7. சிலவகைத் தொழில்களுக்கு நிதியுதவி பெறுவதற்கு பதிவு செய்வதை நீக்குதல்.**—தகுதியுள்ள வகைத் தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதை உறுதி செய்வதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டும், பின்தங்கிய பகுதிகளில் தொழிலை மேம்படுத்துவதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டும், தொழில்களின் தனித் தியங்கும் தன்மையைக் கருத்திற்கொண்டும் சிலவகைத் தொழிற் பிரிவுகளில் பெருகிவரும் தேவையை நிறைவு செய்யவும் சில வகைத் தொழில்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடையை நீக்குவதென முடிவு செய்யப் பட்டது. இதன் விளைவாக நிதி அச்சு இயந்திரப் பிரிவுகள், மாவு ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மரம் அறுக்கும் ஆலைகள், பனிக்கட்டி தயாரிப்புப் பிரிவு போன்ற வாலாயமான தொழிற் சாலைகளுக்கு மீண்டும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

8. மாநிலத்தின் தொழில்வளர்ச்சியை மேம்படுத்தும் பொதுவான நோக்குடன் வட்டார ஏற்றத்தாழ்வுகளை அகற்றும் பொருட்டு, மாநிலத்திலுள்ள பின்தங்கிய பகுதிகள், வட்டாரங்களை மேம்படுத்துவதற்கும் சமூகத்தின் நலிந்த ஏழைப் பிரிவினரை மேம்படுத்துவதற்கென பெருமளவு வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்குவதற்கும் வகை செய்யும் திட்டங்களுக்கு ஆதரவு நாடும் அரசின் சமூக, பொருளாதார கொள்கைகளை செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொடர்ந்து முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

[1985 ஜூன் 14

9. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொழில் முனைவோருக்கு உடனடியாக நிதியுதவி வழங்க அனைத்து முயற்சியையும் எடுத்து தாமதத்தைத் தடுக்கிறது. 45 நாட்களுக்குள் பெறப்பட்ட கடனுதவி விண்ணப்பங்களை ஆராய்ந்து பார்த்து உடனடியாக கடனுதவி அளிக்க வேண்டும் என்று இந்நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை.**

மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை என்னும் புதிய துறையானது தொழில் வளர்ச்சியின் முக்கியமான ஒரு பகுதிக்குப் பொறுப்பேற்று அதன் துரித வளர்ச்சிக்கு வகை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் வலுவூட்டப்பட்டு, மின்னணுவியல் தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு பெரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆற்றலைப் பெற்றுள்ளது. அத் தொழில்களின் வளர்ச்சி தமிழகத்திற்கு மின்னணுவியலில் முதன்மையிடத்தைப் பெற்றுத்தரும்.

2. இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழில்களை விரைவில் பெருகச் செய்வதும், நவீன வாழ்வின் பல்வேறு துறைகளிலும் மின்னணுவியல் மற்றும் தொழில் நுட்பவியலின் பயன்பாட்டை விரிவாக்குவதும் அரசின் கொள்கையாகும். பெருந்தொழில்கள், நடுத்தரத்தொழில்கள், சிறு தொழில்கள் ஆகிய அனைத்துக்குமே முறையான வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறு தொழில்களுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. காரணம் அவற்றில் முதலீடு குறைவு; வேலை வாய்ப்புக்கள் அதிகம்; தொழில் வல்லுநர் குழாம் ஒன்று புதியதாக அவற்றின் மூலம் உருவாக்கப்படுகிறது. மின்னணுவியல் தொழில்களைப் பேணி வளர்க்க இம் மாநிலத்தில் போதுமான அளவுக்கு விரிவான, வலுவான அடிப்படை வசதிகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. ஆங்காங்கு தொழிற்பேட்டைகளில் ஆய்வுக் கூடங்களும், சோதனை மையங்களும் அமைக்கப்பட்டு மிகக் குறைந்த கட்டணத்தில் சோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டு வசதிகள் தரப்பட்டுள்ளமையால் மின்னணுவியல் பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. மருத்துவமனைகளில் பயன்படும் மின்னணுவியல் கருவிகளையும் மின்னணுவியல் சோதனைச் சாலைகளிலுள்ள கருவிகளையும் பழுதுபார்த்துப் பராமரித்து



1985 ஜூன் 14]

வருவதற்கான தனிப் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. தகவல் வங்கி மற்றும் தகவல் மையத்தின் மூலம் அடிப்படையான தொழில் நுட்ப விவரங்களை வழங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அடிப்படை வசதிகள் ஏழு மையங்களில் உள்ளன. இவை மின்னணுவியல் தொழில்களுக்கு சிறந்த நாற்றங்காலாகப் பயன் படுகின்றன. இம் மையங்களின் பயன்கள் இறுதியாகப் பொது மக்களுக்கே செல்கின்றன. தொழில் வல்லுநர்கள் நிருவாகத் திறனை வளர்த்துக் கொள்ளவும், தகுதிபெற்ற தொழிலியல் பயின்றவர்களும் தொழில் வல்லுநர்களும் தக்க வேலை வாய்ப்புக்களைப் பெறவும் இம் மையங்கள் பயன்படுகின்றன. தொழில் நடத்துபவர் யாரும் சாதாரணமாக தனது தொழிற்சாலைக்குள் இத்தகைய வசதிகளை தங்கள் சொந்தச் செலவில் செய்து கொள்ள இயலாது.

3. கக்களூரில் உள்ள மைய மின் சோதனை ஆய்வகமும் அடையாறில் உள்ள மின்னணுவியல் சோதனை மற்றும் வளர்ச்சி மையமும் முழுமையான சோதனை வசதிகளையும் தொழில்நுட்ப அறிவுரைகளையும் தருகின்றன. உற்பத்தியில் பயன்படும் அளவைக் கருவிகள் துல்லியமாக சரிசெய்து தருவதற்கும், உற்பத்தி செய்வதற்குரிய பொருள்களைப் பற்றி ஆலோசனை கூறுவதற்கும், உற்பத்திக்கு உகந்த சுற்றுப்புற நிலைகள் பற்றிய சோதனைகளைச் செய்வதற்கும் இந்த ஆய்வுக்கூடங்களில் வசதிகள் உள்ளன.

4. மருத்துவத் துறையில் பயன்படும் மின்னணுவியல் கருவிகளுக்கான பராமரிப்பு மையங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ளன. அரசு மருத்துவமனைகளில் உள்ள பல்வேறு மின்னணுவியல் கருவிகளைப் பராமரிப்பதும் பழுதுபார்த்துத் தருவதும் அவற்றின் பணியாகும்.

5. அடையாற்றிலுள்ள "தகவல் வங்கி மற்றும் தகவல் மையம்" தகவல்களைப் பரப்புவதோடு எங்கெங்கு எத்தகைய தொழில்களைத் தொடங்க வாய்ப்பு உண்டு என்பது குறித்து தொழில் வல்லுநர்களுக்கு வழிகாட்டியும் வருகிறது. கடைசி நிமிடம் வரையிலான தகவல்களை அனைவருக்கும் தருவதுடன் தொழில்களில் முதலீடு செய்பவர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் அது தெரிவிக்கிறது.

1983—84-ம் ஆண்டு 71.68 சதவீதம் நீண்டகால நிலுவைத் தொகை திரும்பப் பெறப்பட்டது. சிப்காட் நிர்வாகக் குழுவின் துணைக்குழு அவ்வப்போது கூடி நிலுவை ஆய்வு கூட்டங்களில் நிலுவைகளை பரிசீலனை செய்து உதவிபெறும் நிறுவனங்களுக்கு தக்க முறையில் உதவி புரிந்ததாலும் கணிசமாக திரும்பப்பெறும் சதவீதத்தை உயர்த்த முடிந்தது.

**(2) உத்தரவாதமளித்தல்/நேரடி சந்தா :**

பொறுப்புகளுக்கு உத்தரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக, கடந்த பதிமூன்று ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. | 23.20 | .. | .. |
| 1973–74 .. | 24.30 | .. | .. |
| 1974–75 .. | 5.00 | .. | 0.55 |
| 1975–76 .. | 16.50 | .. | 1.29 |
| 1976–77 .. | 11.00 | 18.50 | 2.00 |
| 1977–78 .. | 16.00 | 13.30 | 1.13 |
| 1978–79 .. | 5.00 | 3.50 | 0.37 |
| 1979–80 .. | 6.20 | 2.50 | 1.53 |
| 1980–81 .. | 24.40 | .. | 12.29 |
| 1981–82 .. | 13.75 | .. | 8.03 |
| 1982–83 .. | 18.25 | .. | 1.52 |
| 1983–84 .. | 26.50 | 8.00 | 15.67 |
| 1984–85 (மார்ச் 1985 வரை). | 56.40 | .. | 7.65 |
| | 2,46.50 | 45.80 | 52.03 |



(3) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம், ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின் கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில் நுட்ப, தொழில் அனுபவ, தொழில் முனைவோர்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல், நடுத்தர தொழில் திட்டத்திற்கு, வங்கியானது, திட்டச் செலவில் 80 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. இத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளித்தலிலும் வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம் :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. .. .. | 4.00 | .. |
| 1978–79 .. .. .. | 9.15 | 4.00 |
| 1979–80 .. .. .. | 12.90 | 21.47 |
| 1980–81 .. .. .. | 26.50 | 16.28 |
| 1981–82 .. .. .. | 38.58 | 20.10 |
| 1982–83 .. .. .. | 69.07 | 29.70 |
| 1983–84 .. .. .. | 86.20 | 93.38 |
| 1984–85 (மார்ச் 1985 வரை) .. .. .. | 1,84.40 | 1,30.33 |
| | 4,30.80 | 3,15.28 |

145. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

136377

(1)
V211,31 N85
N85-4.3-4

300/86
2832
24 செப் 1986

வெளியீடு 3-1-1986 Issued 3-1-1986

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 29, 1985 - தொகுதி IV எண் 3
Friday the 29th March 1985 - Volume IV No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600 009

[விலை : ரு. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

D
V211.31 N85
N85.4.3f4
136377
600 008.